# நன்னூல் உரை வளம்

8

## மெய்யீற்றுப் புணரியல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

## நன்னூல் உரைவளம் (தொகுதி-8)

### எழுத்ததிகாரம்

# மெய்யீற்றுப் புணரியல்


பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivaḷam (Vol. 8)**<br>**Eḻuttatikāram**<br>**Meyyīṟṟup puṇariyal** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 696 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 358 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 160/-<br>(Rupees One hundred and sixty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றோ எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| து.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ,
ஃ - இவ்வெழுத்துக்கள் முறையே

a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, kh
எனவும்,

க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் ,
ல் , வ், ழ், ள், ற் , ன் -
இவ்வெழுத்துக்கள் முறையே

k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p
m , y , r , l , v ,ḷ ,l̲, ṟ , n̲, kh
எனவும்

ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக் கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக்கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப்படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக்கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலை நாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமையானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரை வளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப்பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமை நூற்பாக்கள்,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரை வளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு. அழ. குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் ***திரு.க.ந. வீரபாகு சுப்பிரமணியன்*** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக்கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை திருமதி **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010 **இரா.கண்ணன்.**

சென்னை-55

*******

**முனைவர் கரு.அழ. குணசேகரன்**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை – 113**

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக

உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரைவளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர்,வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப்பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.10.2010.

நன்னூல் உரைவளம்

(தொகுதி -8)

எழுத்ததிகாரம்

# மெய்யீற்றுப் புணரியல்

# மெய்யீற்றுப் புணரியல்

203. உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே.

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

utal mēl uyir vantu onruvatu iyalpē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

CHAP. IV.

COMBINATION OF CONSONANT- FINALS

1.Consonant-finals before vowels

General rule

It is but natural for a consonant-final to be animated by an initial vowel.

## ஒப்புமைப் பகுதி

புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே

(தொல்.: 139)

புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலாது
மெய்யொடு சிவணு மவ்வியல் கெடுத்தே

(இ.வி.: 64)

## மயிலை நாதர்

இவ்வோத்து என்னுதலியதோ வெனின், ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மெய்யீற்றுப் பதம் புணருமாறு உணர்த்திற்றாகலான். மெய்யீற்றுப்

புணரியலென்னும் பெயர்த்து. மேலோத்தினோடு இதற்கு இயைபு என்னையோ வெனின், மேல் உயிரீற்றுப் பதம் புணருமாறு உணர்த்தினார்; இதனுள், மெய்யீற்றுப் பதம் புணருமாறு உணர்த்தினமையின், இயைபுடைத் தென்க.இவ் வோத்தினுள் இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், ஒற்றின் முன் உயிர் வந்து புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– நிலைமொழி யீற்றினின்ற ஒற்றின் மேலே வருமொழி முதல் நின்ற உயிர் வந்து ஒன்றுவது இயல்பு புணர்ச்சியாம், எ–று.

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுதல் உலகத்து முறைமை என்றுமாம்.

வ–று.:

(உரிஞ், நாண், வெரிந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், நாள்) + (அழகிது, ஆன்றது, இயன்றது, ஈண்டிற்று, உயர்ந்தது, ஊன்றிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று) என முறையே ஒட்டிக் கொள்க. ஔவொடு வரும் வழியும் ஆராய்ந்து கொள்க. (உரிஞ்..... நாள்) + (அழகு, ஆட்டம், இயைபு) என வேற்றுமைக் கண்ணும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், மெய்யீற்றுப்பதம் புணரும் சிறப்புப் புணர்ச்சி இவ்வியலால் கூறப்படுதலின், மெய்யீற்றின் முன் உயிர்முதல் வந்து புணருமாறு உணர்–ற்று.

இ–ள்.:– நிலைமொழி யீற்றில் நின்ற மெய்யின் மேல் வருமொழி முதல் உயிர் வந்து ஒன்றுபட்டு இணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம், எ–று.

உ–ம்.:–

தோன்றலழகன், உரிஞுழகிது, புகழழகிது எனவும்; வேலெறிந்தான் எனவும் இருவழியும் காண்க. பிறவும் அன்ன.

இவ்வாறு மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய்யாய் மெய்யினது புள்ளியும் உயிர் வடிவமும் கெட்டு நிற்றலின் விகாரமாம் என்பாரை விலக்கிச் சிறந்த ஒலிவடிவின் யாக்கையும் உயிரும் போல் மெய்யினது மாத்திரை உள்ளடங்க ஒன்றுபட்டு இரட்டையிலை போல் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாய் இணங்கி நிற்றலானும், ஒன்றாத தனிக்குறின் முன் ஒற்று முதலியன விகாரப்படுதலானும் ஒன்றுவது இயல்பே என்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ—ம்,** மெய்யீற்றின் முன் உயிர்முதல் வந்து புணருமாறு கூறியது.

**இ—ள்.:— உடன்மேல்** —நிலைமொழி ஈற்றினின்ற ஒற்றின் மேல், **உயிர் வந் தொன்றுவது** — வருமொழி முதல் நின்ற உயிர் வந்து ஒன்றுதல், **இயல்பே** — இயல்புப் புணர்ச்சியாம், எ—று.

**உ—ம்.:—**

உரிஞ், நாண், வெரிந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், புகழ், நாள் என நிறுத்தி அழகிது, ஆன்றது, இயன்றது, ஈண்டிற்று, உயர்ந்தது, ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது, ஒழிந்தது, ஓங்கிற்று என முறையே ஒட்டிக்கொள்க.

ஔவொடு வரும் வழியும் ஆராய்ந்து கொள்க.

அழகு, ஆட்டம், இயைபு, ஈகை, உரம், ஊக்கம், எழுச்சி, ஏற்றம், ஐயம், ஒழிபு, ஓட்டம், ஔவியம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கும் ஒட்டுக. உடன்மேல் உயிர் வந்தொன்றுவது உலகத்தின் முறைமை என்றுமாம்.

## விசாகப் பெருமாளையர்

மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதல் மொழியும் மெய்ம் முதல்மொழியுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

**இ—ள்.:— உடல் மேல்**—(நிலைமொழியின் இறுதியில் நின்ற) மெய்யெழுத்தின் மேல், **உயிர்** —(வருமொழி முதலிலுள்ள) உயிரெழுத்து, **வந்து ஒன்றுவது** — வந்து கூடிநிற்பது, **இயல்பே**—இயல்பு புணர்ச்சியே யாம்; எ—று.

**உ—ம்.:—**

புகழ் + அழகிது = புகழழகிது — அல்வழி.

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் — வேற்றுமை.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மெய்யீற்றின்முன் உயிர்முதன் மொழிவரின் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

உடன்மேலுயிர்வந் தொன்றுவ தியல்பே.

(உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.)

**இ—ள்.: உடல்மேல்** — நிலைமொழி யீற்றினின்ற மெய்யின்மேல், **உயிர் வந்து ஒன்றுவது இயல்பே** — வருமொழி முதலுயிர் வந்து ஒன்றுபட்டிணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம். எ—று.

## முகவை இராமானுச கவிராயர்

மெய்யீற்றுப் பதம் புணருஞ் சிறப்புப் புணர்ச்சி இந்த இயலாலே சொல்லப்படுதலால், இது, மெய்யீற்றின் முன் உயிர் வந்து புணருமாறு உணர்த்துகின்றது.

இ–ள்.:– உடன் மேல்–நிலைமொழி யீற்றிலே நின்ற ஒற்றின் மேல், உயிர் வந் தொன்றுவது – (வருமொழி முதலிலே நின்ற) உயிர் வந்து ஒன்றுபட்டு நிற்பது, இயல்பே – இயல்புப் புணர்ச்சியே யாம், எ–று.

உ–ம்.:–

தோன்றலளழகன், உரிஞுழகிது, புகழுழகிது எனவும்; வேலெறிந்தான், வாளோச்சினான் எனவும் முறையே அல்வழி வேற்றுமை இரண்டிலும் வந்தன. பிறவுமிப்படியே காண்க.

இவ்வாறு மெய்யும் உயிருங் கூடி உயிர்மெய்யாய் மெய்யினது புள்ளியும் உயிர் வடிவுங் கெட்டு நிற்பதினாலே இது, விகாரப்புணர்ச்சி யென்பவரை விலக்கிச் சிறந்த ஒலிவடி வினை நோக்கி உடலுமுயிரும் போல மெய்யினது மாத்திரையுள் ளடங்க ஒன்றுபட்டு இரட்டையிலை போல் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக இணங்கி நிற்பதினாலும், ஒன்றாத் தனிக்குறில் முன் ஒற்று விகாரப்படுதலாலும் 'ஒன்றுவதியல்பே' என்றார். ஏகாரம் பிரிநிலை,

"புள்ளி யீற்றின்முன் னுயிர் தனித் தியலாது மெய்யொடு
சிவணு மவ்வியல் கெடுத்தே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

மெய்யை இறுதியிலுடைய மொழிகளோடு உயிர் முதன்மொழியும் மெய்ம்முதன்மொழியும் புணரும் இயல்.

உரை :– உடல்மேல் – (நிலைமொழி யீற்றிலுள்ள) மெய்யெழுத்தின் மேல், உயிர் – (வருமொழி முதலிலுள்ள) உயிரெழுத்து, வந்து ஒன்றுவது – வந்து கூடுவது, இயல்பே – இயல்பு புணர்ச்சியேயாம்.

உ–ம். : –

தோன்றல் + அழகன் = தோன்றலழகன் (அல்வழி)
வாள் + ஒளி = வாளொளி (வேற்றுமை)

குறிப்பு :–

மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய்யாய், மெய்யின் புள்ளியும் உயிரின் வடிவமும் கெட்டு நிற்றலால் இது விகாரம் என்பதை நீக்க 'இயல்பே' என்றாரென்க.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.: உடல் மேல் – நிலைமொழி யீற்றினின்ற மெய்யின் மேல், உயிர்வந்து ஒன்றுவது இயல்பே–வருமொழி முதலுயிர் வந்து ஒன்றுபட்டிணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம், எ—று.

உ—ம்.:-

தோன்றல் + அழகன் – தோன்றலழகன்,

உரிஞ்+அழகிது = உரிஞுழகிது,

புகழ் + அழகிது–புகழழகிது எனவும்,

வேல்+எறிந்தான் – வேலெறிந்தான் எனவும் வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். உடல் மேல் – நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல், – உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வருமொழி முதலுயிர்வந்து ஒன்றுபட்டி ணங்கிநிற்பது இயல்பு புணர்ச்சியேயாம். எ—று.

''புள்ளியீற்றின் முன்னுயிர்தனித்தியலாது, மெய்யொடு சிவணுமவ்வியல் கெடுத்தே'' என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

உ—ம்.:-

தோன்றல் + அழகன் = தொன்றலழகன்,
உரிஞ் + அழகிது= உரிஞுழகிது,
புகழ் + அழகிது = புகழழகிது. எனவும்
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான். எனவும் வரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர் முதல் மொழியும் மெய்ம் முதல்மொழியுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

இ—ள்.:- உடல் மேல்–(நிலைமொழியின் இறுதியில் நின்ற) மெய்யெழுத்தின் மேல், உயிர் –(வருமொழி முதலிலுள்ள) உயிரெழுத்து, வந்து ஒன்றுவது – வந்து கூடிநிற்பது, இயல்பே–இயல்பு புணர்ச்சியே யாம்; எ—று.

உ—ம்.:-

புகழ் + அழகிது = புகழழகிது – அல்வழி.

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான் – வேற்றுமை.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– உடல் மேல்** – நிலைமொழி யீற்றினின்ற மெய்யின்மேல், **உயிர்வந்து ஒன்றுவது இயல்பே** – வருமொழி முதலுயிர் வந்து ஒன்றுபட்டிணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியேயாம். எ–று.

உ–ம்.:–

தோன்றல் + அழகன் = தோன்றலழகன்;

உரிஞ் + அழகிது = உழிஞழகிது;

புகழ் + அழகிது = புகழழகிது; அல்வழி.

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்; வேற்றுமை.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

மெய்யெழுத்துக்களை இறுதியிலுடைய நிலைமொழிகளோடு உயிர்முதல் மொழியும் மெய்ம்முதல் மொழியுமாகிய வருமொழிகள் புணரும் விதத்தைச் சொல்லும் இயல்.

**இ–ள்.:– உடல்மேல்** – நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின்மேல், **உயிர் வந்து ஒன்றுவது** – (வருமொழி முதல்) உயிர்வந்து ஒன்று பட்டு இணங்கி நிற்பது, **இயல்பே** – இயல்பு புணர்ச்சியேயாம். எ–று.

**பொ–ரை.:–**

நிலைமொழி இறுதியில் நின்ற செய்யின்மேல், வருமொழி முதலில் நின்ற உயிர்வந்து சேர்ந்து நடப்பது இயல்பு புணர்ச்சியேயாம்.

உ–ம்.:–

புகழ் + அழகிது = புகழழகிது. – அல்வழி.

வேல் + எறிந்தான் = வேலெறிந்தான். வேற்றுமை.

## கா.நமச்சிவாய முதலியார்

மெய்யெழுத்துக்களை ஈற்றிலுடைய நிலைமொழிகளோடு உயிரெழுத்தையேனும் மெய்யெழுத்தையேனும் முதலாகவுடைய வருமொழிகள் புணரும் இயல்பினைக் கூறும் இயல்.

**உடல்மேல்**–(நிலைமொழி ஈற்றினின்ற) மெய்யின்மேல், **உயிர்** – வருமொழி முதலுயிர், **வந்து ஒன்றுவது** – வந்து இணங்கி நிற்பது, **இயல்பு** – இயல்பு புணர்ச்சியாம்.

**உதாரணம்.:–**

தோன்றல் + அழகன் = தோன்றலகன்

| | | | |
|---|---|---|---|
| புகழ் | + அழகிது | = புகழழகிது | – அல்வழி |
| வேல் | + எறிந்தான் | = வேலெறிந்தான் | |
| வாள் | + எடுத்தாள் | = வாளெடுத்தாள் | – வேற்றுமை |

## மோசசு பொன்னையா

நிலைமொழி ஈற்று மெய் மேல் வருமொழி முதல் உயிர் வந்து கூடி நிற்பது மொழியியல்பாம், எ–று.

எ–டு.:–

தோன்றல் + அழகன் = தோன்றலழகன்.
உரிஞ் + அழகன் = உரிஞழகன்.
புகழ் + அழகிது = புகழழகிது.
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்.

தொல்காப்பியர் ஈற்று மெய்கள் புள்ளிபெற்று நிற்கும் என்றும் குற்றியலுகரமும் அவ்வாறே புள்ளி பெற்று நிற்கும் என்றும் கூறி

*'புள்ளி யீற்றின்முன் உயிர்தனித் தியலாது*
*மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே'*

என்று முடிவு கூறினார். அவ்வாற்றால் அவர் ஈற்று மெய்யும் ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்பதோடு உயிரேற இடங்கொடுத்து நிற்கும் எனக் கூறிப் போந்தார் என்பது தெளிவுறும். இவ்வாசிரியர் புள்ளியீறும் மெய்யீறும் ஒன்றே எனக் கொண்டு இவ்வாறு நூற்பா செய்தார். இஃது இவ்வாசிரியர் முதனூலாசிரியரோடு முரணிய இடமாகும்.

(1)

## 204. தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்.

ṭaṉikkuṟil muṉ oṟṟu uyir variṉ irattum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Consonant after a short monosyllabic word**

A final consonant preceded by single short vowel, is always doubled before an initial vowel.

## ஒப்புமைப் பகுதி

................
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப.

(தொல்.: 161: 2–3)

..............
.......... குறிற் பின்புமெய்கள்
ஏறா வுயிர்பின் வரவிரண் டாகும்............

(வீர.: 14: 2–3)

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்

(இ.வி.: 66)

தனிக்குறில் மெய்யுயிர் சார்புளி மிகும்....
..........

(தொ.வி.: 36:1)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: ஒரு குற்றெழுத்தின் முன்னே நின்ற ஒற்று உயிர் வரின் இரட்டித்து நிற்கும், எ–று.

வ–று.:–

மண்ணழகிது, கம்மழகிது, பொன்னழகிது, நெய்யழகிது, கல்லழகிது, தெவ்வழகிது, புள்ளழகிது என வரும்; ஆன்றது, இயைந்த தென ஏனை உயிர்களோடும் ஒட்டிக் கொள்க, அமைவு, ஆக்கம், இன்மை, ஈகையென வேற்றுமைக்கண்ணும் ஒட்டுக.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், எய்தியதன் மேற் சிறப்பு விதி உணர்–ற்று.

இ–ள்.: தனிக்குறின் முன் ஒற்று உயிர் வரின் இரட்டித்து நிற்கும், எ–று.

உ–ம்.:–

மண்ணரிது, பொன்னரிது எனவும்; மண்ணகம், பொன்னொளி எனவும் வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், தனிக் குற்றெழுத்தடுத்த ஒற்றின்மேல் உயிர் வந்து புணருமாறு கூறியது.

இ-ள்.:- தனிக்குறின் முன்னொற்று - நிலைமொழி ஒரு குற்றெழுத்தின் பின்னின்று அவ்வொற்றின் மேல், **உயிர் வரின்** - வருமொழி முதல் நின்ற உயிர் வந்தால், **இரட்டும்** - அவ்வொற்று இரட்டித்து நிற்கும், எ-று.

உ-ம்.:-

மண்ணழகிது, பொன்னழகிது, கம்மழகிது, மெய்யழகிது, கல்லழகிது, தெவ்வழகிது, புள்ளழகிது என வரும். ஆன்றது, இயைந்தது என ஒழிந்த உயிர்களோடும் ஒட்டுக. அமைவு, ஆக்கம், இளமை, ஈகை என வேற்றுமைக்கண்ணும் ஒட்டுக.

## விசாகப் பெருமாளையர்

இது, எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

இ-ள்.:- **தனிக்குறின் முன்** - தனிக் குற்றெழுத்தின் முன்னின்ற, **ஒற்று** - மெய்யானது, **உயிர்** - உயிரானது, **வரின்** - வந்தால், **இரட்டும்** - இரட்டித்து நிற்கும், எ-று.

உ-ம்.:-

மண் + அரிது - மண்ணரிது, பொன் + அரிது - பொன்னரிது, எனவும், மண் - அகம் - மண்ணகம், பொன் + ஒளி- பொன்னொளி, எனவும், வரும் மற்றவைகளுமிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

விகாரப்பாடின்றி உடல்மே லுயிர்வந் தொன்றுவதேயன்றி விகாரத்தோடு ஒன்றுவது முண்டா?

தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

(தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.)

இ-ள்.: **தனிக்குறில் முன் ஒற்று** - தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற மெய், **உயிர்வரின் இரட்டும்** - உயிர்வரின் இரட்டித்து நிற்கும், எ-று.

உ-ம்.:-

மண்-அரிது-மண்ணரிது, பொன்-அரிது- பொன்னரிது எனவும், மண்-

அகம்—மண்ணகம், பொன்—ஒளி—பொன்னொளி எனவும் வரும்.

இஃது இயல்பு புணர்ச்சியா விகாரப்புணர்ச்சியா?

ஒற்றிரட்டலால் விகாரப்புணர்ச்சியே.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

**இ—ள்.: தனிக்குறின் முன்னொற்று** – தனித்த குற்றெழுத்தின் முன் னின்ற ஒற்றானது, **உயிர் வரினிரட்டும்** – உயிர்முதல் மொழி வந்து புணருமாயின் இரட்டித்து நிற்கும், எ—று.

**உ—ம்.:—**

மண் அரிது – மண்ணரிது, பொன் அரிது – பொன்னரிது, மண் அகம்—மண்ணகம், பொன்ஒளி—பொன்னொளி, என அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும் வந்தன; பிறவும் இப்படிக் காண்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :— தனிக் குறில் முன்** – தனிக்குற்றெழுத்தின் முன் நின்ற, **ஒற்று** – மெய், **உயிர் வரின்** – (வருமொழி முதலில்) உயிர் வந்தால், **இரட்டும்**– இரட்டித்து நிற்கும்.

**உ—ம். :—**

பொன் + அழகிது = பொன்னழகிது (அல்வழி)
பொன் + அணி = பொன்னணி (வேற்றுமை)

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.: தனிக் குறில் முன் ஒற்று** – தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற மெய், **உயிர் வரின் இரட்டும்** – உயிர் வரின் இரட்டித்து நிற்கும், எ—று.

**உ—ம்.:—**

மண் + அரிது = மண்ணரிது, பொன்+ அரிது = பொன்னரிது எனவும், மண்+ அகம் = மண்ணகம், பொன் + ஒளி = பொன்னொளி எனவும். வரும்.

இது மேலைச் சூத்திரத்தால் எய்தியன் மேற் சிறப்புவிதி; உயிரேற இடங் கொடுத்தலே யன்றி இரட்டித்தும் நிற்குமென்றலின்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். தனிக்குறில் முன் ஒற்று — தனிக்குற் றெழுத்தின்முன்னின் றமெய், — உயிர்வரின் இரட்டும் — உயிர்வரின் இரட்டித்து நிற்கும். எ—று.

உ—ம்.:—

மண் + அரிது = மண்ணரிது, பொன் + அரிது = பொன்னரிது எனவும் மண் + அகம் = மண்ணகம், பொன்+ஒளி = பொன்னொளி. எனவும் வரும்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. உயிரேற இடங்கொடுத்தலேயன்றி இரட்டித்தும் நிற்கு மென்றலின்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— தனி குறில் முன் — தனித்த குற்றெழுத்தை யடுத்து நின்ற, ஒற்று — மெய், உயிர் வரின் — (வருமொழி முதலில்) உயிர் வந்தால், இரட்டும் — இரட்டித்து நிற்கும், எ—று.

உ—ம்.:—

மண்+ அழகிது = மண்ணழகிது — அல்வழி.

பொன் + அணி = பொன்னணி — வேற்றுமை.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— தனிக் குறில் முன் ஒற்று — தனிக்குற்றெழுத்தின் முன்னின்ற மெய், உயிர் வரின் இரட்டும் — உயிர் வரின் இரட்டித்து நிற்கும். எ—று.

உ—ம்.:—

மண் + அரிது = மண்ணரிது, பொன் + அரிது = பொன்னரிது: அல்வழி.

மண் + அகம் = மண்ணகம், பொன் + ஒளி = பொன்னொளி: வேற்றுமை.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி; உயிரேற இடங்கொடுத்தலே யன்றி இரட்டித்தும் நிற்கு மென்றலின்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:— தனி குறில் முன் — தனிக் குற்றெழுத்தின் முன் நின்ற, ஒற்று — மெய்யானது, உயிர் வரின் — உயிரெழுத்து வந்தால், இரட்டும் — இரட்டித்து நிற்கும். எ—று.

பொ–ரை.:–

தனிக்குற்றெழுத்தின்பின்நின்ற மெய்யானது உயிர் வந்தால், இரட்டித்து நிற்கும்.

உ–ம்.:–

மண் + அரிது = மண்ணரிது. – அல்வழி ண், ன்இரட்டியது.

பொன் + அரிது = பொன்னரிது.

மண் + அகம் = மண்ணகம். – வேற்றுமை ண், ன் இரட்டியது.

பொன் + ஒளி = பொன்னொளி.

## கா.நமச்சிவாய முதலியார்

தனிக்குறில்முன் – தனிக்குற்றெழுத்தின்முன் னின்ற, ஒற்று – மெய்யானது, உயிர் – உயிரெழுத்து, வரின் – வந்தால், இரட்டும் – இரட்டித்து நிற்கும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | + | அழகிது | = மண்ணழகிது | அல்வழி |
| பொன் | + | அரிது | = பொன்னரிது | |
| கண் | + | அழகு | = கண்ணழகு | வேற்றுமை |
| பொன் | + | அணி | = பொன்னணி | |

## மோசசு பொன்னையா

தனிக்குறில் முன்னர் ஒற்றாக வரும் ஈற்று மெய், வருமொழி முதலில் உயிர் வரின் இரட்டித்து நிற்கும், எ–று.

எ–டு.:–

மண் + அரிது = மண்ணரிது.

பொன் + அரிது = பொன்னரிது.

மண் + அகம் = மண்ணகம்.

முதனூல் ஆசிரியரான தொல்காப்பியர்,

*நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்*
*குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்*
*அறியத் தோன்றிய நெறியியி லென்ப,*

என்று அமைத்தருளிய நூற்பாவின் பின்முடிபை இவ்வாசிரியர் இந்நூற்பாவில் அமைத்தார். முன்முடிபை, னலமுன்றனவும்; 'குறிலணைவில்லா'; 'குறில்செறியா' என்னும் நூற்பாக்களால் பெறவைத்தார். 'குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்ட லின்' விலக்காக முதனூலாசிரியர் அமைத்த,

*'ஆறன் உருபினும் நான்கன் உருபினும்*
*குறிய குற்றொற் றிரட்ட லில்லை*
*ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்*
*நெடுமுதல் குறுகு மொழிமுன் னான'*

என்ற நூற்பாவினை,

*'குவ்வின் அவ்வரு நான்கா றிரட்டல்'*

எனப் பின்னர் உருபு புணரியலில் சுருங்கக் கூறிப் பெற வைத்தார். எனவே, தனது, தனக்கு, தமது, தமக்கு முதலியன இவ்விதி பெறா என்பதையும்; அவை முடியுமாறு உருபு புணரியலில் உணர்த்தப்படும் என்பதையும் அறிக.

(2)

205. **தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரம்**
**துன்னு மென்று துணிநரு முளரே.**

தன் ஒழி மெய்ம் முன் யவ் வரின் இகரம்
துன்னும் ஒன்று துணிநரும் உளரே

ṭaṉ oḷi meym muṉ yav variṉ ikaram
ṭuṉṉum oṉṟu ṭuṇinarum uḷarē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### CONSONANT-FINALS BEFORE CONSONANTS

### Consonant-finals before initialy

There are also those who say that the vowel may be inserted between an initial y and any final consonant except (y) itself.

## ஒப்புமைப் பகுதி

தன்னொழி மெய்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே

(இ.வி.: 67)

## மயிலை நாதர்

எ–ன், யகர மொழிந்த பத்து மெய்கள் முன்னும் யகரம் வந்து புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– தன்னை யொழிந்த பத்து ஒற்றின் முன்னும் யகரம் வரின் இடையே இகரம் வந்து பொருந்து மென்று தெளிந்து சொல்லுவாரும் சிலருளர், எ–று.

வ–று.:–

உரிஞியானை, மண்ணியானை, வெரிநியானை, நம்மியானை, பொன்னியானை, காரியானை, கல்லியானை, தெவ்வியானை, தாழியானை, வெள்ளியானை என வரும்.

உம்மையால் துணியாதார் பெரும்பாலரெனக் கொள்க; உரிஞ்யாது, மண்யாது என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், யகரம் ஒழிந்த பத்து மெய்முன்னும் வரும் யகரத்திற்கு 'எண்மூ எழுத்தீற்று' என்னும் சூத்திரத்தான் எய்தியதன் மேற் சிறப்புவிதிஉ உணர்–ற்று.

இ–ள்.:– யகரம், தன்னை ஒழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய் முன்னும் வந்தால், தன் முன் இகரச் சாரியையைப் பொருந்தும் என்று அரிதிற் கொள்வாரும் சிலர் உளர், எ–று.

உ–ம்.:–

வேளியாவன், மண்ணியாது எனவும்; வேளியானை, மண்ணியானை எனவும் வரும். பிறவும் அன்ன.

எதிர்மறையாய இழிவு சிறப்பும்மையான், இகரம் துன்னாது பொதுச்சூத்திரத்தான் இயல்பாம் என்பார் பலர் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், யகர மொழிந்த மெய் முன்னர் யகரம் வந்து புணருமாறு கூறுகின்றது.

இ–ள்.:– தன்னொழி மெய்முன் – நிலைமொழி ஈறாய் நின்ற யகர மொழிந்த பத்து மெய் முன்னரும், யவ்வரின்– வருமொழி முதல் நின்ற யகரம் வந்தால், இகரம் துன்னு மென்று – அவ்வொற்றின் மேல் இகரம் வந்து பொருந்துமென்று, துணிநரு முளரே – துணிந்தவரும் உளர், எ–று.

உ–ம்.:–

உரிஞியானை, மண்ணியானை, வெரிநியானை, நம்மியானை, பொன்னியானை, காரியானை, கல்லியானை, தெவ்வியானை, வாழியானை, வெள்ளியானை எனவும் உரிஞியாது, மண்ணியாது எனவும் அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் இகரம் பெற்றன.

உம்மையால் துணியார் பெரும்பாலர் எனக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

**இது,** யகர மொழிந்த பத்து மெய்களின் முன் வருகிற யகரத்திற்கு எண்மூவெழுத் தென்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

**இ–ள்.:– தன்னொழி** – தன்னை யொழிந்த, **மெய்ம்முன்** – ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்கிற பத்து மெய்களின் முன்னும், **ய**–யகரமானது **வரின்**– வந்தால், **இகரம்**–இகரச் சாரியை, **துன்னு மென்று** – தன்முன் பொருந்து மென்று, **துணிநரும்**–அரிதிற் கொள்வாரும், **உளர்**–சிலருளர், **எ–று.**

உ–ம்.:–

வேள் + யாவன்–வேளியாவன், மண் + யாது–மண்ணியாவது, என வரும். மற்றவைகளு மிப்படியே. (துணிநருமென்ற எதிர்மறையாய இழிவு சிறப்பும்மையால், வேள்யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனக் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

யகரமொழிந்த பத்து மெய்முன்னும் யகரம்வரின் "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரவிதிப்படி இயல்பாகாது வேறுவிதியும் பெறுமோ?

தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே.
(தன் ஒழி மெய்ம் முன் யவரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே.)

**இ–ள்.:– தன் ஒழி மெய்முன் ய வரின்** – தன்னையொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும் யகரம் வந்தால், **இகரம் துன்னும் என்று துணிநரும் உளர்** – இகரச்சாரியையைத் தன்முன் பொருந்துமென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர், **எ–று.**

உ–ம்.:–

வேள்–யாவன்–வேளியாவன், மண்–யாது–மண்ணியாது எனவும், வேளியானை, மண்ணியானை எனவும், வரும்.

“துணிநருமுளரே” என்றமையாற் கொள்ளக்கிடப்பது யாது?

மண்யாது எனஇயல்பாமெனத் துணிவார் பலரென்பது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, யகர மொழிந்த பத்து மெய் முன் வரும் யகரத்திற்கு 'எண்மூவெழுத்தீற்' றென்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது,

**இ–ள்:– தன்னொழி மெய்முன் யவ்வரின்** – யகரமானது, தன்னை யொழிந்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் பத்து மெய் முன்னும் வருமாயின், **இகரந் துன்னு மென்று துணிநரு முளர்** – இகரச் சாரியை வந்தடையு மென்று துணிந்து சொல்வோருஞ் சிலர் உண்டு, எ–று.

உ–ம்.:–

உரிஞ்யாது–உரிஞியாது, மண்யாது–மண்ணியாது, வேள் யாவன் – வேளியாவன் எனவும், உரிஞியாப்பு, மண்ணியானை, வேளியானை எனவும் வரும். பிறவுமிப்படியே காண்க. 'துணிநரு'மன்ற எதிர்மறையிழிவு சிறப்பு உம்மையினாலே, இகரந் துன்னாது எண்மூவெழுத்தீற் றென்னுஞ் சூத்திரத்திற் சொல்லியபடி இயல்பா மென்பார் பலரென்க. மண்ணியாது – என்றவிடத்து, இகரம் நோக்கித் தனிக்குறின் முன் ஒற்று இரட்டித்து நின்றதெனக் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– தன் ஒழி – தன்னை (யகரத்தை) ஒழிந்த, மெய்முன் – மொழிக்கு இறுதியில் வரும் ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும்) மெய்களின்முன், ய வரின் – (வருமொழி முதலில்) யகரம் வந்தால், இகரம் துன்னும் – இகரம் (இடையில்வந்து) அடையும், என்று –, துணிநரும் – (அருமையாகக்) கொள்பவர்களும், உளர் – (சிலர்) உண்டு.

உ–ம். :–

வேள் + யாவன் = வேளியாவன் (அல்வழி)
மண் + யாப்பு = மண்ணியாப்பு (வேற்றுமை)

குறிப்பு :-

'துணிநரும்' என்ற எதிர்மறையும்மையால், "எண்மூவெழுத்து" என்ற விதிப்படி வேள்யாவன், மண்யாது என வருமென்பார் பலர் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: தன் ஒழி மெய்ம்முன்** – தன்னை யொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும், **யவரின்** – யகரம் வந்தால், **இகரம் துன்னும் என்று துணிநரும் உளர்** – இகரச் சாரியையைத் தன்முன் பொருந்து மென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர், **எ–று.**

**உ–ம்.:-**

வேளியாவன், மண்ணியாது எனவும், வேளியானை, மண்ணியானை எனவும் வரும்.

துணிநரு மென்ற எதிர்மறையாய இழிவு சிறப்பும்மையால், வேள்யாவன், மண் யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனக் கொள்க.

இது "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். தன் ஒழி மெய்ம்முன்** – தன்னையொழிந்த ஞணநமனர லவழள என்னும் பத்துமெய்களின் முன்னும், – **யவரின்** – யகரம்வந்தால், – **இகரம் துன்னும் என்று துணிநரும் உளர்** – இகரச்சாரியையைத் தன் முன் பொருந்துமென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர். **எ–று.**

**உ–ம்:-**

வேளியாவன், மண்ணியாது – எம். வேளியானை, மண்ணியானை எனவும் வரும்.

துணிநருமென்ற எதிர்மறையால் இழிவுசிறப்பும்மையால் வேள் யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனச் கொள்க. மண்ணியாது, மண்ணியானை என்பனவற்றில் ககரம் நோக்கித் தனிக்குறின் முன்னொற் றிரட்டித்ததுகாண்க. இது "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– தன் ஒழி – தன்னை (யகரத்தை) ஒழிந்த, மெய் முன் – (மொழிக்கு இறுதியில் வரும் ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து) மெய்களின் முன்னும், ய வரின் – (வருமொழி முதலில்)யகரம் வந்தால், இகரம் துன்னும் – இகரம் (இடையில் வந்து ) சேரும், என்று–, துணிநரும் – (அருமையாகக்) கொள்பவர்களும், உளர் – (சிலர்) உண்டு; எ–று.

உ–ம்.:–

வேள்+யாவன் = வேளியாவன் – அல்வழி

மண்+ யாப்பு = மண்ணியாப்பு – வேற்றுமை.

'துணிநரும்' என்ற உம்மையால், வேள்யாவன், மண்யாது எனப் பொது விதி பெறுமென்பார் பலருள ரென்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– தன் ஒழி மெய்ம்முன் – தன்னையொழிந்த ஞ உ ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும், ய வரின் – யகரம் வந்தால், இகரம் துன்னும் என்று துணிநரும் உளர் – இகரச்சாரியையைத் தன்முன் பொருந்துமென்று அரிதிற் கொள்வாருஞ் சிலருளர். எ–று. ('தன்னை' என்றது யகரத்தை.)

வேள் + யாவன் = வேளியாவன்

மண் + யாது = மண்ணியாது – அல்வழி.

வேள் + யானை = வேளியானை

மண் + யானை = மண்ணியானை – வேற்றுமை.

துணிநருமென்ற எதிர்மறையாய இழிவுசிறப் பும்மையால், வேள்யாவன், மண் யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளரெனக் கொள்க.

இது "எண்மூவெழுத்தீற்று" என்னும் 158 ஆவது சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்பு விதி.

## கா.நமச்சிவாய முதலியார்

தன்னொழி – தன்னையொழிந்த, மெய்முன்–ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும், ய – யகரமானது, வரின் – வந்தால், இகரம் – இகரச்சாரியை, துன்னும் என்று – (இடையில்) பொருந்துமென்று, துணிநரும் – தெளிந்து சொல்வாரும், உளர் – சிலருளர்.

உதாரணம்.:-

வேள் + யாவன்= வேளியாவன் – அல்வழி.

மண் + யாப்பு = மண்ணியாப்பு – வேற்றுமை.

'துணிநரும்' என்ற எதிர்மறையாகிய இழிவுசிறப்பு உம்மையால், வேள்யாவன், மண்யாது எனப் பொதுவிதி பெறுமென்பார் பலருளர் என்பது போதரும்.

## மோசகு பொன்னையா

யகர மொழிந்த மொழியீற்று மெய்களாகிய ஞணநம னரலவழள என்பவற்றின் முன்னர் வருமொழி முதலில் யகரம் வரின், இகரம் இடையில் வந்துபொருந்தும் என்று கொள்வாரும் உளர், எ–று.

எ–டு.:-

வேளியாவன்; மண்ணியாது.

துணிநரும் என்ற உம்மையால் வேள்யாவன் மண்யாது எனப் பொதுவிதியால் முடியும் என்பாரே பலர் என்க. இம்முடிபு தொல்காப்பியத்தில் காணப்படாத ஒன்று.

(3)

**206. ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்**
**ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்**
**உவ்வுறு [1]மேவற் குறாசில சில்வழி.**

**ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழில்பெயர்**
**ஏவல் வினை நனி யவ் வன் மெய் வரின்**
**உவ் உறு மேவற்கு உறா சில சில் வழி.**

ña ṇa na ma la va ḻa ṉa oṟṟu iṟu toḻilpeyar
ēval viṉai naṉi yav vaṉ mey variṉ
uv uṟu mēvaṟku uṟā sila sil vaḻi.

---

பாடவேறுபாடு .:-

1. ஏவலுறா

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Certain verbal nouns and imperatives

The (increment) u is inserted in the combination of Verbal Nouns and Imperatives ending in nj. n,m,l,v, and n, with any initial consonant except y; in a few instances, however, some imperatives do not add the u.

## ஒப்புமைப் பகுதி

ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான

(தொல்.: 297)

ஞநமவ இயையினும் உகர நிலையும்

(தொல்.: 298)

நகர இறுதியும் அதனோ ரற்றே

(தொல்.: 299)

தொழிற் பெயரெல்லாந் தொழிற்பெய ரியல

(தொல்.: 307)

தொழிற் பெயரெல்லாந் தொழிற்பெய ரியல

(தொல்.: 328)

தொழிற் பெயரெல்லாந் தொழிற்பெய ரியல

(தொல்.: 377)

ஏனை வகரந் தொழிற் பெயளரியற்றே

(தொல்.: 383)

தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல

(தொல்.: 402)

ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்
யவ்வன் மெய்வரி னுவ்வுறு.......
...... வேற்றுமைக் கென்ப
செவ்விதி னவ்விய தெரியுங் காலே.

(இ.வி.: 81)

ஞகா னிறுதித் தொழிற்பெய ருகரம்
பெறுதலு மிகுதலும் பெற்றித் தாகும்

(மு.வீ.: 297)

ஞநமவ வரினும் உகரமொடு நிலையும்

(மு.வீ.: 298)

## மயிலை நாதர்

எ—ன், தொழிற் பெயர்க்கும் ஏவல் வினைக்கும் ஆவதோர் விதி உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— இவ்வெட்டொற்றும் ஈறாக வருந் தொழிற்பெயரும் ஏவல்வினைச் சொல்லும் யகரமொழிந்த மெய்கள் வரின் இடையே உகரம் பெறும்; ஏவலிடத்துச் சில சிலவிடங்களிற் பெறாதனவுமாம், எ—று.

பொதுப்பட வைத்தமையால், தொழிற்பெயர்க்கண் இருவழியும் கொள்க.

வ—று.:—

(உரிஞ், மண், பொருந், செம், புல், தெவ், துள், துன்) + (கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை) எனவும் இருவழியும் தொழிற்பெயர்க்கண் உகரம் வந்தது.

இவற்றை எடுத்து உச்சரித்துப் பெயரை வருவித்து ஏவல்வினை யாக்கி உகரம் பெறுமாறு காண்க.

அவை: உரிஞுகொற்றா: சாத்தா,தேவா, பூதா, ஞெள்ளா, நாகா, மாடா, வளவா என வரும். பிறவுமன்ன.

(உண்,தின், கொள்) + (கொற்றா, சாத்தா, தேவா, பூதா) என இவை ஏவற்கண் உகரம் பெறாவாயின.

'நனி' என்றதனால், [2]மணலைவாரு, சருகைவாரு என ரகரம் ஏவற்கண் [3]உகரம் அரிதிற் பெறுமென்க.

இன்னும் இதனானே இவ்விருமொழிக்கும் வருவனவெல்லாம் அறிந்து முடிக்க.

---

பாட வேறுபாடு .:—

1. வாரு, சாரு, தேரு என
2. உகரம் பெறும்

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், முதனிலைத் தொழிற்கும் ஏவற்கும் பொதுவாய சில நிலைமொழிகட்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள்.:– ய ர ழக்களை ஒழிந்த எட்டு ஒற்றும் இறுதியாகும் முதனிலைத் தொழிற்பெயரும், ஏவல்வினையும் மேல் விதந்த யகரம் ஒழிந்த மெய் வருமாயின், பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதிக்கண் பொருந்தும், சில ஏவல்வினை அவ்வுகர சாரியைப் பொருந்தா, சில இடங்களில், எ—று.

ஏவல்வினையோடு எண்ணினமையின், முதனிலைத் தொழிற்பெயர் என்பது பெற்றாம்.

உ—ம்:–

உரிஞுக் கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும்; கடுமை, நீட்சி, வன்மை எனவும், தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம் பெற்றன. பிறவும் அன்ன. உரிஞு கொற்றா, உண்ணுகொற்றா, பொருநு கொற்றா, திருமு கொற்றா, தின்னு கொற்றா, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன, பிறவும் அன்ன.

உரிஞு, உண்ணு என வருமொழி யின்றி உகரம் பெறுதலும், மணலைவாரு சருகைவாரு எனச் சிறுபான்மை விலக்கிய ஈறு உகரம் பெறுதலும் உள என்பார் 'நனி' என்றும், யகரம் வருமொழிக்கு இகரம் விதித்தலின் அதனோடு புணரும் இந்நிலை மொழியிறுதி உகரம் பெறாது என்பார், 'யவ்வன்மெய்' என்றும், உண்ணுகொற்றா உண்கொற்றா என உகரம் பெற்றே வருவனவும் உள என்பார், 'சில ஏவலுறா சில்வழி' என்றும் கூறினார்.

ஏவலுறா என்னாது, ஏவற்குறா எனப் பாடம் ஓதுவாரும் உளராலோ எனின்:– உறும் என்னும் வினைக்குத் தொழிற் பெயர்களையும் ஏவல் வினைகளையும் வினை முதலாக்கிக் கூறுதலானும், அதனை மறுத்த உறா என்னும் பன்மை வினைக்கு ஒருமை யுகரம் வினை முதலாகாமையானும் அது பாடம் அன்றென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், தொழிற் பெயர்க்கும் ஏவல் வினைக்கும் ஈற்றினின்ற ஒற்றின் மேல் யவ்வல்லாத மெய் வந்து புணருமாறு கூறியது.

இ—ள்.:– **ஞணநம லவளன ஒற்றிறு** – ஞ ண ந ம ல வ ள ன என்னும் இவ்வெட்டு ஒற்றும் ஈறாய் வரும், **தொழிற்பெயர் ஏவல் வினைநனி** –

தொழிற்பெயரிலும் ஏவல் வினைச் சொல்லினும் மிகவும், **யவ்வன் மெய்வரின்** – யகரமல்லாத பத்து மெய்களும் வந்தால், **உவ்வுறும்** – அவ்விற்றினின்ற ஒற்றின் மேல் உகரம் வந்து பொருந்தும், **ஏவல் குறா சில வழி**–ஏவல் வினைக்கண் அவ்வுகரம் சில சில இடங்களிற் பெறாதாம், எ–று.

**உ–ம்.:–**

உரிஞு, மண்ணு, பொருநு, செம்மு, புல்லு, தெவ்வு, துள்ளு, நுன்னு, கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது,மாண்டது, வலிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் இரு வழியும் தொழிற்பெயர்கண் உகரம் பெற்றன.

இவற்றை எடுத்துச்சரித்துப் பெயரை வருவித்து ஏவல் வினையாக்கி உகரம் பெற்றவாறு காண்க. உரிஞு கொற்றா, உரிஞு சாத்தா, உரிஞு தேவா, பூதா,ஞெள்ளா, நாகா, மாடா, வளவா என வரும். பிறவுமன்ன. உண், தின் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என இவை ஏவற்கண் உகரம் பெறாவென்க.

"நனி" என்றதினாற் சிறுபான்மை இவை எட்டொற்று மல்லாத பிற ஒற்றினும் உகரம் பெறுமென்க. மணலை வாரு, சருகை வாரு, நீ தாழு, நீ வாழு என ரகர, ழகரம் ஏவற்கண் உகரம் பெற்றன.

## விசாகப் பெருமாளையர்

**இது,** முதனிலைத்தொழிற்கும் ஏவற்கும் பொதுவாகிய சில நிலைமொழிகளுக்கு எய்தாத தெய்துவிக்கின்றது.

**இ–ள்.:–** **ஞணநமலவளன** – ஞ ண ந ம ல வ ள ன என்கிற, **ஒற்று**– எட்டு மெய்களும், **இறு** – இறுதியாகிய, **தொழிற்பெயர்**– முதனிலைத் தொழிற்பெயர்களும், **ஏவல் வினை**–ஏவல் வினைகளும், **யவ்வன்மெய்** – யகர மொழிந்த மெய்கள், **வரின்**–வருமாயின், **நனி**–பெரும்பாலும், **உ**– உகரச்சாரியையை, **உறும்** – இறுதிக்கட் பொருந்தும், **சில** – ஏவல் வினைகள், **சில வழி** – சிலவிடங்களிலே, **உறா**–அவ் வுகரச் சாரியையைப் பொருந்தாவாம், எ–று.

**உ–ம்.:–**

உரிஞுக்கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட்சி, வன்மை எனவும், தொழிற்பெய ரிருவழியும் உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே. உரிஞுகொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமுகொற்றா, தின்னுகொற்றா, நாகா,

வளவா எனஏ வல்வினை உகரம் பெற்றன. மற்றவையுமிப்படியே (சிலவேவலுறா சில்வழி யென்றதனால் உண்ணுகொற்றா, உண்கொற்றா, என வுகரம் பெற்றும் பெறாதும் வருவனவும், உரிஞுகொற்றா என வுகரம் பெற்றே வருவனவும், உளவென்றறிக.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சில மெல்லின இடையினவீற்று முதனிலைத் தொழிற்பெயர்களுக்கு முன்னும் ஏவல்களுக்கு முன்னும் யகரமல்லாத மெய்வந்து புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

ஞ ண ந ம ல வ ள ன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினை நனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறு மேவ லுறாசில சில்வழி.

(ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர்
ஏவல்வினைநனி யஅல் மெய்வரின்
உ உறும், ஏவல் உறாசில சில்வழி.)

இ–ள்.:– ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர் ஏவல் வினை – ஞ ணந ம ல வ ள ன என்னும் எட்டு மெய்களும் இறுயாகிய முதனிலைத் தொழிற்பெயர்களும் ஏவல்வினைகளும், ய அல் மெய்வரின் – யகரமொழிந்த மெய்கள் வருமாயின், நனி உ, உறும் – பெரும்பாலும் உகரச்சாரியையை இறுதிக்கட் பொருந்தும்; சில ஏவல் சில்வழி உறா – சிலவேவல் வினைகள் சிலவிடங்களிலே அவ்வுகரச்சாரியைப் பொருந்தாவாம், எ–று.

முதனிலைத் தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றி முதனிலை மாத்திரம் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவதாம்.

உ–ம்.:–

(1) உரிநுக் கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட், வன்மை எனவும், தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம் பெற்றன. மற்றவைகளும் இப்படியே. உரிஞுதல் உண்ணல் என்புழிவரும் விகுதி குன்றி, நின்றமை காண்க.

(2) உரிஞுகொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமு கொற்றா, தின்னு கொற்றா, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே

இது எய்தாத தெய்துவித்தல்.

உகரச்சாரியை பெற்றும் பெறாதும் வரும் ஏவல் வினைகள் எவை?

ண ன ல ள என்னும் மீற்றன.

உ-ம்.:-

உண்கொற்றா, தின்சாத்தா, வெவ்பூதா, துள்வளவா என வரும்.

உகரம்பெற்றோ வரும் ஏவல்வினைகள் எவை?

ஞ ந ம வ என்னு மீற்றன.

உ-ம்.:-

உரிஞு கொற்றா, பொருநுகொற்றா, திருமுகொற்ற, தெவ்வுகொற்றா, எனவரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, முதனிலைத் தொழிற் பெயர்க்கும் ஏவல் வினைக்கும் பொதுவாகிய சில நிலைமொழிகளுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

இ-ள்.:- **ஞணநமலவளன வொற்றிறு தொழிற்பெய ரேவல் வினை**- இவ்வெட்டு ஈற்று முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல் வினையும், **யவ்வன் மெய்வரின்**-யகரம் ஒழிந்த மெய் முதன் மொழிகள் வரின், **நனி யுவ்வுறும்** - பெரும்பாலும் உகரச் சாரியையை யிறுதியிலே பெறும், **ஏவலுறா சில சில்வழி** - சில ஏவல்வினைகள் அந்த உகரச் சாரியையைச் சில இடங்களிலே பொருந்தாவா மென்றவாறு.

ஏவல்வினையொடு சேர்த்ததினாலே, முதனிலைத் தொழிற் பெய ரென்பது பெறப்பட்டது.

உ-ம்.:-

உரிஞ்-உரிஞுக்கடிது, உண்-உண்ணுக்கடிது, பொருந்-பொருநுக்கடிது, திரும்-திருமுக்கடிது, தின்-தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும், உரிஞுக்கடுமை; நீட்சி, வன்மை எனவும், தொழிற்பெயர்கள் இருவழியும் உகரச் சாரியை பெற்றன. உரிஞுகொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமுகொற்றா, தின்னுகொற்றா, தின்னுநாகா, வளவா என ஏவல் வினைகள் உகரம் பெற்றன. மற்றையவு மிப்படியே. உரிஞு, உண்ணு என வரு மொழி யின்றி யுகரம் பெறுதலும் மணலைவாரு, சருகைவாரு எனச் சிறுபான்மை விலக்கிய ஈறு உகரம் பெறுதலும் உள வென்று சொல்ல வந்தவர், 'நனி'யென்றும், உண்ணுகொற்றா, உண்கொற்றா என உகரம் பெற்றும் பெறாதும் வருவனவும்,

உரிஞு கொற்றா என்றாற் போல உகரம் பெற்றே வருவனவும் உளவென்பார், சில ஏவலுறா சிலவழி யென்றுங்கூறினார். காட்டாதொழிந்தனவும் இவ்வாறு வருமாயிற் காண்க. தொழிற்பெயர் ஏவல்வினை உவ்வுறும் எனவும், சில உறா எனவும் இருமுடிபாக முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :- ஞணநமலவளன** - ஞ முதலியனவாகிய, **ஒற்று** - எட்டு மெய்களையும், **இறு** -இறுதியாகவுடைய, **தொழிற்பெயர்** - (முதனிலைத்) தொழிற்பெயர்களும், **ஏவல்வினை** - ஏவலொருமை வினைகளுமாகிய இவற்றின் முன், **ய அல் மெய்**-யகரத்தை யொழிந்த (மொழிக்கு முதலில் வரும் க ச த ப ஞ ந மவ என்னும் எட்டு) மெய்கள், **வரின்** - (வருமொழி முதலில்) வந்தால், **நனி** - பெரும்பாலும், **உ உறும்** - உகரச் சாரியை நிலைமொழியீற்றில் பொருந்தும், **சில ஏவல்** - சில ஏவல் வினைகள், **சில் வழி** - சிலவிடங்களிலே, **உறா** - (அவ் வகரச்சாரியையைப்) பொருந்தாவாம்.

**குறிப்பு :-**

இங்கே, தொழிற்பெயர் ஏவல்வினை யென்றது, பகுதி மாத்திரமே நின்று அந்தந்தப் பொருளை யுணர்த்தும் முதனிலைத் தொழிற் பெயரும், ஒருமை ஏவலுமென்றறிக.

**உதாரணம்.:-**

| | | | |
|---|---|---|---|
| உரிஞ் | + கடிது | = உரிஞுக்கடிது | உரிஞுக்கடுமை. |
| உண் | + சிறிது | = உண்ணுச்சிறிது | உண்ணுச்சிறுமை |
| பொருந் | + தீது | = பொருநுத்தீது | பொருநுத்தீமை |
| திரும் | + பெரிது | = திருமுப்பெரிது | திருமுப்பெருமை |
| வெல் | + ஞான்றது | = வெல்லுஞான்றது | வெல்லுஞாற்சி |
| வவ் | + நீண்டது | = வவ்வுநீண்டது | வவ்வுநீட்சி |
| துள் | + மாண்டது | = துள்ளுமாண்டது | துள்ளுமாட்சி. |
| தின் | + வலிது | = தின்னுவலிது | தின்னுவலிமை |

(என இருவழியிலும் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரம் பெற்றன)

உரிஞ் + கொற்றா = உரிஞுகொற்றா
உண் + சாத்தா = உண்ணுசாத்தா
பொருந் + தேவா = பொருநுதேவா
திரும் + பூதா = திருமுபூதா
வெல் + ஞொள்ளா = வெல்லுஞொள்ளா
வவ் + நாகா = வவ்வு நாகா

துள் + மனிதா = துள்ளுமனிதா
தின் + வளவா = தின்னுவளவா.

(என ஏவல்வினைகள் உகரம்பெற்றன.)

உகரச் சாரியை பெற்றும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ள ல என்னும் நான்கீற்றனவாம். உ–ம் : – 'உண்கொற்றா', 'தின் சாத்தா', 'வெல்பூதா' "துள்வளவா' எனப் பெறாமல் வந்தன. உகரம் பெற்றே வருவன ஞ ந ம வ என்னும் நான்கீற்றனவாம். இவற்றைச் 'சில ஏவல் உறாசில்வழி' என்றதனாற் கொள்க.

'நனி' என்றதால் சிறுபான்மை வருமொழி நோக்காமல் உண்ணு, தின்னு என உகரம் பெற்று வருதலும்; வாருசாத்தா, வாழுவளவா எனப் பிற ஈறுகள் உகரம் பெறுதலும் உள்ளன என்க. கீழ் "யவ்வரினிகரந் துன்னும்" என்றதனால் யகரத்தை விலக்கினார்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர் ஏவல் வினை–ஞ ண ந ம ல வ ள ன என்னும் எட்டு மெய்களும் இறுதியாகிய முதனிலைத் தொழிற் பெயர்களும் ஏவல் வினைகளும், ய அல் மெய் வரின் – யகர மொழிந்த மெய்கள் வருமாயின், நனி உ உறும் – பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதிக்கட் பொருந்தும், சில ஏவல் சில்வழி உறா – சிலவேவல் வினைகள் சிலவிடங்களிலே அவ் வுகரச் சாரியையைப் பொருந்தாவாம், எ–று.

முதனிலைத் தொழிற் பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றி முதனிலை மாத்திர நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவதாம்.

உ–ம்.:–

(1) உரிஞுக்கடிது, உண்ணுக்கடிது, பொருநுக்கடிது, திருமுக் கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும்; கடுமை, நீட்சி, வன்மை எனவும்; தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம் பெற்றன. மற்றவைகளும் இப்படியே. இவை, உரிஞுதல் உண்ணல் என்புழி வரும் விகுதி குன்றி, நின்றமை காண்க.

(2) உரிஞுகொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமு கொற்றா, தின்னுகொற்றா, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே.

உகரச் சாரியை பெற்றும் பெறாதும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னு நான்கீற்றனவுமாம்.

வ–று.:–

உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா என வரும் ஞ ந ம வ என்னும் நான்கீறும் உகரம் பெற்றே வரும்.

இது எய்தாததெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஞணநமலவளனஒற்று இறு தொழிற்பெயர் ஏவல்வினை** – ஞணநமலவளனஎன்னும் எட்டுமெய்களும் இறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்களும் ஏவல்வினைகளும், – **யஅல் மெய்வரின்** – யகர மொழிந்த மெய்கள் வருமாயின், – **நனி உ உறும்** – பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதிக்கட்பொருந்தும், – **சில ஏவல் சில்வழி உறா** – சிலவேவல்வினைகள் சிலவிடங்களிலே அவ்வுகரச்சாரியைப் பொருந்தாவாம்.

முதனிலைத் தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதி குன்றிமுதனிலைமாத்திரநின்று தொழிற் பெயர்ப்பொருளைத் தருவதாம்.

உ–ம்:–

(1)உரிஞுக்கடிது, உண்ணுக்கடிது, பொருந்நுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, நீண்டது, வலிது எனவும் கடுமை, நீட்சி, வன்மை எனவும் தொழிற்பெயர் இருவழியும் உகரம்பெற்றன. மற்றவைகளும் இப்படியே. இவை உரிஞுதல் உண்ணல் என்புழி வரும் விகுதி குன்றி, நின்றமை காண்க.

(2)உரிஞு கொற்றா, உண்ணுகொற்றா, பொருநுகொற்றா, திருமுகொற்றா, தின்னுகொற்றா, நாகா, வளவா என ஏவல்வினை உகரம் பெற்றன. மற்றவையும் இப்படியே.

உகரச்சாரியைபெற்றும் பெறாதும் வரும். ஏவல்வினைகள் ணனலள என்னு நான்கீற்றனவுமாம். வரலாறு : உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா, என வரும், ஞநமவ என்னு நான்கீறும் உகரம் பெற்றே வரும்.

உரிஞு, உண்ணு என வருமொழியின்றி உகரம் பெறுதலும், மணலைவாரு, சருகைவாரு எனச் சிறுபான்மை சொல்லாத ஈறு உகரம் பெறுதலும் சொல்லவந்தவர் நனி என்றும்,

உண்ணுகொற்றா, உண்கொற்றா என உகரச்சாரியை பெற்றும், பெறாதும் வருவனவும், உரிஞுகொற்றா என்றாற்போல உகரம் பெற்றே வருவனவும் உளவென்பார், சில ஏவலுறா சில்வழி என்றுங் கூறினார். இது எய்தாத தெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** (1) **ஞணநமலவளன** – ஞ ண ந ம ல வ ள ன என்கிற, **ஒற்று** – (எட்டு) மெய்களையும், **இறு** – இறுதியாகவுடைய, **தொழிற்பெயர்**– (முதனிலைத்) தொழிற்பெயர்களும், **ஏவல்வினை** – ஏவலொருமை வினைகளும் ஆகிய இவற்றின் முன், **ய அல் மெய்** – யகரத்தை ஒழிந்த (மொழிக்கு முதலில் வரும் க ச த ப ஞ ந ம வ என்னும் எட்டு) மெய்களும், **வரின்**–(வருமொழி முதலில்), வருமாயின், **நனி**– பெரும்பாலும், **உ உறும்**–உகரச் சாரியை (நிலைமொழியீற்றில்) பொருந்தும்; – (2) **சில ஏவல்** – சில ஏவல்வினைகள், **சில்வழி** –சில இடங்களிலே, **உறா**– (அவ்வுகரச் சாரியையைப்) பொருந்தாவாம்; எ–று.

இங்கே, 'தொழிற்பெயர்' 'ஏவல்வினை' என்றது, பகுதிமாத்திரமே நின்று அந்தந்தப் பொருளை உணர்த்துகின்ற முதனிலைத் தொழிற்பெயர்களையும், ஒருமை யேவல்களையும்.

| (1) அல்வழி | | (உதாரணம்) | | வேற்றுமை. |
|---|---|---|---|---|
| உரிஞ் + கடிது | = | உரிஞுக்கடிது + கடுமை | = | உரிஞுக்கடுமை |
| உண் + சிறிது | = | உண்ணுச்சிறிது + சிறுமை | = | உண்ணுச்சிறுமை |
| பொருந் + தீது | = | பொருநுத்தீது + தீமை | = | பொருநுத்தீமை |
| திரும் +பெரிது | = | திருமுப்பெரிது+ பெருமை | = | திருமுப்பெருமை |
| வெல் + ஞான்றது | = | வெல்லுஞான்றது + ஞாற்சி | = | வெல்லுஞாற்சி |
| வவ் + நீண்டது | = | வவ்வுநீண்டது+ நீட்சி | = | வவ்வுநீட்சி |
| துள் + மாண்டது | = | துள்ளுமாண்டது + மாட்சி | = | துள்ளுமாட்சி |
| தின் + வலிது | = | தின்னுவலிது + வலிமை | = | தின்னுவலிமை |

என இருவழியிலும் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரம் பெற்றன.

| | | | |
|---|---|---|---|
| உரிஞ்+ கொற்றா = உரிஞுகொற்றா | | வெல்+ஞெள்ளா = வெல்லு ஞெள்ளா | |
| உண் + சாத்தா = உண்ணுசாத்தா | | வவ் + நாகா= வவ்வுநாகா | |
| பொருந் + தேவா = பொருநுதேவா | | துள்+மனிதா = துள்ளுமனிதா | |
| திரும் + பூதா = திருமுபூதா | | தின்+வளவா = தின்னுவளவா | |

என ஏவல்வினைகள் உகரம் பெற்றன.

(2) உகரச்சாரியை பெற்றும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கு ஈற்றனவுமாம்:

உ–ம்.:–

உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா என உகரம் பெறாமல் வந்தன. ஞ ந ம வ என்னும் நான்கு ஈறும், உகரம் பெற்றே வரும்.

சிறுபான்மை உண்ணு, தின்னு என வருமொழி நோக்காமல் உகரம் பெறுதலும், வருசாத்தா வாழுவளவா எனப் பிற ஈறுகள் உகரம் பெறுதலும் உள்ளன வென்பார், 'நனி' என்றார்.

கீழ் **'யவ்வரி னிகரந் துன்னும்'** என்றதனால், யகரத்தை இங்கு விலக்கினார்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– ஞ ண ந ம ல வ ள ன ஒற்று இறு தொழிற்பெயர் ஏவல் வினை** – ஞ ண ந ம ல வ ள ன என்னும் எட்டு மெய்களும் இறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்களும் ஏவல்வினைகளும், **ய அல்மெய்வரின்** – யகரமொழிந்த மெய்கள் வருமாயின், **நனி உ உறும்** – பெரும்பாலும் உகரச்சாரியையை இறுதிக்கட் பொருந்தும், **சில ஏவல் சில்வழி உறா** – சில ஏவல் வினைகள் சிலவிடங்களிலே அவ்வுகரச்சாரியையைப் பொருந்தாவாம். **எ–று.**

முதனிலைத் தொழிற்பெயராவது தொழிற்பெயர் விகுதிகுன்றி முதனிலை மாத்திரம் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவதாம்.

உ–ம்.:–

(1) உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது.

உண் + சிறிது = உண்ணுச்சிறிது.

பொருந் + தீது = பொருநுத்தீது.

திரும் + பெரிது = திருமுப்பெரிது.

வெல் + ஞான்றது = வெல்லுஞான்றது.

வவ் + நீண்டது = வவ்வுநீண்டது.

துள் + மாண்டது = துள்ளுமாண்டது.

தின் + வலிது = தின்னுவலிது. – அல்வழி.

(1) உரிஞ் + கடுமை = உரிஞுக்கடுமை.

உண் + சிறுமை = உண்ணுச்சிறுமை.

பொருந் + தீமை = பொருநுத்தீமை.

திரும் + பெருமை = திருமுப்பெருமை.

வெல் + ஞாற்சி = வெல்லுஞாற்சி.

வவ் + நீட்சி = வவ்வுநீட்சி.

துள் + மாட்சி = துள்ளுமாட்சி.

தின் + வலிமை = தின்னுவலிமை. – வேற்றுமை.

தொழிற்பெயர்கள் இருவழியும் உகரம் பெற்றன. இவை, உழிஞுதல் உண்ணல் என்புழி வரும் விகுதி குன்றி நின்றமை காண்க.

(2) உழிஞ் + கொற்றா = உரிஞுகொற்றா.

உண் + சாத்தா = உண்ணுசாத்தா.

பொருந் + தேவா – பொருநுதேவா

திரும் + பூதா = திருமுபூதா.

வெல் + ஞெள்ளா = வெல்லுஞெள்ளா

வவ் + நாகா = வவ்வுநாகா.

துள் + மனிதா = துள்ளுமனிதா.

தின் + வளவா = தின்னுவளவா. – ஏவல் வினை உகரம் பெற்றது.

உகரச்சாரியை பெற்றும் பெறாதும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கீற்றனவுமாம். வரலாறு : உண்கொற்றா, தின்சாத்தா, வெல்பூதா, துள்வளவா என வரும். ஞ ந ம வ என்னும் நான்கீறும் உகரம் பெற்றே வரும்.

இது எய்தாத தெய்துவித்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **ஞணநம லவளன** – ஞ ண ந ம ல வ ள ன என்னும், **ஒற்று** – எட்டுமெய்களும், **இறு** – இறுதியாகிய, **தொழிற் பெயர்** – முதனிலைத் தொழிற் பெயர்களும், **ஏவல்வினை** – ஏவல் வினைகளும், **ய அல் மெய்** – யகரமொழிந்த மெய்கள், **வரின்** – வருமாயின், **நனி** – பெரும்பாலும், **உ** – உகரச் சாரியை, **உறும்** – இறுதிக்கட் பொருந்தும்;

(2) **சில ஏவல்** – சில ஏவல்வினைகள், **சில்வழி** – சில விடங்களிலே, **உறா** – (அவ் வுகரச்சாரியை) பொருந்தாவாம்.

## உதாரணம்

| | | |
|---|---|---|
| (1) உரிஞ் | + கடிது | = உரிஞுக்கடிது |
| | + நீண்டது | = உரிஞுநீண்டது |
| | + வலிது | = உரிஞுவலிது |
| உண் | + கடிது | = உண்ணுக்கடிது |
| | + நீண்டது | = உண்ணுநீண்டது |
| | + வலிது | = உண்ணுவலிது |
| பொருந் | + கடிது | = பொருநுக்கடிது |
| | + நீண்டது | = பொருநுநீண்டது |
| | + வலிது | = பொருநுவலிது |
| திரும் | + கடிது | = திருமுக்கடிது |
| | + நீண்டது | = திருமுநீண்டது |
| | + வலிது | = திருமுவலிது |
| வெல் | + கடிது | = வெல்லுக்கடிது |
| | + நீண்டது | = வெல்லுநீண்டது |
| | + வலிது | = வெல்லுவலிது |
| வவ் | + கடிது | = வவ்வுக்கடிது |
| | + நீண்டது | = வவ்வுநீண்டது |
| | + வலிது | = வவ்வுவலிது |
| துள் | + கடிது | = துள்ளுக்கடிது |
| | + நீண்டது | = துள்ளுநீண்டது |
| | + வலிது | = துள்ளுவலிது |
| தின் | + கடிது | = தின்னுக்கடிது |
| | + நீண்டது | = தின்னுநீண்டது |
| | + வலிது | = தின்னுவலிது |

எனவும்,

| | | |
|---|---|---|
| உரிஞ் | + கடுமை | = உரிஞுக்கடுமை |
| | + நீட்சி | = உரிஞுநீட்சி |
| | + வன்மை | = உரிஞுவன்மை |
| உண் | + கடுமை | = உண்ணுக்கடுமை |
| | + நீட்சி | = உண்ணுநீட்சி |
| | + வன்மை | = உண்ணுவன்மை |
| பொருந் | + கடுமை | = பொருநுக்கடுபை |
| | + நீட்சி | = பொருநுநீட்சி |
| | + வன்மை | = பொருநுவன்மை |

| | | |
|---|---|---|
| திரும் | + கடுமை | = திருமுக்கடுமை |
| | + நீட்சி | = திருமுநீட்சி |
| | + வன்மை | = திருமுவன்மை |
| வெல் | + கடுமை | = வெல்லுக்கடுமை |
| | + நீட்சி | = வெல்லுநீட்சி |
| | + வன்மை | = வெல்லுவன்மை |
| வவ் | + கடுமை | = வவ்வுக்கடுமை |
| | + நீட்சி | = வவ்வுநீட்சி |
| | + வன்மை | = வவ்வுவன்மை |
| துள் | + கடுமை | = துள்ளுக்கடுமை |
| | + நீட்சி | = துள்ளுநீட்சி |
| | + வன்மை | = துள்ளுவன்மை |
| தின் | + கடுமை | = தின்னுக்கடுமை |
| | + நீட்சி | = தின்னுநீட்சி |
| | + வன்மை | = தின்னுவன்மை |

எனவும் தொழிற்பெயர் இருவழியும் உகரம் பெற்றன.

| | | |
|---|---|---|
| உரிஞ் | + கொற்றா | = உரிஞுகொற்றா |
| | + நாகா | = உரிஞுநாகா |
| | + வளவா | = உரிஞுவளவா |
| உண் | + கொற்றா | = உண்ணுகொற்றா |
| | + நாகா | = உண்ணுநாகா |
| | + வளவா | = உண்ணுவளவா |
| பொருந் | + கொற்றா | = பொருநுகொற்றா |
| | + நாகா | = பொருநுநாகா |
| | + வளவா | = பொருநுவளவா |
| திரும் | + கொற்றா | = திருமுகொற்றா |
| | + நாகா | = திருமுநாகா |
| | + வளவா | = திருமுவளவா |
| வெல் | + கொற்றா | = வெல்லுகொற்றா |
| | + நாகா | = வெல்லுநாகா |
| | + வளவா | = வெல்லுவளவா |
| வவ் | + கொற்றா | = வவ்வுகொற்றா |
| | + நாகா | = வவ்வுநாகா |
| | + வளவா | = வவ்வுவளவா |
| துள் | + கொற்றா | = துள்ளுகொற்றா |

| | | |
|---|---|---|
| | + நாகா | : துள்ளுநாகா |
| | + வளவா | : துள்ளுவளவா |
| தின் | + கொற்றா | : தின்னுகொற்றா |
| | + நாகா | : தின்னுநாகா |
| | + வளவா | : தின்னுவளவா |

என ஏவல்வினை உகரம் பெற்றன.

இவ்வாறே பிற எழுத்துக்களோடும் கூட்டிக்கொள்க.

உகரச்சாரியை பெற்றும் பெறாமலும் வரும் ஏவல்வினைகள் ண ன ல ள என்னும் நான்கீற்றனவாம்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (2) | உண் | + | கொற்றா | : உண்கொற்றா |
| | தின் | + | சாத்தா | : தின்சாத்தா |
| | வெல் | + | பூதா | : வெல்பூதா |
| | துள் | + | வளவா | : துள்வளவா |

என உகரச் சாரியை பெறாமல் வந்தன.

ஞ ந ம வ என்னும் நான்கீறும் உகரம்பெற்றே வரும்.

'நனி' என்றதனால், சிறுபான்மை உண்ணு, தின்னு என

(1) வருமொழி நோக்காமல் உகரம் பெறுதலும்,

வாரு சந்தா, வாழு வளவா எனப் (2) பிற ஈறுகள் உகரம் பெறுதலும் உள என்பது கொள்க.

## மோசகு பொன்னையா

ஞ ண ந ம ல வ ள ன என்னும் எட்டு ஒற்றுக்களால் இறும் முதனிலைத் தொழிற் பெயர்களும், ஏவல்வினைகளும் வருமொழி முதலில், யகரமல்லாத மொழி முதலில் வரும் மெய்களான கசதப ஞநமவ என்னும் எட்டு மெய்களுள் யாதானு மொன்று வரின், நிலைமொழி ஈற்றில் உகரச்சாரியை பொருந்தி வரும். சில ஏவல்வினைகள் அவ்வுகரச் சாரியையைப் பொருந்துவதில்லை, எ–று.

பகுதி அளவாய் நின்று தொழிற்பெயர்ப் பொருளை உணர்த்துவது முதனிலைத் தொழிற்பெயர் எனவும்; அவ்வாறுநின்று ஏவற் பொருளை உணர்த்துவது ஏவல்வினை எனவும் கொள்க.

எ–டு.:–

உருநுக்கடிது; உண்ணுச்சிறிது;

பொருநுத்தீது; திருமுப்பெரிது;

வெல்லுஞான்றது; வவ்வுநீண்டது;

தொழிற்பெயர்கள் துள்ளுமாண்டது; தின்னுவலிது; – அல்வழி

உரிஞுக்கடுமை; உண்ணுச் சிறுமை;

பொருநுத்தீமை; திருமுப்பெருமை;

வெல்லுஞாட்சி; வவ்வுநீட்சி;

துள்ளுமாட்சி; தின்னுவலிமை. – வேற்றுமை

உருநுகொற்றா; உண்ணுசாத்தா;

பொருநு தேவா; திருமுபூதா;

ஏவல் வினைகள் வெல்லு ஞெள்ளா; வவ்வு நாகா;

துள்ளு மனிதா; தின்னு வளவா.

பொருந் – வேடம்; திரும் – திருப்பம்.

சில ஏவல் வினைகள் அவ்வாறு உகரச்சாரியை பெறா என்றதனால், ண, ன, ல, ள என்னும் நான்கீற்றனவாகிய ஏவல்வினைகள் உண்கொற்றா; தின்சாத்தா; வெல்பூதா; துள்வளவா என உகரச் சாரியை பெறாமலும் முடியும் எனக் கொள்க. இவ்வாறு இடையில் உயிர் வருவதை மொழி நூலார் உயிர் தோன்றல் என்பர்.

(4)

207. நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை.

நவ் இறு தொழில்பெயர்க்கு அவ்வும் ஆம் வேற்றுமை

nav iṟu toḻilpeyarkku avvum ām vēṟṟumai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for verbal root nouns ending in n

In casual combination (the increment) a is also added to verbal nouns ending in n.

## ஒப்புமைப் பகுதி

வேற்றுமைக்கு உக்கெட அகர நிலையும்

(தொல்.: 300)

......... நவ்வுக்
கவ்வு மாகும் வேற்றுமைக் கென்ப
செவ்விதி னவ்விய றெரியுங் காலே.

(இ.வி.: 81: 2–4)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– நகார வீற்றுத் தொழிற்பெயர்க்கு உகரமே யன்றி வேற்றுமைக்கண் அகரமும் மிகப்பெறும், எ–று.

வ–று.:–

பொருநக்கடுமை; சிறுமை, தீமை,பெருமை என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், நகர ஈற்றுத் தொழிற்பெயர்க்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி, உணர்–ற்று.

இ–ள்.:– நகரம் இறுதி யாகும் முதல்நிலைத் தொழிற்பெயர்க்கு உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் ஆம் வேற்றுமைக்கண், எ–று.

உ–ம்.:–

பொருநக்கடுமை, நன்மை, வன்மை என வரும். பிறவும் அன்ன.

பொருநுதல் ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும் பொருநரது தொழிலாதலின், ஒத்தல் என்னும் பொருட்டு.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், நகர வீற்றுத் தொழிற்பெயர் விகாரம் கூறியது.

இ–ள்.: நவ்விறு தொழிற் பெயர்க்கு – நிலைமொழி நகர வீற்றுத் தொழிற்பெயர்க்கு, அவ்வுமாம் – உகரமே யன்றி அகரமும் வந்து பொருந்தும், வேற்றுமை–வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ–று.

உ–ம்.:–

பொருநக் கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, நகர வீற்றுத் தொழிற்பெயர்க்கு எய்தியதன் மேற் சிறப்புவிதியுணர்த்துகின்றது.

இ–ள்.: **நவ்விறு** – நகர மிறுதியாகிய, **தொழிற் பெயர்க்கு** – முதனிலைத் தொழிற்பெயர்க்கு, **அவ்வுமாம்** – உகரச்சாரியை யல்லாமலும் அகரச் சாரியை யுமாகும், **வேற்றுமை**–வேற்றுமைக்கண், எ–று.

உ–ம்.:–

*பொருநக் கடுமை* என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெறுந் தொழிற்பெயரும் உளதோ?

நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வும்மாம் வேற்றுமை.

(நவ்விறு தொழிற்பெயர்க்கு அவ்வும் ஆம் வேற்றுமை)

இ–ள்.:– **ந இறு தொழிற்பெயர்க்கு** –நகரமிறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, **அவ்வும் ஆம் வேற்றுமை**–உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையுமாகும் வேற்றுமைக்கண், எ–று.

உ–ம்.:–

பொருநக்கடுமை, நன்மை, வன்மை எனவரும். பொருநுதல் – ஒத்தல்; அது ஒருவர் மற்றொருவர்போல வேடங்கொள்ளும் பொருநரது தொழில். பொருநர் – கூத்தர்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நகர வீற்றுத் தொழிற்பெயர்க்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

இ–ள்.: நவ்விறு தொழிற்பெயர்க்கு – நகர வீற்று முதனிலைத் தொழிற்பெயர்க்கு, அவ்வுமாம் வேற்றுமை–வேற்றுமைச் சந்தியில் உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் வரப்பெறும், எ–று.

உ–ம்.:–

பொருநக்கடுமை; நன்மை, வன்மை என வரும். பிறவுமன்ன. பொருநுதல் – ஒத்தல், அது ஒருவர் மற்றொருவர் போல வேடங் கொள்ளும் பொருநர் தொழில். பொருநர் – கூத்தாடிகள்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– ந இறு தொழிற் பெயர்க்கு – நகரத்தை இறுதியாக உடைய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, வேற்றுமை – வேற்றுமையில், அவ்வும் ஆம் – (உகரச்சாரியையேயன்றி) அகரச்சாரியையும் பொருந்தும்.

பொருந்+கடுமை=பொருநக்கடுமை
பொருந் + நன்மை = பொருநநன்மை
பொருந் + வன்மை = பொருநவன்மை – வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றது.

பொருநுதல் – ஒத்தல்; அஃது ஒருவர் மற்றொருவர் போல் வேடங் கொள்ளும் பொருநர்தொழில். பொருநர் – கூத்தாடிகள்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: ந இறு தொழிற் பெயர்க்கு – நகர இறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, அவ்வும் ஆம் வேற்றுமை–உகரச் சாரியை யேயன்றி அகரச் சாரியையு மாகும் வேற்றுமைக்கண், எ–று.

உ–ம்.:–

பொருநக்கடுமை, நன்மை, வன்மை என வரும். (பொருநுதல்– ஒத்தல்; அது ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும் பொருநரது தொழில். பொருநர் – கூத்தர்.)

இது மேலைச் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– நஇறு தொழிற்பெயர்க்கு – நகரமிறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, – அவ்வும் ஆம் வேற்றுமை – உகரச்சாரியையேயன்றி அகரச்சரியையுமாகும் வேற்றுமைக்கண். எ–று.

உ–ம்.:–

பொருநக்கடுமை, நன்மை, வன்மை எனவரும். (பொருநுதல்– ஒத்தல். அது ஒருவர் மற்றொருவர்போல வேடங்கொள்ளும் பொருநரது தொழில். பொருநர் – கூத்தர்).

இது மேலைச் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை.மு.சடகோபராமாநுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ந இறு தொழிற்பெயர்க்கு – நகரத்தை இறுதியாக வுடைய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, வேற்றுமை–வேற்றுமையில், அவ்வும் ஆம் – (உகரச் சாரியையே யன்றி) அகரச் சாரியையும் பொருந்தும்; எ–று.

உ–ம்.:–

பொருந் + கடுமை = பொருநக்கடுமை

+ நன்மை = பொருநநன்மை

+ வன்மை = பொருநவன்மை –

வேற்றுமையில் அகரச்சாரியை பெற்றது.

(பொருநுதல் – ஒருவர் மற்றொருவர் போல வேடம்கொள்ளும் பொருநரது தொழிலாதலால், ஒத்தலென்னும் பொருளது; பொருநர் – கூத்தர்)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ந இறு தொழிற் பெயர்க்கு – நகரமிறுதியாகிய முதனிலைத் தொழிற்பெயர்க்கு, அவ்வும் ஆம் வேற்றுமை – உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையு மாகும் வேற்றுமைக்கண். எ–று.

பொருந் + கடுமை = பொருநக்கடுமை

பொருந் + நன்மை = பொருநநன்மை

பொருந் + வன்மை = பொருநவன்மை

என நவ்விறு தொழிற்பெயர் வேற்றுமையில் அகரச்சாரியை பெற்றது.

(பொருநுதல் – ஒத்தல்; அது ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும் பொருநரதுதொழில். பொ்ருநர் – கூத்தர்.)

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

நவ் இறு – நகரமிறுதிபாகிய, தொழிற் பெயர்க்கு – முதனிலைத் தொழிற்பெயர்க்கு, அவ்வும் ஆம் – (உகரச் சாரியையே அன்றி) அகரச்சாரியையும் ஆகும், வேற்றுமை – வேற்றுமைக்கண்.

உதாரணம்

பொருந் + கடுமை = பொருநக்கடுமை
+ நன்மை = பொருநநன்மை
+ வன்மை= பொருநவன்மை
என அகரச்சாரியை பெற்றது.

## மோசகு பொன்னையா

நகரத்தை ஈற்றில் கொண்ட முதனிலைத் தொழிற் பெயருக்கு வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியையேயன்றி அகரச் சாரியையும் பொருந்தும், எ–று.

(5)

**208. ணனவல் லினம் [1]வரட் டறவும் பிறவரின்**
**இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்**
**கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.**

ண ன வல் இனம் வரட் ட றவும் பிற வரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழிக்
அனைத்து மெய் வரினும் இயல்பு ஆகும்மே.

ṇa ṉa val iṉam varat ta ṟavum piṟa variṉ
iyalpum ākum vēṟṟumaikku alvaḷik
aṉaiṭṭu mey variṉum iyalpu ākummē.

## இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH n AS FINALS

**Casual and incasual combination of n as finals**

In casual combination, the finals n and n are changed respectively into t and r, when followed by hard initial, but remain unchanged when followed by any other initials; in Incasual combination, they are (always) unchanged before any initial whatever.

பாடவேறுபாடு .:–

1. வர டறவும்

## ஒப்புமைப் பகுதி

ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

(தொல்.: 303)

னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே

(தொல்.: 333)

வன்மை வரினே..... ண...ன மாண்டறவாம்.

(நேமி.: 17:1)

ஆறா முடலின்பின் தவ்வரின் ஆங்கைந் தாமுடலாம்

(வீர.: 14:1)

ஈற்றின்பின்...... எழில் தவ்வரில் தவ்
வேற்றுப் பதினேழ தாமுடலாம் ............

(வீர.: 20 : 1–2)

ணனவல் லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே

(இ.வி.: 119)

ணகரமெய் டகரவொற் றாகத் திரியும்

(மு.வீ.: 303)

னகரம்வேற் றுமைக்கண் றகர மாகும்

(மு.வீ.: 323)

ணனமுன் தகரம் டறஆம் முறையே
ணனஅல் வழிக்கென்றும் இயல்பாம்

(தொ.வி.: 24:1–2)

## மயிலைநாதர்

எ–ன், ணகார னகாரவீறு புணருமாறுணர்த்துத னுதலிற்று.

இ–ள்.:– ணகார னகாரங்கள் வேற்றுமைக்கண் வல்லினம் வந்தால் முறையே டகாரமும் றகாரமுமாகும்; மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாம்; அல்வழிக்கண் மூவினமும் வந்தாலும் [1]இயல்பேயாம், எ–று.

---

பாடவேறுபாடு .:–

1. இயல்பாம்

வ—று.:—

மட்குடம், பொற்குடம்; சாடி, தாழி, பானை என வேற்றுமைக்கண் வல்லினம் வரத் திரிந்தன. மண்ஞாற்சி, பொன்ஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என வேற்றுமைக்கண் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. (மண், பொன்) + (கடிது,சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது) என அல்வழிக்கண் மூவினமும் வர இயல்பாயின. பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், மேலைச் சூத்திரங்காறும் மெய்யீற்றுப் பொதுப்புணர்ச்சி கூறி, அவற்றிற்கே உரிய ஞகர நகரங்களை ஒழித்து, ஏனையவற்றிற்கு முறையே தனித்தனி சிறப்புவிதி கூறுவான் தொடங்கி, ணகர னகரஈறு புணருமாறு உணர் — ற்று.

இ—ள்.:— ணகார னகாரங்கள், வேற்றுக்கண் வல்லினம் வந்தால் முறையே டகாரமும் றகாரமுமாம்; மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாம்; அல்வழிக்கண் மூவினம் வந்தாலும் இயல்பே யாம், எ—று.

உ—ம்.:—

சிறுகட் களிறு, பேரமர்க்கட்பேதை எனவும்; பொற்றட்டு, பொற்றகடு எனவும் வேற்றுமைக்கண் வல்லினம் வரத் திரிந்தன. மண்,பொன்: ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமைக்கண் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. மண், பொன்: கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவும்; உண்டான் கொற்றன், ஞெள்ளன், வளவன் எனவும் அல்வழிக்கண் மூவினமும் வர இயல்பாயின. பிறவும் அன்ன.

ஒப்பின் முடித்தலான் னகரமும் உடன் கூறினார். இவ்வாறு பின் வருவனவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், ணகார னகார ஈறு புணருமாறு கூறியது.

இ—ள்.: ணன — நிலைமொழி ஈறாய் நின்ற ணகர னகாரங்கள், வல்லினம் வர — வருமொழி முதலாய் நின்ற வல்லினம் வந்தால், டறவும் — முறையே ண டகரமும் ன றகரமுமாம், பிறவரின்—ஒழிந்த மெல்லினமும் இடையினமும் வருமொழி முதலாக வந்தால், இயல்புமாகும் — நிலைமொழி ஈற்றில் ணகார னகாரங்கள் திரியாமல் இயல்பாய் முடியும், வேற்றுமைக்கு — இவ்விரு விதியும்

வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணாம், **அல்வழிக்கு** – அல்வழி பொருட் புணர்ச்சிக்கண் அவ்வீற்று ணகார னகாரங்கள், **அனைத்து மெய் வரினும்** – வருமொழி முதலாக மூவினமும் வந்தாலும், **இயல்பாகும்மே** – இயல்பாய் முடியும் எ–று.

உ–ம்.:–

மட்குடம், சாடி,தாழி, பானை எனவும்; பொற்குடம், சாடி, தாழி, பானை எனவும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் வலிவரத் திரிந்தன. மண், பொன் ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என வேற்றுமைக்கண் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. மண், பொன், கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழிக்கண் மூவினமும் வர இயல்பாயின, பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இது மேலைச் சூத்திரம் வரைக்கும் மெய்யீற்றுப் பொதுப் புணர்ச்சி கூறி அவற்றிற்கே யுரிய ஞகர நகரங்களை யொழித்து மற்றவைகளுக்கு முறையே சிறப்புவிதி சொல்லத் தொடங்கி ணகர னகர வீறு புணருமாறு உணர்த்துகின்றது.

இ–ள்.:– **ணன**–ணகார னகாரங்கள், **வேற்றுமைக்கு**–வேற்றுமைக் கண், **வல்லினம்**–வன்கணம், **வர**–வந்தால், **டறவும்**–முறையே டகாரமும் றகாரமும், **பிற**–மெல்லினமும் இடையினமும், **வரின்**–வந்தால், **இயல்**–இயல்பும், **ஆகும்**–ஆம், **அல்வழிக்கு**–அல்வழிக்கண், **அனைத்து மெய்**–மூவின மெய்களும், **வரினும்** – வந்தாலும், **இயல்பாகும்** – இயல்பே யாகும், எ–று.

உ–ம்.:–

சிறுகண்+களிறு–சிறுகட்களிறு, பொன்+தகடு – பொற்றகடு, என வேற்றுமையிலே வல்லினம் வர ண னக்கள் திரிந்தன. மண் ஞாற்சி, பொன்–ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ணனக்கள் இயல்பாயின. மண்–கடிது, பொன்கடிது,சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழியிலே மூவினமும் வர ணனக்கள் இயல்பாயின. மற்றவைகளு மிப்படியே, (ஒப்பின் முடித்தலால் னகரமும் உடன்கூறினார் பின்னே கூட்டிச் சொல்லப்படு மெழுத்துகளுக்கும், இவ்வுத்தியே கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

11. ணகார னகாரவீறு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

ண ன வல்லினம்வரட்டறவும் பிறவரின்
இயல்பும் மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பு ஆகும்மே.)

**இ–ள்.:– ண ன** – ணகார னகாரங்கள், **வேற்றுமைக்கு வல்லினம் வரட்டறவும்** – வேற்றுமைக்கண் வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும், **பிறவரின் இயல்பும் ஆகும்**–மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம் **அல்வழிக்கு அனைத்து மெய்வரினும் இயல்பு ஆகும்**– அல்வழிக்கண் மூவின மெய்களும் வந்தாலும் இயல்பேயாகும், எ–று.

ஒப்பின் முடித்தலால், னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களும் இவ்வுத்தியே கொள்க.

ண ன முன் வல்லினம் வரின் வேற்றுமையில் எவ்வாறாம்?

"ண ன வல்லினம் வரட் டறவாகும் வேற்றுமைக்கு,

**உ–ம்.:–**

மண்–குடம்–மட்குடம், மட்சாடி, மட்டூதை, மட்பானை, பொன்–குடம்–பொற்குடம், பொற்சாடி, பொற்றூதை, பொற்பானை எனவரும்.

வேற்றுமையில் ண ன க்கள் இயல்பாய் நிற்றல் எவ்வழி?

"ண னப் பிறவரின் இயல்பாகும் வேற்றுமைக்கு"

**உ–ம்.:–**

மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை எனவரும்.

ண ன முன் முக்கணமும் வரின் எவ்வாறாம்?

"அல்வழிக்கு அனைத்து மெய்வரினு மியல்பாகும்மே"

**உ–ம்.:–**

மண்கடிது, பொன்கடிது, மண்சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, எனவரும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** மேலைச் சூத்திரம் வரைக்கும் மெய்யீற்றுப் பொதுப் புணர்ச்சி சொல்லி அவற்றிற்கே யுரிய ஞகர நகரங்களை யொழித்து மற்றையவற்றிற்கு

முறையே தனித்தனி சிறப்பு விதி சொல்லத் தொடங்கி ணகர னகரங்கள் புணரும் விதங் கூறுகின்றது.

**இ–ள்.:–** **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சிக்கு, **ணனவல்லினம் வரட் டறவும்** – ணகர னகரங்கள் வல்லினம் வந்து புணரின் முறையே டகரமாகவும் றகரமாகவுந் திரியும், **பிறவரி னியல்புமாகும்** – மெல்லினமும் இடையினமும் வந்து புணரின் இயல்பா யிருந்தலுமாம், **அல்வழிக்கு** – அல்வழிச் சந்தியில், **அனைத்து மெய் வரினு மியல்பாகும்** – மூவினம் வந்து புணரினும் இயல்பாகும், எ–று.

'இயல்பாகும்மே' என்றதில் ஏகாரம் ஈற்றசை, மகர ஒற்று விரிந்து நின்றது அது விரித்தல் விகாரம்.

உ–ம்.:–

கண்–சிறுகட்களிறு, பேரமர்க்கட்பேதை எனவும்; பொன்–பொற்குடம், பொற்றட்டு, எனவும், வேற்றுமையில் ணனக்கள் டறக்களாகத் திரிந்தன. பிற வல்லினங்களோடு மிவ்வாறே யொட்டுக. மண்ஞாற்சி, பொன்ஞாற்சி; நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாயின. மண்கடிது, பொன்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது எனவும்; அல்வழியில் மூவினமும் வர இயல்பாயின. பிறவுமன்ன. **ஒப்பின் முடித்தலென்னும்** உத்தியால், னகரத்தையும் உடன்கூட்டிக் கூறினார். இப்படி யினிச் சேர்த்துக் கூறுவன வெல்லாம் அந்த உத்தியெனக் காண்க. ணன டறவும், இயல்புமாகும் எனவும், இயல்பாகும் எனவும், இரு முடிபாக்குக.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** **ண ன** – ணகர னகரங்கள், **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியில், **வல்லினம்வர** – (வருமொழி முதலில்) வல்லினம் வந்தால், **டறவும்** – (முறையே) டகரமாகவும் றகரமாகவும், **பிறவரின்** – மெல்லினமும் இடையினமும் வந்தால், **இயல்பும்** – இயல்பாகவும், **ஆகும்** –; **அல்வழிக்கு** – அல்வழிப்புணர்ச்சியில், **அனைத்து மெய்வரினும்** – மூன்றின மெய்களும் வந்தாலும், **இயல்பு ஆகும்** – இயல்பேயாகும்.

உதாரணம் :–

| | |
|---|---|
| கண் + களிறு = கட்களிறு<br>பொன் + தகடு = பொற்றகடு | வேற்றுமையில் ணன வல்லினம் வரட் டறவாயின. |
| மண் + நீட்சி = மண்ணீட்சி<br>மண் + வன்மை = மண்வன்மை. | பொன் + நீட்சி = பொன்னீட்சி<br>பொன் + வன்மை = பொன்வன்மை |

(வேற்றுமையில் பிறவர இயல்பாயின)

மண் + பெரிது = மண்பெரிது. பொன் + பெரிது = பொன்பெரிது
மண் + மெலிது = மண்மெலிது. பொன் + மெலிது = பொன்மெலிது
மண் + யாது = மண்யாது. பொன் + யாது = பொன்யாது.

(அல்வழியில் அனைத்து மெய்யும் வர இயல்பாயின).

ஒப்பின் முடித்தல் என்னு முத்தியால் னகரத்தையும் முடன்கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: ண ன – ணகார னகாரங்கள், வேற்றுமைக்கு வல்லினம் வரட் டறவும் – வேற்றுமைக்கண் வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும், பிற வரின் இயல்பும் ஆகும் – மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம், அல்வழிக்கு அனைத்து மெய் வரினும் இயல்பு ஆகும் – அல்வழிக்கண் மூவின மெய்களும் வந்தாலும் இயல்பே யாகும், எ–று.

உ–ம்.:–

(1) சிறுகண்+களிறு = சிறுகட்களிறு, பொன்+தகடு = பொற்றகடு என வேற்றுமையிலே வல்லினம் வரணனக்கள் திரிந்தன.

(2) மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ணனக்கள் இயல்பாயின.

(3) மண்கடிது, பொன்கடிது,சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என அல்வழியிலே மூவினமும் வர ணனக்கள் இயல்பாயின.

ஒப்பின் முடித்தலால், னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். ணன – ணகார னகாரமெய்கள், – வேற்றுமைக்கு வல்லினம் வரட்டறவும் – வேற்றுமைக்கண் வண்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும், – பிறவரின் இயல்பும் ஆகும் – மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம், – அல்வழிக்கு அனைத்து மெய்வரினும் இயல்பு ஆகும் – அல்வழிக்கண் மூவினமெய்களும் வந்தாலும் இயல்பேயாகும். எ–று.

உ–ம்.:–

(1)சிறுகண் + களிறு = சிறுகட்களிறு, பொன் + தகடு= பொற்றகடு என வேற்றுமையிலே வல்லினம்வர ணனக்கள் திரிந்தன.

(2) மண்ஞாற்சி, பொன்ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ண ணக்கள் இயல்பாயின.

(3) மண்கடிது, பொன்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மான்டது, யாது, வலிது என அல்வழியிலே மூ வினமும் வர ணனக்கள் இயல்பாயின.

ஒப்பின் முடித்தலால், னகரமும் உடன்கூறினார். பின்னே கூட்டிச்சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க.

## வை.மு.சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியர்

இ–ள்.: (1) ண ன– ணகர னகரங்கள், வேற்றுமைக்கு– வேற்றுமைப் புணர்ச்சியில், வல்லினம் வர– (வருமொழி முதலில்) வல்லினம் வந்தால், ட ற உம்–(முறையே) டகரமாகவும் றகரமாகவும், பிற வரின் – மெல்லினமும் இடையினமும் வந்தால், இயல்பும் – இயல்பாகவும், ஆகும் –; (2) அல்வழிக்கு – அல்வழிப் புணர்ச்சியில், அனைத்து மெய் வரினும் – மூன்றின மெய்களும் வந்தாலும், இயல்பு ஆகும்–இயல்பேயாம்; (எ–று) – வேற்றுமைக்கு, 'அல்வழிக்கு' என்பன உருபுமயக்கம்.

உ–ம்.:–

கண்+களிறு = கட்களிறு, பொன்+தகடு = பொற்றகடு – வேற்றுமையில் ண ன வல்லினம் வரட் டறவாயின.

மண் + மாட்சி = மண்மாட்சி, மண் + மாட்சி = பொன்மாட்சி, மன் + வன்மை = மண்வன்மை, பொன் + வன்மை = பொன்வன்மை வேற்றுமையில் பிற வர இயல்பாயின.

பெரிது = மண்பெரிது, பொன்பெரிது, மண் + மாண்டது = மண்மாண்டது, பொன்மாண்டது. பொன் + யாது = மண்யாது, பொன்யாது அல்வழியில் பலவும் வர இயல்பாயின.

ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால், னகரத்தையும் உடன் கூறினார்; பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியையே கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ண ன – ணகார னகாரங்கள், வேற்றுமைக்கு வல்லினம் வரட் ட றவும் – வேற்றுமைக்கண் வன்கணம் வந்தால் முறையே டகரமும் றகரமும், பிறவரின் இயல்பும் ஆகும் – மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பும் ஆம்: அல்வழிக்கு அனைத்து மெய் வரினும் இயல்பு ஆகும் – அல்வழிக்கண் மூவின மெய்களும் வந்தாலும் இயல்பேயாகும். எ–று.

உ–ம்.:–

(1) சிறுகண் + களிறு = சிறுகட்களிறு. பொன் + தகடு = பொற்றகடு. – என வேற்றுமையிலே வல்லினம் வர ண னக்கள் திரிந்தன.

(2) மண் + ஞாற்சி = மண்ஞாற்சி, பொன் + மாட்சி = பொன்மாட்சி, மண் + யாப்பு = மண்யாப்பு, பொன் + வன்மை = பொன்வன்மை – என வேற்றுமையிலே மெல்லினமும் இடையினமும் வர ண னக்கள் இயல்பாயின.

(3) மண் + கடிது = மண்கடிது, பொன்கடிது.

பொன் + நீண்டது = மண்ணீண்டது, பொன்னீண்டது.

வலிது = மண்வலிது, பொன்வலிது.

என அல்வழியிலே மூவினமும் வர ண னக்கள் இயல்பாயின.

'ஒப்பின் முடித்த'லால், னகரமும் உடன்கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– ண ன – ணகார னகாரங்கள், வேற்றுமைக்கு – வேற்றுமைக்கண், வல்லினம் வர – வன்கணம் (வருமொழி முதலில்) வந்தால், ட ற வும் – (முறையே) டகாரமும் றகாரமும், பிறவரின் – மெல்லினமும் இடையினமும் வந்தால், இயல்பும் ஆகும் – இயல்பும் ஆம்; அல்வழிக்கு – அல்வழிக்கண், அனைத்து மெய்வரினும் – மூவின மெய்களம் வந்தாலும், இயல் ஆகும் – இயல்பே யாகும். எ–று.

பொ–ரை.:–

ண, ன என்னும் மெய்கள் வேற்றுமையில் வல்லினம் வந்தால், முறையே ட, ற ஒற்றுக்கள் ஆம்; மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாம்; அல்வழியில் எவ்வகை மெய்வந்தாலும் இயல்பேயாம்.

உ-ம்.:-

சிறுகண் + களிறு = சிறுகட்களிறு. – வேற்றுமையில் வல்லினம் வர ண னக்கள் திரிந்தன.

பொன் + பலகை = பொற்பலகை.

மண் + ஞாற்சி = மண்ஞாற்சி. – வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வர ண னக்கள் இயல் பாயின.

நீட்சி = மண்ணீட்சி.

மாட்சி = மண்மாட்சி.

யாப்பு = மண்யாப்பு.

வன்மை = மண்வன்மை.

பொன் + ஞாற்சி = பொன்ஞாற்சி.

நீட்சி = பொன்நீட்சி.

மாட்சி = பொன்மாட்சி.

யாப்பு = பொன்யாப்பு.

வன்மை = பொன்வன்மை.

மண் + கடிது = மண்கடிது. – அல்வழியில் மூவினமும்வரணனக்கள் இயல்பாயின.

சிறிது = மண்சிறிது.

தீது = மண்டீது.

பெரிது = மண்பெரிது.

ஞான்றது = மண்ஞான்றது.

நீண்டது = மண்ணீண்டது.

மாண்டது = மண்மாண்டது.

யாது = மண்யாது.

வலிது = மண்வலிது.

பொன் + கடிது = பொன்கடிது.

சிறிது = பொன்சிறிது.

தீது = பொன்பெரிது.

ஞான்றது = பொன்ஞான்றது.

நீண்டது = பொன்னீண்டது.

மாண்டது = பொன்மாண்டது.

யாது = பொன்யாது.

வலிது = பொன்வலிது.

ஒப்பின்முடித்தலால் னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும், இவ் வுத்தியேகொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **ணன** – ணகர னகரங்கள், **வேற்றுமைக்கு** – வேற்று மைக்கண், **வல்லினம்** – வண்கனம், **வர** – வந்தால், **டறவும்** – முறையே டகாரமும் றகாரமும்;

(2) **பிற** – (வல்லினமல்லாத) மெல்லினமும் இடையினமும், **வரின்** – வந்தால், **இயல்பும் ஆகும்** – இயல்பும் ஆகும்;

(3) **அல்வழிக்கு** – அல்வழிக்கண், **அனைத்துமெய்** – மூவின மெய்களும், **வரினும்** – வந்தாலும், **இயல்பாகும்** – இயல்பேயாகும்.

**உதாரணம்**

(1) கண்+களிறு = கட்களிறு
பொன்+தகடு = பொற்றகடு

என வேற்றுமையில் ணன வல்லினம் வரட் டற ஆயின.

(2) மண் + நீட்சி = மண்ணீட்சி
பொன் +நீட்சி = பொன்னீட்சி
மண் + வன்மை = மண்வன்மை
பொன் +வன்மை = பொன்வன்மை

என வேற்றுமையில் பிற வர ணகர னகரங்கள் இயல்பாயின.

(3) மண் +பெரிது= மண்பெரிது
பொன்+பெரிது = பொன்பெரிது
மண்+மாண்டது = மண்மாண்டது
பொன்+மாண்டது= பொன்மாண்டது
மண்+யாது = மண்யாது
பொன் +யாது = பொன்யாது

என அல்வழியில் மூவினமும் வர ணனக்கள் இயல்பாயின.

ஒப்பின் முடித்தலால் னகரமும் உடன் கூறினார். பின்னே கூட்டிச் சொல்லப்படும் எழுத்துக்களுக்கும் இவ்வுத்தியே கொள்க.

## மோசசு பொன்னையா

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வன்கணம் வரின், நிலைமொழியீற்று ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களாகும்; மென்கணமும் இடைக்கணமும் வரின், இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் அவற்றின் முன்னர் மூவின மெய்களில் எதுவரினும் இயல்பேயாகும், எ–று.

எ–டு.–

கட்களிறு, பொற்றகடு – வேற்றுமையில் வலிவர டறவாயின.
மண்மாட்சி, பொன்மாட்சி, மண்வன்மை, பொன்வன்மை – வேற்றுமையில் பிறவர இயல்பாயின.

மண்பெரிது, பொன்பெரிது, மண்மாண்டது, பொன்மாண்டது, மண்யாது, பொன்யாது – அல்வழியில் மூவினமும் பிறவர இயல்பாயின.

ஒப்பின் முடித்தலால் னகரம் உடன் கூறப்பட்டது. கண் + களிறு – கட்களிறு, பொன் + தகடு – பொற்றகடு என இவ்வாறு ணகர, னகரங்கள் முறையே டகர றகரங்களாகத் திரிவதை மொழிநூலார் மெய் பிறிதாதல் என்பர். நிலைமொழி மெய்கள் ண்ழுட் என்றும் ன்ழுந் என்றும் இவ்வாறு திரிந்து வருவதை நிலையொலித்திரிபு என்பர். வரும் நூற்பாவின் முடிபின்படி தூணன்று,கோனல்லன் என முடிவனவற்றில் வருமொழி முதல் நகரம் ணகரமாகவும் னகரமாகவும் திரிவதை வருவொலித் திரிபு என்பர்.

(6)

209. குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

குறில் அணை இல்லா ண னக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.

kuṟil aṇai illā ṇa ṉakkaḷ vanta
nakaram ṭirinṭuḻi naṇṇum kēṭē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### where n and n finals are dropped

When the approaching initial n is changed final n and n are dropped if they are preceded by any letter except a single short vowel.

## ஒப்புமைப் பகுதி

நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
............
அறியத் தோன்றிய நெறியிய லென்ப.

(தொல்.: 161)

குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே

(இ.வி.: 120)

மற்றது ணனமுன் மாய்ந்து கெடுமே.

(தொ. வி.: 24:5)

## மயிலை நாதர்

எ-ன், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்.: தனியான குறிலொன்றனையு மொழிந்த ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்த ணகார னகாரங்கள் [1]வந்த நகரம் திரிந்தபின் கெடுவனவாம், எ-று.

வ-று.:-

(பாண், பரண், பசுமண், [2]மணிப்பூண், பைங்கண்)+ (நன்று) எனவும், (நன்மை) எனவும், (வான், வலன், வயான், வலியான், வாலன், [3]பல்லன், அருமணவன்) +(நன்று) எனவும், (நன்மை) எனவும் இருவழியும் கெட்டன.

## சங்கர நமச்சிவாயர்

எ-னின், ணகார னகார ஈற்றுள் ஒருசாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ-ள்.:- தனிக்குறி லொன்றனையும் ஒழிந்து ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகாரங்கள், வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்கவிதி யின்மையின் திரிந்த இடத்து, இயல்பாகாது கெடுதலைப் பொருந்தும், எ-று.

உ-ம்.:-

பாணன்று,தூணன்று, பசுமணன்று எனவும்; நன்மை எனவும்; அரசனல்லன், செம்பொனன்று எனவும்; நன்மை எனவும் இருவழியும் கெட்டன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், தனியே ஒரு குற்றெழுத்தை ஒழிந்த ணகார னகர வீற்றுச் சொற்கள் புணருமாறு கூறியது.

---

பாட வேறுபாடு.:-

1.வருமொழிமுதலாகிய நகரம் திரிந்தபின்

2.பன்மணிப்பூண்

3.வல்லன்.

**இ—ள்.:— குறிலணவில்லா ணனக்கள் —** நிலைமொழி தனிக் குற்றெழுத்தை யடுத்து வராத ஒரு மொழி தொடர் மொழிகளைச் சார்ந்த ணகார னகாரங்கள், **வந்த நகரந் திரிந்துழி —** வருமொழி முதலாய் வந்த நகரம் ஈற்று ணகார னகாரமாகத் திரிந்த பின்பு, **நண்ணும் கேடே—** நிலைமொழி ஈற்று ணகார னகாரம் கெடுவனவாம் எ—று.

**உ—ம்.:—**

பாண், பரண், பசுமண், பண்மணிப்பூண், பைங்கண், வான், வலன், வயான், வலியன், வாலன், பல்லன், அருமணவன் என நிறுத்தி, நன்று எனவும் நன்மை எனவும் இருவழியும் ஒட்டி, வந்த நகரம் திரிந்து நிலைமொழி ஈறு கெட்டவாறு காண்க.

## விசாகப் பெருமாளையர்

இது, ணகர னகர வீறுகளுள் ஒரு சாரனவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

**இ—ள்.:—** குறில் — தனிக்குறி லொன்றனையும், **அணைவில்லா**—சாராமல் ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த, **ணனக்கள் —** ணகார னகார மெய்களானவை, **வந்த** — வருமொழிக்கு முதலாக வந்த, **நகரம் —** நகரமானது, **திரிந்துழி**—மயக்க விதியில்லாமையினாலே திரிந்த விடத்து, **கேடு**—கெடுதலை, **நண்ணும் —** பொருந்தும், எ—று.

**உ—ம்.:—**

தூண்+நன்று—தூணன்று, பசுமண்+ நன்று — பசுமணன்று, எனவும், நன்மை—எனவும், ணகரம் இருவழியுங் கெட்டது. அரசன்+நல்லன் — அரசநல்லன், செம்பொன்+நன்று, செம்பொனன்று, எனவும், நன்மை எனவும், னகரம் இருவழியுங் கெட்டது.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ணகார னகாரவீறு முக்கணங்களோடும் புணரும்போது திரிதலும் இயல்பாதலுமேயன்றிக் கெடுவதுமுண்டோ?

குறிலணை வில்லா ண ன க்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.

(குறில் அணைவு இல்லா ண ன க்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே)

**இ—ள்.: குறில் அணைவு இல்லா ண ன க்கள்— தனிக்குறிலொன்றனையுஞ்** சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த

ணகார னகார மெய்கள், வந்த நகரம் திரிந்துழி–வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்க விதியில்லாமையினாலே திரிந்தவிடத்து, கேடு நண்ணும் – கெடுதலைப் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

(1) தூண்–நன்று–தூணன்று, பசுமண்–நன்று–பசுமணன்று எனவும், தூணன்மை எனவும், ணகரம் இருவழியுங் கெட்டது.

(2) அரசன்–நல்லன்–அரசனல்லன், செம்பொன்–நன்று–செம்பொனன்று எனவும் செம்பொனன்மை, எனவும் னகரம் இருவழியுங் கெட்டது.

ண னக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங்கேடு என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

நகரந்திரிதற்குவிதி முன்னே எச்சூத்திரத்திற் கூறப்பட்டது? "எண்மூவெழுத் தீற்று" என்னுஞ் சூத்திரத்திலே "ண ள ல வழிநத்திரியும்" எனக் கூறப்பட்டது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அவ் விரண்டீற்றுள், ஒரு சார்பினவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது,

இ–ள்.: குறிலணை வில்லா ணனக்கள் – தனிக் குறிலொன்றையுந் தவிர்ந்து ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்து நின்ற ணகர னகரங்கள், வந்த நகரந் திரிந்துழி – வருமொழிக்கு முதலாக வந்த நகரமானது மயங்காததினாலே திரிந்த இடத்து, (மயங்கல்–இணங்குதல்) நண்ணுங் கேடு – கெடுதலைப் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

அரணன்று, தூணன்று, பசுமணன்று எனவும், அரணன்மை எனவும், பயனன்று, மானன்று, பசும்பொனன்று எனவும், பயனன்மை எனவும், இருவழியுங் கெட்டன. பிறவுமன்ன. ணனக்கள்– கேட்டை நண்ணும் என முடிக்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– குறில் – (தனிக்) குற்றெழுத்தை, அணைவு இல்லா – சாராமல் (ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த), ணனக்கள் – உனனகர மெய்களானவை, வந்த – (வருமொழிக்கு) முதலாக வந்த, நகரம் – திரிந்துழி – (மயக்கவிதியில்லாமையினால்) திரிந்தவிடத்து, கேடு – கெடுத்து; நண்ணும் – பொருந்தும்.

குறிப்பு :– நகரந் திரிதலை, "னலமுன் றனவும்" என்னும் வருமொழிச் சூத்திரத்திற் காண்க. உதாரணம் :–

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தூண் + நன்று = தூணன்று | தூணன்மை. |
| பசுமண் + நன்று = பசுமணன்று. | பசுமணன்மை |
| அரசன் + நல்லன் = அரசனல்லன் | அரசனன்மை |
| கோன் + நல்லன் = கோனல்லன். | கோனன்மை. |

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— குறில் அணைவு இல்லா ண னக்கள் — தனிக்குறிலொன்றையுஞ் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார மெய்கள், வந்த நகரம் திரிந்துழி — வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்க விதி யில்லாமையினாலே திரிந்த விடத்து, கேடு நண்ணும் — கெடுதலைப் பொருந்தும், எ—று.

உ—ம்.:—

(1) தூண்+நன்று = தூணன்று, பசுமண் +நன்று = பசுமணன்று எனவும்; நன்மை எனவும்; ணகரம் இருவழியுங் கெட்டது.

(2) அரசன் + நல்லன் = அரசனல்லன், செம்பொன்+நன்று = செம்பொனன்று எனவும், னகரம் இருவழியுங் கெட்டது.

ண னக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங்கேடு என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— குறில் அணைவு இல்லா ண னக்கள் —தனிக்குறிலொன்றனையுஞ் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகாரமெய்கள், — வந்த நகரம் திரிந்துழி — வருமொழிக்கு முதலாக வந்த நகரம் மயக்கவிதியில்லாமையினாலே திரிந்தவிடத்து, — கேடு நண்ணும் — கெடுதலைப்பொருந்தும். எ—று.

உ—ம்.:—

(1)தூண்+நன்று = தூணன்று, பசுமண் + நன்று = பசுமணன்று எனவும் நன்மை எனவும் ணகரம் இருவழியுங்கெட்டது.

(2)அரசன் + நல்லன் = அரசனல்லன், செம்பொன் + நன்று = செம்பொனன்று எனவும் நன்மை எனவும் னகரம் இருவழியுங் கெட்டது.

ணனக்கள் வந்த நகரந் திரிந்துழி எண்ணுங்கேடு என்றது மேலைச்சூத்தி ரத்தால் எய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தல்.

## வை.மு.சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **குறில் அணைவு இல்லா** – (தனிக்) குற்றெழுத்தைச் சாராமல் ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்துள்ள, **ணனக்கள்** – ணகர னகர மெய்களானவை, **வந்த**– (வருமொழிக்கு முதலாக) வந்த, **நகரம்** – , **திரிந்த உழி**–திரிந்தவிடத்து, **கேடு** – தாம் கெடுதலை, **நண்ணும்** – பொருந்தும்; எ–று.

நகரம் திரிதல், "னலமுன் றனவும்" என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்படும்.

**உ–ம்.:–**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தூண் + நன்று – தூணன்று | + நன்மை – தூணன்மை |
| பசுமண் + நன்று – பசுமணன்று | + நன்மை – பசுமணன்மை |
| வலியன் + நன்று – வலியனன்று | + நன்மை– வலியனன்மை |
| கோன் + நல்லவன் – கோனல்லன் | + நன்மை – கோனன்மை |

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** **குறில் அணைவு இல்லா ண னக்கள்** – தனிக்குறி லொன்றனையுஞ் சாராது ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த ணகார னகார மெய்கள், **வந்த நகரம் திரிந்துழி** – வருமொழிக்கு முதலாக வந்தநகரம் மயக்கவிதி யில்லாமையினாலே திரிந்த விடத்து, **கேடு நண்ணும்** – கெடுதலைப் பொருந்தும். எ–று.

**உ–ம்.:–**

(1) தூண் + நன்று = தூணன்று, பசுமண் + நன்று = பசுமணன்று – என அல்வழியிலும்; தூண் + நன்மை = தூணன்மை, பசுமண் + நன்மை = பசுமணன்மை – என வேற்றுமையிலும் ணகரம் கெட்டது.

(2) அரசன் + நல்லன் = அரசனல்லன், கோன் + நல்லன் = கோனல்லன் – என அல்வழியிலும்; அரசன் + நன்மை = அரசனன்மை, கோன் + நன்மை = கோனன்மை – என வேற்றுமையிலும் னகரம் கெட்டது.

ண னக்கள் வந்த நகரந் திரிந்துழி நண்ணுங்கேடு என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ—ள்.:—** குறில் — (தனிக்) குறில் ஒன்றனையுய, அணைவு இல்லா— சாராமல் (ஒரு மொழி தொடர்மொழிகளைச் சார்ந்த), **ண னக்கள்—**ணகர னகரமெய்களானவை, **வந்த நகரம் —** (வருமொழிக்கு முதலாக) வந்த நகரமானது, **திரிந்துழி —** (மயக்கவிதி யில்லாமையினாலே) திரிந்தவிடத்து, **கேடு நண்ணும் —** கெடுதலைப் பொருந்தும் எ—று.

**பொ—ரை.:—**

தனிக்குறில் ஒன்றனையும் ஒழிந்து (ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த) ணகர னகரங்கள், (வருமொழிக்கு முதலாக) வந்த நகரமானது (மயக்கவிதி இல்லாததினால்) திரிந்த இடத்து, இயல்பாகாது கெடுதலைப் பொருந்தும்.

**எ—ம்.:—**

தூண் + நன்று = தூணன்று. — ணகரம் இருவழியுங் கெட்டது.
பசுமண் + நன்று = பசுமணன்று.
தூண் + நன்மை = தூணன்மை.
பசுமண் + நன்மை = பசுமணன்மை.
அரசன் + நல்லன் = அரசனல்லன். — னகரம் இருவழியுங்கெட்டது.
செம்பொன் + நன்று = செம்பொனன்று.
அரசன் + நன்மை = அரசனன்மை.
செம்பொன் + நன்மை = செம்பொனன்மை.
நகரந்திரிதல் 'னலமுன் றனவும்' என்னும் சூத்திரத்துட் காண்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**குறில் —** தனிக்குறிலொன்றையும், **அணைவில்லா —** சாராத (ஒருமொழி தொடர்மொழிகளைச் சார்ந்த), **ணனக்கள் —** ணகர னகர மெய்களானவை, **வந்த —** ( வருமொழிக்கு முதலாக) வந்த, **நகரம் —** நகரமான்து, **திரிந்துழி.** (மயக்கவிதி யில்லாமையினால்) திரிந்தவிடத்து, **கேடு —** கெடுதலை, **நண்ணும் —** பொருந்தும்.

**உதாரணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தூண் | + | நன்று | = தூணன்று | |
| பசுமண் | + | நன்று | = பசுமணன்று | — அல்வழி. |
| அரசன் | + | நல்லன் | = அரசனல்லன் | |
| கோன் | + | நல்லன் | = கோனல்லன் | |
| தூண் | + | நன்மை | = தூணன்மை | |
| பசுமண் | + | நன்மை | = பசுமணன்மை | — வேற்றுமை. |

அரசன் + நன்மை = அரசனன்மை
கோன் + நன்மை = கோனன்மை

நகரந்திரிதல், 'னலமுன்றனவும்' (சூ–237) என்னுஞ் சூத்திரத்திற் காண்க

## மோசகு பொன்னையா

தனிக்குறிலைச் சாராது ஒருமொழி தொடர்மொழிகட்கு ஈறாகும் ணகர னகரங்கள், வருமொழி முதலில் வரும் நகரம் 'னலமுன்றனவும்' என்னும் விதியால் திரிந்தவிடத்துக் கெடுதலைப் பொருந்தும், எ–று.

எ–டு.:–

தூணன்று, பசுமணன்று, வலியனன்று, கோனல்லன்,

தூணன்மை, பசுமணன்மை, வலியனன்மை, கோனன்மை

(6)

210. சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

சாதி குழூஉப் பரண் கவண் பெயர் இறுதி
இயல்பு ஆம் வேற்றுமைக்கு உணவு எண் சாண் பிற
டவ் ஆகலும் ஆகலும் ஆம் அல்வழியும்மே.

sāṭi kumūup paraṇ kavaṇ peyar iṛuṭi
iyalpu ām vēṛṛumaikku uṇavu eṇ sāṇ piṛa
tav ākalum ākalum ām alvaḷiyummē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for certain nouns ending in n**

In the casual combination of names of **tribes** and classes ending in n and of the words **paran, kavan**, their finals are unchanged (before hard initrials); while even in In casual combination , n (the changed) name of an edible substance and can change their finals into t.

## ஒப்புமைப் பகுதி

கிளைப் பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே

(தொல்.: 308)

வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப் பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே

(தொல்.: 309)

சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
யியல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே

(இ.வி.: 121)

இயல்பாங் கிளைப்பெய ரெல்லா மென்ப

(மு.வீ.: 309)

அல்வழி யுணவெண் டகர மாகும்

(மு.வீ.:310)

## மயிலை நாதர்

எ–ன், ணகார வீற்றிற்கு இருவழியும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.: சாதி பற்றியும் [1]திரள்பற்றியும் வரும் பெயர்களும், பரண், கவணென்னும் பெயர்களு[2]மான இவற்றின் ஈற்றுக்கண் ணகாரம் வல்லினம்[3] வந்தால் வேற்றுமைக்கண்ணும் இயல்பாம். எண்ணென்னும் உணவுப்பெயரும் சாணென்னும் நீட்டலளவுப் பெயரும் வல்லெழுத்து வரின் [4]திரிந்து டகாரமாகவும் பெறும், அல்வழிக்கண்ணும், எ–று.

வ–று.:–

பாண்குடி, உமண்குடி; சேரி, தோட்டம், பாடி எனச்
சாதிப்பெயரும், அமண்குடி; சேரி, தோட்டம், பாடி எனக்

---

பாடவேறுபாடு .:–

1. குழூஉப் பற்றியும்
2. ஆனஈற்றுக்கண்
3. வந்தாலும் வேற்றுமைக்கண்
4. ணகாரம் டகாரமாகவும்

குழூஉப்பெயரும், பரண்கால், கவண்கால் என வரும் தனிப்பெயரும் வேற்றுமைக்கண் இயல்பாயின. எட்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும், [1]சாட்கோலெனவும் அல்வழிக்கண் திரிந்தன.

உம்மையால் திரியாமையே வலியுடைத்தென்க.

'பிற' என்ற மிகையானே, கண்கடுமை, அட்டூண்டுழனி என்பனவும், ணகார வீற்றுப் [2]பிறவருவன உளவேல் அவையும் அறிந்து முடிக்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், ணகர ஈற்றுள் சிலவற்றிற்கு *வேற்றுமைக்கண்* எய்தியது விலக்கலும், சிலவற்றிற்கு *அல்வழிக்கண்* எய்தியதன் மேல் சிறப்புவிதியும் உணர் – ற்று.

இ–ள்.:– சாதி பற்றியும் திரள் பற்றியும் வரும் பெயர்களும், பரண் கவண் என்னும் பெயர்களுமானவற்றின் இறுதி ணகரம், வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வந்தால் இயல்பாம்; எண்ணலளவை யன்றி உணவுக்குரிய எள்ளின் திரிசொல்லாய எண் என்னும் பெயரும் சாண் என்னும் நீட்டலளவைப்பெயரும் வல்லெழுத்துக்கள் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும் அல்வழிக்கண்ணும், எ–று.

அல்வழிக்கண் இறந்ததுதழீஇய எச்சவும்மையை வேற்றுமைக் கண்ணும் கூட்டுக.

உ–ம்.:–

பாண், உமண்: குடி,சேரி, தோட்டம், பாடி எனவும்; அமண்குடி, சேரி, தோட்டம், பாடி எனவும்; பரண் கால், கவண்கால் எனவும்; வேற்றுமைக்கண்ணும் இயல்பாயின. எட்கடிது சிறிது தீது பெரிது எனவும் சாட்கோல் எனவும் அல்வழிக்கண்ணும்

பாட வேறுபாடு .:–

1. (1) எட்குப்பை; சுருணை, திரள், பொரி எனவும் இவை இருவழியும் திரிந்தன; 'அல்வழியும்' என்பதனால் வேற்றுமைக்கண்ணும் பெற்றன.

(2) சாட்கோலெனவும் காண்க.

2.பிறவும் வருவன வேற்றுமையறிந்து.

திரிந்தன. டவ்வாகலுமாம் என்னும் இறந்தததுதழீஇய எச்ச இழிவுசிறப்பும்மையான் எண் கடிது, சாண்கோல் என இயல்பாதலே வலியுடைத்து என்க.

பிற என்ற மிகையானே, வேற்றுமைக்கண் பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், அட்டுண்டுழனி என்னும் இயல்பும், மண்குடம் மட்குடம் என்னும் உறழ்வும், இருவழிக்கண்ணும் இன்னும் ணகர ஈற்றுள் அமையாதன உளவேல் அவையும் கொள்க.

சாதியும் குழுவும் ஆகுபெயராய் அவற்றை உடையராய உயர்திணைப்பொருளை உணர்த்தி நின்றனவேனும், தெய்வம் என்றாற் போலச் சொல்லான் அஃறிணை யாதலின் 'பொதுப் பெயருயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்' என்பதனான் அமையாவாயின. மேல்வரும் னஃகான் கிளைப்பெபரும் அது.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், ணகார வீற்றுச் சில சொற்புணர்ச்சி விகாரம் கூறியது.

இ-ள்.:- சாதி குழூஉ – சாதி பற்றியும் திரள் பற்றியும் வரும் பெயர்களும், பரண் கவண் பெயரிறுதி – பரண் கவண் என்னும் இவ்விரு பெயர்களுமான இவ்வீற்று ணகாரம், இயல்பாம் வேற்றுமைக்கு – வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் இயல்பேயாம், உணவெண் சாண் பிற – எண்ணென்னும் உணவுப் பெயரும் சாணென்னும் நீட்சியளவுப் பெயரும், டவ்வாகலுமாம் – வல்லெழுத்து வந்தால் அவ்வீற்று ணகாரம் டகாரமாகவும் பெறும், அல்வழியும்மே – அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, எ-று.

உ-ம்.:-

பாண்,உமண், உவண்: குடி, சேரி, தோட்டம், பாடி எனச் சாதிப் பெயரும் அமண்: குடி, சேரி, தோட்டம், பாடி எனக் குழூஉப் பெயரும், பரண் கால், கவண் கால் என வரும் தனிப்பெயரும் வேற்றுமைக்கண் இயல்பாயின. எட் கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் சாட்கோல் எனவும் அல்வழிக்கண் திரிந்தன.

உம்மையால் திரியாமையே வலியுடைத்து. "பிற" என்றதினாலே கண்கடுமை அட்டுண்டுழனி என வருவனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, ணகரவீற்றுட் சிலவற்றிற்கு வேற்றுமைக்க ணெய்தியது விலக்கலுஞ் சிலவற்றிற்கு அல்வழிக்க ணெய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

**இ-ள்.:- சாதிப் (பெயர்)** - சாதி பற்றி வரும் பெயர்களுக்கும், **குழூஉப் பெயர்**- திரள் பற்றி வரும் பெயர்களுக்கும், **பரண்கவண் பெயர்** - பரண் கவணென்னும் பெயர்களுக்கும், **இறுதி**-ஈற்று ணகரமானது, **வேற்றுமை (க்கும்)** -வேற்றுமைக்கண்ணும், **இயல்பாம்**- வல்லினம் வந்தா லியல்பாகும், **உணவெண் (பெயர்)** -உணவிற்குரிய எள்ளின் றிரி சொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும், **சாண் (பெயர்)** - சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும், **இறுதி**-ஈற்று ணரகமானது, **அல்வழியும்** - அல்வழிக்கண்ணும், **டவ்வாகலுமாம்** - வல்லினம் வந்தால் திரிந்து டகரமாதலும் பொருந்தும், எ-று.

**உ-ம்.:-**

பாண்குடி எனவும், அமண் குடி எனவும், பரண்கால் எனவும், கவண்கால் எனவும், வேற்றுமையிலு மியல்பாயிற்று. எண் + கடிது-எட்கடிது, சாண்+கோல்-சாட்கோல், என அல்வழியிலுந் திரிந்தது. (டவ்வாகலுமா மென்ற வும்மையால் எண்கடிது,சாண்கோல், என வியல்பாதலே சிறப்பாம். பிறவென்ற மிகையால், வேற்றுமையில், பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், அட்டுண்டுழனி என்னுமியல்பும், மட்குடம் - மண்குடம், என்னு முறழ்வும், இருவழியிலும் இன்னும் ணகர வீற்றுள் அடங்காதவை யுண்டேல் அவையுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வரின் இயல்பாயும் அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் டகரமாயும் நிற்கும் ணகரவீறு முளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

சாதிகுழூஉப் பரண் கவன்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற
டவ்வா கலுமா மல்வழி யும்மே.

(சாதி குழூஉப்பரண் கவண்பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவுஎண் சாண்பிற
ட்வ்வா கலுமா மல்வழி யும்மே.)

**இ-ள்.:- சாதிப்** (பெயர்) - சாதிபற்றி வரும் பெயர்களுக்கும், குழூ உப் (பெயர்) - திரள்பற்றி வரும் பெயர்களுக்கும், பரண் கவண் **பெயர் இறுதி** - பரண் கவணென்னும் பெயர்களுக்கும் ஈற்று ணகரம், **வேற்றுமைக்** (கும்) **இயல்பு ஆம்** - வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வரின் இயல்பாகும்: **உணவு எண்** (பெயர்)- உணவுக்குரிய எள்ளின் றிரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும். சாண் (பெயர்) - சாணென்னும் நீட்ட லவனவைப் பெயருக்கும், **(இறுதி)** - ஈற்று ணகரம், **அல்வழியும் டவ்வாகலும் ஆம்** -அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் திரிந்துடகரமாதலும் பொருந்தும், எ-று.

இச்சூத்திரம் எச்சூத்திரவிதியை விலக்குவது?

"ண ன வல்லினம்வர" என்னுஞ் சூத்திரத்தாலெய்திய விதியை விலக்குவது.

வேற்றுமைக்கண்ணும் வன்கணம்வரின் இயல்பாய்முடியும் ணகர வீற்றுப் பெயர்கள் யாவை?

"சாதிகுழூஉப்பரண் கவண்பெயரிறுதியியல்பாம் வேற்றுமைக்கு"

உ-ம்.:-

(1) பாண்குடி எனவும், அமண்குடி எனவும், உமண்குடி எனவும், பரண்கால் எனவும், கவண்கால் எனவும், வேற்றுமையிலும் இயல்பாயிற்று. (பாண்-பாடுதற்றொழிலுடைய தொரு சாதி. உமண் - உப்பமைத்தற் றொழிலுடைய தொரு சாதி. அமண் - அருகனை வழிபடுவதொரு கூட்டம்)

அல்வழிக்கண்ணும் வல்லினம்வரின் 'டகரமாகத்' திரிந்துமுடியும் ணகரவீற்றுப் பெயர்கள் யாவை?

"உணவெண்சாண்பிற டவ்வாகலுமா மல்வழியும்மே"

உ-ம்.:-

(2) எண்-கடிது-எட்கடிது, சாண்-கோல்-சாட்கோல் என அல்வழியிலுந் திரிந்தது, டவ்வாகலுமாம் என்ற

உம்மையால், எண்கடிது, சாண்கோல் இயல்பாதலே சிறப்பாம்.

பிற என்ற மிகையால், வேற்றுமையில் பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், கண்கடுமை அட்டூண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம் மண்குடம் எண்ணும் உறழ்வும், எண்ணுப்பேறு என உகரம் பெறுதலும், இருவழியிலும் இன்னும் ணகரவீற்றுள் அடக்காதவையுண்டேல் அவையுங் கொள்க. அட்டூண்டுழனி அட்டு - ஊண் - துழனி - அட்டுஉண்ணலாலாகிய ஒலி.

இயல்பாம் வேற்றுமைக்கு என்றது "ண ன வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்கல் டல்வாகலுமாம் அல்வழியும் என்றது" "அல்வாழ்க்கனைத்து மெய் வரினு மியல்பாகும்" எனும் என எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ணகர ஈற்றுள்ளே சிலவற்றிற்கு எய்தியது விலக்கலும் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலு முணர்த்துகின்றது. (எய்தியது - அடைந்தது)

**இ–ள்.:– சாதி குழூஉப் பரண் கவண் பெயரிறுதி** – சாதி பற்றியும் திரள் பற்றியும் பரண் கவண் என்னு மிருபெயர் பற்றியும் ஈறாகி நின்ற ணகரம், **இயல்பாம் வேற்றுமைக்கு** – வேற்றுச் சந்தியிலும் வல்லினம் வந்து புணரின் இயல்பாகும், **உணவெண் சாண்** –உண்ணப்படுவதாகிய எள்ளின் திரிசொல்லாகிய எண் என்னும் பெயரும் சாண் என்னும் நீட்டலளவைப் பெயரும், **டவ்வாகலுமா மல்வழியும்** – வல்லினம் வந்து புணரின் அல்வழிச் சந்தியிலும் டகரமாகத் திரிதலுமாம், எ–று.

'அல்வழியும்' என்ற இறந்தது தழுவிய எச்சவும்மையை வேற்றுமைக்கு என்ற இடத்துங் கூட்டுக.

**உ–ம்.:–**

பாண்குடி, உமண்குடி, பாண்சேரி, தோட்டம், பாடி எனவும்; பரண்கால், கவண்கல் எனவும், வேற்றுமையிலும் இயல்பாயின. எண்–எட்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும், சாண்–சாட்கோல், எனவும் அல்வழியிலுந் திரிந்தன. 'டவ்வாகலுமா' மென்னும் இறந்தது தழுவிய எச்ச இழிவு சிறப்பு உம்மையால், எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே வலியுடைத்து எனக் கொள்க. 'பிற' வென்ற மிகையாலே வேற்றுமையில் பாணக்குடி யென அகரச் சாரியை பெறுதலும், அட்டூண்டுழனி என்னும் இயல்பும், மண்குடம் – மட்குடம் என்னும் விகற்பமும் இருவழியிலும் இன்னும் ணகர வீற்றுள் அமையாதன வுளவாயின் அவையுங் கொள்க. சாதியுங் குழூவும் ஆகுபெயராய் அவற்றை யுடையாராகிய உயர்திணைப் பொருளை யுணர்த்தி நின்றன வாயினும், தெய்வம் என்றாற் போலச் சொல்லால் அஃறிணை யாதலின், 'பொதுப் பெயருயர்திணைப் பெயர் களீற்றுமெய்' என்னுஞ் சூத்திரத்தால் அமையாவாயின. மேல்வரும் னஃகான் கிளைப்பெய ரென்பதும் இத் தன்மைத்து. எண், சாண் என்னும் மொழி யிறுதி ணகரத்தை, 'எண்சாண் டவ்வாகலு'மென்றது இலக்கணை. இதன் முடிபு விளங்கிக் கிடந்தன.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :– சாதி** – சாதி பற்றி வரும் பெயர்களுக்கும், **குழூஉ** – கூட்டம் பற்றிவரும் பெயர்களுக்கும், **பரண் கவண் பெயர்** – பரண் கவண் என்னும் பெயர்களுக்கும், **இறுதி** – ஈற்றிலுள்ள ணகரமானது, **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியிலும், **இயல்பு ஆம்** – (வல்லினம் வந்தால்) இயல்பாகும்; **உணவு எண்** – உணவிற்குரிய (எள் என்னும் பொருளுடைய) எண் என்னும் பெயர்க்கும், **சாண்** – சாண் (என்னும் நீட்டலளவுப் பெயர்க்கும் ஈற்று, ணகரமானது), **அல்வழியும்** – அல்வழிப்புணர்ச்சியிலும், **ட ஆகலும் ஆம்** – (வல்லினம் வந்தால்) டகரமாகத் திரிதலையும் பொருந்தும்.

உதாரணம் :

| | | | | |
|---|---|---|---|---|
| பாண் + தொழில் | = பாண்டொழில் | – சாதிப்பெயர். | வேற்றுமையி | |
| அமண் + சேரி | = அமண்சேரி | – குழூஉப்பெயர் | லும் ண் இயல் | |
| பரண் + கால் | = பரண்கால் | – பரண்பெயர் | பாயிற்று. | |
| கவண் + கால் | = கவண்கால் | – கவண்பெயர். | | |
| எண் + பெரிது | = எட்பெரிது | – எண்பெயர். | அல்வழியிலும் | |
| சாண் + கோல் | = சாட்கோல் | – சாண்பெயர் | ண் திரிந்தது. | |

குறிப்பு :–

'டவ்வாகலுமாம்' என்ற உம்மையால், எண் + கடிது = எண்கடிது; சாண் + கோல் = சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாமென்க.

'பிற' என்றதனால் வேற்றுமையில் பாண் + குடி = 'பாணக்குடி', அமண் + சேரி = 'அமணச்சேரி' எனச் சாதிகுழூஉப் பெயர்கள் அகரச்சாரியை பெறுதலும்; அட்டுண் + துழனி = 'அட்டுண்டுழனி' எனச் சிறுபான்மை பிறபெயரினிறுதி இயல்பாதலும்; மண் + குடம் = மண்குடம், மட்குடம் என விகற்பித்து வருதலும் இன்னும் இருவழியிலும் ணகரவீற்றுள் அடங்காதன உளவாயின் அவையுங்கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– சாதிப்** (பெயர்) – சாதி பற்றி வரும் பெயர்களுக்கும், **குழூஉப்** (பெயர்) – திரள் பற்றி வரும் பெயர்களுக்கும், **பரண் கவண் பெயர்** – பரண் கவணென்னும் பெயர்களுக்கும், **இறுதி** – ஈற்று ணகரம், **வேற்றுமைக்(கும்) இயல்பு ஆம்**– வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வரின் இயல்பாகும், **உணவு எண்**(பெயர்) – உணவுக்குரிய எள்ளின் திரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும், **சாண்** (பெயர்) – சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும், **(இறுதி)** – ஈற்று ணகரம், **அல்வழியும் டவ்வாகலும் ஆம்** – அல்வழிக்கண்ணும் வல்லினம் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும், **எ–று.**

**உ–ம்.:–**

(1). பாண்குடி, உமண்குடி எனவும், அமண்குடி எனவும், பரண்கால் எனவும், கவண்கால் எனவும் வேற்றுமையிலும் இயல்பாயிற்று. (பாண் – பாடுதற் றொழிலுடைய தொருசாதி. உமண் – உப்பமைத்தற் றொழிலுடையதொரு சாதி அமண் – அருகனை வழிபடுவதொரு கூட்டம்.

(2) எண் + கடிது = எட்கடிது, சாண் + கோல் = சாட்கோல் என அல்வழியிலுந் திரிந்தது. டவ்வாகலுமாம் என்ற உம்மையால் எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம்.

'பிற' என்ற மிகையால் வேற்றுமையில், பாணக்குடி என அகரச் சாரியை பெறுதலும், அட்டூண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம் மண்குடம் என்னும் உறழ்வும், இருவழியிலும் இன்னும் ணகர வீற்றுள் அடங்காதவை யுண்டேல், அவையுங் கொள்க.

'**இயல்பாம் வேற்றுமைக்கு**' என்றது, "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்; டவ்வாகலுமாம் அல்வழியும் என்றது "அல்வழிக்கனைத்து மெய் வரினு மியல்பாகும்" என எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– சாதிப் (பெயர்) – சாதிபற்றிவரும் பெயர்களுக்கும், – குழூஉப் (பெயர்) **திரள்பற்றிவரும் பெயர்களுக்கும், – பரண்கவன்பெயர்** – பரண்கவணென்னும் பெயர்களுக்கும் – **இறுதி** – ஈற்றுணகரம், – **வேற்றுமைக்(கும்) இயல்பு ஆம்** – வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வரின் இயல்பாகும், – **உணவு எண்** (பெயர் – உணவுக்குரிய எள்ளின் றிரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும், – சாண் (பெயர்) – சாண் என்னும் நீட்டலளவைப்பெயருக்கும் – (இறுதி) **ஈற்றுணகரம், – அல்வழியும் டவ்வாகலும் ஆம்** – அல்வழிக்கண்ணும் வல்லினம் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும். எ–று.

உ–ம்.:–

(1)பாண்குடி, எனவும். அமண்குடி, என்வும் பரண்கால், எனவும் காண்கல், எனவும் வேற்றுமையிலும் இயல்பாயிற்று. (பாண்– பாடுதற்றொழிலுடைய தொருசாதி. உமண் – உப்பமைத்தற்றொழிலுடையதொரு சாதி, அமண் – அருகனை வழிபடுவதொரு கூட்டம்).

(2)எண்+கடிது=எட்கடிது, சாண் + கோல் = சாட்கோல் என அவ்வழியிலுந்திரிந்தது. டவ்வாகலுமாம் என்ற உம்மையால், எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம்.

பிற என்ற மிகையால், வேற்றுமையில் பாணக்குடி என அகரச்சாரியை பெறுதலும், அட்டூண்டுழனி என்னும் இயல்பும், மட்குடம், மண்குடம் என்னும் உறழ்வும், இருவழியிலும் இன்னும் ணகரவீற்றுள் அடங்காதவையுண்டேல் அவையுங்கொள்க.

இயல்பாம் வேற்றுமைக்கு என்றது 'ணனவல்லினம் வரட்டறவும்' என எய்தியது விலக்கல்; டவ்வாகலுமாம் அல்வழியும் என்றது 'அல்வழிக்கனைத்து மெய்வரினு மியல்பாகும்' என எய்தியதன் மேற்சிறப்பு விதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– (1) **சாதி** – சாதி பற்றி வரும் பெயர்கட்கும், **குழூஉ**–கூட்டம் பற்றிவரும் பெயர்கட்கும், **பரண் கவண் பெயர்** – பரண் கவண் என்னும் பெயர்கட்கும், **இறுதி** – ஈற்றிலுள்ள ணகரமானது, **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியிலும், **இயல்பு ஆம்** – (வல்லினம் வந்தால்) இயல்பாகும்; (2) **உணவு எண்** – உணவிற்குரிய – (எள் என்னும் பொருளையுடைய) எண் என்னும் பெயர்க்கும், **சாண்** – சாண் என்னும் (நீட்டலளவைப்) பெயர்க்கும், (ஈற்று ணகரமானது), **அல்வழியும்** –அல்வழிப் புணர்ச்சியிலும், **ட ஆகலும் ஆம்** – (வல்லினம் வந்தால்) டகரமாகத் திரிதலையும் பொருந்தும்; எ–று.

**உ–ம்.:–**

(1) பாண் + தொழில் = பாண்டொழில் (சாதிப்பெயர்) அமண்+ சேரி = அமண்சேரி (குழூஉப்பெயர்) பரண் + கால் = பரண்கால் (பரண்பெயர்) கவண் + கடுமை = கவண்கடுமை (கவண்பெயர்) – வேற்றுமையிலும் இயல்பாயின

(2) எண் + பெரிது = எட்பெரிது (எண்பெயர்), சாண் + கோல் = சாட்கோல் (சாண்பெயர்) அல்வழியிலும் திரிந்தன.

'டவ்வாகலுமாம்' என்ற உம்மையால், எண்+கடிது – எண்கடிது, சாண்+கோல் – சாண்கோல் என இயல்பாதலே சிறப்பா மென்க.

'பிற' என்ற மிகையால் வேற்றுமையில் பாண்+குடி = பாணக்குடி, அமண் + சேரி = அமணச்சேரி எனச் சாதி குழூஉப் பெயர்கள் அகரச் சாரியை பெறுதலும், அட்டூண் + துழனி = அட்டூண்டுழனி எனச் சிறுபான்மை பிற பெயரிறுதி இயல்பாதலும்; மண்+குடம் = மண்குடம், மட்குடம் என விகற்பித்து வருதலும்; இருவழியிலும் இன்னும் ணகர மெய்யீற்றுள் அடங்காதவை உண்டாயின் அவையுங் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **சாதிப் (பெயர்)** – சாதிபற்றி வரும் பெயர்களுக்கும், **குழூஉப் (பெயர்)** – திறள் பற்றி வரும் பெயர்களுக்கும், **பரண் கவண் பெயர்** – பரண் கவணென்னும் பெயர்களுக்கும், **இறுதி** – ஈற்று ணகரம், **வேற்றுமைக் (கும்) இயல்பு ஆம்** – வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வரின் இயல்பாகும்; **உணவு எண் (பெயர்)** – உணவுக்குரிய எள்ளின்றிரிசொல்லாகிய எண்ணென்னும் பெயருக்கும், **சாண் (பெயர்)** – சாணென்னும் நீட்டலளைவ் பெயருக்கும், (இறுதி) – ஈற்று ணகரம், **அல்வழியும் டவ்வாகலும் ஆம்** – அல்வழிக்கண்ணும் வல்லினம் வரின் திரிந்து டகரமாதலும் பொருந்தும். எ–று.

உ–ம்.:–

(1) பாண் + குடி = பாண்குடி – சாதி; அமண் + குடி = அமண்குடி – குழூஉ; பரண் + கால் = பரண்கால்; கவண் + கால் = கவண்கால் – என வேற்றுமையில் இயல்பாயின. (பாண் – பாடுதற்றொழிலுடையதொரு சாதி. அமண் – அருகனை வழிபடுவதொரு கூட்டம்.)

(2) எண் + கடிது = கட்கடிது; சாண் + கோல் = சாட்கோல் – என அல்வழியில் திரிந்தது. டவ்வாகலுமாம் என்ற உம்மையால், எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம்.

'பிற' என்ற மிகையால், வேற்றுமையில் பாண் + குடி = பாணக்குடி என அகரச்சாரியை பெறுதலும், அட்டூண் + துழனி = அட்டூண்டுழனி என்னும் இயல்பும், மண் + குடம் = மட்குடம் மண்குடம் என்னும் உறழ்வும், இருவழியிலும் இன்னும் ணகரவீற்றுள் அடங்காதவையுண்டேல் அவையுங் கொள்க.

'இயல்பாம் வேற்றுமைக்கு' என்றது மேல் 209 ஆவது சூத்திரத்தில் "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்; 'டவ்வா கலுமாம் அல்வழியும்' என்றது அதே சூத்திரத்தில் "அல்வழிக்கனைத்து மெய் வரினு மியல்பாகும்" என எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) சாதிப் (பெயர்) – சாதிபற்றிவரும் பெயர்களுக்கும், குழூஉப் (பெயர்) – கூட்டம் பற்றிவரும் பெயர்களுக்கும், பரண் கவண் பெயர் –பரண் கவண் என்னும் பெயர்களுக்கும், இறுதி – ஈற்றிலுள்ள ணகரமானது, வேற்றுமைக்கு – வேற்றுமைக்கண், இயல்பாம் – (வல்லினம் வந்தால்) இயல்பாகும்.

(2) உணவு எண் (பெயர்) – உணவிற்குரிய எள்ளின் திரிசொல்லாகிய எண் என்னும் பெயருக்கும், சாண் (பெயர்) – சாணென்னும் நீட்டலளவைப் பெயருக்கும், (இறுதி – ஈற்று ணகரமானது) அல்வழியும் – அல்வழிக்கண்ணும், ட ஆகலும் ஆம் – (வல்லினம் வந்தால் திரிந்து) டகரமாதலும் பொருந்தும்.

உதாரணம்

(1) பாண் + தொழில் = பாண்டொழில் – சாதிப்பெயர்
அமண் + சேரி = அமண்சேரி – குழூஉப்பெயர்
பரண் + கால் = பரண்கால் – பரண் என்னும் பெயர்
கவண் + கால் = கவண்கால் – கவண் என்னும் பெயர்

என வேற்றுமையில் இயல்பாயின.

(2) எண் + பெரிது = எட்பெரிது
சாண் + கோல் = சாட்கோல்

என அல்வழியில் திரிந்தன.

'டவ்வாகலுமாம்' என்ற உம்மையால், எண்கடிது, சாண்கோல், என இயல்பாதலே சிறப்பாம்.

'பிற' என்ற மிகையால், வேற்றுமையில்,

பாண் + குடி = பாணக்குடி

என அகரச்சாரியை பெறுதலும்,

அட்டுண் + துழனி = அட்டுண்டுழனி

என இயல்பாதலும்,

மண் + குடம் = மட்குடம், மண்குடம்

என உறழ்தலும்,

இரு வழியிலும் இன்னும் ணகரவீற்றுள் அடங்காதவை யுண்டேல் அவையுங் கொள்க.

## மோசகு பொன்னையா

ணகர ஈற்றுச் சாதி, குழூஉப் பெயர்களும் பரண், கவண் என்னும் பெயர்களும் நிலைமொழிகளாக நின்று வல்லெழுத்து முதன் மொழிகளோடு புணரின், வேற்றுமைக்கண் இயல்பாதலும்; எள்ளின் திரிபாகிய எண் என்னும் பெயரும் சாண் என்னும் பெயரும் அவ்வகைச் சொற்களோடு புணரின் அல்வழிக்கண் ஈற்று ணகரம் டகரமாகத் திரிதலும் ஆகும், எ–று.

எ–டு.:–

பாண்குடி, உமண்குடி, அமண்குடி, பரண்கால், கவண்கால் – வேற்றுமைக்கண் இயல்பாயின.

எட்கடிது, சாட்கோல் – அல்வழிக்கண் ணகரம் டகரமாகத் திரிந்தது.

அல்வழியும் என்ற உம்மையால் எண்கடிது, சாண்கோல் என இயல்பாதலே சிறப்பாம். பிற என்ற மிகையால், பாணக்குடி என அகரச் சாரியை பெற்றும்; அட்டுண் துழனி என இயல்பாகியும்; மட்குடம், மண்குடம் என உறழ்ந்தும் பிறவாறும் முடிவனவற்றை யெல்லாம் அமைக்க.

211. ணஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே.

ணஃகான் கிளைப்பெயர் இயல்பும் அஃகான்
அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே.

ṉakẖkāṉ kiḻaippeyar iyalpum akẖkāṉ
ataivum ākum vēṟṟumaip porutkē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for certain nouns ending in n**

In Casual combination, names of tribes ending in n either retain the n unchanged or add a to it.

## ஒப்புமைப் பகுதி

கிளைப்பெய ரெல்லாம் கிளைப்பெய ரியல

(தொல். 339)

ணஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகா
னடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே

(இ.வி.: 122)

கிளைப்பெய ரெல்லா மிகாதியல் பாகும்

(மு.வீ.: 329)

## மயிலை நாதர்

எ–ன், ணகார வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் நுதலிற்று.

இ–ள்.: ணகார வீற்றுச் சாதிப் பெயர்கள் மூவினமும் வந்தால் இயல்பாவனவும் இறுதி அகரம் பெறுவனவுமாம், வேற்றுமைக்கண், எ–று.

வ–று.:–

எயின்குடி; சேரி, தோட்டம், பாடி, ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என இயல்பாயிற்று. எயினக்கன்னி; சிறுவன், தலைவன், பிள்ளை, மரபு, வரை என அகரம் பெற்றது.

சாதியும் குழூஉவும் அஃறிணையாகலின் வேறு எடுத்தோதினாரென்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ—னின், னகர ஈற்றுச் சாதிப்பெயர்க்கு *ம்வேற்றுமைக்கண்ம்* எய்தியது விலக்கலும் பிறிது விதி வகுத்தலும் நுதலிற்று.

இ—ள்.:— னகர ஈற்றுச் சாதிப்பெயர், வல்லினம் வர ஈறு திரியாது இயல்பாதலும், அகரச் சாரியை பெறுதலும் ஆம், வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ—று.

உ—ம்.:—

எயின் குடி, எயினக் குடி, சேரி, தோட்டம், பாடி என வரும்.

'பொருட்கே' என்ற மிகையானே எயினமரபு எயினவாழ்வு எயினவணி என ஏனைக் கணம் வரின் அகரச் சாரியை பெறுதலும், எயினக்கன்னி எயினப்பிள்ளை எயினமன்னன் என அல்வழிக்கண் அகரச் சாரியை பெறுதலும் கொள்க. கிளை என்னும் பல பொருளொருசொல் ஈண்டுச் சாதிமேல் நின்றது.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், னகார வீற்றுச் சாதி பெயர் புணருமாறு கூறியது.

இ—ள்.:— **னஃகான் கிளைப்பெயர்** — நிலைமொழி னகார வீற்றுச் சாதிப் பெயர்கள், **இயல்பும்** — மூவினமும் வர இயல்பாய் முடிதலும், **அஃகான் அடைவுமாகும்**— மூவினமும் வர அகரம் பெறுதலுமாம், **வேற்றுமைப் பொருட்கே** — வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ—று.

உ—ம்.:—

எயின் குடி, சேரி, தோட்டம், பாடி, ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை என இயல்பாயின. எயினக்கன்னி, எயினப்பிள்ளை, மரபு, வரைவு என அகாரம் பெற்றன.

சாதியும் குழுவும் அஃறிணையாகலின் வேறு எடுத்து ஓதினார் என்க.

## விசாகப் பெருமாளையர்

இது, னகர வீற்றுச் சாதிப்பெயர்க்கு வேற்றுமைக்கண் எய்தியது விலக்கலும் பிறிது விதி வகுத்தலுஞ் சொல்லுகின்றது.

இ—ள்.:— **னஃகான்** — னகரத்தை யிறுதிலுடைய, **கிளைப்பெயர்** —

சாதிப்பெயர், **இயல்பும்** – வல்லினம் வர வீறு திரியா தியல்பாதலும், **அஃகானடைவும்** – அகரச் சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு** – வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், **ஆகும்** – ஆகும், எ–று.

**உ–ம்.:–**

எயின் + குடி – எயினக்குடி, சேரி, தோட்டம் என வரும். (பொருட்கே யென்ற மிகையால் எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி, என மற்றைக் கணம் வரினும் அகரச் சாரியை, பெறுதலுங் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

21.'ணன வல்லினம்' என்னுஞ் சூத்திரவிதிக்கு அமையாத னகார வீற்றுச் சொல்லுமுளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகான்

அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே

(னஃஃகான் கிளைப்பெயர் இயல்பு மஃகான்
அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கு ஏ)

**இ–ள்.:– னஃகான் கிளைப்பெயர்** – னகரத்தை யிறுதியிலுடைய சாதிப் பெயர், **இயல்பும்** – வல்லினம் வராஈறு திரியாதியல்பாதலும், **அஃகான்** – அடைவும் அகரச்சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு ஆகும்** – வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கண் ஆகும், எ–று.

**உ–ம்.:–**

எயின்குடி, சேரி, தோட்டம், பாடி எனவும், எயினக்கன்னி, எயினச்சிறுவன், எயினத்தலைவன், எயினப்பிள்ளை, ஞாற்சி நீட்சி, மாட்சி யாப்பு, வலிமை ஆட்சி எனவும் வரும். எயினப்பிள்ளை – எயினரது பிள்ளை (எயின் – வேட்டுவச்சாதி.)

வேற்றுமைப்பொருட்கு இயல்பு என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்: அஃகானடைவு என்றது பிறிதுவிதி வகுத்தல்.

அகரச்சாரியை விரியுமிடத்தும் இயல்பாய்ப் புணருமோ?

எயின் – அ–குடி. எயினக்குடி என "இயல்பினும் விதியினும் நின்றவுயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி வல்லினமிக்குப் புணரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, னகர ஈற்றுச் சாதிப்பெயர்க்கு எய்தியது விலக்கலும், பிறிது விதி வகுத்தலும் உணர்த்துகின்றது,

**இ—ள்.:— னஃகான் கிளைப் பெயர்** — னகர வீற்றுச் சாதிப்பெயர், **இயல்பும்** — வல்லினம் வந்து புணரின் ஈறு திரியாமல் இயல்பாதலும், **அஃகா னடைவு மாகும்** — அகரச் சாரியை பெறுதலுமாம், **வேற்றுமைப் பொருட்கு** — வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கு, எ—று.

உ—ம்.:—

எயின்குடி — சேரி, தோட்டம், பாடி எனவும்; எயினக்குடி, எயினச்சேரி, தோட்டம், பாடி எனவும் வரும். 'பொருட்கே' யென்ற மிகையினாலே, எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றக் கணங்கள் வந்து புணர அகரச் சாரியை பெறுதலும்; எயினக்கன்னி, எயினப்பிள்ளை, எயினமன்னன் என அல்வழிச் சந்தியில் அகரச் சாரியை பெறுதலுங் கொள்க. எயின் — வேடர் சாதி, கிளை—என்னும் பலபொரு ளொரு சொல் இங்கே சாதிமேல் நின்றது. எயினர்— வேடர்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :— னஃகான் கிளைபெயர்** — னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர், **இயல்பும்** — வல்லினம் வந்தால் ஈறுதிரியாமல், இயல்பாதலும், **அஃகான் அடைவும்** — அகரச்சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு** — வேற்றுமைப் புணர்ச்சியில், **ஆகும்** —.

உ—ம் :—

எயின் + குடி = எயின்குடி, எயினக்குடி
எயின் + சேரி = எயின் சேரி, எயினச்சேரி
எயின் + தோட்டம் = எயின்றோட்டம், எயினத்தோட்டம்
எயின் + பாடி = எயின்பாடி, எயினப்பாடி.

குறிப்பு :—

'பொருட்கே' என்றமிகையால், எயின் + மரபு = 'எயினமரபு', எயின் + வாழ்வு = எயின வாழ்வு', எயின் + அணி 'எயினவணி', என மற்றைக் கணங்கள் வரினும் அகரச்சாரியை பெறுதலும்; எயின் + பிள்ளை = 'எயினப்பிள்ளை', எயின் + மன்னன் = 'எயின மன்னன்' என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங் கொள்க. (எயின் — வேடர் சாதி; எயினர் — வேடர்).

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: னஃகான் கிளைப்பெயர்** – னகரத்தை யிறுதியி லுடைய சாதிப்பெயர், **இயல்பும்** – வல்லினம் வர ஈறு திரியா தியல்பாதலும், **அஃகான் அடைவும்** – அகரச் சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு ஆகும்** – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் ஆகும், எ–று.

உ–ம்.:–

எயின்குடி, எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி என வரும் (எயின்–வேட்டுவச் சாதி)

'பொருட்கே' என்ற மிகையால், எயின மரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றைக்கணம் வரினும் அகரச் சாரியை பெறுதலும், எயினக்கன்னி, எயினப்பிள்ளை, எயினமன்னன் என அல்வழியில் அகரச் சாரியை பெறுதலுங் கொள்க.

வேற்றுமைப் பொருட்கு இயல்பு என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல், அஃகானடைவு என்றது பிறிதுவிதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– னஃகான் கிளைப்பெயர்** – னகரத்தையிறு தியினுடைய சாதிப் பெயர், – **இயல்பும்** – வல்லினம் வர ஈறுதிரியாதில்பாதலும், **அஃகான் அடைவும்** – அகரச்சாரியை பெறுதலும், – **வேற்றுமைப் பொருட்கு ஆகும்** – வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் ஆகும். எ–று.

உ–ம்.:–

எயின்குடி – எயினக்குடி, சேரி, தோட்டம், பாடி என வரும். (எயின் – வேட்டுவச்சாதி).

பொருட்கே என்ற மிகையால், எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றைக்கணம்வரினும் அகரச்சாரியை பெறுதலும், எயினக்கன்னி எயினப்பிள்ளை, எயினமன்னன் என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங்கொள்க.

வேற்றுமைப்பொருட்கு இயல்பு என்றது 'ணனவல்லினம் வரட்டறவும்' என எய்தியதுவிலக்கல்; அஃகானடைவு என்றது பிறிதுவிதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— னஃகான் கிளைபெயர் — னகரத்தை இறுதியிலுடைய சாதிப்பெயர், இயல்பும்— (வல்லினம் வர ஈறு திரியாமல்) இயல்பாதலும், அஃகான் அடைவும் — அகரச் சாரியையைப் பெறுதலும், வேற்றுமைப் பொருட்கு — வேற்றுமைப் புணர்ச்சியில், ஆகும்; எ—று.

உ—ம்.:—

எயின் + குடி = எயின்குடி, எயினக்குடி

எயின் + சேரி = எயின்சேரி, எயினச்சேரி,

'பொருட்கே'என்ற மிகையால் = எயின்+மரபு = எயினமரபு, எயின்+வாழ்வு = எயினவாழ்வு, எயின் + அணி = எயினவணி என மற்றைக் கணங்கள் வரினும் அகரச் சாரியை பெறுதலும்; எயின்+பிள்ளை = எயினப் பிள்ளை, எயின் + மன்னன் = எயினமன்னன் என அல்வழியில் அகரச் சாரியை பெறுதலும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— னஃகான் கிளைப்பெயர் — னகரத்தை யிறுதியிலுடைய சாதிப்பெயர், இயல்பும் — வல்லினம் வர ஈறு திரியா தியல்பாதலும், அஃகான் அடைவும் — அகரச்சாரியை பெறுதலும், வேற்றுமைப் பொருட்கு ஆகும் — வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் ஆகும். எ—று.

உ—ம்.:—

எயின் + குடி = எயின்குடி, எயினக்குடி.

எயின் + சேரி = எயின்சேரி, எயினச்சேரி.

எயின் + தெரு = எயின்தெரு, எயினத்தெரு.

எயின் + பாடி = எயின்பாடி, எயினப்பாடி.

(எயின் — வேட்டுவச்சாதி.)

'பொருட்கே' என்ற மிகையால், எயின மரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றைக்கணம் வரினும் அகரச்சாரியை பெறுதலும், எயினக்கன்னி, எயினப் பிள்ளை, எயின மன்னன் என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலுங் கொள்க.

'வேற்றுமைப்பொருட்கு இயல்வு' என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" (சூ–209) என எய்தியது விலக்கல்; 'அஃகானடைவு' என்றது பிறிதுவிதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **னஃகான்** – னகரத்தை இறுதியிலுடைய, **கிளைப் பெயர்** – வகுப்புப் பெயர், **இயல்பும்** – (வல்லினம் வரின் ஈறு திரியாது) இயல்பாதலும்;

(2) **அஃகான் அடைவும்** – அகரச்சாரியை பெறுதலும், **வேற்றுமைப் பொருட்கு ஆகும்** – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் ஆகும்.

'பொருட்கே' என்ற மிகையால், நாற்கணமும் கொள்க.

**உதாரணம்**

| | | | | | (1) | (2) |
|---|---|---|---|---|---|---|
| (1) | எயின் | + | குடி | = | எயின்குடி | எயினன்குடி |
| | | + | மரபு | = | எயின்மரபு, | எயினமரபு |
| | | + | வாழ்வு | = | எயின்வாழ்வு, | எயினவாழ்வு |
| | | + | அணி | = | எயினணி, | எயினவணி |

என வேற்றுமையில் இயல்பாயும் அகரச்சாரியை பெற்றும் வந்தன.

எயின் + மன்னன் = எயினமன்னன்.

என அல்வழியில் அகரச்சாரியை பெறுதலும் கொள்க.

## மோசகு பொன்னையா

னகர ஈற்றுச் சாதிப்பெயர் நின்று வல்லெழுத்து முதன் மொழிகளொடு புணரின், வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாதலையும், அகரச் சாரியை பெறுதலையும் பொருந்தும், எ–று.

எ–டு.:–

எயின்குடி; எயினக்குடி

எயின்சேரி; எயினச்சேரி

பொருட்கே என்ற மிகையால், எயினமரபு, எயினவாழ்வு, எயினவணி என மற்றைக் கணங்கள் வரின், அகரச் சாரியை பெறுதலையும்; எயினப் பிள்ளை, எயின மன்னன் என அல்வழிப் புணர்ச்சியின்கண் அகரச் சாரியை பெறுதலையும் கொள்க.

பாண், உமண், அமண், எயின் என்னுஞ் சொற்கள் ஆகுபெயர்ப் பொருளால் உயர்திணைப் பொருளை உணர்த்தினவேனும், சொன்னிலையால் அஃறிணை ஆதலின், 'பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்க ளீற்று மெய், வலிவரின் இயல்பாம்' என்ற பொது விதியால் அமையாவாயின.

(8)

## 212. மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே.

மீன் றவ் ஒடு பொரூஉம் வேற்றுமை வழியே.

mīṉ ṟav otu porūum vēṟṟumai vaḻiyē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for m and n

The word min, may, in casual combination retain the n unchanged or change it into r.

## ஒப்புமைப் பகுதி

மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே

(தொல்.:340)

மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே

(இ.வி.:123)

மீன்வல் லெழுத்துறழ் வும்பெறு மென்ப.

(மு.வீ.:330)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– மீனென்னு மொழியீறு வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின் றகாரத்தோடு உறழ்ந்து வரும், எ–று.

வ–று.:–

மீன்கண், மீற்கண்; செவி, தலை, புறம் என வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், மீன் என்னும் சொற்கு *ம்வேற்றுமைக்கண்ம்* எய்தியது ஒருவாற்றான் விலக்கல் நுதலிற்று.

இ–ள்.:– மீன் என்னும் மொழியிறுதி னகரம் வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின், றகரத்தோடு உறழ்ந்து வரும், எ–று.

உ–ம்.:–

மீன்கண், மீற்கண்; செவி, தலை, புறம் எனவரும்.

றகரமாதல் இக்காலத்துப் பயின்றுவாராதேனும், 'தொன்னெறி'யாதலின், ஆணைவழி நிற்க என்பார் 'வழியே' என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மீனென்னும் னகர வீற்றுச் சொல்லின் விகாரம் கூறியது.

இ–ள்.:– மீன் – மீனென்னும் நிலைமொழி ஈற்றி னின்ற னகர வொற்று, றவ்வொடு பொரூஉம் – வல்லெழுத்து வரின் றகரத்தோடு உறழ்ந்து வருதலுமாம், வேற்றுமை வழியே – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், எ–று.

உ–ம்.:–

மீன்கண், மீற்கண்; செவி, தலை, புறம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது மீனென்னுஞ் சொல்லுக்கு வேற்றுமைக்கண் எய்திய தொருவாற்றால் விலக்குகின்றது.

இ–ள்.:– மீன்–மீனென்னு மொழியிறுதி னகரம், வேற்றுமை வழி– வேற்றுமைக்கண் (வல்லெழுத்து வரின்) றவ்வொடு – றகரத்தோடு, பொரூஉம் – உறழ்ந்து வரும், எ–று.

உ–ம்.:–

மீன்+ கண்–மீற்கண்; செவி, தலை, புறம், என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வல்லினம்வரின் உறழ்ந்து முடியும் னகரவீற்றுச்சொல்லு முளதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே,

(மீன் றவ் வொடு பொரூஉம் வேற்றுமை வழியே.)

**இ–ள்.:– மீன்** – மீனென்னு மொழியிறுதி னகரம், **வேற்றுமைவழி** – வேற்றுமைக்கண், **றவ்வொடு பொரூஉம்** – வல்லெழுத்துவரின் றகரத்தோடு உறழ்ந்துவரும், எ–று.

உ–ம்.:–

மீன் – கண் – மீற்கண், மீன்கண், செவி, தலை, புறம் என வரும்.

றவ்வொடு பொரூஉம் வேற்றுமைவழி என்றது. "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியதிருவாழ் தொருவாற்றல் விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ஒரு விதத்தினாலே மீன் என்னும் னகர வீற்றுச் சொற்கு எய்தியது விலக்குகின்றது.

**இ–ள்.:– மீன்** – இதின் ஈற்று னகரம், **வேற்றுமை வழி** – வேற்றுமைச் சந்தியில், **றவ்வொடு பொரூஉம்** – (வல்லெழுத்து வந்து புணரின்) றகரத்தொடு விகற்பித்து நிற்கும், எ–று.

உ–ம்.:–

மீன்கண், மீற்கண்; மீன், செவி, மீற்செவி, தலை, புறம் என வரும்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மீன்** – மீன் என்னும் பெயரின் இறுதியிலுள்ள னகரம், **வேற்றுமை வழி** – வேற்றுமைப் புணர்ச்சியில் (வல்லெழுத்து வந்தால்), றவ்வொடு – றகரத்தோடு, பொரூஉம் – விகற்பித்து நிற்கும். (னகரம் றகரமாய்த் திரிந்தும் திரியாதும் உறழ்ந்து வரும் என்றபடி.)

உ–ம். :–

மீன் + கண் = மீற்கண், மீன்கண்
மீன் + செவி = மீற்செவி, மீன் செவி – உறழ்ந்து வந்தது.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: மீன்** – மீனென்னு மொழியிறுதி னகரம், **வேற்றுமைவழி** – வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின், **றவ்வொடு பொரூஉம்** – றகரத்தோடு உறழ்ந்து வரும், எ–று.

உ–ம்.:–

மீன்+கண் = மீற்கண்; செவி, தலை, புறம் என வரும்.

'றவ்வொடு பொரூஉம் வேற்றுமை வழி' என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்திய தொருவாற்றால் விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– மீன் – மீனென்னு மொழியிறுதி னகரம், – வேற்றுமைவழி – வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின், – றவ்வொடு பொரூஉம் – றகரத்தோடு உறழ்ந்து வரும். எ–று.

உ–ம்.:–

மீன்+கண் = மீற்கண், செவி, தலை, புறம் என வரும்.

றவ்வொடு பொரூஉம் வேற்றுமைவழி என்றது 'ணனவல்லினம் வரட்டறவும்' என எய்திய தொருவாற்றால் விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: மீன்–மீன் என்னும் பெயரின் இறுதியிலுள்ள னகரம், வேற்றுமை வழி – வேற்றுமைப் புணர்ச்சியில் (வல்லெழுத்து வந்தால்), றவ்வொடு – றகரத்தோடு, பொரூஉம் – விகற்பித்து நிற்கும்.; எ–று. னகரம் றகரமாகத் திரிந்தும் திரியாமலும் வரு மென்றபடி.

உ–ம்.:–

மீன்+கண் = மீற்கண், மீன்கண் – விகற்பித்து வந்தது.

செவி = மீற்செவி, மீன்செவி

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– மீன் – மீனென்னு மொழியிறுதி னகரம், வேற்றுமைவழி – வேற்றுமைக்கண் வல்லெழுத்து வரின், றவ்வொடு பொரூஉம் – றகரத்தோடு உறழ்ந்து வரும். எ–று.

உ–ம்.:–

மீன் கண் = மீன்கண், மீற்கண்,

செவி = மீன்செவி, மீற்செவி.

தலை = மீன்தலை, மீற்றலை.

புறம் = மீன்புறம், மீற்புறம்.

'றவ்வொடு பொரூஉம் வேற்றுமைவழி' என்றது "ண ன வல்லினம் வரட்டறவம்" (சூ–209) என எய்திய தொருவாற்றால் விலக்கல்.

## கா.நமச்சிவாய முதலியார்

**மீன்** – மீன் என்னும் மொழியிறுதி னகரம், **வேற்றுமை வழி** – வேற்றுமைக்கண் (வல்லெழுத்துவரின்), **றவ்வொடு** – றகரத்தோடு, **பொரூ உம்** – உறழ்ந்துவரும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| மீன் | + | கண் | = | மீன்கண், மீற்கண் |
| | + | செவி | = | மீன்செவி, மீற்செவி |

## மோசசு பொன்னையா

மீன் என்னும் சொல்லின் இறுதி னகரம் வருமொழி வல்லெழுத்து முதன் மொழிவரின், வேற்றுமைப் புணர்ச்சியில் றகரத்தோடு உறழும், எ–று.

பொரூஉதல் – உறழ்தல் அல்லது விகற்பமாதல்.

எ–டு.:–

மீண் கண்; மீற் கண்

மீன் செவி; மீற் செவி

திரிதல் 'ணன வல்லினம் வரட்டறவும்' என்ற விதியால் அமைந்தது. இவ்விதி உறழு மெனற்கே.

(9)

213. **தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை**
**மேவி னிறுதி யழிவும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.**

தேன்மொழி மெய் வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலி வரின்
ஈறுபோய் வலி மெலி மிகலும் ம் இரு வழி

ṭēṉmoḷi mey variṉ iyalpum meṉmai
mēviṉ iṟuti aḻivum vali variṉ
īṟupōy vali meli mikalum m iru vaḷi

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for ten

In both combinations, (the finals n of ) ten is not changed before any consonant initial; before Nasals, it may also be dropped, and before hard initials it is always dropped and in its place may be inserted a kindred nasal or the approaching consonant itself.

## ஒப்புமைப் பகுதி

தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை

(தொல்.: 341)

மெல்லெழுத்து மிகினும் மான மில்லை

(தொல்.: 342)

மெல்லெழுத் தியையின் இறுதியோ டுறழும்

(தொல்.:343)

இறாஅல் தோற்றம் இயற்கை யாகும்

(தொல்.: 344)

ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே

(தொல்.: 345)

தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை யொத்தலு மீறுபோய் வலிமெலி
மிகுதலு மெலிவரி னிறுதியோ டுறழ்தலு
மிடைவரி னியல்பு மாம்பிற வுயிர்வரி
னொற்றுமிக்கு தகரமொடு நிற்றலு முரித்தே

(இ.வி.: 124)

தேன் எனும் மொழிமெய் சேரிரு வழியும்
தானியல்பாம் மெலிவரின் தன்னீற் றழிவும்
வலிவரின் ஈறுபோய் வலிமெலி மிகலுமாம்

(தொன். வி.: 25:1–3)

தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி

(மு.வீ.:331)

இறால்வரி னியல்பா தலுமின் னடைதலும்
ஈறழிந் திரண்டு தகரமெய் யொற்றலும்
மற்றத னியற்கையாம் வழுத்துங் காலே

(மு.வீ.: 332)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: தேன்மொழி முன் மூவின மெய்களும் வர இயல்பாதலும் மெல்லினம் வரின் ஈற்று மெய் கெடுதலும் வல்லினம் வரின் ஈற்றெழுத்துக் [1]கெட வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலுமாகும். இருவழியும், எ–று.

வ–று.:–

தேன்கடிது; சிறிது,தீது, பெரிது, ஞான்றது, மாண்டது, யாது, வலிது, எனவும்; கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும்; இருவழியும் மூவின மெய்யும் வர இயல்பாயிற்று. தேஞான்றது, தேநீண்டது,தேமாண்டது எனவும்; தேஞெரி, தேநெரி, தேமுரி எனவும்; மென்மைவர இருவழியும் ஈறுகெட்டது. தேக்குடம்; சாடி, தாழி, பானை எனவும்; சிறிது, தீது, பெரிது எனவும்; தேக்கடிது; தேங்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும் தேங்குடம்; சாடி, தாழி, பானை, எனவும் இருவழியும் வன்மை வர ஈறு கெட்டு வன்மை மென்மை மிக்கன. இதனை ஞாபகமாகச் [2]சூத்திரித்த வதனானே, தேன்குடம், தேற்குடம் என உறழ்வா மென்பாரும் உள[3]ரெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், தேன் என்னும் சொற்கு *'ணன வல்லினம் வரட்டறவும்'* என எய்தியது விலக்கலும், *'பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கனைத்துமெய் வரினும் இயல்பாகும்மே'* என எய்தியது இகந்துபடாமற் காத்தலும், *இச் சூத்திரத்து இயல்பும்* என எய்தியதன் மேற் சிறப்பு விதியும், வரும் வல்லினத்திற்கு *'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்–ற்று.

---

பாடவேறுபாடு .:–

1.கெட்டு

2. சூத்திரத்தோதியவதனானே

3.ரென்க.

இ–ள்.:– தேன் என்னும் சொல், மூவின மெய்யும் வரின் இறுதி னகரம் இயல்பாதலும், மெல்லினம் வரின் அவ்விறுதி இயல்பாதலே யன்றிக் கெடுதலும், வல்லினம் வரின் இறுதி இயல்பாதலே யன்றிக் கெட வந்த வல்லினமாதல் அதற்கு இனமாதல் மிகுதலுமாம் இருவழிக்கண்ணும், எ–று.

'குறிலணைவில்லா ணனக்கள் வந்த, நகரம் திரிந்துழி நண்ணும் கேடே' என்றமையின், இயல்பிற்கு நகரம் ஒழிந்த எட்டு மெய்யும் வருவித்துக் காண்க.

உ–ம்.:–

தேன் கடிது, தேன் ஞான்றது, தேன் யாது எனவும்; தேன் மொழி எனவும்; தேமொழி எனவும்; தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும் அல்வழிக்கண் வந்தன. தேன் கடுமை, தேன்மலிவு, தேன் யாப்பு எனவும்; தேன் மலர் தேமலர் எனவும்; தேன் குடம், தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமைக்கண் வந்தன. பிறவும் அன்ன.

தேன் என்பது பலபொருளொரு சொல்லாதலின், மணங்கமழ் சோலை என்னும் பொருட்டாய்த் தேங்கமழ்சோலை என இவ் விகாரங்கள் ஏற்று வருவனவும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தேனென்னும் னகர வீற்று......

இ–ள்.: **தேன்மொழி** – தேனென்னும் நிலைமொழி ஈற்றின் னகர ஒற்று, **மெய் வரின்** – வருமொழி முதல் ஒன்பது மெய்யும் வந்தால், **இயல்பும்** – ஈறு கெடாமல் இயல்பாய் முடிதலும், **மென்மை மேவின்** – வருமொழி முதல் மெல்லினம் வந்தால், **இறுதியழிவும்** – நிலைமொழி ஈற்றின் னகர வொற்றுக் கெடுதலும், **வலிவரின்** – வருமொழி முதல் வல்லினம் வந்தால், **ஈறு போய்** – நிலைமொழி ஈற்றினின்ற னகர வொற்றுக் கெட்டு, **வலி மெலி மிகலுமாம்** – வந்த வல்லினம் மிகுதலும் அதற்கு இனமான மெல்லெழுத்து மிகுதலுமாம், **இருவழி** –அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும், எ–று.

உ–ம்.:–

தேன்கடிது; சிறிது,தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, எனவும்; கடுமை, சிறுமை, தீமை, பெருமை, வலிமை எனவும் இருவழியும் ஒன்பது மெய்யொடும் இயல்பாயிற்று.

தேஞெரி, தேநெரி, தேமுரி எனவும் தேஞான்றது, நீண்டது, மாண்டது எனவும் மென்மை வர இருவழியும் ஈறு கெட்டது.

தேக்குடம், சாடி, தாழி, பானை எனவும் தேக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் தேங்குடம், சாடி, தாழி, பானை எனவும் தேங்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் இரு வழியும் ஈறுகெட்டு வன்மை மென்மை மிக்கன.

இதனை ஞாபகமாக மேற் சூத்திரத்தினானே தேன்குடம், தேற்குடம் என உறழ்வாம் என்பாரும் உளர்.

## விசாகப் பெருமாளையர்

இது, தேனென்னுஞ் சொல்லுக்கு ண ன வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்கலும் பிறவரி னியல்பு மாகும் வேற்றுமைக்கல்வழிக் கனைத்துமெய்வரினு மியல்பாகும் என எய்திய திகந்துபடாமற் காத்தலும் இச் சூத்திரத்தில் இயல்பும் என எய்தியதன் மேற் சிறப்பு விதியும் வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்திய தன் மேற்சிறப்பு விதியும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– **தேன்மொழி** – தேனென்னுஞ் சொல், **மெய்வரின்**–மூவின மெய்களும் வரின், **இயல்பும்** – இறுதி னகர மெய் யியல்பாதலும், **மென்மை மேவின்** – மெல்லினம் வரின், **இறுதி** – அம்மெய், **அழிவும்**– இயல்பாதலே யன்றிக் கெடுதலும், **வலிவரின்** – வல்லினம் வரின், **ஈறு** – அம்மெய், **போய்** – இயல்பாதலே யன்றிக் கெட, **வலிமெலி மிகலும்** – வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும், **ஆம்** – ஆகும், **இருவழி** – இருவழிக் கண்ணும், எ–று.

உ–ம்.:–

தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது எனவும் தேன்மொழி, தேமொழி, எனவும் தேன்குழம்பு, தேக்குழம்பு தேங்குழம்பு எனவும் அல்வழியில் வந்தன. தேன்கடுமை, தேன்மலிவு, தேன்யாப்பு எனவும்; தேன்மலர், தேமலர் எனவும் தேன்+ குடம் – தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமையில் வந்தன. மற்றவைகளுமிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தேன் என்னு மொழி புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

தேன்மொழி மெய்வரி னியல்பு மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி.

(தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம் இருவழி.)

**இ–ள்.:– தேன்மொழி** – தேனென்னுஞ் சொல், **மெய்வரின் இயல்பும்** – மூவின மெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும், **மென்மை மேவின் இறுதி அழிவும்** – மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலேயன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும் இருவழிக்கண்ணும், எ–று.

தேன் என்னுஞ்சொல் இயல்பாதல் எவ்வழி?

"தேன்மொழி மெய்வரின் இயல்பா மிருவழி"

உ–ம்.:–

தேன்கருமை, தேன்சாடி, தேன்மலிவு எனவும், தேன்கடிது,
தேன்ஞான்றது, தேன்யாது எனவும் வரும்.

இங்கே மெய்யெனப்பட்டவை யாவை?

மொழிக்கு முதலாகவரும் க ச த ந ப ம வ ய ஞ ங வென்னும்
பத்துள் நகர ஙகர மிரண்டுமொழித்த எட்டு மெய்யுமாம்.

தேன் என்னுஞ்சொல் மென்கணம் வரின் எவ்வாறு புணரும்?

"தேன்மொழி மென்மை மேவி னிறுதி யழிவுமா மிரு வழி" என்றமையால் இயல்பாதலேயன்றிக் கெடுதலுமாம்.

உ– ம்.:–

தேமலர், மேலர், எனவும் தேன்மொழி, தேமொழி எனவும் வரும்.

தேன் என்னுஞ் சொல் வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

"தேன்மொழி வலிவரின் ஈறுபோய், வலிமெலி மிகலு மா மிருவழி."

உ–ம்.:–

தேன்குடம், தேக்குடம், தேங்குடம், எனவும் தேன்குழம்பு,
தேக்குழம்பு, தேங்குழம்பு, எனவும் வரும்.

தேன் என்னுஞ்சொல் நியதியோடு இயல்பாகப் புணர்வது எக்கணம் வரின்?

மெல்லினமும் வல்லினமும் விதந்துரைக்கப்பட்டமையின் எஞ்சியதாகிய இடையினம் வரின் எனக் கொள்க.

# முகவை இராமானுச கவிராயர்

இது, தேன் என்னுஞ் சொல்லுக்கு எய்தியது விலக்கலும், எய்தியது பிறழாமற் காத்தலும், எய்தியதன் மேற் சிறப்பு விதியும், வரும் வல்லினத்திற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும் உணர்த்துகின்றது.

இ-ள்.:- **தேன் மொழி மெய் வரின்** - தேன் என்னுஞ் சொல் மூவினங்களும் வந்து புணரின், **இயல்பும்** - இறுதி னகரம் முன் போலவே யியல்பா யிருத்தலும், **மென்மை மேவினிறுதி யழிவும்** - மெல்லினம் வந்து புணரின் இறுதி னகரம் இயல்பாதலன்றிக் கெடுதலும், **வலிவரின்** - வல்லினம் வந்து புணரின், **ஈறுபோய் வலிமெலி மிகலுமாம்** (இயல்பாதலன்றி) அவ்விறுதி னகரங் கெட்டு வந்த வல்லின மாயினும் அதற்கு இனமாயினும் மிகலுமாம், **இருவழி** - அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும், எ-று.

'குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி 'நண்ணுங்கேடே'

என்றதினால் இயல்பிற்கு நகரம் ஒழிந்த எட்டு மெய்யும் வருவித்துக் காண்க.

உ-ம்.:-

தேன்கடிது, சிறிது, தீது, பெரிது; தேன்ஞான்றது- தேன்மாண்டது; யாது, வலிது எனவும்; தேன்மொழி, தேமொழி எனவும்; தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும்; அல்வழியில் வந்தன. தேன் கடுமை, தேன்மலிவு, தேன் யாப்பு எனவும்; தேன் மலர், தேமலர் எனவும், தேன் குடம், தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமையில் வந்தன. பிறவுமிப்படியே காண்க.

'தேன்' - என்பது பலபொரு ளொரு சொல்லாதலால், மணங்கமழ் சோலை யென்னும் பொருளைக் கொண்டு தேன்கமழ்சோலை, தேங்கமழ் சோலை யென இந்த விகாரங்களை யேற்று வருவனவுங் கொள்க. 'ணன வல்லினம் வரடறவுமென', எய்தியதை இதில், 'மெய் வரினியல்' பென்றதனுள் வேற்றுமையில் வலிவர இயல்பாதலும், 'வலிவரினீறுபோய் வலிமெலி மிகலுமா' மென்றதும் விலக்கிற் றெனவும் அல்வழி வலி வர இயல்பாமென எய்தியதை, இதில் 'மெய் வரினியல்' பென்றதனுள் அல்வழியில் வலிவர இயல்பாதல் காத்ததெனவும், ணன என ஈறு பற்றிச் சொன்ன பொதுவிதியை ஒரு பக்கந் தழுவி இச் சூத்திரத்தால் இந்த ஒரு சொல்லுக்கு விதி கூறுவதலால் எய்தியதன் மேற் சிறப்பு விதியெனவும், 'அல்வழிக்கனைத்து மெய்விரினுமியல்பா' மென்றதனுள் அல்வழியில் இயல்பாக வலி வருதலெய்தியது

இச்சூத்திரத்தில் வேற்றுமையில் இயல்பாக வலி வருதல் அதன்மேற் சிறப்பாதலால் வருமொழிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியெனவுங் காண்க. இயல்பும், இறுதியழிவும், மிகலும் ஆம் என முடித்துக் கொள்க.

**"தேனென் கிளவி வல்லெழுத் தியையின்**
**மேனிலை யொத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை யிரண்டு முரிமையு முடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை"**

எனவும்,

**"மெல்லெழுத்து மிகினு மான மில்லை"**

எனவும்,

**"மெல்லெழுத் தியையி னிறுதியோடு றழும்"**

எனவும், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :–** தேன் மொழி – 'தேன்' என்னுஞ் சொல், மெய்வரின் – (மூன்றின) மெய்களும் (வருமொழி முதலில்) வந்தால், இயல்பும் – (இறுதி யிலுள்ள னகரமெய்) இயல்பாதலும், மென்மை மேவின் – மெல்லினம் வந்தால், இறுதி அழிவும் – அவ்விறுதி னகரமெய் (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும், வலிவரின் – வல்லினம் வந்தால், ஈறுபோய் – அவ்வீற்று னகர மெய் (இயல்பாதலே யன்றிக்) கெட, வலிமெலி மிகலும் – (வந்த) வல்லினமாவது (அதற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும், ஆம் – ஆகும்; இருவழி – வேற்றுமை அல்வழி இரண்டிலும்.

குறிப்பு :–

'குறிலணைவில்லா நண்ணுங் கேடே' என்றதனால் இயல்பிற்கு ந ஒழிந்த எட்டு மெய்யும் என்க.

உதாரணம் :

| அல்வழி | | வேற்றுமை. | |
|---|---|---|---|
| தேன் + கடிது | = தேன்கடிது | தேன் கடுமை | |
| தேன் + மாண்டது | = தேன் மாண்டது | தேன் மாட்சி | இயல்பு |
| தேன் + யாது | = தேன் யாது | தேன் யாப்பு | |
| தேன் + மொழி | = தேன்மொழி | தேன் மலர் | |
| தேன் + மொழி | = தேமொழி | தேமலர். | – இயல்பும் அழிவும் |
| தேன் + குழம்பு | = தேன் குழம்பு | தேன்குடம் | |

| | | | |
|---|---|---|---|
| தேன் + குழம்பு | = தேக்குழம்பு | தேக்குடம் | |
| தேன் + குழம்பு | = தேங்குழம்பு | தேங்குடம் | – இயல்பும் வலிமிகலும் மெலிமிகலும். |

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **தேன்மொழி** – தேனென்னுஞ் சொல், **மெய்வரின் இயல்பும்** – மூவின மெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும், **மென்மை மேவின் இறுதி அழிவும்** – மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே யன்றிக் கெடுதலும், **வலி வரின் ஈறு போய் வலி மெலி மிகலும் ஆம்** – வல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே யன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், **இருவழி** – இருவழிக்கண்ணும், எ–று.

உ–ம்.:–

(1) தேன்கடிது , தேன்ஞான்றது, தேன்யாது எனவும் தேன்மொழி எனவும்; தேமொழி, தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு எனவும் அல்வழியில் வந்தன.

(2) தேன்கடுமை, தேன்மலிவு, தேன்யாப்பு எனவும்; தேன்மலர், தேமலர் எனவும், தேன்குடம், தேக்குடம், தேங்குடம் எனவும் வேற்றுமையில் வந்தன.

'இருவழி மெய்வரின் இயல்பு' என்றது "ணனவல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கலும், "பிறவரினியல்பு மாகும் வேற்றுமைக்கல்வழிக் கனைத்து மெய் வரினு மியல்பாகும்" என எய்திய திகந்துபடாமைக் காத்தலும்; 'மென்மை மேவினறுதி யழிவும் வலி வரி னீறுபோம்' என்றது இச் சூத்திரத்தால் இயல்பு என எய்தியதன்மேற் சிறப்புவிதி; வலி மெலி மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **தேன்மொழி** – தேனென்னுஞ்சொல், – **மெய்வரின் இயல்பும்** – மூவினமெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும், **மென்மை மேவின் இறுதி அழிவும்** – மெல்லினம்வரின் அம்மெய் இயல்பாதலேயன்றிக் கெடுதலும், – **வலிவரின் ஈறு போய் வலி மெலி மிகலும் ஆம்** – வல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே யன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், – **இருவழி** – இருவழிக் கண்ணும்.

உ–ம்.:–

(1)தேன்கடிது, தேன்ஞான்றது, தேன்யாது, எனவும் தேன்மொழி, தேமொழி, எனவும் தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு, எனவும் அல்வழியில் வந்தன.

(2)தேன் கடுமை, தேன் மலிவு, தேன்யாப்பு, எனவும் தேண்மலர், எனவும் தேமலர், எனவும் தேன்குடம், தேக்குடம், தேங்குடம், எனவும் வேற்றுமையில் வந்தன.

தேன் என்பது பலபொருளொருசொல்லாதலால், மணங்கமழ் சோலை என்னும் பொருளைக் கொண்டு தேன்கமழ்சோலை, தேங்கமழ்சோலை என இந்த விகாரங்களையேற்று வருவனவுங் கொள்க.

(சூ)"தேனென்கிளவி வல்லெழுத்தியையின், மேனிலை யொத்தலும் வல்லெழுத்துமிகுதலு, மாமுறையிரண்டு முரிமையுமுடைத்தே, வல்லெழுத்து மிகு வழியிறுதியில்லை. எனவும் மெல்லெழுத்து மிகினு மானமில்லை. எனவும் மெல்லெழுத்தியையி னிறுதியோடுறழும்", எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறதலுங் காண்க.

இருவழி மெய்வரின் இயல்பு என்றது 'ணனவல்லினம் வரட்டறவும்' என எய்தியது விலக்கலும், 'பிறவரினியல்புமாகும் வேற்றுமைக்கல்வழிக் கனைத்து மெய்வரினுமியல்பாகும்' என எய்திய திகந்துபடாமைக் காத்தலும், மென்மை மேவினிறுதி யழிவும் வலிவரி னீறுபோம் என்றது இச்சூத்திரத்தில் இயல்பு என எய்தியதன் மேற்சிறப்புவிதி; வலி மெலி மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை,மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்:. (1) **தேன்மொழி** – தேன் என்னுஞ் சொல், **மெய் வரின்** – (மூன்றின) மெய்களும் (வருமொழி முதலில்) வந்தால், **இயல்பும்** – (இறுதியிலுள்ள னகர மெய்) இயல்பாதலும், (2) **மென்மை மேவின்** – மெல்லினம் வந்தால், **இறுதி அழிவும்** – அவ்விறுதி னகர மெய் (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும், (3) **வலிவரின்** – வல்லினம் வந்தால், **ஈறு போய்** – அவ்வீற்று னகர மெய் (இயல்பாதலே யன்றிக்) கெட, **வலி மெலி மிகலும்** – (வந்த) வல்லினமாவது (அதற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும், **ஆம்** – ஆகும், **இருவழி** – வேற்றுமை அல்வழி இரண்டிலும், எ–று.

உ–ம்:–

அல்வழி வேற்றுமை

(1) தேன் + கடிது = தேன்கடிது + செம்மை = தேன்செம்மை

தேன் + மாண்டது = தேன்மாண்டது + மாட்சி = தேன்மாட்சி

தேன் + யாது = தேன்யாது + யாப்பு = தேன்யாப்பு (இயல்பு)

(2) தேன் + மொழி = தேன்மொழி+ மலர் = தேன்மலர்

= தேமொழி = தேமலர் – இயல்பும் அழிவும்.

(3) தேன்+குழம்பு = தேன்குழம்பு+குடம் = தேன்குடம் – இயல்பும், வலிமிகலும், மெலிமிகலும்.

= தேக்குழம்பு + தேக்குடம்

= தேங்குழம்பு + தேங்குடம்

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– தேன் மொழி – தேனென்னுஞ்சொல், மெய்வரின் இயல்பும் – மூவின மெய்களும் வரின் இறுதி னகரமெய் இயல்பாதலும், மென்மை மேவின் இறுதி அழிவும் – மெல்லினம் வரின் அம்மெய் இயல்பாதலே யன்றிக் கெடுதலும், வலி வரின் ஈறுபோய் வலி மெலிமிகலும் ஆம் – வலிலினம் வரின் அம் மெய் இயல்பாதலே யன்றிக் கெட வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், இருவழி – இருவழிக்கண்ணும். எ–று.

உ–ம்.:–

(1) தேன் + கடிது = தேன்கடிது.

மாண்டது = தேன்மாண்டது.

யாது = தேன்யாது. – இயல்பு

தேன் + மொழி = தேன்மொழி

= தேமொழி – இயல்பும் கெடுதலும்

தேன் + குழம்பு = தேன்குழம்பு

= தேக்குழம்பு

= தேங்குழம்பு – இயல்பும் வலிமிகலும் மெலிமிகலும் – அல்வழி

(2) தேன் + கடுமை = தேன்கடுமை.

மாட்சி = தேன்மாட்சி.

யாப்பு = தேன்யாப்பு. – இயல்பு

தேன் + மலர் = தேன்மலர்

= தேமலர் – இயல்பும் கெடுதலும்

தேன் + குடம் = தேன்குடம்

= தேக்குடம்

= தேங்குடம் – இயல்பும் வலிமிகலும் மெலிமிகலும் – வேற்றுமை

'இருவழி மெய் வரின் இயல்பு' என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" (சூ–209) என எண்தியது விலக்கல்; "பிறவரினியல்புமாகும் வேற்றுமைக் கல்வழிக் கனைத்துமெய் வரினு மியல்பாகும்" என எய்திய திகந்துபடாமைக் காத்தல். 'மென்மை மேவி னிறுதியழிவும் வலி வரி னீறுபோம்' என்றது இச்சூத்திரத்தில் இயல்பு என எய்தியதன்மேற் சிறப்புவிதி; 'வலி மெலி மிகும்' என்றது "இயல்பினும் வதியினும்" (சூ–165) என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– தேன் மொழி – தேன் என்னுஞ் சொல், மெய்வரின் – (மூவின) மெய்களும் வரின், இயல்பும் – (இறுதி னகரமெய்) இயல்பாதலும், மென்மை மேவின் – மெல்லினம் வரின், இறுதி அழிவும் – அவ்விறுதிமெய் (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும், வலி வரின் – வல்லினம் வரின், ஈறு போய் – அவ்வீற்று மெய் (இயல்பாதலேயன்றிக்) கெட, வலி மெலி மிகலும் ஆம் – (வந்த) வல்லினமாவது (அதற் கினமான) மெல்லினமாகவது மிகுதலும் ஆகும்; இருவழி – இருவழிக்கண்ணும். எ–று.

பொ–ரை.:–

தேன் என்னுஞ் சொல்முன் (மூவின) மெய்களும் வந்தால் (இறுதி னகரமெய்) இயல்பாதலும், மெல்லினம் வந்தால் அவ்விறுதி மெய் (இயல்பாதலேயன்றிக்) கெடுதலும், வல்லினம் வந்தால் அவ்வீற்றுமெய் (இயல்பாதலேயன்றிக்) கெட, (வந்த) வல்லினமாவது (அதற்கினமான) மெல்லினமாவது மிகுதலும் ஆகும்; இருவழிக்கண்ணும்.

அல்வழி.

உ–ம்.:–

தேன் + கடிது = தேன்கடிது. – இயல்பு.

+ ஞான்றது = தேன்ஞான்றது.

+ யாது = தேன்யாது.

+ மொழி = தேன்மொழி.

தேமொழி – ன் அழிவு.

+ குழம்பு = தேன்குழம்பு.

தேக்குழம்பு.

தேங்குழம்பு.– இயல்பும், வலிமெலி மிகலும்.

வேற்றுமை

தேன் + கருமை = தேன்கருமை. – இயல்பு.

+ மலிவு = தேன்மலிவு.

+ யாப்பு = தேன்யாப்பு.

+ மலர் = தேன்மலர்.

தேமலர் – ன் அழிவு.

+ குடம் = தேன்குடம்.

= தேக்குடம்.

= தேங்குடம்.– இயல்பும், வலிமெலி மிகலும்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) தேன்மொழி – தேன் என்னுஞ்சொல், மெய்வரின் – மூவின மெய்களும் வரின், இயல்பும் – (இறுதி னகர மெய்) இயல்பாதலும்;

(2) மென்மைமேவின் – மெல்லினம்வரின், இறுதி – ஈற்றிலுள்ள அம்மெய், அழிவும் – (இயல்பாதலே யன்றிக்) கெடுதலும்;

(3) வலிவரின் – வல்லினம்வரின், ஈறு – ஈற்றிலுள்ள அம்மெய், போய் – (இயல்பாதலே யன்றிக்) கெட்டு, வலி மெலி மிகலும் ஆம் – வந்த வல்லினமாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், இருவழி – இருவழிக்கண்ணும்.

உதாரணம்

அல்வழி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | தேன் | + | கடிது | = | தேன்கடிது | |
| | | + | மாண்டது | = | தேன்மாண்டது | – இயல்பு. |
| | | + | யாது | = | தேன்யாது | |
| (2) | தேன் | + | மொழி | = | தேன்மொழி | இயல்பும், |
| | | + | மொழி | = | தேமொழி | அழிவும் |
| (3) | தேன் | + | குழம்பு | = | தேன்குழம்பு | இயல்பும், |
| | | + | குழம்பு | = | தேக்குழம்பு | வலி மிகலும், |
| | | + | குழம்பு | = | தேங்குழம்பு | மெலி மிகலும் |

வேற்றுமை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | தேன் | + | கடுமை | = | தேன்கடுமை | |
| | | + | மாட்சி | = | தேன்மாட்சி | – இயல்பு. |
| | | + | யாப்பு | = | தேன்யாப்பு | |
| (2) | தேன் | + | மலர் | = | தேன்மலர் | இயல்பும், |
| | | + | மலர் | = | தேமலர் அழிவும். | |
| (3) | தேன் | + | குடம் | = | தேன்குடம் | இயல்பும், |
| | | + | குடம் | = | தேக்குடம் | வலி மிகலும், |
| | | + | குடம் | = | தேங்குடம் | மெலி மிகலும் |

## மோசகு பொன்னையா

தேன் என்னுஞ் சொல் நிற்க மூவின மெய்களும் வந்து புணரின், இருவழிக்கண்ணும் இயல்பாதலும்; மெல்லினம் வந்து புணரின் இயல்பாதலுடன் கெடுதலும்; வல்லினம் வந்து புணரின், இயல்பாதலே யன்றிக் கெட்டவிடத்து வல்லினமாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆம், எ–று.

எ–டு.:–

தேன் கடிது, தேன் ஞான்றது, தேன் யாது,
தேன்மொழி, தேமொழி.
தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு அல்வழிக்கண் வந்தன.
தேன் கடுமை, தேன் மலிவு, தேன் யாப்பு
தேன்மலர், தேமலர்.
தேன் குடம், தேக்குடம், தேங்குடம் – வேற்றுமைக்கண் வந்தன.

(10)

214. மரமல் லெகின்மொழி யியல்பு மகர
மருவ வலிமெலி மிகலு மாகும்.

மரம் அல் எகின் மொழி இயல்பும் அகரம்
மருவ வலி மெலி மிகலும் ஆகும்.

maram al ekiṉ moḻi iyalpum akaram
maruva vali meli mikalum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for ekin

The combination of ekin which is not the name of a tree with hard initials is natural; in a few cases, however, a is added to the final n, and then either the hard initial is doubled or its (kindred) nasal inserted.

## ஒப்புமைப் பகுதி

எகின்மர மாயின் ஆண்மர இயற்றே

(தொல்.: 337)

ஏனை யெகினே அகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்

(தொல்.: 338)

மரமல் லெகின்மொழி யியல்பு மகர
மருவ வலிமெலி மிகலு மாகும்

(இ.வி.: 125)

எகின்மர மல்லதே இருவழி இயல்பும்
அவ்வுறி வலிவரின் வலிமெலி மிகலுமாம்

(தொ.வி.:25:8–9)

எகின்மர மாயின் அம்மொடு சிவணும்

(மு.வீ.:326)

**மரமல் லெகின்மொழி வலிமெலி மிகுதலும்**
**அகரச் சாரியை யடையவும் பெறுமே**

(மு.வீ.:328)

## மயிலை நாதர்

இதுவுமது.

**இ–ள்.:–** மரமல்லாத எகினென்பது, இருவழியும் இயல்பாதலும் அகரம் பொருந்த வல்லெழுத்து மெல்லழுத்து [1]மிகுதலும் ஆகும், **எ–று.**

**வ–று.:–**

எகின்கடிது; சிறிது, தீது, பெரிது, எனவும், எகின்கால்; சிறகு, தலை, புறம், எனவும் இருவழியும் இயல்பாயிற்று. எகினக்கடிது; எகினங்கடிது. சிறிது, தீது, பெரிது, எனவும், எகினக்கால்; எகினங்கால்; சிறகு, தலை, புறம், எனவும் இருவழியும் அகரம் பெற்று வல்லெழுத்து மெல்லெழுத்து மிக்கன.

வருமொழி வரையாமையின், எகினவழகு, எகினமாட்சி, எகினவலிமை என ஏனை முக்கணமும் வர அகரம் பெறுமெனவுங் கொள்க.
எகின்–அன்னம்

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், எகின் என்னும் சொற்கு *வேற்றுமைக்கண், 'ணன வல்லினம் வரட் டறவும்'* என எய்தியது விலக்கலும், *அகரம் மருவ என்றமையின் அச் சூத்திரத்தால் இருவழிக் கண்ணும்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், வரும் வல்லி னத்திற்கு *இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேற் சிறப்பு விதியும் **உணர்–ற்று.**

**இ–ள்.:–** மரமன்றிப் பறவையாய அன்னத்தை உணர்த்தும் எகின் என்னுஞ் சொல், வேற்றுமைக்கண்ணும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், இருவழியும் அகரச் சாரியையைப் பொருந்த வரும் வல்லெழுத்தாதல் அவற்றிற்கு இனமாதல் மிகுதலும் ஆம், **எ–று.**

---

பாடவேறுபாடு .:–

1. மிகலுமாகும்.

உ–ம்.:–

எகின் கால், சிறை, தலை, புறம் என வேற்றுமைக்கண்ணும் இயல்பாயிற்று. எகினப்புள், எகினம்புள் எனவும்: எகினக்கால், எகினங்கால் எனவும் இருவழியும் அகரம் மருவ வலி மெலி மிகுந்தன. அகரம் மருவுதற்கு வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க. எகினமாட்சி, வாழ்க்கை,அழகு என வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், அன்ன மென்னும் பொருள்பட வந்த எகினென்னும் னகர ஈற்றுச்சொல் விகாரம் கூறியது.

**இ–ள்.:– மரமல் லெகின்மொழி** – மரமென்னும் பொருள் கொள்ளாமல் அன்ன மென்னும் பொருள் கொள்ளும் எகின் என்னும் நிலைமொழி ஈற்றி னின்ற னகர வொற்று, **இயல்பும்** – வல்லினம் வந்தால் இருவழியும் இயல்பாதலும், **அகரமருவ** – ஈற்றி னின்ற னகர வொற்றின் மேல் அகரம் பொருந்த, **வலி மெலி மிகலுமாகும்** – வந்த வல்லெழுத்து மிகுதலும் அதற்கு இனமான மெல்லெழுத்து மிகுதலுமாம், எ–று.

உ–ம்.:–

எகின் கால், சிறகு, தலை, புறம் எனவும் எகின் கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் இருவழியும் இயல்பாயிற்று. எகினக்கால், எகினங்கால் எனவும், எகினக் கடிது, எகினங் கடிது எனவும் இருவழியும் அகரம் பெற்று வல்லெழுத்து மெல்லெழுத்து மிக்கன.

வருமொழி வரையாமையின் எகினவழகு, எகினமாட்சி, வலிமை என ஏனைய முக்கணமும் வரவும் அகரம் பெறுமெனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது எகினென்னுஞ் சொல்லுக்கு வேற்றுக்கண் ண ன வல்லினம் வரட் டறவம் என எய்தியது விலக்கலும் அகர மருவ வென்றதனால் அச் சூத்திரத் தால் இரு வழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும் வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:–** மரமல் – மரமல்லாத, **எகின்மொழி**–அன்னத்தை யுணர்த்து மெகினென்னுஞ் சொல், **இயல்பும்** – வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி யியல்பாதலும், **அகரமருவ** – இருவழியிலும் அகரச் சாரியை பொருந்த, **வலிமெலிமிகலும்** – வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும், **ஆகும்**– ஆகும், எ–று.

உ–ம்:–

எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலு மியல்பாயிற்று. எகினப்புள் – எகினம்புள் எனவும், எகினக்கால்– எகினங்கால் எனவும், இருவழியிலும் அகரம் வர வலிமெலி மிகுந்தன (அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க, எகினமாட்சி, எகினவாழ்க்கை, எகினவழகு என வரும். மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அன்னத்தை யுணர்த்தும் எகின் என்னுஞ்சொல் எவ்வாறு புணரும்?

மரமல் லெகின்மொழி யியல்பு மகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும்.

(மரம் அல் எகின்மொழி இயல்பும் அகரம்
மருவ வலிமெலி மிகலும் ஆகும்)

**இ–ள்.:– மரம் அல் எகின்மொழி** – மரமல்லாத அன்னத்தை யுணர்த்தும் எகினென்னுஞ் சொல், **இயல்பும்** – வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், **அகரம் மருவ வலி மெலி மிகலும் ஆகும்** – இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கினமாவது மிகுதலும் ஆகும், எ–று.

உ–ம்.:–

(1) எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

(2) எகினப்புள், எகினம்புன் எனவும், எகினக்கால், எதினங்கால் எனவும், இருவழியிலும் அகரம் வர வலி மெலிமிகுந்தன.

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங்கொள்க, எகின மாட்சி, எகின வாழ்க்கை எகினவழகு எனவரும்.

எகின்மொழியியல்பு என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விளக்கல் அகரமருவ என்றது அச்சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப்பிறிது விதி வகுத்தல், வலிமெலி மிகும் என்றது இயல்பினும் விதியினும்" என்பதனால் எய்தியதன்மேற் சிறப்பு விதி.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** எகின் என்னுஞ் சொல்லுக்கு எய்தியது விலக்கலும், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும், வரும் வல்லினத்திற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:– மரமல் லெகின் மொழி** – மரமன்றிப் பறவையாகிய அன்னத்தை யுணர்த்தும் எகினென்னுஞ் சொல், **இயல்பும்**– (வேற்றுமைச் சந்தியிலும் வல்லினம் வந்து புணரின்) இயல்பாதலும், **அகர மருவ வலிமெலி மிகலுமாம்** – (இருவழியிலும்) அகரச் சாரியை பொருந்த வந்த வல்லெழுத்தாயினும் அதற்கு இனவெழுத்தாயினும் மிகுதலுமாம், என்றவாறு.

**உ–ம்.:–**

எகின்கால், எகின்சிறை, தலை, புறம் என வேற்றுமையிலு மியல்பாயிற்று. எகினப்புள், எகினம்புள் எனவும், எகினக்கால், எகினங்கால் எனவும், இருவழியும் அகர மருவ வலிமெலி மிகுந்தன. அகர மருவுதற்கு வருமொழி யெடுத்துச் சொல்லாததினாலே நாற்கணங்களுஞ் கொள்க.

**வ–று.:–**

எகினமாட்சி, எகினவாழ்க்கை, எகினவழக்கு என வரும் பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– மரம் அல்**– மரத்தினுடைய பெயரல்லாத, **எகின்மொழி** – அன்னப் பறவையின் பெயராகிய) 'எகின்' என்னுஞ் சொல், **இயல்பும்** – (அல்வழியில் இயல்பாதலேயன்றி வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வர இறுதினகரம்) இயல்பாதலும், **அகரம் மருவ** – (இருவழியிலும்) அகரச்சாரியை பொருந்த, **வலிமெலி மிகலும்** – வல்லெழுத்தாவது (அதற்கு இனமான) மெல்லெழுத்தாவது மிகுதலும், **ஆகும்** –.

**உ–ம்.:–**

எகின் + சிறை = எகின் சிறை
எகின் + தலை = எகின்றலை

– வேற்றுமையில் வலிவர இயல்பாயிற்று.

எகின் + புள் = எகினப் புள்
எகின் + புள் = எகினம் புள்.

– அல்வழியில் அகரம் வர வலிமெலி மிக்கன.

எகின் + கால் = எகினக்கால்
எகின் + கால் = எகினங் கால்

– வேற்றுமையில்
அகரம் வர
வலிமெலி
மிக்கன.

குறிப்பு :–

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமும் கொள்க.

உ–ம். :–

எகின் + மாட்சி = 'எகின மாட்சி' 'எகின வாழ்க்கை' 'எகின வழகு'

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– மரம் அல் எகின்மொழி – மரமல்லாத அன்னத்தை யுணர்த்தும் எகினென்னுஞ் சொல், இயல்பும் – வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், அகரம் மருவ வலி மெலிமிகலும் ஆகும் – இருவழியிலும் அகரச் சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும், எ–று.

உ–ம்.:–

(1) எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

(2) எகினப்புள், எகினம்புள் எனவும்; எகினக்கால், எகினங்கால் எனவும்; இருவழியிலும் அகரம் வர வலிமெலி மிகுந்தன.

அகரம் வருவதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க. எகின மாட்சி, எகினவாழ்க்கை, எகின வழுகு என வரும்.

'எகின் மொழியல்பு' என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்; அகர மருவும் என்றது அச் சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; வலி மெலிமிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். மரம் அல் எகின்மொழி – மரமல்லாத அன்னத்தையுணர்த்தும்

எகினென்னுஞ்சொல், – இயல்பும் – வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி இயல்பாதலும், – அகரம் மருவ வலி மெலி மிகலும் ஆகும் – இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும். – எ–று.

உ–ம்:–

(1)எகின்கால், சிறை, தலை, புறம் என வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

(2)எகினப்புள், எகினம்புள் – எனவும் எகினக்கால், எகினங்கால், எனவும் இருவழியிலும் அகரம் வர வலி மெலி மிகுந்தன.

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க. எகினமாட்சி எகினவாழ்க்கை, எகின வழகு என வரும்.

எகின்மொழியியல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியது விலக்கல்; அகரம் மருவும் என்றது அச்சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; வலி மெலி மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– (1) மரம் அல் – மரத்தின் பெய ரல்லாத, எகின் மொழி – (அன்னப்பறவையின் பெயராகிய) எகின் என்னுஞ் சொல், இயல்பும் – (அல்வழியில் இயல்பாதலே யன்றி) வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வர இறுதி னகரம்) இயல்பாதலும்:–(2) அகரம் மருவ – (இருவழியிலும்) அகரச் சாரியை பொருந்த, வலி மெலி மிகலும் – வல்லெழுத்தாவது (அதற்கு இனமான) மெல்லெழுத்தாவது மிகுதலும், ஆகும் –; (எ–று)

உ–ம்:–

(1) எகின் + சிறை = எகின்சிறை, எகின்+ தலை = எகின்றலை. வேற்றுமையில் வலிவர இயல்பாயிற்று.

(2) எகின்+புள் = எகினப்புள் எகினம்புள், அல்வழியில் அகரம் வர வலி மெலிமிக்கன. எகின் + கால் = எகினக்கால் வேற்றுமையில் அகரம் வர மெலி மிக்கன.

அகரம் வருதற்கு, வருமெழுத்தைச் சொல்லாமையால்,

நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

எகின் + மாட்சி = எகினமாட்சி, எகினவாழ்க்கை, எகினவழகு.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– மரம் அல் எகின்மொழி –** மரமல்லாத அன்னத்தையுணர்த்தும் எகினென்னுஞ் சொல், **இயல்பும் –** (வேற்றுமையிலும் வல்லினம் வர இறுதி) இயல்பாதலும், **அகரம் மருவ வலி மெலி மிகலும் ஆகும் –** இருவழியிலும் அகரச்சாரியை பொருந்த வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும். **எ–று.**

உ–ம்.:–

(1) கால் = எகின்கால்.

எகின் + சிறை = எகின்சிறை.

தலை = எகின்தலை.

புறம் = எகின்புறம். – வேற்றுமையில் வலிவர இயல்பாயிற்று.

(அல்வழியில் இயல்பாதல் 209ஆவது சூத்திரத்தாற் பெறப்படும்.)

(2) எகின் + புள் = எகினப்புள்

= எகினம்புள் – என அல்வழியிலும்,

கால் = எகினக்கால்

= எகினங்கால் – என வேற்றுமையிலும்

அகரம் வர வலி மெலி மிக்கன.

அகரம் வருதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க. எகின் மாட்சி, எகினவாழ்க்கை, எகின வழகு என வரும்.

'எகின் மொழியியல்பு' என்றது ''ண ன வல்லினம் வரட்டறவும்'' (சூ–209) என எண்தியது விலக்கல்;

'அகரமருவும்' என்றது அச் சூத்திரத்தால் இருவழிக்கண்ணும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்;

'வலி மெலி மிகும்' என்றது ''இயல்பினும் விதியினும்'' (சூ–165) என்பதனால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) மரம் அல் – மரம் அல்லாத, எகின் மொழி – (அன்னத்தை உணர்த்தும்) எகின் என்னுஞ் சொல், இயல்பும் – (வல்லினம்வரின் வேற்றுமையிலும் இறுதி) இயல்பாதலும்;

(2) அகரம் மருவ – (இருவழியிலும்) அகரச் சாரியை பொருந்த, வலி மெலி மிகலும் ஆகும் – வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும் ஆகும்.

உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | எகின் | + | கால் | = | எகின்கால் |
| | | + | சிறை | = | எகின்சிறை |
| | | + | தலை | = | எகின்றலை |
| | | + | புறம் | = | எகின்புறம் |

என வேற்றுமையில் இயல்பாயிற்று.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (2) | எகின் | + | புள் | = | எகினப்புள், எகினம்புள் |
| | | + | கால் | = | எகினக்கால், எகினங்கால் |

என இருவழியிலும் அகரம் வர, வலிமெலி மிகுந்தன.

அகரம் வருவதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் பிற கணமுங் கொள்க.

| | | | | |
|---|---|---|---|---|
| எகின் | + | மாட்சி | = | எகினமாட்சி |
| | + | வாழ்க்கை | = | எகினவாழ்க்கை |
| | + | அழகு | = | எகினவழகு |

## மோசகு பொன்னையா

மரமல்லாத எகின் (அன்னம்) என்னுஞ் சொல், இருவழியிலும் இயல்பாதலும், இருவழியும் அகரச் சாரியை பொருந்த, வரும் வல்லெழுத்தோ அதன் இனமோ மிகுதலும் ஆகும், எ–று.

எ–டு.

எகின் பறந்தது
எகின் கால் – இருவழியும் இயல்பாயிற்று.
எகினப் புள்
எகினம் புள் – அல்வழியில் அகரம் பெற்று வலிமெலி மிக்கன.
எகினக் கால்
எகினங் கால் – வேற்றுமையில் அகரம் பெற்று வலிமெலி மிக்கன.

அகரம் மருவுதற்கு வருமொழி வரையாமையின், எகினமாட்சி, எகினவாழ்வு, எகினவழகு எனப் பிறகணங்கள் வர அகரச் சாரியை பெறுதலுங் கொள்க.
தொல்காப்பியர் மெலிமிகல் கூறாராயினார்.

(11)

215. **குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே.**

**குயின் ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே.**

kuyin ūn vēṟṟumaikkaṇṇum iyalpē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for kuyin and un

Even in casual combination, kuyin and un do not change (their finals).

## ஒப்புமைப் பகுதி

**குயினென் கிளவி இயற்கை யாகும்**

(தொல்.:336)

**குயினென் கிளவி இயற்கை யாகும்**

(இ.வி.:126)

**ஊன்குயி னியல்பாம் உற்ற வேற்றுமைக்கு**

( தொ.வி.: 25:7)

**இருவழி யினுங்குயி னியல்பா கும்மே**

(மு.வீ.: 327)

## மயிலை நாதர்

எ–ன், குயின் ஊனென்ப வற்றிற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– குயினென்பதுவும் ஊனென்பதுவும் வேற்றுமைக் கண்ணும் இயல்பாம், எ–று.

வ—று.:—

குயின்குழாம் ; செறிவு, திரள், பெருமை, ஞாற்சி, மாட்சி, யாப்பு, வலிமை, எனவும் ஊன்கடுமை; சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, மாட்சி, யாப்பு, வலிமை எனவும் வரும்.

உம்மையால், அல்வழிக்கண்ணும் இயல்பாமென்றவாறு.

வ—று.:—

குயின்கடிது, ஊன்கடிது; சிறிது, தீது, பெரிது, ஞான்றது, மாண்டது, யாது, வலிது என வரும். குயின்—கொண்மூ.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், குயின், ஊன் என்னும் சொற்கட்கு 'ணன வல்லினம் வரட் டறவும்' என எய்தியது விலக்கல் நுதலிற்று.

இ—ள்.:— குயின் என்னும் பெயரும், ஊன் என்னும் பெயரும் வல்லினம் வரின் அல்வழிக்கண் இயல்பாதலே யன்றி வேற்றுமைக் கண்ணும் இயல்பாம், எ—று.

உ—ம்.:—

குயின் கடுமை, ஊன் கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும்.

குயின் — மேகம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், குயின் ஊன் என்னும் இவ்விரு சொல்லும் புணருமாறு கூறியது.

இ—ள்.:— குயினூன் — குயின் ஊன் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றினின்ற னகர ஒற்றின் மேல், வேற்றுமைக்கண்ணும் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும், இயல்பே — வருமொழி முதல் வல்லினம் வந்தால் இயல்பாய் முடியும், எ—று.

உ—ம்.:—

குயின் குழாம், செறிவு, திரள், பெருமை, மாட்சி, வலிமை எனவும்; ஊன், கடுமை, சிறுமை, தீமை, பெருமை, மாட்சி, வலிமை எனவும் வரும்.

குயின் — கொண்மூ.

## விசாகப் பெருமாளையர்

இது, குயின் ஊன் என்னுஞ் சொற்களுக்கு ண ன வல்லினம் வரட்டறவும் என எய்தியது விலக்குகின்றது.

இ–ள்.:– **குயின்** – குயினென்னும் பெயரும், **ஊன்** –ஊனென்னும் பெயரும், **வேற்றுமைக்கண்ணும்** – வேற்றுமை யினிடத்தும், **இயல்பு** – இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

குயின்கடுமை, ஊன்கடுமை, சிறுமை–தீமை, பெருமை என வரும், (குயின்–மேகம்).

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

குயின் ஊன் என்னும் பெயர்கள் எவ்வாறு புணரும்?

குயினூன் னேற்றுமைக்கண்ணும் இயல்பே

(குயின் ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே)

இ–ள்.: **குயின் ஊன்** – குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெபரும், **வேற்றுமைக்கண்ணும் இயல்பு** – வேற்றுமையினிடத்தும் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

குயின் கடுமை, ஊன் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, எனவரும். ('குயின் – மேகம்.')

வேற்றுமைக்கண்ணுமியல்பு என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்.

வேற்றுமைக்கண்ணு மியல்பே என்ற வும்மையாற் பெறப்படுவது யாது?

அல்வழிக்கண்ணு மியல்பாமென்பது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இவ் விருவகைச் சொல்லுக்கும் எய்தியது விலக்குகின்றது.

இ–ள்.:– **குயினூன்**–இவ்விரண்டு னகர வீற்றுச் சொற்களும், **வேற்றுமைக் கண்ணு மியல்பு** – (வல்லினம் வரின் அல்வழியில் இயல்பாதலும் அன்றி) வேற்றுமையிலும் இயல்பாம், எ–று.

உ–ம்.:–

குயின்கடுமை, ஊன்கடுமை, குயின்சிறுமை, ஊன்சிறுமை, தீமை, பெருமை என வரும். குயின்–மேகம்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– குயின் ஊன் – குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெயரும், வேற்றுமைக்கண்ணும் இயல்பு – வேற்றுமை யினிடத்தும் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

குயின்கடுமை, ஊன்கடுமை, சிறுமை, தீமை, பெருமை என வரும். (குயின் – மேகம்)

'வேற்றுமைக்கண்ணு மியல்பு' என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" என எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள், குயின் ஊன் – குயினென்னும் பெயரும் ஊனென்னும் பெயரும், – வேற்றுமைக்கண்ணும் இயல்பு – வேற்றுமையினிடத்தும் இயல்பாகும், எ–று.

உ–ம்.:–

குயின் கடுமை, ஊன்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவரும், (குயின் + மேகம்)

வேற்றுமைக்கண்ணுமியல்பு என்றது 'ணனவல்லினம்வரட்டறவும்' என எய்தியது விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: குயின்–குயின் என்னும் பெயரும், **ஊன்** – ஊன் என்னும் பெயரும். **வேற்றுமைக்கண்ணும்** – வேற்றுமைப் புணர்ச்சியிலும், **இயல்பே** – (இறுதி னகரம்) இயல்பே யாகும்; எ–று. (குயின்–மேகம், ஊன் – தசை)

உ–ம்.:–

குயின்+கடுமை = குயின்கடுமை, சிறுமை = குயின்சிறுமை – ஊன் + தீமை – ஊன்றீமை பெருமை = ஊன்பெருமை.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– குயின் ஊன் – குயினென்னும் பெரும் ஊனென்னும் பெயரும், வேற்றுமைக்கண்ணும் இயல்பு – வேற்றுமையினிடத்தும் இயல்பாகும். எ–று.

உ–ம்.:–

குயின் + கடுமை = குயின் கடுமை.

ஊன் + கடுமை – ஊன்கடுமை.

+சிறுமை – குயின் சிறுமை.

– ஊன் சிறுமை.

+ தீமை = குயின் தீமை.

+ஊன் தீமை.

+ பெருமை = குயின்பெருமை.

+ ஊன் பெருமை.

(குயின் – மேகம்.)

'வேற்றுமைக்கண்ணுமியல்பு' என்றது "ணன வல்லினம் வரட்டறவும்" (சூ–209) என எய்தியது விலக்கல்.

## கா.நமச்சிவாய முதலியார்

குயின் – குயின் என்னும் பெயரும், ஊன் – ஊன் என்னும் பெயரும், வேற்றுமைக்கண்ணும் – வேற்றுமையிடத்தும், இயல்பு – (வல்லினம்வரின்) இயல்பாகும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | குயின் | + | கடுமை – | குயின்கடுமை |
| | | + | சிறுமை – | குயின்சிறுமை |
| | | + | தீமை – | குயின்றீமை |
| | | + | பெருமை – | குயின்பெருமை |
| | ஊன் | + | கடுமை = | ஊன்கடுமை |
| | | + | சிறுமை= | ஊன்சிறுமை |
| | | + | தீமை = | ஊன்றீமை |
| | | + | பெருமை= | ஊன்பெருமை |

குயின் = மேகம்.

## மோசகூ பொன்னையா

குயின், ஊன், என்னும் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியிலும் இயல்பேயாம், எ–று.

எ–டு.:–

குயின் கடுமை; குயின் சிறுமை.

ஊண் தீமை; ஊண் பெருமை.

குயின் – மேகம்.

(12)

216. மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்.

மின் பின் பன்கன் தொழில்பெயர் அனைய
கன் அவ் வேற்று மென்மையோடு உறழும்.

min pin pankan tolilpeyar anaiya

kan av vērru menmaiyōtu uralum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for min, pin, pan, and kan**

The combination of **min, pin, pan and kan** follow those of Verbal nouns (of these), **kan** may add also a, and (if followed by a hard consonant), either that or its kindred nasal will be inserted.

## ஒப்புமைப் பகுதி

மின்னும் பின்னும் பன்னுங் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெய ரியல

(தொல்.: 346)

வேற்றுமை யாயின் ஏனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி

(தொல்.: 347)

மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
வேற்றுமை யாயிற் கன்னவ் வேற்று
வல்லெழுத்துப் பெறுதல் வரைநிலை யின்றே
பொருளொடு புணருங் காலை யான

( இ.வி.: 127)

மின்பின் உவ்வுறில் வன்மையும் மிகுமே

(தொ.வி.: 25:4)

மின்பின் பன்கன் றொழிற் பெயரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்

(மு.வீ.: 333)

## மயிலை நாதர்

எ—ன், மின் முதலியவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்.:– இந்நான்கு சொல்லும் தொழிற்பெயரே போல இருவழியும் உகரம் பெற்று வல்லெழுத்து மிகவும் பெறும்; இயல்புகணம் வரின் இயல்புமாம். இவற்றுள் கன்னென்பது அகரச் சாரியை பெற்று வல்லெழுத்து மெல்லெழுத்து மிக்கு முடியும், எ—று.

வ—று.:–

(மின்,பின், பன், கன்) + (கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது) எனவும்,

( கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை) எனவும், இருவழியும் உகரத்தோடு வன்மை [1]மிக்கன; ஏனைய இயல்பாயின.

கன்னக்கடிது, கன்னங்கடிது; கன்னக்கடுமை, கன்னங்கடுமை எனக் கன் அகரம் பெற்று வன்மை மென்மை உறழ்ந்து வந்தது.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்கும் ***ணன வல்லினம் வரட்டறவும்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், ஈண்டு அகரச் சாரியை முன்வரும் வல்லினத்திற்கு ***'இயல்பினும் விதியினும்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியதன் மேற் சிறப்பு விதியும், உணர்–ற்று.

இ—ள்.:– இந்நான்கு சொல்லும் தொழிற்பெயர் போல யவ்வன் மெய்வரின், உகரச் சாரியையைப் பொருந்தும்; இவற்றுள் கன் என்னும் சொல்

பாடவேறுபாடு .:–

1.மிக்கும்இயல்புகணத்தோடு இயல்புமாயின.

உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று, வல்லினம் வந்தால் வருமெழுத்தாதல் அதற்கு இனமாதல் மிகப் பெறும், எ—று.

அவ்வும் என்னும் உம்மையும், பெறும் என்னும் முற்றும் விகாரத்தால் தொக்கன.

உ—ம்.:—

மின்னுக் கடிது, பின்னுக் கடிது, பன்னுக் கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது எனவும்; கடுமை, நன்மை, வன்மை எனவும்; கன்னத்தட்டு, கன்னந்தட்டு எனவும்; கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு எனவும் அல்வழி வேற்றுமைக்கண் முறையே வந்தன. பிறவும் அன்ன.

கன் என்பது சிறு தராசுத் தட்டு. முன் என்னும் சொல்லை முன்னம் என்றாற்போல இதனைக் கன்னம் என்றும் கூறுப.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், மின், பின், பன், கன் என்னும் இந் நான்கு சொல்லும் புணருமாறு கூறியது.

இ—ள்.:— மின் பின் பன் கன் — மின் பின் பன் கன் என்னும் இந் நான்கு சொல்லின் ஈற்றினின்ற னகர வொற்று, தொழிற் பெயரனைய — தொழிற்பெயரே போல உகரம் பெற்று வல்லெழுத்துப் பெறும்; இயல்பு கணம் வரின் இயல்புமாம்; கன் அவ்வேற்று — கன் என்னும் சொல்லின் ஈற்றி னின்ற னகர வொற்று அகரச் சாரியை ஏற்று, மென்மையோ டுறழும் — வல்லெழுத்து மெல்லெழுத்து மிக்கு முடியும், எ—று.

உ—ம்.:—

மின்னு, பின்னு, பன்னு, கன்னுக்கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது எனவும் கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை எனவும் இருவழியும் உகரத்தோடு வன்மை மிக்கன; ஏனைய இயல்பாயின. கன்னங்கடிது, கன்னக்கடிது; கன்னங்கடுமை, கன்னக்கடுமை எனக் கண் அகரம் பெற்று வன்மை மென்மை உறழ்ந்து வந்தது.

## விசாகப் பெருமாளையர்

இது, மின் பின் பன் கன் என்கிற நான்கு சொற்களுக்கும் ண ன வல்லினம் வரட்டறவு மென்பதால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும் அகரச் சாரியை முன் வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:– மின் பின் பன் கன்** – மின் முதலிய நான்கு சொற்களும், **தொழிற் பெயரனைய** – தொழிற்பெயர் போல யகர மல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பொருந்தும், **கன்**–இவற்றுட் கன்னென்னுஞ் சொல், **அவ்வேற்று**– அகரச் சாரியையும் பெற்று, **மென்மையோ டுறழும்**–வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும், எ–று.

உ–ம்.:–

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது எனவும்; கடுமை, நன்மை, வன்மை; எனவும் கன்னத்தட்டு கன்னந்தட்டு எனவும்; கன்னத்தூக்கு, கன்னந்துக்கு எனவும்; அல்வழி வேற்றுமைகளில் முறையே வந்தன. மற்றவைகளு மிப்படியே (கன்–சிறுதராசுத் தட்டு)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மின்பின் பன் கன் என்னும் நான்கு சொற்களும் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய
கன்னன் வேற்று மென்மையோ டுறழும்.
(மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய
உன் அ ஏற்று மென்மையோடு உறழும்.)

**இ–ள்.:– மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய** – மின் முதலிய நான்கு சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பொருந்தும், கன் அ மூக்கு மென்மையோடு உறழும் இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும், எ–று.

மின் பின் பன் கன் என்னு நான்கும் இருவழிப் புணர்ச்சிக்கண்ணும் பெறுஞ் சாரியை யாது?

மின்பின் பன்கன் றொழிற்பெய ரனைய

தொழிற்புணர்ச்சி முன்னே எச் சூத்திரத்திரற் கூறப்பட்டது?

"ஞண நமல வளன வொற்றிறு தொழிற்பெயர் ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின் உவ்வுறும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்டது.

உ–ம்.:–

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக் கடிது, நன்று, வலிது. எனவும், கடுமை, நன்மை, வன்மை, எனவும். வரும்.

கன் என்னும் பெயர் வேறுவிதியும் பெறுமோ?

''கன் அவ்வேற்று மென்மையோ டுறழும்''

உ–ம்.:–

கன்னத்தட்டு, கன்னந்தட்டு எனவும், கன்னத்தாக்கு, கன்னந்தூக்கு எனவும் வரும்.

தொழிற்பெயரனைய என்றதும் அவ்வேற்கும் என்றதும் ''ணன வல்லினம் வரட்டறவும்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்;

மென்மையோடுறழும் என்றது ''இயல்பினும் விதியினும்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி, (கன் – கன்னார்தொழில். பன் – ஓர் நாணல்.)

## முகவை இராமானுச கவிராயர்

இது, இந்த நான்கு சொல்லுக்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும் அகரச் சாரியை முன்வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினு மென்ற சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் உணர்த்துகின்றது.

**இ–ள்.:– மின் பின் பன் கன்** – இந் நான்கு னகர வீற்றுச் சொற்களும், **தொழிற்பெய ரனைய** – தொழிற்பெயர் போல யகர மல்லாத மெய் வரின் உகரச் சாரியையைப் பொருந்தும், **கன்னவ் வேற்று** – இவற்றுள் கன் என்னுஞ் சொல் உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் பெற்று, **மென்மையோ டுறழும்** – (வல்லினம் வந்து புணரின்) வல்லெழுத்தாயினும் அதற்கு இனவெழுத்தாயினு மிக்கு விகற்பித்து வரும், எ–று.

அவ்வும் என்கின்ற உம்மை குறைந்து நின்றது.

உ–ம்.:–

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்மை, வலிது எனவும்,

மின்னுக்கடுமை, நன்று, வன்மை எனவும்; கன்னத்தட்டு, கன்னைந்தட்டு எனவும்;

கன்னத் தூக்கு–கன்னந்தூக்கு எனவும் அல்வழி வேற்றுமை யிடத்து வந்தன. பிறவுமிப்படியே காண்க.

கன் என்பது சிறுதராசுத் தட்டு, முன் என்பதை, முன்னம் என்றாற் போல இதைக் கன்னம் என்றுங் கூறுவர்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– **மின்பின் பன்கன்** – மின் முதலிய நான்கு சொற்களும், **தொழிற்பெயர் அனைய** – முதனிலைத் தெழிற்பெயர்கள் போலே யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பொருந்தும்; **கன்** – (இவற்றுள்) 'கன்' என்னுஞ்சொல், **அ ஏற்று** – (வல்லினம் வந்தால் உகரச் சாரியையே யல்லாமல்) அகரச்சாரியையும் பெற்று, **மென்மையோடு உறழும்** – மெல்லினத்தோடு விகற்பிக்கும் (வருகிற வல்லெழுத்தாவது அதற்கினமான மெல்லெழுத்தாவது மிகப்பெறும்) – கன் – தராசுத்தட்டு. பன் – ஓர்புல்.

உதாரணம் :

| | அல்வழி | வேற்றுமை. |
|---|---|---|
| மின் + கடிது | = மின்னுக்கடிது | மின்னுக்கடுமை |
| மின் + நன்று | = மின்னுநன்று | மின்னுநன்மை |
| மின் + வலிது | = மின்னுவலிது | மின்னுவலிமை |

(என இருவழியிலும் தொழிற்பெயர்போல உகரம் பெற்றன.)

கன் + தட்டு = கன்னத்தட்டு, கன்னந்தட்டு.

(என அல்வழில் அகரம்பெற்று உறழ்ந்தது.)

கன் + தூக்கு = கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு
(என வேற்றுமையில் அகரம்பெற்று உறழ்ந்தது.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– மின் பின்** பன் **கன் தொழிற் பெயர் அனைய** – மின் முதலிய நான்கு சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகர மல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பொருந்தும் , **கன் அ ஏற்று மென்மையோடு உறழும்** – இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப் பெறும், எ–று.

உ–ம்.:–

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, நன்று, வலிது எனவும்; கடுமை, நன்மை,வன்மை எனவும் கன்னத்தட்டு கன்னந்தட்டு எனவும்; கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு எனவும்; அல்வழி வேற்றுமையில் முறையே வந்தன. (பன்–இறை. கன்–சிறு தராசுத் தட்டு)

'தொழிற்பெயரனைய' என்றதும் 'அவ்வேற்கும்' என்றதும்

"ணன வல்லினம் வரட்டறவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல். 'மென்மையோடு றழும்' என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள்.:— மின் பின் பன் கன் தொழிற்பெயர் அனைய** — மீன் முதலிய நான்கு சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை பொருந்தும், — **கன் அ ஏற்று மென்மையோடு உறழும்** — இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச்சாரியை யன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும். **எ—று.**

**உ—ம்.:—**

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது, கன்று, வலிது. எனவும் கடுமை, நன்மை, வன்மை. எனவும் கன்னத்தட்டு, கன்னந்தட்டு. எனவும் கன்னத்தூக்கு; கன்னந்தூக்கு, எனவும் அல்வழி வேற்றுமையில் முறையே வந்தன. (பன்—ஓர்புல். கண்—சிறுதராசுத்தட்டு)

தொழிற்பெயரனைய என்றதும் அவ்வேற்கும் என்றதும் 'ணனவல்லி னம்வரட்டறவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்; மென்மையோடுறழும் என்றது, 'இயல்பினும்விதியினும்' என்னுஞ்சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:** (1) **மின் பின் பன் கன்** — மின் முதலிய நான்கு சொற்களும், **தொழிற்பெயர் அனைய** — முதனிலைத் தொழிற் பெயர்போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பொருந்தும்; — (2) **கன்**—(இவற்றுள்) கன் என்னுஞ் சொல், **அ ஏற்று** — (வல்லினம் வந்தால்) உகரச் சாரியையையே யன்றி அகரச் சாரியையையும் பெற்று, **மென்மையோடு உறழும்** — மெல்லெழுத்தோடு விகற்பிக்கும் (வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகப் பெறும்). **எ—று.** (பன் — ஓர்புல், கன் — சிறு தராசு தட்டு)

(1) அல்வழி (உ—ம்) வேற்றுமை

மின், பின், பன், கன் + கடிது = மின்னுக்கடிது + கடுமை

= பின்னுக் கடுமை

மின், பின், பன், கன் + நன்று = மின்னுநன்று + நன்மை = மின்னு நன்மை

மின், பின், பன், கன் + வலிது = மின்னுவலிது + வன்மை = மின்னு வன்மை

என இருவழியிலும் தொழிற் பெயர்போல உகரம் பெற்றன.

(2) கன்+தட்டு = கன்னத்தட்டு, –அல்வழியில் அகரம் பெற்று

கன்னந்தட்டு மென்மையோடு உறழ்ந்தது.

கன்+தூக்கு = கன்னத்தூக்கு, –வேற்றுமையில் அகரம் பெற்று

கள்ளத்தூக்கு மென்மையோடு உறழ்ந்தது

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்..:– மின் பின் பன் கன் தொழிற்பெயர் அனைய –** மின் முதலிய நான்கு சொற்களும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பொருந்தும். **கன் அ ஏற்று மென்மையோடு உறழும் –** இவற்றுட் கன்னென்னுஞ் சொல் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று வல்லினம் வந்தால் வருமெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும் எ–று.

**உ–ம்.:–**

மின் + கடிது = மின்னுக்கடிது.

+நன்று = மின்னுநன்று.

+வலிது = மின்னுவலிது. – அல்வழி.

மின் + கடுமை = மின்னுக்கடிமை

+நன்மை = மின்னுநன்மை

+வன்மை = மின்னுவன்மை – வேற்றுமை.

'பின்' 'பன்' 'கன்' என்பவைகளையும் இவ்வாறே ஒட்டுக. இவை இருவழியிலும் தொழிற்பெயர்போல உகரம்பெற்றன.

கன் + தட்டு = கன்னத்தட்டு.

கன்னந்தட்டு. – அல்வழி.

+தூக்கு = கன்னத்தூக்கு

கன்னந்தூக்கு – வேற்றுமை.

இருவழியிலும் 'கன்' அவ்வேற்று உறழ்ந்தது.

(பன்–இறை. கன்–சிறு தராசுத்தட்டு.)

'தொழிற்பெயரனைய' என்றதும் 'அவ்வேற்கும்' என்றதும் "ணன வல்லினம் வரட்டறவும்" என்னும் 209 ஆவது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; 'மென்மையோடுறழும்' என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **மின் பின் பன் கன்** – மின் முதலிய நான்கு சொற்களும், **தொழிற்பெயர் அனைய** – தொழிற்பெயர் போல (யகரமல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை) பொருந்தும்;

(2) **கன்** – (இவற்றுள்) கன் என்னுஞ் சொல், **அ ஏற்று** – அகரச்சாரியை பெற்று, **மென்மையோடு உறழும்** – வரும் வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப் பெறும்.

உதாரணம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | மின் | + | கடிது | : | மின்னுக்கடிது | |
| | | + | நன்று | : | மின்னுநன்று | |
| | | + | வலிது | : | மின்னுவலிது | |
| | பின் | + | கடிது | : | பின்னுக்கடிது | |
| | | + | நன்று | : | பின்னுநன்று | |
| | | + | வலிது | : | பின்னுவலிது | அல்வழி |
| | பன் | + | கடிது | : | பன்னுக்கடிது | |
| | | + | நன்று | : | பன்னுநன்று | |
| | | + | வலிது | : | பன்னுவலிது | |
| | கன் | + | கடிது | : | கன்னுக்கடிது | |
| | | + | நன்று | : | கன்னுநன்று | |
| | | + | வலிது | : | கன்னுவலிது | |

எனவும்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மின் | + | கடுமை | - | மின்னுக்கடுமை | |
| | + | நன்மை | : | மின்னுநன்மை | |
| | + | வன்மை | : | மின்னுவன்மை | |
| பின் | + | கடுமை | : | பின்னுக்கடுமை | |
| | + | நன்மை | : | பின்னுநன்மை | |
| | + | வன்மை | : | பின்னுவன்மை | வேற்றுமை |
| பன் | + | கடுமை | : | பன்னுக்கடுமை | |
| | + | நன்மை | : | பன்னுநன்மை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | + | வன்மை | = | பன்னுவன்மை |
| கன் | + | கடுமை | = | கன்னுக்கடுமை |
| | + | நன்மை | = | கன்னுநன்மை |
| | + | வன்மை | = | கன்னுவன்மை |

எனவும் தொழிற்பெயர்போல் உகரச்சாரியை பெற்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (2) | கன் | + | தட்டு | = | கன்னத்தட்டு, கன்னந்தட்டு |
| | | + | தூக்கு | = | கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு |

என அல்வழி வேற்றுமைகளில் முறையே அகரச்சாரியை பெற்று வலி மெலி மிகுந்தன.

பன் = ஒருவகைப் புல், அரிவாளின் பல் (பன்னரிவாள்) கன் = சிறதராசுத்தட்டு.

## மோசகு பொன்னையா

மின், பின், பன், கன் என்னும் நான்கு சொற்களும் தொழிற்பெயரேபோல் உகரச் சாரியை பெறும்; கன் என்னுஞ்சொல் ஒன்றும் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையையும் பெற்று வல்லினம் வரின், வருமெழுத்தோ அதன் இனவெழுத்தோ மிகுதலையும் பொருந்தும், எ–று.

எ–டு.:–

மின்னுக்கடிது; பின்னுக்கடிது; பன்னுக்கடிது; கன்னுக்கடிது;

மின்னுக்கடுமை; பின்னுக்கடுமை; பன்னுக்கடுமை;

கன்னுக்கடுமை – இருவழியிலும் அவை உகரச்சாரியை பெற்று முடிந்தன.

கன்னத்தட்டு, கன்னந்தட்டு;

கன்னத்தூக்கு, கன்னந்தூக்கு – இருவழியிலும் கன் அகரம்பெற்று உறழ்ந்தது.

பன் – இறை, கன் – சிறு தராசுத்தட்டு.

(13)

217. தன்னென் னென்பவற் [1]றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.

பாடவேறுபாடு .:–

1.றீற்றின வன்மையொடு

தன் என் என்பவற்று ஈற்று னவ் வன்மையோடு
உறழு நின் ஈறு இயல்பு ஆம் உறவே

ṭan eṉ eṉpavaṟṟu īṟṟu ṉav vaṉmaiyōṭu
uṟaḻu niṉ īṟu iyalpu ām uṟavē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for tan, en and nin**

The final n of tan and en may remain unchanged, or they may be changed into r before hard initials; but nin is always unchanged.

## ஒப்புமைப் பகுதி

தான்யா னெனும்பெயர் உருபியல் நிலையும்

(தொல்.: 353)

வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலும்
தோற்றம் இல்லை யென்மனார் புலவர்

(தொல்.: 354)

நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும்

(தொல்.: 254)

என்தன் வலிவரின் இயல்பும் திரிபுமாம்

(தொ.வி.: 25:5)

தான்முதல் குறுகலும் யானென் னாகலும்
ஆகு மல்வழி யல்லாக் காலை

(மு.வீ.: 339)

குறுகலும் திரிதலும் அல்வழிக் கிலவே

(மு.வீ.:340)

## மயிலை நாதர்

எ—ன், தன் முதலியவற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிது விதிவகுத்தல் நுதலிற்று.

இ—ள்.: தான் யானென்பன உருபு புணர்ச்சிக்கண் தன் என் என நிற்கும்.

அவை அதன் பொருட்புணர்ச்சிக்கண் [1]அவற்[2]றிறுதி னகாரம் றகாரத்துடன் உறழ்ந்து முடியும். ஆண்டு நீயென்பது நின்னென [3]நிற்கும். அதுவும் அதன் பொருட்புணர்ச்சிக்கண் இயல்பாம், எ–று.

வ–று.:–

[4]தன்கை தற்கை, என்கை எற்கை; செவி, தலை, புறம் எனவும், நின்கை; செவி,தலை, புறம் எனவும் வரும்.

'உறவே' என்ற மிகையானே னகார வீற்றுப் பெயர்கள் வேற்றுமைக்கண் இயல்பாவனவும் வினையெச்சத்தில் திரிவனவும் உளவெனக் கொள்க.

[5]வ–று.:–

(அலவன், கலுழன், வலியான், [6]வயான், மான்) + (கண், செவி, தலை, புறம்) கான்கரை, கான்கோழியென வேற்றுமைக்கண் இயல்பாயின. வரிற்கொள்ளும்; செல்லும், தரும், போம் என [7]வினையெச்சத்தில் திரிந்தது.

பிறவும் னகார வீற்றுள் [8]முடியாதன வெல்லாம் இதனான் முடித்துக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், தன் என்றும் என் என்றும் வரும் விகாரமொழிகட்கு *'ம் ணன வல்லினம் வரட்டறவும்'* என எய்தியது ஒருவாற்றான் விலக்கலும், நின் என்று வரும் விகாரமொழிக்கு எய்தியது விலக்கலும் நுதலிற்று.

---

பாடவேறுபாடு .:–

1. அவ்வீற்றுனகரம்
2. றிறுதி றகாரத்துடன் உறழ்ந்துமுடியும்
3. நிற்கும் அதன்பொருட்
4. தன்பகை
5. அவை
6. வயான், மயான், மான்
7. வினையெச்சந் திரிந்தது
8. முடிந்தன முடியாதன வெல்லாம்.

இ—ள்.:— தான் என்பது தன் என்றும் யான் என்பது என் என்றும் வரும் விகாரமொழிகளின் ஈற்று னகரம், வல்லினம் வரின் பொதுவிதியானே றகரமாய்த் திரிதலும், அவ்விதி ஏலாது இயல்பாதலுமாம்; நீ என்பது நின் என நின்ற விகாரமொழி யீற்று னகரம், வல்லினம் வரின் திரியாது இயல்பேயாம், எ—று.

வன்மை என்றது னகரத்திற்கு இனமாய றகரத்தை.

உ—ம்.:—

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும்; நின்பகை எனவும் வரும்.

'உறவே' என்ற மிகையானே மின் பின், முதலியன மின்கடிது, மின்கடுமை என இருவழியும் சாரியைப்பேறும் திரிபும் இன்றி வருதலும், மான்குளம்பு அழன்கை என வேற்றுமைக்கண் விதவாதன இயல்பாதலும், வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்ப்பட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தான் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர ஈற்றுள் அமையாதன உளவேல் அவையும் கொள்க.

நின் என்பது, விகாரமொழி யாதலின் 'பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய் வலிவரின் இயல்பாம்' என்பதனுள் அடங்காதாயிற்று.

## கூழங்கைத் தம்பிரான்

என்னும் சொற்கள் புணருமாறு கூறியது.

இ—ள்.: **தன்னென் என்பவற் றீற்றின்** — தன் என் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றி னின்ற னகர வொற்று தத்தம் பொருட் புணர்ச்சிக்கண், **வன்மையோ டுறழும்** — வல்லினம் வந்தால் றகரத்துடன் உறழ்ந்து முடியும், **நின்னீறு** — நின் என்னும் சொல்லின் ஈற்றி னின்ற னகர வொற்றுத் தன் பொருட் புணர்ச்சிக்கண், **இயல்பாமுறவே** — வல்லினம் வந்தால் திரியாமல் இயல்பாய் முடியும், எ—று.

உ—ம்.:—

தன் பகை — தற் பகை, என் பகை — எற் பகை, நின் பகை, செவி, தலை, புறம் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது தன் என் என்கிற விகாரமொழிகளுக்கு ணனவல்லினம் வரட்டறவும் என எய்திய தொருவாற்றால் விலக்கலும் நின் என்பதற்கு எய்தியது விலக்கலுஞ் சொல்லுகின்றது.

**இ–ள்.:– தன்னென் னென்பவற்று** – தன் என் என்பவை களினுடைய, **ஈற்று** – இறுதியிலுள்ள, **ன–** னகர மெய்யானது, **வன்மையோடுறழும்** – வல்லினம் வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி யேலா தியல்பாதலுமாம், **நின்** – நின்னென்பதனது, **ஈறு–** இறுதியிலுள்ள னகர மெய்யானது, **இயல்பாம்** – வல்லினம் வரிற் றிரியாதியல்பே யாகும், எ–று.

**உ–ம்.:–**

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும், நின்பகை எனவும் வரும். (உறவேயென்ற மிகையால் மின் பின் முதலியவை மின்கடிது, மின்கடுமை எனவிருவழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமில்லாமல் வருதலும், மான் குளம்பு, அழன்கை, யென வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லா தவைகள் இயல்பாதலும், வரிற்கெள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை யிருந்தால் அவையுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தன் என் நின் என்பன புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே.
(தன் என் என்பவற்று ஈற்று ன வன்மையோடு
உறழும் நின் ஈறு இயல்பு ஆம் உறவே.)

**இ–ள்.:– தன் என் என்பவற்று ஈற்று ன** – தன் என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகரமெய், **வன்மையோடு உறழும்** – வல்லினம் வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி யேலாது இயல்பாதலும்; **நின் ஈறு இயல்பு ஆம்** – நின்னென்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகரமெய் வல்லினம் வரிற் றிரியாது இயல்பேயாகும், எ–று.

**உ–ம்.:–**

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும், நின்பகை, எனவும் வரும்.

இவற்றுள் இயல்பாதலும் றகரமாகத் திரிதலும் பெறுவன எவை?

"தன் என் என்பவற் றீற்றுனவ் வன்மையோ டுறழும்"

இயல்பாகவே புணருஞ் சொல் யாது?

"நின்னீ றியல்பா முறவே"

உறவேயென்ற மிகையாற் கொள்ளக்கிடப்பன யாவை?

உறவே என்ற மிகையால், மின் பின் முதலியவை, மின் கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியைபெறுதலுந்திரிதலுமின்றி வருதலும், மான்குழம்பு, அழன்கை, கான்கோழி, வான்சிறப்பு, அலவன்கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங் கொள்க. (அழன் – பிணம்.)

னவ் வன்மையோடுறழும் என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்தியதொருவாற்றான் விலக்கல்; "நின்னீறியல்பாம் என்றது எய்திபது விலக்கல்."

## முகவை இராமானுச கவிராயர்

இது, தன் என் என்னும் விகார மொழிகட்கு எய்தியது விலக்கலுடன் விலக்காமையும், நின் என்னும் விகார மொழிக்கு எய்தியது விலக்கலு முணர்த்திற்று.

**இ–ள்.:– தன்னென் னென்பவற்றீற்று ன** – தான் என்பதும் யான் என்பதும் திரிந்த தன் என் என்னும் இவ்விரண்டு சொற்களின் ஈற்று னகரமானது, **வன்மையோ டுறழும்** – வல்லினம் வந்து புணரின் ஒருகால் இயல்பாகியும் ஒருகால் விகாரமாகியும் விகற்பித்து முடியும், **நின்னீறியல்பாம்** – (நீ யென்பது விகாரப்பட்ட) நின் என்னுஞ் சொல் இறுதி னகரம் வல்லினம் வந்து புணரின் திரியாது இயல்பேயாம், எ–று.

**உ–ம்.:–**

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை எனவும், நின்பகை எனவும் வரும். 'உறவே' யென்ற மிகையாலே மின் பின் முதலியன மின் கடிது, மின் கடுமை, என இரு வழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலு மின்றி வருதலும், மான் குளம்பு அழன்கை என வேற்றுமைச் சந்தியில் எடுத்துச் சொல்லாதன இயல்பாதலும், வரிற் கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும் இன்னும் னகர வீற்றுள் அமையாதன வுளவெனின் அவையுங் கொள்க. நின் என்பது விகாரமொழி யாதலால், 'பொதுப்பெய ருயர்திணைப் பெயர்களீற்று மெய் வலிவரி னியல்பா' மென்னுஞ் சூத்திரத்துள் அடங்காதாயிற்று.

இது தன் என் என்கிற யகரமொழிகளுக்கு ணனவல்லினம் வரட்டறவும் என எய்திதொருவாற்றால் விலக்கலும் நின் என்பதற்கு எய்தியது விலக்கலுஞ் சொல்லுகின்றது.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– தன் என் என்பவற்று** – ('தான்' 'யான்' என்பவற்றின் விகாரமாகிய 'தன்' 'என்' என்னும் மொழிகளினுடைய, **ஈறுன** – இறுதியிலுள்ள னகர மெய்யானது, **வன்மையோடு உறழும்** – வல்லினம் வந்தால் றகரமாகத் திரிந்தும் இயல்பாகியும் விகற்பிக்கும்; **நின் ஈறு** – ('நீ' என்பதன் விகாரமாகிய) 'நின்' என்னும் மொழியினது இறுதியிலுள்ள னகரமெய்யானது, **இயல்பு ஆம்** – (வல்லினம் வந்தால் திரியாமல்) இயல்பேயாகும்.

உதாரணம் :

தன் + பகை = தன்பகை, தற்பகை
என் + பகை = என்பகை, ஏற்பகை னகரம் உறழ்ந்தது.
நின் + பகை = நின்பகை.

குறிப்பு :–

'உறவே' என்றமிகையால் (மின்பின் முதலியவை 'மின் கடிது', 'மின்கடுமை' என இருவழியிலுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமின்றி வருதலும்; 'மான்குளம்பு' 'வான்சிறப்பு' என வேற்றுமையில் சிறப்பு விதி சொல்லப்பெறாதவை இயல்பாதலும்; வரின் + கொள்ளும் = 'வரிற்கொள்ளும்' என அல்வழியில் 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாமல் திரிதலும்; இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங்கொள்க. (இவ்விதி வேற்றுமைப் புணர்ச்சிக்கே என்றறிக.) 'நின்' என்பது விகாரமொழியாதலால் 'பொதுப்பெயர்' என்ற சூத்திரத்து அடங்காதாயிற்று.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: தன் என் என்பனவற்று ஈற்று ன** – தன் என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகர மெய், **வன்மையோடு உறழும்** – வல்லினம் வரிற் பொது விதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி யேலாது இயல்பாதலுமாம், **நின் ஈறு இயல்பு ஆம்**–நின்னென்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகர மெய் வல்லினம் வரிற் றிரியாது இயல்பேயாகும், **எ–று.**

உ–ம்.:–

தன்பகை – தற்பகை, என்பகை – எற்பகை எனவும், நின்பகை எனவும் வரும்.

'உறவே' என்ற மிகையால், மின் பின் முதலியவை, மின்கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமின்றி வருதலும், மான் குளம்பு, அழன்கை, கான் கோழி, வான்சிறப்பு, அலவன் கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், 'வரிற் கொள்ளும்' எனச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங் கொள்க. (அழன்–பிணம்.)

னவ் வன்மையோடுறழும் என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" என எய்திய தொருவாற்றான் விலக்கல்; 'நின்னீறியல்பாம்' என்றது எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். தன் என் என்பவற்று ஈற்று ன – தன் என் என்னும் விகாரமொழிகளுடைய இறுதியிலுள்ள னகரமெய், – **வன்மையோடு உறழும்** – வல்லினம்வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதியேலாது இயல்பாதலுமாம், – **நின் ஈறு இயல்பு ஆம்** – நின்னென்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகரமெய் வல்லினம்வரிற் றிரியாது இயல்பேயாகும்.

உ–ம்.:–

தன்பகை, தற்பகை, என்பகை, எற்பகை, எனவும் நின்பகை, எனவும் வரும்.

உறவே என்றமிகையால், மின்பின்முதலியவை, மின்கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமின்றி வருதலும், மான்குளம்பு, அழன்கை, கான்கோழி, வான்சிறப்பு, அலவன்கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச்சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகரமெய்யீற்றுள் அடங்காதவை. இருந்தால் அவையுங்கொள்க. (அழன்–பிணம்).

னவ்வன்மையோடுறழும் என்றது 'ணனவல்லினவரட்டறவும்'

என எய்திய தொருவாற்றான்விலக்கல், நின்னீறியல்பாம் என்றது எய்தியது விலக்கல்.

## வை.மு.சடகோபராமானுசாசாரியார் சே . கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– (1) **தன் என் என்பவற்று** – (தான் யான் என்பவற்றின் விகாரமாகிய) தன் என் என்னும் மொழிகளினுடைய, **ஈறு ன** – இறுதியிலுள்ள னகர மெய்யானது, **வன்மையோடு உறழும்** – (வல்லினம் வந்தால் தனக்கு) இனவல்லெழுத்தாகிய றகரமாகத் திரிந்தும் திரியாது இயல்பாகியும் விகற்பிக்கும்; (2) **நின் ஈறு** – (நீ என்பதன் விகாரமாகிய) நின் என்னும் மொழியினது இறுதியிலுள்ள னகர மெய்யானது, **இயல்பு ஆம்** – (வல்லினம் வந்தால் திரியாமல்) இயல்பே யாகும், எ–று. இவ்விதி வேற்றுமைப் புணர்ச்சிக்கே யென அறிக.

உ–ம்.:–

(1) தன் +பகை = தன்பகை, தற்பகை – னகரம் உறழ்ந்தது.

என் + பகை = என்பகை, எற்பகை – னகரம் உறழ்ந்தது.

(2) நின் + பகை = நின்பகை – னகரம் இயல்பாயிற்று.

'உறவே' என்றமிகையால், உன்+பகை = உன்பகை என நீ என்பதன் திரிபாகிய உன் என்பதன் னகரம் வலிவர இயல்பாதலும், மான்குளம்பு வான்சிறப்பு என வேற்றுமையிற் சிறப்புவிதி சொல்லப்பெறாதவை இயல்பாதலும்; வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும் என அல்வழியில் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொது சூத்திரத்தால் இயல்பாகாமல் திரிதலும்; (மின் பின் முதலியவை மின்கடிது, மின்கடுமை என இருவழியிலும் சாரியை பெறுதலும் திரிதலு மின்றி வருதலும்); இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **தன் என் என்பவற்று ஈற்று ன** – தன் என் என்னும் விகார மொழிகளுடைய இறுதியிலுள்ள னகரமெய், **வன்மையோடு உறழும்** – வல்லினம் வரிற் பொதுவிதியால் றகரமாகத் திரிதலும் அவ்விதி யேலாது இயல்பாதலுமாம். **நின் ஈறு இயல்பு ஆம்** – நின்னென்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகரமெய் வல்லினம் வரின் திரியாது இயல்பேயாகும். எ–று.

('தன்' 'என்' என்பன 'தான்' 'யான்' என்பவற்றின் விகாரம். 'நின்' என்பது 'நீ' என்பதன் விகாரம்.)

உ–ம்.:–

தன் + பகை = தன்பகை, தற்பகை.

என் + பகை = என்பகை, எற்பகை.

நின் + பகை = நின்பகை.

'உறவே' என்ற மிகையால், மின் பின் முதலியவை, மின்கடிது, மின்கடுமை என இருவழியுஞ் சாரியை பெறுதலுங் திரிதலுமின்றி வருதலும், மான் குளம்பு, அழன்கை, கான்கோழி, வான்சிறப்பு, அலவன் கால், கலுழன் சிறை என வேற்றுமையிலே சிறப்பு விதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும், வரிற் கொள்ளும என்ச் செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை இருந்தால் அவையுங் கொள்க. (அழன் – பிணம்)

'னவ் வன்மையோடுறழும்' என்றது "ண ன வல்லினம் வரட்டறவும்" (சூ–209) என எய்திய தொருவாற்றான் விலக்கல். 'நின்னீறியல்பாம்' என்றது எய்தியது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள். தன் என் என்பவற்று ஈறு ன–தன் என் என்கிற விகாரமொழிகளினுடைய இறுதியிலுள்ள னகரமெய்யானது, வன்மையோடு உறழும் – வல்லினம் வரிற் (பொதுவிதியால்) றகரமாகத் திரிதலும் (அவ்விதி ஏலாது) இயல்பாதலுமாம்; நின் ஈறு – நின் என்னும் விகாரமொழியினது இறுதியிலுள்ள னகர மெய்யானது, இயல்பு ஆம் – (வல்லினம் வரிற் றிரியாது) இயல்பே யாகும். எ–று.

பொ–ரை.:–

தன் என் என்கிற விகார மொழிகளினுடைய இறுதியிலுள்ள னகர மெய்யானது (வல்லினம் வந்தால் பொது விதியால்) றகரமாகத் திரிதலும், (அவ்விதி ஏலாது) இயல்பாதலுமாம்; நின் என்னும் விகார மொழியினது இறுதியிலுள்ள னகர மெய்யானது (வல்லினம் வந்தால் திரியாது) இயல்பே யாகும். எ–று.

உ–ம்.:–

தன் + பகை = தன்பகை. – னகரம் உறழ்ந்தது.

= தற்பகை.

என் + பகை = என்பகை.
= எற்பகை.

நின் + பகை = நின்பகை. – னகரம் இயல்பாயிற்று.

'உறவே' என்ற மிகையால் மின், பின் முதலியவை, மின் + கடிது = மின்கடிது, மின் + கடுமை = மின்கடுமை என இரு வழியுஞ் சாரியை பெறுதலுந் திரிதலுமில்லாமல் வருதலும், மான் + குளம்பு – மான்குளம்பு, அழன் + கை = அழன்கை என வேற்றுமையிலே சிறப்புவிதி சொல்லாதவைகள் இயல்பாதலும், வரின் + கொள்ளும் = வரிற்கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும், இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை யிருந்தால் அவனயும் கொள்க. (அழன் – பிணம்.)

## கா.நமச்சிவாய முதலியார்

(1) தன் என் என்பவற்று – தன் என் என்பவைகளினுடைய, ஈறு – இறுதியிலுள்ள, ன–னகரமெய்யானது, வன்மையோடு உறழும் – வல்லினம்வரின் றகரமாகத் திரிதலும் இயல்பாதலுமாம்;

(2) நின் – நின் என்பதின், ஈறு – இறுதியிலுள்ள னகர மெய்யானது, இயல்பாம் – (வல்லினம்வரின் திரியாது) இயல்பாகும்.

உதாரணம்

(1) தன்+ பகை= தன்பகை, தற்பகை
என் + பகை= என்பகை, எற்பகை
– னகரம் உறழ்ந்தது.

(2) நின் + பகை
நின்பகை – னரகம் இயல்பாயிற்று.

'உறவே' என்ற மிகையால், மின் பின் முதலியவை மின் கடிது, மின் கடுமை என இருவழியும் சாரியை பெறுதலும் திரிதலுமின்றி வருதலும்;

மான்குளம்பு, அழன்கை என வேற்றுமையில் சிறப்புவிதி சொல்லப் பெறாதவைகள் இயல்பாதலும்;

வரிற் கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பொதுச் சூத்திரத்தால் இயல்பாகாது திரிதலும்;

இன்னும் னகர மெய்யீற்றுள் அடங்காதவை யிருந்தால், அவையுங் கொள்க.

அழன் – பிணம்.

தன், என், என்னும் திரிபு மொழிகளின் ஈற்று னகரம் வலிவரின், பொதுவிதியால் றகரமாய்த் திரிதலும், அவ்விதியை ஏற்காது இயல்பாதலும் ஆம்; நின் என்னும் திரிபு மொழியின் ஈற்று னகரம் வலிவரின், திரியாது இயல்பேயாம், எ—று.

தன், என், நின் என்பன முறையே தான், யான், நீ என்பவற்றின் திரிபுமொழிகள்.

எ—டு.:-

தற்பகை; தன்பகை.
எற்பகை; என்பகை. னகரம் உறழ்ந்தது.
நின்பகை — னகரம் இயல்பாயிற்று.

உறவே என்ற மிகையால், உன்பகை என னகரம் வலிவரின் இயல்பாதலும், மான் குளம்பு, அலவன்கால், கலுழன்கால், வான்சிறப்பு, அழன்கை, கான்கோழி என வேற்றுமைகளில் சிறப்பு விதி பெறாதன இயல்பாதலும்; வரிற்கொள்ளும் எனச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அல்வழிக்கண் திரிதலும், மின்கடிது, மின்கடுமை என இருவழியும் சாரியைப் பேறுந் திரிபு மின்றி இயல்பாதலும் பிறவும் கொள்க. அழன் — பிணம்.

(14)

218. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் [1]கினமாத் திரிபவு மாகும்.

ம ஈற்று ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனம் ஆ திரிபவும் ஆகும்.

ma īṟṟu oṟṟu aḻintu uyir īṟu oppavum
vaṉmaikku iṉam ā ṭiripavum ākum.

---

பாடவேறுபாடு .:-

1.கினமாய்த் திரிபவும்

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH m AS FINAL

### General rule

Words ending in m (always) drop it and follow the rules for the combination of vowel-finals; some, however, change the m into the kindred (nasal) of the meeting hard initial.

## ஒப்புமைப் பகுதி

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாய்த் திரிபவு மாம்பிற

(இ.வி.:129)

## மயிலை நாதர்

எ–ன், மகர வீறு புணருமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– மகர வீற்றுப் பதம் மொழிமுதலனைத்தும் வர இறுதி யொற்று அழிந்து உயிரீறு போல உயிர் வந்தால் உடம்படுமெய் பெற்றும், வன்மை வந்தால் அவை மிக்கும், மென்மை இடைமை [1]வந்தால் அவை இயல்பாயு முடிவனவும், வன்மை வந்தால் ஈறு கெடாது, அவற்றிற்கு இனமான மென்மைகளாகத் திரிவனவும் உள, இருவழியும், எ–று.

பொதுப்பட வைத்தமையான் நாற்கணமுங் கொள்க.

வ–று.:–

வட்டவடி; ஆடி, இலை எனவும், வட்டக்கல்; சுனை, தாழி, பாறை எனவும், வட்டஞான்றது; நீண்டது, மாண்டது எனவும், வட்டவாரி எனவும் இவை ஈறழிந்து விதியுயிரீறாய் உயிர் வரும்வழி உடம்படுமெய் பெற்றும் வன்மை வரும் வழி மிக்கும் ஏனைய வரும்வழி இயல்பாயும் அல்வழிக்கண் வந்தவாறு. மரங்குறிது; சிறிது, தீது எனவும், கொல்லுங்கொற்றன், உண்ணுஞ் சாத்தன், துள்ளுந்[2]துடியன் எனவும் அல்வழிக்

---

பாடவேறுபாடு .:–

1. வந்தால் இயல்பாயும்

2. தொடியன்

கண் வன்மை வர இனமாய்த் திரிந்தது. மரவடி, மரவாட்டம், மரவிலை எனவும், மரக்கோடு; [1]செதிள், தோல், பூ எனவும், மரஞாண், மரநூல் எனவும், மரயாழ், மரவட்டு எனவும் இவை [2]மகரங்கெட்டு விதி அகரவீறாய் வேற்றுமைக்கண் உடம்படுமெய் பெற்றும் [3]மிக்கும் இயல்புமாயின. தங்கை, எங்கை, உங்கை; செவி, தலை எனவும், மரவங்கோடு, இலவங்கோடு, புளியங்கோடு, கோங்கங்கோடு; செதிள், தோல், எனவும் வேற்றுமைக்கண் வல்லினம் வர இனமாய்த் திரிந்தது.

'திரிபவும்' என்ற உம்மையாற் பகரம் வரும் வழித் திரியாதெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், மகர ஈறு புணருமாறு உணர் – ற்று.

இ–ள்.: மகர ஈற்றுச் சொற்கள், இறுதி மகரங்கெட விதியுயிரீறாய் நின்று, இயல்பு உயிரீறுபோல உயிர்வரின் உடம்படுமெய் தோன்றவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகவும் புணர்வனவும், வல்லினம் வரின் கெடாது அவற்றிற்கு இனமாய்த் திரிவனவுமாம், எ–று.

உ–ம்.:–

வட்டவாழி, கடல், நேமி, வாரி எனவும்; மரவடி, மரக்கால், நார், வேர் எனவும்; நாங்கடியம் அடுங்களிறு எனவும்; நங்கை எனவும் முறையே இருவழியும் வந்தன. பிறவும் அன்ன.

வன்மைக்கு இனமாத் திரியும் என்றமையின், அருத்தாபத்தியால் நாம் பெரியம் எனப் பகரம் வரும்வழித் திரியாது என்பது பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மகர வீறு புணருமாறு கூறியது.

இ–ள்.: மவ்வீறு – நிலைமொழி ஈறாக நின்ற மகரவொற்று, ஒற்றழிந்து – மொழி முதல் அனைத்தும் வர இறுதி யொற்று அழிந்து, உயிரீ றொப்பவும் –

---

பாடவேறுபாடு .:–

1.செதுள்
2.மகரங்கெடுத்து
3.வன்மை வர மிக்கு ஏனைய வர இயல்பாயின.

உயிரீறாய் நாற்கணமும் வந்தால் உயிரீற்றுப் பதப்புணர்ச்சி போலாம்; வன்மைக் கினமாய்த் திரிபவுமாகும்– வன்மை வந்தால் ஈறு கெடாது அவற்றிற்கு இனமாகிய மென்மைகளாய்த் திரிவனவும் உள, எ–று.

உ–ம்.:–

வட்டவடி, ஆடி, இலை எனவும் வட்டக்கல், சுனை, தாழி, பாறை எனவும் வட்டஞான்றது, நீண்டது, மாண்டது, வாரி எனவும் விதி யுயிரீறாய் உடம்படுமெய்யும் மிகுதியும் இயல்புமாய் அல்வழிக்கண் வந்தது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் வல்லினம் வர இனமாய்த் திரிந்தது. மரவடி, ஆட்டம், இலை எனவும் மரக்கோடு, செதிள், தோல், பூ எனவும் மரஞாண், நூல், வடு எனவும் இறுதி கெட்டு விதி யுயிரீறாய் உடம்படுமெய்யும் மிகுதியும் இயல்புமாய் வேற்றுமைக்கண் வந்தது. மரவங்கோடு, செதிள், தோல், பூ வேற்றுமைக்கண் வல்லினம் வர இனமாய்த் திரிந்தது.

## விசாகப் பெருமாளையர்

இது, மகர மெய்யீறு புணருமாறு உணர்த்துகின்றது.

இ–ள்: மவ்வீறு – மகர வீற்றுச்சொற்கள், ஒற்று–இறுதியிலுள்ள மகர மெய், அழிந்து – கெட, உயிரீறொப்பவும் – விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறு போலப் புணர்வனவும், வன்மைக் கினமாத் திரிபவும் – வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும், ஆகும்– ஆகும், எ–று.

உயிரீறொத்தல் உயிர்வரின் உடம்படு மெய் பெறவும் வல்லினம் வரின் மிகவும் மெல்லினமும் இடையினமும் வரினியல்பாகவும் புணர்தல்.

உ–ம்.:–

வட்டம் + ஆழி – வட்டவாழி, வட்டக்கடல், வட்டநேமி, வட்டவாரி எனவும், மரம்+ அடி– மரவடி, மரக்கால், மரநார், மரவேர், எனவும், நாம்+ கடியம் – நாங்கடியம், நம்+கை – நங்கை எனவும் வரும், மற்றவைகளு மிப்படியே (இனமாத் திரியு மென்றமையின் அருந்தா பத்தியால் நாம்பெரியம் எனப் பகரம்–வருவழித் திரியாதெனக் கொள்க)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

41. மகரவீறு நாற்கணத்தோடும் இருவழியும் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்.
(மவ்வீறு ஒற்று அழிந்து உயிர்ஈறு ஒப்பவும்
வன்மைக்கு இனம் ஆத்திரிபவும் ஆகும்.)

**இ–ள்.:– மவ்வீறு** – மகரவீற்றுச் சொற்கள், **ஒற்று அழிந்து உயிர்ஈறு ஒப்பவும்** – நாற்கணமும் வர, இறுதியிலுள்ள மகரமெய் கெடவிதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், **வன்மைக்கு இனம் ஆத் திரிபவும் ஆகும்** – வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும், எ–று.

உயிரீறொத்தலாவது, உயிர்வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகைகளிலுமாம் எனவுங்கொள்க.

மகரமெய் வல்லினம் வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டு மொழித் தொழிந்த அல்வழிப்புணர்ச்சியிலாம் எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமும், தனிக்குறிலைச்சார்ந்த மகரமும், வேற்றுமையிலும், வல்லினம் வரிற்கெடாது இனவெழுத்தாகத் திரியும் எனவுங் கொள்க.

**உ–ம்.:–**

(1) மரம் – அடி – மரவடி. மரம் – வேர் – மரவேர், மரம் – கோடு – மரக்கோடு, என வேற்றுமையிலும், வட்டம் – ஆழி – வட்டவாழி, வட்டம் – வடிவம் – வட்ட வடிவம், வட்டம் – கல் – வட்டக்கல், எனப் பண்புத்தொலையிலும், பவளம் – இதழ் – பவளவிதழ், பவளம் – வாய் – பவளவாய், கமலம் – கண் – கமலக்கண், என உவமைத் தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வராஈறுகெட்டு உயிரீறு போன் முடிந்தன. மரம் – நார் – மரநார், எனவும் மரம் – நீண்டது – மரநீண்டது. வட்டம் – நேமி – வட்டநேமி எனவும் மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறுபோன் முடிந்தன.

(2) நாம் – கடியம் – நாங்கடியம், நிலம் – தீ – நிலந்தீ, உண்ணும் – சோறு – உண்ணுஞ் சோறு, உண்டனம் சிறியேம் – உண்டனஞ்சிறியேம். பூதனும் – தேவனும் – பூதனுந்தேவனும், என அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறு, திரிந்து முடிந்தது. சிறியேம் – கை –

சிறியேங்கை எனவும். நம் – கை – நங்கை எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச்சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன.

இனமாத் – திரியும் என்றமையின், அருத்தாபத்தியால், நாம் பெரியம், சிறியேம்பண்பு எனப் பகரம் வருவழித் திரியாதென்பது பெற்றாம்.

மகரவீற்றுச் சொற்கள் புணர்ச்சியால் எத்தனை வகைப்படும்?

"ஒற்றழிந்துயிரீறொப்ப" னவும் ஒற்றழியாது வன்மைக்கினமாத் திரிவனவும் என இருவகைப்படும்.

ஒற்றழிந்துயிரீறொப்பன எத்தனைவகையிற் புணரும்?

இயல்புயிரீ றுபோல உயிர்வரி னுடம்படு மெய்பெற்றும் வல்லினம் வரின் அது மிகப்பெற்றும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாய் நின்றும் மூன்று வகையிற் புணரும்.

ஒற்றழியாது நிற்கும் மகரவீறு எத்தனைவகையிற் புணரும்?

ஒற்றழியாது நிற்கும் மகரவீற்றுச்சொல் வல்லினம் வரின் மகரங் கெடாது அவற்றிற் கினமாய்த் திரிந்து ஒரே வகையிற் புணரும்.

மகரவீறு கேடுந் திரிபுமின்றிப் புணருமிடமு முளதோ?

ஆம். பகரம்வருவழிக் கேடுந் திரிபுமின்றி இருவழியும் புணரும்.

உ–ம்.:–

கலம் பெற்றான். மரம் பெரிது.

இச்சூத்திரத்திற்குக் கருவிச்சூத்திரங்க ளெவை?

"இ ஈ ஐ வழி...உயிர்வரினுடம்படு மெய்யென்றாகும்" என்னுஞ்சூத்திரமும், "இயல்பினும்விதியினு" மென்னுஞ் சூத்திரமுமாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, மகரவீறு புணரும் செய்கை கூறுகின்றது.

**இ–ள்.: மவ்வீறொற் றழிந்து** – மகர ஈற்றுச் சொற்களின் இறுதி மகரங் கெட, **உயிரீறொப்பவும்** – இயல்பாகிய வுயிரீறு போல உயிர் வரின் உடம்படுமெய் தோன்றியும் மெல்லினமும் இடையினமும் வந்து புணரின் இயல்பாகியும் புணர்வனவும், **வன்மைக்கினமாத் திரிபவு மாகும்** – வல்லினம் வந்து புணரின் அந்த மகரம் வந்ததற்கு இனமாகத் திரிதலுமாம், எ–று.

உ-ம்.:-

வட்டம்ஆழி-வட்டவாழி, கடல்-வட்டக்கடல், நேமி-வட்டநேமி, வாரி - வட்டவாரி எனவும்; (இவை - அல்வழி) மரம் அடி - மரவடி, கால் - மரக்கால், நார்-மரநார், வேர் - மரவேர் எனவும், (இவை வேற்றுமை) ஆக இருவழியினும் ஒற்றழிந்து உயிரீறொத்து முடிந்தன. நாம்கடியம் - நாங்கடியம், அடும்களிறு-அடுங்களிறு எனவும்; நம்கை- நங்கை, நும்செவி - நுஞ்செவி, தலை - நுந்தலை, எனவும் வன்மைக் கினமாகத் திரிந்தன. பிறவுமன்ன. பகரம் வரின் அது அதற்கு இனமாதலால் திரியா தென்பது பெறப்படும்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை** :- ம ஈறு - மகரத்தை யிறுதியிலுடைய மொழிகள் (நாற் கணங்களும் வந்து புணரும்போது), **ஒற்று அழிந்து** - (இறுதியிலுள்ள) மகர மெய்கெட்டு, **உயிர் ஈறு ஒப்பவும்** - உயிரீற்றுச் சொற்கள் போலப் புணர்வனவும், **வன்மைக்கு இனம்ஆ (க) திரிபவும்** - (வல்லினம் வந்தால் கெடாமல்) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், **ஆகும்.**

குறிப்பு :-

உயிரீ றொத்தலாவது - உயிர்வந்தால் உடம்படு மெய் பெறுதலும், வல்லினம் வந்தால் மிகுதலும், மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகப் புணர்ந்தலுமாம்.

'உயிரீறொப்பவும்' எனப் பொதுப்படக் கூறினாரேனும், மகரமெய் உயிரும் வல்லினமும் இடையினமும் வர வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத்தொகை உவமத்தொகைகளிலும், மெல்லினம் வர இருவழியிலும் கெடுமெனவும்; பண்புத்தொகை உவமத்தொகை யொழிந்த அல்வழித் தொடர்களில் வன்மைக்கினமாத்திரியுமெனவும் அறிக. வினையாலணையும் பெயர் இறுதி மகரமும் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் இனமாத்திரியுமென்க.

**உதாரணம்** :-

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| வட்டம் + ஆழி = வட்டவாழி | மரம் + அடி = மரவடி |
| வட்டம் + கல் = வட்டக்கல் | மரம் + கால் = மரக்கால் |

வட்டம் + நேமி = வட்டநேமி மரம் + நார் = மரநார்
வட்டம் + வாரி = வட்டவாரி மரம் + வேர் = மரவேர்

– இரு வழியிலும் மவ்வீறுகெட
உயிரீறுஒத்தது.

நாம் + கடியம் = நாங்கடியம், நம் + கை = நங்கை

– இனமாயிற்று.

'இனமாத்திரியும்' என்றமையால், நாம் + பெரியம் = 'நாம்பெரியம்' எனப் பகரம் வருமிடத்து மகரம் பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும் என்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: மவ்வீறு –மகரவீற்றுச் சொற்கள், ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும் – நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகர மெய்கெட விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறு போலப் புணர்வனவும், வன்மைக்கு இனம் ஆத் திரிபவும் ஆகும் – வல்லினம் வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும், எ–று.

உயிரீறொத்தலாவது, உயிர் வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகை களிலுமாம் எனவும், மெல்லினம் வரக்கெடுவது இருவழியிலுமாம் எனவும் கொள்க.

மகரமெய் வல்லினம் வரக்கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டு மொழித் தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலாம் எனவும் வினையா லணையும் பெயரிறுதி மகரமும், தனிக் குறிலைச் சார்ந்த மகரமும்; வேற்றுமையிலும் வல்லினம் வரிற் கெடாது இனவெழுத்தாகத் திரியும் எனவும் கொள்க.

உ–ம்.:–

(1) மரம்+அடி = மரவடி
மரம்+வேர் = மரவேர்,
மரம்+ கோடு = மரக்கோடு என வேற்றுமையிலும்,
வட்டம் + ஆழி = வட்டவாழி,
வட்டம்+வடிவம் = வட்டவடிவம்,

வட்டம்+கல் = வட்டக்கல் எனப் பண்புத்தொகையிலும்,
பவளம்+இதழ் = பவளவிதழ்,
பவளம் + வாய் = பவளவாய்,
கமலம்+கண் = கமலக்கண் என உவமைத்தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வர ஈறுகெட்டு உயிரீறு போன் முடிந்தன. மரம்+நார் = மரநார் எனவும், மரம்+நீண்டது = மரநீண்டது, வட்டம்+நேமி = வட்டநேமி எனவும், மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறு போன் முடிந்தன.

(2) நாம்+கடியம் = நாங்கடியம்,
நிலம்+தீ = நிலந்தீ,
உண்ணும்+சோறு = உண்ணுஞ்சோறு,
உண்டனம்+சிறியேம் = உண்டனஞ்சிறியேம் பூதனும்+தேவனும் = பூதனுந் தேவனும் என அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறு திரிந்து முடிந்தது. சிறியேம் +கை = சிறியேங்கை எனவும்; நம்+கை = நங்கை எனவும்; வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக் குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன.
இனமாத்திரியும் என்றமையின், அருத்தர்பத்தியால் நாம் பெரியம், சிறியேம்பண்பு எனப் பகரம் வருவழித் திரியாதென்பது பெற்றாம்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– மவ்வீறு – மகரவீற்றுச் சொற்கள், – ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும் – நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகரமெய்கெட விதியுயிரீறாய் நின்று இயல்புயி ரீறுபோலப் புணர்வனவும், – வன்மைக்கு இனம் ஆத்திரிபவும் ஆகும் – வல்லிவனம்வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும். எ–று.

உயிரீறொத்தலாவது, உயிர் வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத்தொகை உவமைத் தொகைகளிலுமாம் எனவும், மெல்லினம் வரக் கெடுவது இருவழியிலுமாம் எனவுங் கொள்க.

மகரமெய் வல்லினம் வரக்கெடாது. இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத் தொகை யிரண்டுமொழித்

தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலாம் எனவும், வினையாலணையும் பெயரிறுதி மகரமும், தனிக் குறிலைச்சார்ந்த மகரமும், வேற்றுமையிலும், வல்லினம்வரிற் கெடாது இனவெழுத்தாகத் திரியும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

(1)மரம்+அடி = மரவடி, மரம் + வேர் = மரவேர், மரம்+கோடு = மரக்கோடு, என வேற்றுமையிலும்; வட்டம்+ஆழி= வட்டவாழி, வட்டம் + வடிவம் = வட்டவடிவம், வட்டம்+கல்=வட்டக்கல் எனப் பண்புத்தொகையிலும்; பவளம் + இதழ்=பவளவிதழ், பவளம்+வாய்=பவளவாய், கமலம்+கண்= கமலக்கண் என உவமைத் தொகையிலும் உயிரும் இடையினமும் வல்லினமும் வர ஈறுகெட்டு உயிரீறுபோன் முடிந்தன. மரம்+நார்=மரநார். எனவும் மரம்+நீண்டது=மரநீண்டது, வட்டம்+நேமி=வட்டநேமி, எனவும் மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறுபோன் முடிந்தன.

(2)நாம்+கடியம் = நாங்கடியம், நிலம்+தீ=நிலந்தீ, உண்ணும்+சோறு = உண்ணுஞ்சோறு, உண்டனம் + சிறியேம்=உண்டனஞ்சி றியேம், பூதனும் + தேவனும் = பூதனுந் தேவனும் என அல்வழிக்கண் எழுவாய்த் தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறு திரிந்து முடிந்தது. சிறியேம் + கை = சிறியேங்மை, எனவும் நம்+கை = நங்கை எனவும் வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன.

இனமாத்திரியும் என்றமையின், அருந்தாபத்தியால், நாம்பெரியம், சிறியேம் பண்பு எனப் பகரம் வரும்வழித் திரியாதென்பது பெற்றாம்.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: (1) ம ஈறு – மகரத்தை இறுதியிலுடைய சொற்கள், (நாற்கணங்களும் வந்து புணரும் பொழுது), ஒற்று அழிந்து – (இறுதியிலுள்ள) மகரமெய் கெட்டு, உயிர் ஈறு ஒப்பவும் – உயிரீற்றுச்சொற்கள் போலப் புணர்வனவும், (2) வன்மைக்கு இனம் ஆ (க) திரிபவும் – (வல்லினம் வந்தால் கெடாமல்) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், ஆகும், எ–று.

உயிரீறு ஒத்தலாவது – செயற்கை யுயிரீறாய் நின்று இயற்கை யுயிரீறு போல உயிர்வந்தால் உடம்படுமெய் பெறுதலும் வல்லினம் வந்தால் மிகுதலும், மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகப் புணர்தலுமாம்.

**உ–ம்.:–**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| (1) வட்டம் +ஆழி = வட்டவாழி | மரம் + அடி = மரவடி – |
| இருவழியிலும் மவ்வீறு கெட உயிரீறு ஒத்தது. | |
| கல் = வட்டக்கல் | கிளை= மரக்கிளை |
| நேமி = வட்டநேமி | நார் = மரநார் |
| வாரி = வட்டவாரி | வேர் = மரவேர் |

(2) மரம் + சிறிது = மரஞ்சிறிது நம் + கை = நங்கை – இனமாகத் திரிந்தது.

'இனமாத்திரியும்' என்றமையால், மரம் + பெரிது = மரம்பெரிது, சிறியேம் + பண்பு = சிறியேம்பண்பு எனப் பகரம் வருமிடத்து மகரம் பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– மவ்வீறு – மகரவீற்றுச் சொற்கள, ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும் – நாற்கணமும் வர இறுதியிலுள்ள மகரமெய் கெட விதியுயிரீறாய் நின்று இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், வன்மைக்கு இனம்ஆத் திரிபவும் ஆகும் – வல்லினம்வரிற் கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும் ஆகும். எ–று.

உயிரீறொத்தலாவது, உயிர் வரின் அவை உடம்படுமெய் பெறவும், வல்லினம் வரின் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வரின் அவை இயல்பாகவும் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது வேற்றுமையிலும் அல்வழியிலே பண்புத் தொகை உவமைத் தொகைகளிலுமாம் எனவும், மெல்லினம் வரக்கெடுவது இருவழியிலுமாம் எனவுங் கொள்க.

மகரமெய் வல்லினம் வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை யிரண்டுமொழித் தொழிந்த அல்வழிப்புணர்ச்சியிலாம் எனவும், வினையா லணையும் பெயரிறுதி மகரமும் தனிக்குறிலைச்சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரின் கெடாது இனவெழுத்தாகத் திரியும் எனவுங் கொள்க.

உ–ம்.:–

(1) மரம் + அடி = மரவடி, மரம் + வேர் = மரவேர், மரம் + கோடு = மரக்கோடு – என வேற்றுமையிலும்; வட்டம் + ஆழி = வட்டவாழி, வட்டம் + வடிவம் = வட்டவடிவம், வட்டம் + கல் = வட்டக்கல் – எனப் பண்புத்தொகையிலும்; பவளம் + இதழ் = பவளவிதழ், பவளம் + வாய் = பவளவாய், கமலம் + கண் = கமலக்கண், – என உவமைத்தொகையிலும், உயிரும் இடையினமும் வல்லினமும் வர ஈறு கெட்டு உயிரீறு போன் முடிந்தன. மரம் + நார் = மரநார், மரம் + நீண்டது = மரநீண்டது, வட்டம் + நேமி = வட்டநேமி – என மெல்லினம் வர ஈறு கெட்டு உயிரீறுபோன் முடிந்தன.

(2) நாம் + கடியம் = நாங்கடியம், நிலம் + தீ = நிலந்தீ, உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு, உண்டனம் + சிறியேம் = உண்டனஞ்சிறியேம், பூதனும் + தேவனும் = பூதனுந் தேவனும் – என அல்வழிக்கண் எழுவாய்த் தொடர்முதலியவற்றில் வல்லினம் வர ஈறு திரிந்து முடிந்தது; சிறியேம் + கை = சிறியேங்கை, நம் + கை = நங்கை – என வினையாலணையும்பெ ரிறுதிமகரமுந் தனிக்குறி லைச் சார்ந்த மகரமும் வேற்றுமையில் வல்லினம் வரத் திரிந்து முடிந்தன.

'இனமாத் திரியும்' என்றமையின், அருத்தாபத்தியால், நாம் பெரியம், சிறியேம் பண்பு எனப் பகரம் வருவழித் திரியாதென்பது பெற்றாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– ம ஈறு – மகர ஈற்றுச் சொற்கள், ஒற்று அழிந்து – (இறுதியிலுள்ள) மகரமெய் கெட, உயிர் ஈறு ஒப்பவும் – (விதிஉயிரீறாய் நின்று) இயல்பு உயிரீறுபோலப் புணர்வனவும், வன்மைக்கு இனம் ஆக திரிபவும் – (வல்லினம் வரிற் கெடாது) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும், ஆகும் – ஆகும். எ–று.

பொ–ரை.:– மகரவீற்றுச் சொற்கள் (இறுதியிலுள்ள) மகரமெய் கெட, (விதி உயிரீறாய் நின்று) இயல்பு உயிரீறு போலப் புணர்வனவும், (வல்லினம் வந்தால் கெடாமல்) அவற்றிற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரிவனவும் ஆகும்.

உயிரீறொத்தலாவது உயிர்வரின் உடம்படுமெய் பொறுதலும், வல்லினம் வரின் மிகுதலும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாதலுமாகப் புணர்தல்.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக;கெடுவது வேற்றுமையிலேயாம்.

(உ-ம்.) மரம் + அடி = மரவடி.

மரம் + வேர் = மரவேர்.

மரம் + கோடு = மரக்கோடு.

மகரமெய் உயிரும் இடையினமும் வல்லினமும் வரக் கெடுவது அல்வழியில் பண்புத்தொகை உவமைத்தொகைகளிலேயாம்.

(உ-ம்.) வட்டம் + ஆழி = வட்டவாழி. – பண்புத்தொகை.

வட்டம் + வடிவம் = வட்டவடிவம்.

வட்டம் + கல் = வட்டக்கல்.

பவளம் + இதழ் = பவளவிதழ். – உவமைத் தொகை.

பவளம் + வாய் = பவளவாய்.

கமலம் + கண் = கமலக்கண்.

மெல்லினம் வர இருவழியிலும் மகரம் கெடும்.

(உ-ம்.) மரம் + நார் = மரநார்.

மரம் + நீண்டது = மரநீண்டது.

வட்டம் + நேமி = வட்டநேமி.

மகரம் வல்லினம்வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை இரண்டுமொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலேயேயாம்.

(உ-ம்.) நாம் + கடியம் = நாங்கடியம்.

நிலம் + தீ = நிலந்தீ.

உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு.

உண்டனம் + சிறியேம் = உண்டனஞ்சிறியேம்.

பூதனும் + தேவனும் = பூதனுந்தேவனும்.

இவை, எழுவாய்த்தொடர் முதலியவற்றில் வல்லினம் வர ஈறுதிரிந்தன.

வினையாலணையும்பெய ரிறுதி மகரமும் தனிக்குறிலைச்

சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் வல்லினம் வரக் கெடாது இனமெல்லெழுத்தாகத் திரியும்.

(உ–ம்.) சிறியேம் + கை = சிறியேங்கை.

நம் + கை = நங்கை (நமது கை.)

'இனமாத் திரியும்' என்றமையான் அருத்தாபத்தியால், நாம் + பெரியம் = நாம் பெரியம் எனப் பகரம் வரும்வழித் திரியா தெனக் கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) மவ்வீறு – மகரவீற்றுச் சொற்கள், ஒற்று – (இறுதியிலுள்ள) மகரமெய், அழிந்து – கெட்டு, உயிரீறு ஒப்பவும் – விதி யுயிரீறாய் நின்று புணர்வனவும்;

(2) வன்மைக்கு இனம்ஆ – வல்லினம் வரின் கெடாது அவற்றிற்கு இனமாக, திரிபவும் ஆகும் – திரிவனவும் ஆகும்.

உயிரீறொத்தல் – உயிர்வரின் உடம்படு மெய்பெற்றும், வல்லினம்வரின் மிகுந்தும், மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகியும் புணர்தல்.

உதாரணம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | வட்டம் | + | ஆழி | = | வட்டவாழி | |
| | | + | கல் | = | வட்டக்கல் | – அல்வழி |
| | | + | நேமி | = | வட்டநேமி | |
| | | + | வாரி | = | வட்டவாரி | |
| | மரம் | + | அடி | = | மரவடி | |
| | | + | கால் | = | மரக்கால் | – வேற்றுமை |
| | | + | நார் | = | மரநார் | |
| | | + | வேர் | = | மரவேர் | |

என இருவழியிலும் மகரவீற்றுச்சொல் ஈறுகெட உயிரீறு ஒத்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (2) | நாம் | + | கடியம் | = | நாங்கடியம் |
| | நம் | + | கை | = | நங்கை |

என இருவழியிலும் மகரம் இனமாகத் திரிந்தது.

"இனமாத்திரிபவும்" என்றமையால்,

நாம் + பெரியம் = நாம்பெரியம்

எனப் பகரம் வருமிடத்து, மகரம் பகரத்துக்கு இனமாதலின் திரியாது நிற்கும் எனக் கொள்க.

## மோசசு பொன்னையா

மகர ஈற்றுச் சொற்களின் முன்னர் நாற்கணமும், வந்து புணரின் ஈற்று மகரங் கெட்டு, இயல்பு உயிரீற்றுச் சொற்களே போற் புணர்தலும்; வலிவரின், அதற்கு இனமெல்லெழுத்தாகத் திரிதலும் ஆகும், எ—று.

இயற்கை உயிரீறு போற் புணர்தலாவது; உடம்படுமெய் பெறுதலும்; வலிவரின் மிகுதலும், மெலி இடைவரின் இயல்பாதலும் எனக் கொள்க.

எ—டு.:-

வட்டவாழி, வட்டக்கல், வட்டநேமி, வட்டவாரி.

மரவடி, மரக்கிளை, மரநார், மரவேர் – இருவழியும் மவ்வீறு கெட உயிரீறு ஒத்தது.

மரஞ்சிறிது, எங்கை மவ்வீறு இனமாகத் திரிந்தது.

இனமாத் திரிபவும் ஆகும் என்றமையால் பகர முதன் மொழிவரின், இனமெல்லெழுத்தாகத் திரிதல் இல்லை என்பது அருந்தாபத்தியாற் பெறப்பட்டது.

தொல்காப்பியர்,

*மகர இறுதி வேற்றுமை யாயின்,*
*துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே,*

எனவும்,

*அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும்,*

எனவும் விதித்தார். தற்கால வழக்கு நோக்கி இவ்வாசிரியர் அல்வழிக்கும் வேற்றுமைக்கும் ஒரே முடிபு கூறினார்.

(15)

219. **வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்**
**அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.**

**வேற்றுமை மப் போய் வலி மெலி உறழ்வும்**
**அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள.**

vēṟṟumai map pōy vali meli uṟaḻvum
alvaḻi uyir itai variṉ iyalpum uḷa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for certain consonant final m

There are also casual combination in which on the final m being removed, the hard initial and its kindred (nasal) become interchangeable; as well as incasual combinations in which the is not dropped before vowel and medial initials.

## ஒப்புமைப் பகுதி

மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே

(தொல்.: 311)

மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான

(தொல்.: 313)

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வு
மல்வழி யுயிரிடை வரினியல் பும்முள

(இ.வி.: 130)

மகர விறுபெயர் மிகலுமீ றழிதலும்
ஆகும் வேற்றுமைக் கண்ணென மொழிப

(மு.வீ.: 311)

மெல்லின முறழ்சில மொழிகளு முளவே

(மு.வீ.: 313)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்: வேற்றுமைக்கண் ஈறுகெட்டு வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் உறழ்வனவும், அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரக் கெடாதே [1]நிற்பனவுமாம் மகர வீற்று மொழிகள் சில உளவாம், எ–று.

வ–று.:–

குளக்கரை குளங்கரை என வேற்றுமைக்கண் உறழ்ந்தது.

---

பாடவேறுபாடு .:–

1. நிற்கும் மகர

மரமழகிது, வடமற்றது, வடமேறிற்று, எனவும், மரம் வலிது, மரம் யாது, வெல்லும் வில்லி, ஓடும்யானை, அருளும்யோகி எனவும் அல்வழியில் இயல்பாயிற்று.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், சில மகர ஈற்றிற்கு *ம்மேலைச் சூத்திரத்தான்ம்* எய்தியது இகந்துபடாமற் காத்தலும் விலக்கலும், வரும் வல்லினத்திற்கு *இயல்பினும் விதியினும் என்னும் சூத்திரத்தான்'* எய்தியதன்மேற் சிறப்பு விதியும் உணர்–ற்று.

இ–ள்.:– வேற்றுமைக்கண் மகர இறுதி கெட, அவற்றின் முன் வரும் வல்லினமாதல் அவற்றிற்கு இனமாதல் மிகுதலும், அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரின் கெடாது இயல்பாதலும் உளவாம், எ–று.

உ–ம்.:–

குளக்கரை, குளங்கரை எனவும்; குளமழகிது, குளம்யாது எனவும் வரும். அருளுமரசன், கொல்லும்யானை எனவும் வரும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவுமது.

இ–ள்.:– வேற்றுமை – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணே, மப்போய் – நிலைமொழி ஈற்றி னின்ற மகர வொற்றுக் கெட்டு, வலிமெலி உறழ்வும் – வல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து மெல்லெழுத்துக்கு உறழ்வும், அல்வழி–அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண், உயிரிடை வரின் – வருமொழி முதலாக உயிர்க்கணமும் இடைக்கணமும் வந்தால், இயல்பு முள – நிலைமொழி ஈற்றினின்ற மகரம் கெடாமல் இயல்பாய் நிற்றலுமுள.

உ–ம்.:–

குளக்கரை, குளங்கரை என வேற்றுமைக்கண் உறழ்ந்தன. மரமழகிது, வலிது, யாது என அல்வழி இயல்பாயின.

## விசாகப் பெருமாளையர்

இது சில மகர வீற்றிற்கு மேலைச் சூத்திரத்தால் எய்திய திகழ்ந்துபடாமற் காத்தலும் விலக்கலும் வருகிற வல்லினத்திற்கு இயல்பினு மென்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதியும் உணர்த்துகின்றது.

இ—ள்.: வேற்றுமை—வேற்றுமைக்கண், ம—மகரவிறுதி, போய்—கெட, வலிமெலி யுறழ்வும் — வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், அல்வழி — அல்வழிக்கண், உயிர்—உயிரும், இடை—இடையினமும், வரின் — வந்தால், இயல்பும் — கெடாதியல்பாதலும், உள—உளவாம், எ—று.

உ—ம்.:—

குளம் + கரை — குளக்கரை, குளங்கரை எனவும்; குளம்+ அழகிது— குளமழகிது, குளம்+யாது—குளம்யாது எனவும், வரும் மற்றவைகளுமிப்படியே.

## முகவை இராமானுச கவிராயர்

இது, சிலமகர வீற்றிற்கு மேலைச் சூத்திரத்தால் எய்தியது பிறழாமற் காத்தலும், விலக்கலும், வரும் வல்லினத்திற்கு, இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்பு விதியுங் கூறுகின்றது.

இ—ள்.:— வேற்றுமைப் போய்— வேற்றுமைச் சந்தியிலே மகரங்கெட, வலிமெலி யுறழ்வும் — (அவற்றின் முன் வரும்) வல்லினமாவது அதற்கு இனமாவது மிகுந்து விகற்பித்துலும், அல்வழி யுயிரிடைவரின் — அல்வழிச் சந்தியிலே உயிரும் இடையினமும் வரின், இயல்புமுள — (கெடாது) இயல்பாதலுமாம், எ—று.

உ—ம்.:—

குளம்கரை—குளக்கரை, குளங்கரை, எனவும்; குளம்அழகிது — குளமகிழது, குளம் யாது, குளம்வலிது, எனவும்; அருளுமரசன் — கொல்லும் யானை எனவும், வரும். பிறவுமிப்படியே காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் ''மவ்வீறொற்றழிந்து'' என்னுஞ் சூத்திரவிதியில் அமையாத மகரவீற்றுச் சொற்களுமுளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள.
(வேற்றுமை மப்போய் வலி மெலி உறழ்வும்
அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள.)

இ—ள்.: வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும் — வேற்றுமைக்கண் மகரவிறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள — அல் வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடாதியல்பாதலும் உளவாம், எ—று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத் தொகை உவமைத்தொகை யிரண்டுமொழித்தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலெனக் கொள்க.

இச்சூத்திரத்திற்குச் சம்பந்தமான சூத்திரங்களெவை?

"மவ்வீ" றென்னுஞ் சூத்திரமும், "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரமும், "உடல்மேலுயிர்வந்" தென்னுஞ் சூத்திரமும், "எண்மூவெழுத்தீற்" றென்னுஞ் சூத்திரமும் இச்சூத்திரத்திற்கு இன்றியமையாதனவாம்.

உ–ம்.:–

(1) குளம் – கரை – குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறுகெட்டு உறழ்ந்தது.

(2) மரமடைந்தது, மரம் வலிது எனவும், வலமிடம், நிலம் வானம் எனவும், உண்ணுமுணவு, ஆளும் வளவன் எனவும், உண்டன மடியேம், உண்டனம் யாம் எனவும், அரசனும் மைச்சனும், புலியும் யானையும் எனவும், எழுவாய்த்தொடர் முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடாதியல்பாக முடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்து மகரமும், சிறியேமன்பு, சிறியேம் வாழ்வு எனவும், நம்மன்பு, நம்வாழ்வு எனவும், வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பாமெனக் கொள்க.

மப்போய் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல். வலி மெலியுறழ்வும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி. அல்வழி யுயிரிடை வரினியல்பாம் என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– வேற்றுமை – வேற்றுமைப் புணர்ச்சியில் (வல்லினம் வந்தால்), ம போய் – மகரஈறு கெட்டு, வலி மெலி உறழ்வும் – வல்லினமாவது (அவற்றிற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும், அல்வழி – அல்வழிப் புணர்ச்சியில், உயிர் – உயிரும், இடை – இடையினமும், வரின் – வந்தால், இயல்பும் – (கெடாது) இயல்பாதலும், உள – உள்ளனவாம்.

உ–ம். :–

குளம் + கரை = குளக்கரை, குளங்கரை

(என வேற்றுமையில் மப்போய் வலிமெலி யுறழ்ந்தது.)

குளம் + அழகிது = குளமழகிது. குளம் + யாது = குளம்யாது.
(என அல்வழியில் உயிர் இடைவர இயல்பாயிற்று.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: வேற்றுமை மப்போய் வலி மெலி உறழ்வும்** – வேற்றுமைக்கண் மகர விறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், **அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள** – அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடாதியல்பாதலும் உளவாம், எ–று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத்தொகை உவமைத்தொகை இரண்டு மொழித்தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலெனக் கொள்க.

உ–ம்:–

(1) குளம் + கரை = குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறு கெட்டு உறழ்ந்தது.

(2) மரமடைந்தது, மரம் வலிது எனவும்; வலமிடம், நிலம் வானம், எனவும் உண்ணுமுணவு, ஆளும் வளவன் எனவும் உண்டனமடியேம், உண்டனம் யாம் எனவும்; அரசனுமமைச்சனும், புலியும் யானையும் எனவும் எழுவாய்த் தொடர் முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறு கெடா தியல்பாக முடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக் குறிலைச் சார்ந்த மகரமும், சிறியேமன்பு, சிறியேம்வாழ்வு எனவும் நம்மன்பு, நம்வாழ்வு, எனவும் வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பா மெனக் கொள்க.

'மப்போம்' என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல், 'வலி மெலியுறழும்' என்றது ''இயல்பினும் விதியினும்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி. 'அல்வழி யுயிரிடை வரினியல்பாம்' என்றது மேலைச் சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்,** – வேற்றுமைக் கண் மகரவிறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், – **அல்வழி உயிர் இடைவரின் இயல்பும் உள** – அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடாதியல்பாதலும் உள்வாம். எ–று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத் தொகை உவமைத் தொகை யிரண்டுமொழித் தொழிந்த அல்வழிப்புணர்ச்சியிலெனக் கொள்க.

உ-ம்.:-

(1). குளம்+கரை = குளக்கரை, குளங்கரை என வேற்றுமையில் ஈறுகெட்டு உறழ்ந்தது.

(2) மரமடைந்தது, மரம்வலிது, எனவும் வலமிடம், நிலம்வானம், எனவும் உண்ணுமுணவு, ஆளும்வளவன், எனவும் உண்டனமடியேம், உண்டனம்யாம், எனவும் அரசனுமமைச்சனும், புலியும் யானையும், எனவும் எழுவாய்த் தொடர் முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடாதியல்பாக முடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும், சிறியேமன்பு, சிறியேம்வாழ்வு, எனவும் நம்மன்பு, நம்வாழ்வு,எனவும் வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பாமெனக் கொள்க.

மப்போம் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; வலி மெலி யுறழும் என்றது 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற்சிறப்புவிதி; அல்வழியுயிரிடைவரினியல்பாம் என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதுவிலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- (1) வேற்றுமை - வேற்றுமைப்புணர்ச்சியில், (வல்லினம் வந்தால்) ம போய் - மகர ஈறு கெட்டு, வலி மெலி உறழ்வும்- வல்லினமாவது (அவற்றிற்கு இனமான) மெல்லினமாவது மிகுதலும், (2) அல்வழி - அல்வழிப் புணர்ச்சியில், உயிர்- உயிரும், இடை-இடையினமும், வரின் - வந்தால், இயல்பும் - (கெடாது) இயல்பாதலும், உள-உள்ளனவாம்; எ-று.

உ-ம்.:-

(1) குளம் + கரை = குளக்கரை, குளங்கரை - வேற்றுமையில் மப் போய்வலி மெலி உறழ்ந்தது.

(2) குளம்+அழகிது = குளமழகிது, மரம் + வலிது = மரம்வலிது- அல்வழியில் உயிர் இடை வர இயல்பாயிற்று.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:- வேற்றுமை மப்போய் வலி மெலி உறழ்வும் -** வேற்றுஐமக் கண் மகரவிறுதி கெட வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், **அல்வழி உயிர் இடை வரின் இயல்பும் உள -** அல்வழிக்கண் உயிரும் இடையினமும் வரிற் கெடா தியல்பாதலும் உளவாம். எ-று.

மகரமெய் உயிரும் இடையினமும் வர இயல்பாவது பண்புத் தொகை உவமைத்தொகை யிரண்டுமொழித் தொழிந்த அல்வழிப் புணர்ச்சியிலெனக் கொள்க.

உ-ம்.;-

(1) குளம் + கரை = குளக்கரை, குளங்கரை - என வேற்றுஐமயில் ஈறுகெட்டு உறழ்ந்தது.

(2) மரம் + அடைந்தது = மரமடைந்தது, மரம் + வலிது = மரம் வலிது, வலம் + இடம் = வலமிடம், நிலம் + வானம் = நிலம்வாம், உண்ணும் + உணவு = உண்ணுமுணவு, ஆளும் + வளவன் = ஆளும் வளவன், உண்டனம் யாம், அரசனும் + அமைச்சனும் = அரசனு மமைச்சனும், புலியும் + யானையும் = புலியும் யானையும் - என எழுவாய்த் தொடர்முதலிய அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறுகெடா தியல்பாக முடிந்தது.

வினையாலணையும் பெயரிறுதி மகரமுந் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும், சிறியேம்வாழ்வு நம்வாழ்வு என வேற்றுமையிலும் உயிரும் இடையினமும் வர இயல்பா மெனக் கொள்க.

'மப்போய்' என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்; 'வலி மெலியுறழும்' என்றது ''இயல்பினும் விதியினும்'' என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி; 'அல்வழியுயிரிடை வரினியல்பாம்' என்றது மேலைச்சூத்திரத்தால் எய்தியது விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ-ள்.;- வேற்றுமை -** வேற்றுமைக்கண், **ம போய் -** மகர இறுதி கெட, **வலி மெலி உறழ்வும் -** வல்லினமாவது அவற்றிற்கு இனமான மெல்லினமாவது மிகுதலும், **அல்வழி -** அல்வழிக்கண், **உயிர் இடை வரின் -** உயிரும் இடை யினமும் வந்தால், **இயல்பும் -** (கெடாது) இயல்பாதலும், **உள -** உளவாம். எ-று.

பொ—ரை.:- வேற்றுமையில் இறுதி மகரம் கெட, வல்லினமாவது அவற்றிற்கு இனமான மெல்லினமாவது மிகுதலும், அல்வழியில் உயிரும் இடையினமும் வந்தால், (கெடாது) இயல்பாதலும் உளவாம்.

வேற்றுமையில் உறழ்வு.

உ—ம்.:-

குளம் + கரை = குளக்கரை – வேற்றுமையில் ஈறு கெட்டு உறழ்ந்தது.

குளங்கரை – அல்வழியில் இயல்பு.

மரம் + அடைந்தது = மரமடைந்தது.

வலம் + இடம் = வலமிடம்.

உண்ணும் + உணவு = உண்ணுமுணவு.

உண்டனம + அடியேம் = உண்டனமடியேம்.

அரசனும் + அமைச்சனும் = அரசனுமமைச்சனும்.

கொல்லும் + யானை = கொல்லும்யானை.

எழுவாய்த்தொடர் முதலியன அல்வழியில் உயிரும் இடையினமும் வர ஈறு கெடா தியல்பாயின.

சிறியேம் + அன்பு = சிறியேமன்பு. – வினையாலணையும் பெயரிறுதி மகரமும் தனிக்குறிலைச் சார்ந்த மகரமும் வேற்றுமையிலும் இயல்பாயிற்று.

சிறியேம் + வாழ்வு = சிறியேம் வாழ்வு.

நம் + அன்பு = நம்மன்பு.

நம் + வாழ்வு = நம்வாழ்வு.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **வேற்றுமை** – வேற்றுமைக்கண், **ம** – மகரவிறுதி, **போய்** – கெட்டு, **வலிமெலி உறழ்வும்** – வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுந்து விகற்பமாதலும்;

(2) **அல்வழி** – அல்வழிக்கண், **உயிர்** – உயிரும், **இடை** – இடையினமும், **வரின்** – வந்தால், **இயல்பும்** – (கெடாது) இயல்புபாதலும், **உள** – உளவாம்.

**உதாரணம்**

(1) குளம் + கரை = குளக்கரை, குளங்கரை

என வேற்றுமையில் மகரம் போய் வலிமெலி உறழ்ந்தது.

(1)குளம் + அழகிது = குளமழகிது
+ யாது = குளம்யாது

என அல்வழியில் உயிரும் இடையினமும் வர இயல்பாயிற்று.

## மோசசு பொன்னையா

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வரின், மகர ஈறு கெட்டு வல்லினமாவது மெல்லினமாவது மிகுவதும்; அல்வழிப் புணர்ச்சியில் உயிரும் இடையினமும் வரின், இயல்பாதலும் உளவாம், எ–று.

எ–டு.:-

குளக்கரை, குளங்கரை – வேற்றுமையில் ஈறுகெட்டு உறழ்ந்தது.
குளமழகிது, மரம்வலிது
ஆளுமரசன், கொல்லும்யானை – அல்வழியில் உயிர் இடை இனங்கள் வர இயல்பாயின

(16)

220. **நுந்தம், எம்நம் மீறா மவ்வரு ஞநவே.**

நுந் தம், எம் நம் ஈறு ஆம் அவ் வரு ஞ நவே.

nun ṭam, em nam īṛu ām av varu ña navē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for num, tam, em and nam**

Then final m of **num, tam, em** and **nam** is changed into ñ according as the one or the other is the combining initial.

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: இந் நான்கு மொழிகளின் ஈற்று மகரம் மேல்வரும் ஞ நக்களாகத் திரியும், எ–று.

வ–று.:– (நும், தம், எம், நம்) + (ஞாண், நூல்) என வரும்.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், சில பொதுப்பெயர்க்கு *ம்'மவ்வீறொற்றழிந்து' எனம்* எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– இந்நான்கு விகாரமொழிகள் ஈற்று மகரம், மேல் வரும் ஞ நக்களாகத் திரியும், எ–று.

உ–ம்.:–

நுஞ்ஞாண், நுந்நூல்; தஞ்ஞாண், தந்நூல்; எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல் என வரும்.

ஞ ந வரின் அவையாய்த் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின் நும்மணி என இயல்பாம் என்பது பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், சுற்றப் பெயர் ஈற்றி னின்ற மகரம் புணருமாறு கூறியது.

இ–ள்.: நுந்தம் எம் நம் – நும் தம் எம் நம் என்னும் இந் நான்கு பெயரும், ஈறாம் – நிலைமொழியாய் நின்றதனீற்றின் மகரம், வரு ஞ நவே – மேல் வருமொழி முதல் வந்த ஞகர நகரங்களாய்த் திரியும், எ–று.

உ–ம்.:–

நும் தம் எம் நம் ஞாண், நூல் என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, சில பொதுப்பெயர்களுக்கு மவ்வீறொற் றழிந்தென எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ–ள்.:– நுந்தம் எம்நம்–நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும், ஈறாம் – இறுதியாகிய, ம–மகர மெய்யானது, வருஞந– வருகிற ஞகர நகரங்களாகத் திரியும். எ–று.

உ–ம்.:–

நும்+ஞாண்–நுஞ்ஞாண், நும்+நூல் – நுந்நூல் என வரும், (தம் முதலியவற்றோடும் இப்படியே கூட்டுக) ஞ ந வரின் அவையாகத் திரியுமெனவே ஒழிந்த மகரம் வரின் நும்மணி என வியல்பா மென்பது பெற்றாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வருமொழி ஞ ந க்களாகத் திரியும் மகரவீற்றுச்சொற்கள் எவை?

நுந்தம்,
எம் நம் மீறா மவ்வரு ஞநவே.
(நும் தம்
எம் நம் ஈறு ஆகும் ம வரு ஞ நவே.)

**இ–ள்.:– நும் தம் எம் நம் ஈறு ஆம் ம** – நும்முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய், **வரு ஞ நவே** – வரு ஞகர நகரங்களாகத் திரியும், எ–று.

**உ–ம்.:–**

நுஞ்ஞாண், நுந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல், எனவரும்.

ஞ ந வரின் அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின் நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

மவ் வரு ஞ ந என்றது "மவ்வீறொற்றழிந்து" என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, சில மகர வீற்றுப் பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

**இ–ள்.:– நும் தம் எம் நம் ஈறாம** – இந்த நான்கு விகார மொழிகளி னிறுதி மகரம், **வரு ஞ ந** – மேல்வரும் ஞ நக்களாகத் திரியும், எ–று.

**உ–ம்.:–**

நுஞ்ஞாண்–நுந்நூல் – தஞ்ஞாண் – தந்நூல்–எஞ்ஞாண்–எந்நூல்; நஞ்ஞாண் – நந்நூல் என வரும். ஞ ந வரிற் றிரியு மெனவே, மகரம் வரின் திரியாதென்பது பெறப்படும். ம வரும் ஞ நக்களாத் திரியு மென முடிக்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– நும் தம் எம் நம்** – நும் முதலிய நான்கு விகாரமொழிகளுக்கும், **ஈறு ஆம்** – இறுதியாகிய, **ம** – மகரமெய்யானது, **வரும் ஞ ந** – (வருமொழி முதலில்) வருகிற ஞகர நகரங்களாகத் திரியும்; (இவை முறையே நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் விகாரங்கள்; வேற்றுமை.)

உ–ம் :–

| | | | |
|---|---|---|---|
| நும் + ஞாண் | = நுஞ்ஞாண். | தம் + ஞாண் | = தஞ்ஞாண் |
| எம் + ஞாண் | = எஞ்ஞாண். | நம் + ஞாண் | = நஞ்ஞாண் |
| நும் + நூல் | = நுந்நூல் | தம் + நூல் | = தந்நூல் |
| எம் + நூல் | = எந்நூல் | நம் + நூல் | = நந்நூல் |

குறிப்பு :–

ஞ ந வந்தால் அவைபாகத் திரியுமெனவே, ஒழிந்த மகரம் வந்தால் நும் + மணி = 'நும்மணி' என இயல்பாமென்பது பெறப்படும். உரையிற்கோடலால் உம் + ஞாண் = 'உஞ்ஞாண்', உம் + நூல் = 'உந்நூல்' என நீர் என்பதன் திரிபாகிய 'உம்' என்பதன் ஈற்று மகரமும் வருஞநவாகத் திரிதலையுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: நும் தம் எம் நம் ஈறு ஆம் ம – நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய், வரு ஞ ந'– வரு ஞகர நகரங்களாத் திரியும், எ–று.

உ–ம்.:–

நுஞ்ஞாண், நுந்நூல்; தஞ்ஞாண், தந்நூல்; எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல் என வரும்.

ஞ ந வரின் அவைபாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின், நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

'மங் வரு ஞ ந' என்றது "மவ்வீறொற்றழிந்து" என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

இடையன கெடும் என்றது "வன்மைக் கினமாத்தியும்" என எய்தியதன் மேற்சிறப்பு விதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– நும் தம் எம் நம் ஈறு ஆம் ம – நும்முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய், – வரு ஞந – வருஞகர நகரங்களாகத் திரியும், எ–று.

உ–ம்.:–

நுஞ்ஞான், துந்நூல், தஞ்ஞாண், தந்நூல், எஞ்ஞாண், எந்நூல், நஞ்ஞாண், நந்நூல் எனவரும்.

ஞநவரின் அலைபாகத் திரியும். எனவே ஒழிந்த மகரம்வரின்,

நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.
மவ்வரு ஞந என்றது 'மவ்வீறொற்றழிந்து' என எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– நும் தம் எம் நம் – நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும், ஈறு ஆம் – இறுதியாகிய, ம – மகர மெய்யானது, வரும் ஞ ந – (வருமொழி முதலில்) வருகிற ஞகர நகரங்களாகத் திரியும்; எ–று, இவை முறையே நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் விகாரங்கள்; வேற்றுமை.

உ–ம்.:–

நும், தம் + ஞாண் = நுஞ்ஞாண், தஞ்ஞாண், எஞ்ஞாண், நஞ்ஞாண், எம்+ நம்+ நூல் = நுந்நூல், தந்நூல், எந்நூல், நந்நூல். உம்+ஞாண் = உஞ்ஞாண், உம்+நூல் = உந்நூல் என நீர் என்பதன் திரிபாகிய உம் என்பதன் ஈற்று மகரமும் வரும் ஞ ந வாகத் திரிதலை உரையிற்கோடலாற் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– நும் தம் எம் நம் ஈறு ஆம் ம – நும்முதலிய நான்கு விகார மொழிகளுக்கும் இறுதியாகிய மகரமெய், வரு ஞ ந – வரு ஞகர நகரங்களாகத் திரியும். எ–று.

('நீர்' 'தாம்' 'யாம்' 'நாம்' என்பவற்றின் விகாரமே 'நும்' 'தம்' 'எம்' 'நம்' என்பன. 247. ஆவது சூத்திரம் பார்க்க.)

உ–ம்.:–

நும் + ஞாண் = நுஞ்ஞாண்.
நூல் = நுந்நூல்.
தம் + ஞாண் = தஞ்ஞாண்.
நூல் = தந்நூல்.
எம் + ஞாண் = எஞ்ஞாண்.
நூல் = எந்நூல்.
நம் + ஞாண் = நஞ்ஞாண்.
நூல் = நந்நூல்.

ஞ ந வரின் அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின்,

நும்மணி என இயல்பாமென்பது பெற்றாம்.

'மவ் வரு ஞ ந' என்றது "மவ்வீறொற்றழிந்து" (சூ-219) என எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

நும் தம் எம் நம் – நும் முதலிய நான்கு விகார மொழிகளுக்கும், ஈறாம் – இறுதியாகிய, ம – மகர மெய்யானது, வரு ஞ ந – வருகிற ஞகர நகரங்களாகத் திரியும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| நும் | + | ஞாண் | = | நுஞ்ஞாண் |
| | + | நூல் | = | நுந்நூல் |

ஞாண் – கயிறு.

தம் முதலியவற்றோடும் இப்படியே கூட்டுக.

ஞ ந வரின் அவையாகத் திரியும் எனவே, ஒழிந்த மகரம் வரின், நும்மணி என இயல்பாம் என்பது பெற்றாம்.

## மோசகு பொன்னையா

நும், தம், எம், நம் என்னும் திரிபு மொழிகளின் ஈற்று மகரம் வருமொழி முதல் ஞகர நகரங்களாகத் திரியும், எ–று.

இவை முறையே நீர், தாம், யாம், நாம் என்பவற்றின் திரிபு மொழிகள் என அறிக.

எ–டு.:–

நுஞ்ஞாண், நுந்நூல்;

தஞ்ஞாண், தந்நூல்;

எஞ்ஞாண், எந்நூல்;

நஞ்ஞாண், நந்நூல்.

மகரம் வரின் நும்மணி, தம்மகன், எம்மகன், நம்மகன், என இயல்பாதலை அருத்தாபத்தியாற் கொள்க.

221. அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்

அகம் முனர்ச் செவி கை வரின் இடையன கெடும்

akam mun̲ars sevi kai varin̲ itaiyan̲a ketum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for akam**

When akam combines with cevi or kai, the middle (syllable) ka is dropped, (and m changed into a kindred nasal).

## ஒப்புமைப் பகுதி

அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான

(தொல்.: 316)

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்

(இ.வி.: 131)

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்

(மு.வீ.: 316)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: அகமென்னுஞ் சொல் முன்னர்ச் செவி கை என்பன வரின் நிலைமொழியின் இடையில் நின்ற உயிரும் மெய்யும் கெடும், எ–று.

வ–று.:–

"அஞ்செவி நிறைய மந்திர மோதி" எனவும், "அங்கையு ணெல்லி யதன்பயன்" எனவும் வரும்.

'செவிகை' என்ற [1]முறையல் கூற்றினான் இயல்பும் கொள்க.

---

பாடவேறுபாடு .:–

1. (1) முறையின்றிக் கூறியவதனான்

(2) சினையல கூறிற்றாமதனால்.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

**எ-னின்,** அகம் என்னும் சொற்கு. ***'வன்மைக் கினமாத் திரிபவும்' என*** எய்தியதன் மேற் சிறப்பு விதி **உணர்-ற்று.**

**இ-ள்.:-** அகம் என்னும் இடப்பெயர் முன்னர்ச் செவி கை என்னும் சினைப்பெயர் வரின், நிலைமொழி இறுதி மகரம் வன்மைக்கு இனமாத் திரிதலே யன்றி, அதனிடை நின்ற ககர ஒற்றும் அதனை ஊர்ந்த அகர உயிரும் கெடும், **எ-று.**

**உ-ம்:-**

"அஞ்செவி நிறைய மந்திரம் ஓதி"

"அங்கையுள் நெல்லி அதன்பயன்"

எனவரும்.

செவி எனச் சகரத்தை முற்கூறினார், "அஞ்சிறைத்தும்பி" எனவும் வருதலின் என்க.

இடையன கெட்டே வரும் என நியதி கூறாமையின், அகஞ்செவி, அகங்கை, அகஞ்சிறை என வருதல் விலக்கப்பட்டன வல்ல என்க.

நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றாற் போலச் செவியகம் கையகம் என்னும் இடவுறுப்புத் தற்கிழமைப் பெயரோடு முடிந்த ஆறாம்வேற்றுமைத் தொகைச்சொல்லை முன்பின்னாக வழங்கலின், இவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த் தழாத்தொடராய அல்வழியுள் ஒன்றாம் என்க.

அகஞ்சிறை என்பது, ஏனையவற்றின் சிறைபோலப் புறத்தின்கண்ணவன்றி அகத்தின்கண்ணவாகலின், ஏழாம் வேற்றுமைத் தொகை.

## கூழங்கைத் தம்பிரான்

**சூ-ம்,** அகமென்னும் மகர வீற்றுச் சொற் புணர்ச்சி கூறியது.

**இ-ள் .:-**அகமுனர் - நிலைமொழியாய் நின்ற அகம் என்னும் மகர வீற்றுச் சொல் முன்னர், **செவி கை வரின்** - செவி கை என்னும் இவ்விரு சொல்லும் வந்து புணர்ந்தால், **இடை ய ன கெடும்** - நிலைமொழியிடை நின்ற உயிர்மெய் கெடும் **என்றவாறு.**

உ–ம்.:–

"அஞ்செவி நிறைய மந்திரம் ஓதி", "அங்கையுள் நெல்லி அதன்பயன்" எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, அகமென்னுஞ் சொல்லுக்கு வன்மைக் கினமாத் திரியுமென எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துகின்றது.

இ–ள்.:– அகமுனர்–அகமென்னு மிடப்பெயர் முன், செவிகை – செவிகை என்கிற சினைப்பெயர்கள், வரின் – வந்தால், இடையன – நிலைமொழி நடுநின்ற ககர மெய்யும் அதன் மேலேறிய அகர வுயிரும், கெடும் – அழியும், எ–று.

உ–ம்.:–

அகம் + செவி–அஞ்செவி, அகம் + கை – அங்கை, என வரும். (கெட்டேவரு மென்னாமையால் அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க).

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அகம் என்னுஞ்சொல் செவி கை என்பனவரின் எவ்வாறு புணரும்?

அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும்.

(அகம் முனர்ச் செவி கை வரின் இடையன கெடும்.)

இ–ள்.: அகம் முனர்ச் செவி கை வரின் – அகமென்னும் இடப்பெயர் முன் செவி கையென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால், இடையன கெடும் – நிலைமொழி யிறுதிமகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககரமெய்யும் அதன் மேலேறிய அகரவுயிருங் கெடும், எ–று.

உ–ம்.:–

அகம் – செவி – அஞ்செவி, அகம் – கை – அங்கை, எனவரும்.

இடையன கெடும் என்றது "வன்மைக் கினமாத்திரிபவும்" என எய்தியதன்மேற் சிறப்பு விதி.

இடையன கெடுமென்றதேயன்றிப் புணருமாறு கூறப்படவில்லையே. அஃது எதனாற் பெறப்படும்?

"வன்மைக் கினமாத் திரிபவுமாகும்" என்பதனாற் பெறப்படும்.

ககர சகர முறைப்படி கைசெவி யெனக் கூறாது செவிகை யெனக் கூறியது யாது குறித்ததாம்?

அகஞ்செவி அகங்கை என வருதல் வழுவன்றென்பது குறித்ததாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அக மென்பதற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது,

**இ-ள்.:-** அக முனர்-அகம் என்னும் இடப்பெயர் முன், **செவிகை வரின்** - செவிகை என்னுஞ் சினைப்பெயர்கள் வந்து புணரின், **இடையன கெடும்** - (மகரம் வன்மைக்கினமாய்த் திரிதலே யன்றி) அதனிடை நின்ற ககர வொற்றும் அதை யூர்ந்து நின்ற அகர வுயிருங் கெடும், எ-று.

ஊர்தல்-நடத்துதல்.

உ-ம்.:-

அகம்செவி - அஞ்செவி, அகம்கை- அங்கை, என வரும். கெட்டே வருமென்று உறுதி கூறாததினாலே, அகஞ்செவி, அகங்கை என வருதல் விலக்கப்பட்டன வல்ல வென்க. செவியகம், கையகம், என்னும் இடவுறுப்புத் தற்கிழமைப் பெயரொடு முடிந்த ஆறாம் வேற்றுமைத் தொகைச் சொல்லை முன் பின்னாக மாற்றி வழங்கலால் இவ்விரண்டும் இலக்கணப் போலியாய்த் தழாத்தொடராகிய அல்வழிச் சந்தியில் ஒன்றாமென்க. அகஞ்சிறை என்பது அகத்தின்கண்ணாகிய சிறை யென வருதலால், ஏழாம் வேற்றுமைத்தொகை.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-** அகம் முனர் - 'அகம்' என்னும் உள்ளிடப் பெயரின் முன், **செவி கை வரின்** - 'செவி' 'கை' (என்னுஞ் சினைப் பெயர்கள்) வந்தால், **இடையன** - (நிலைமொழியின்) நடுவில் நின்ற ககரமெய்யும் (அதன் மேலேறிய) அகரவுயிரும், **கெடும்** - அழியும்.

**உ-ம் : -**

அகம் + செவி = அஞ்செவி; அகம் + கை = அங்கை.

குறிப்பு :-

'கெட்டேவரும்' என்னாமையால் 'அகஞ்செவி', 'அகங்கை' எனவும் வரும்

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– அகமுனர்ச் செவி கை வரின் –** அகமென்னும் இடப் பெயர் முன் செவி கை யென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால், **இடையன கெடும் –** நிலைமொழி யிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககர மெய்யும் அதன்மேலேறிய அகர வுயிருங் கெடும், எ–று.

**உ–ம்.:–**

அகம் + செவி = அஞ்செவி, அகம் + கை = அங்கை என வரும்.

'கெட்டே வரும்' என்னமையால், அகஞ்செவி, அகங்கை என வருவெனவுங் கொள்க.

இடையன கெடும் என்றது "வன்மைக் கினமாத்திரியும்" என எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– அகமுணர்ச் செவிகை வரின் –** அகமென்னும் இடப்பெயர்முன் செவி, கை யென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால், **– இடையன கெடும் –** நிலைமொழியிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககர மெய்யும் அதன்மேலேறிய அகரவுயிருங் கெடும். எ–று.

**உ–ம்.:–**

அகம் + செவி = அஞ்செவி, அகம்+கை=அங்கை என வருவனவுங் கொள்க. கெட்டே வரும் என்னாமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க.

செவி அகம், கை அகம் என்னும் இடவுறுப்புத்தற் கிழமைப் பெயரொடு முடிந்த ஆறாம் வேற்றுமைத் தொகைச் சொல்லை முன்பின்னாக மாற்றி வழங்கலால் இவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த் தழாத் தொடராகிய அல்வழிச் சந்தியில் ஒன்றாமென்க.

இடையன கெடும் என்றது 'வன்மைக்கினமாத் திரியும்' என எய்திய தன்மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானு சாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:– அகம் முனர் –** அகம் என்னும் உள்ளிடப்பெயரின் முன், **செவி கை வரின் –** செவி கை (என்னுஞ் சினைப்பெயர்கள்) வந்தால், **இடையன –**

(நிலைமொழியிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலே யன்றி அதன்) நடுவில் நின்ற ககரமெய்யும் (அதன் மேலேறிய) அகரவுயிரும், கெடும் – அழியும்.

உ–ம்.:–

அகம்+செவி = அஞ்செவி; அகம்+கை = அங்கை

'கெட்டே வரும்' என்னாமையால் – அகஞ்செவி, அகங்கை, எனவும் வரும்.

ககர சகர முறைப்படி 'கைசெவி' என்னாது 'செவிகை' என்று சகரத்தை முன்னே சொன்னது; அகம்+சிறை = அஞ்சிறை எனச் சிறுபான்மை பிறசொல்லும் வருவது தோன்ற வென்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– அகமுனர்ச் செவி கை வரின் – அகமென்னும் இடப்பெயர் முன் செவி கையென்னுஞ் சினைப்பெயர்கள் வந்தால், இடையன கெடும் – நிலைமொழி யிறுதிமகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதனடு நின்ற ககரமெய்யும் அதன்மேலேறிய அகரவுயிருங்கெடும். எ–று.

உ–ம்.:–

அகம் + செ ி = அஞ்செவி; அகம் + கை = அங்கை.

கெட்டே வரும் என்னாமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க.

'இடையன கெடும்' என்றது "வன்மைக் கினமாத்திரியும்" (சூ–19) என எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

அகம் முன்னர் – அகம் என்னும் இடப்பெயர்முன், செவிகை – செவி கை என்னும் சினைப் பெயர்கள். வரின் – வந்தால், இடையன – நிலைமொழி நடுநின்ற ககர மெய்யும் அதன் மேலேறிய அகர வுயிரும், கெடும் – அழியும்.

உதாரணம்

அகம் + செவி = அஞ்செவி
அகம் + கை = அங்கை

கெட்டேவரும் என்னாமையால், அகஞ்செவி, அகங்கை என வருவனவுங் கொள்க.

'செவி' எனச் சகரத்தை முற்கூறியதனால்,

அகம் + சிறை = அஞ்சிறை

என வருதலுங் கொள்க.

## மோசசு பொன்னையா

அகம் என்னும் இடப்பெயரின் முன்னர் செவி, கை என்னும் சினைப்பெயர்கள் வரின், நிலைமொழியீற்று மகரம், வரும் வல்மைக்கு இனமாகத் திரிதலொடு நடுவே நின்ற உயிர்மெய் கெடுதலும் ஆகும், எ–று.

எ–டு.:–

அஞ்செவி, அங்கை

கெட்டே வரும் என்னாததால் அகஞ்செவி, அகங்கை என வருபவற்றையுங் கொள்க.

தொல்காப்பியர் கை ஒன்றற்கே விதித்தார். இவ்வாசிரியர் செவியையுஞ் சேர்த்துக் கூறினார். அஞ்சிறை என்னும் வழக்குண்மையின் சிறை என்ற சொற்கும் இவ்விதியைக் கொள்க.

(18)

222. ஈமுங், கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.

ஈமும், கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே.

īmum, kammum urumum toḻiṟpeyar māṉum
mutalaṉa vēṟṟumaikku avvum peṟumē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for īm, kam and urum**

The combination of im, kam, and urum follow those of verbal nouns (and add u); of these, however, the first two may also add a in casual combination.

## ஒப்புமைப் பகுதி

ஈமுங் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன

(தொல்.: 329)

வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை

(தொல்.: 330)

ஈமுங்
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானு
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே

(இ.வி.: 132)

ஈம் கம் உரும் உகரத்தொடு நிலையும்

(மு.வீ.: 320)

அவற்றுள்
ஈம்கம் அக்கையு மேற்கு மென்ப

(மு.வீ.: 321)

## மயிலை நாதர்

**எ–ன்,** எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

**இ–ள்.:–** இம் மூன்று சொல்லும் இருவழியும் தொழிற்பெயரே போல உகரம் பெற்று வன்மை வர மிக்கும் மென்மையும் வகரமும் வர இயல்பாயும் முடியும். இதுவே யன்றி ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் அகரச் சாரியையும் பெற்று வரும், **எ–று.**

**வ–று.:–**

(ஈம், கம், உரும்) + (கடிது, சிறிது, தீது, பெரிது, ஞான்றது, நீண்டது, மாண்டது, வலிது) எனவும், (கடுமை, சிறுமை, தீமை, பெருமை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை) எனவும், இருவழியும் தொழிற்'பெயரே போல உகரம் பெற்று வன்மை வர மிக்கு மென்மையும் வகரமும் வர இயல்பாயினவாறு. ஈமக்குடம், கம்மக்குடம், சாடி, தாழி, பானை, ஞாற்சி, நீட்சி, மாட்சி, வலிமை என வேற்றுமைக்கு ஈமும் கம்மும் அகரம் பெற்றவாறு.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், இம்மூன்று சொற்கும் *'மவ்வீ றொற்றழிந்து'* **என்னும்** ***சூத்திரத்தான்*** எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

---

பாடவேறுபாடு .:–

1.பெயர் போன்றவாறு

இ–ள்.:– இம்மூன்று சொல்லும், இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர் போல யவ்வன் மெய்வரின், உகரச் சாரியை பெற்று முடியும்; இவற்றுள் முதற்கண் நின்ற ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் பெறும், எ–று.

இவற்றுள் கம் என்பது, பலபொருளொரு சொல்லாதலின் எப்பொருளை உணர்த்தி நிற்பினும் இவ்விதி கொள்க.

உ–ம்.:–

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது எனவும்; கடுமை, நீட்சி, வன்மை எனவும்; ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் முறையே காண்க. பிறவும் அன்ன.

கம் என்பது கம்மியரது தொழில்; அத்தொழிலால் சமைந்த குடம் என்க. இது முதனிலைத் தொழிலன்றாதலின் 'மானும்' என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஈம் கம் உரும் என்னும் இம் மூன்று சொல்லின் ஈற்றி னின்ற மகர விகாரம் கூறியது.

இ–ள்.:– ஈமுங் கம்மு முருமும் – ஈம், கம், உரும் என்னும் இம் மூன்று சொல்லின் ஈற்றி னின்ற மகர வொற்று, தொழிற்பெயர் மானும் – தொழிற்பெயர் போல உகரம் பெற்று உயிரீற்றுப் புணர்ச்சியாம், முதலன – முதனின்ற ஈமும் கம்மும் என்னும் இவ்விரு சொற்களும், வேற்றுமைக்கு – வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, அவ்வும் பெறுமே – அவ்வீற்று மகரம் அகரச் சாரியையும் பெறும், எ–று.

உ–ம்.:–

ஈமும், கம்மும், உருமும் கடிது, ஞான்றது வலிது ; அழகிது கடுமை, ஞாற்சி, வலிமை, அழகு என உகரம் பெற்று உயிரீற்றுப் புணர்ச்சியாயின. ஈமக்குடம், கம்மக்குடம் என வேற்றுமை அகரச் சாரியை பெற்றன.

## விசாகப் பெருமாளையர்

இது, ஈம் என்பது முதலிய மூன்று – சொற்களுக்கும் மவ் வீறொற் றழிந்தென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ–ள்.:– ஈமுங்கம் முமுருமும் – ஈம் கம் உரும் என்கின்ற மூன்றும், தொழிற்பெயர் மானும் – இருவழியிலுந் தொழிற்பெயர் போல யகர மல்லாத

மெய்கள் வந்தால் உகரச் சாரியை பெற்று முடியும், முதலன—இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங் கம்மும், வேற்றுமைக்கு – வேற்றுமைக்கண், அவ்வும் பெறும் – உகரச் சாரியை யல்லாமலும் அகரச் சாரியையும் பெறும், எ—று.

உ—ம்.:—

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது வலிது எனவும், கடுமை, நீட்சி, வலிமை எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் வரும். மற்றவைகளு மிப்படியே; (ஈம்—சுடுகாடு, கம்—கம்மியரது தொழில், உரும் – இடி.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உகரச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்றுப் புணரும் மகரவீற்றுச் சொற்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஈமுங்,
கம்மு முருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே.
(ஈமும்
கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும்.)

இ—ள்.:— ஈமும் கம்மும் உருமும் தொழிற்பெயர் மானும் – ஈம் கம்உரும் என்னு மூன்று சொல்லும் இருவழியும் முதனிலைத் தொழிற் பெயர்போல யகரமல்லாத மெய்கள்வரின் உகரச்சாரியை பெற்று முடியும்; முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும் – இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங் கம்மும் வேற்றுமைக் கண் உகரச்சாரியை யன்றி அகரச்சாரியையும் பெறும், எ—று.

உ—ம்.:—

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட்சி, வன்மை எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் வரும். (ஈம் – சுடுகாடு. கம்—கம்மியரது தொழில், உரும் – இடி.)

இது "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

உகரச்சாரியையோடு அகரச்சாரியையும் பெற்றுப் புணரும் மகர வீற்றுச் சொற்கள் யாவை?

"முதலன (ஈமுங்கம்மும்) வேற்றுமைக்கவ்வும்பெறுமே."

இச்சூத்திரம் எச்சூத்திரத்தாலெய்திய விதியை விலக்குவது?

"மவ்வீறொற்றழிந்து" என்னும் விதியை விலக்குவது.

மகரவீற்றுப் புணர்ச்சி கூறிய ஐந்து சூத்திரங்களாலும் விதிக்கப்பட்ட விகாரங்கள் எத்தனை?

ஈறுகெடுதல், திரிதல், இயல்பாதல், இயல்பாய் நின்று சாரியை பெறுதல் என்னும் விகாரங்கள் நான்குமாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இந்த மூன்று சொற்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது,

**இ–ள்.:– ஈமுங் கம்மு முருமும்** – இந்த மூன்று சொல்லும், **தொழிற்பெயர் மானும்** – முதனிலைத் தொழிற்பெயர் போல, யவ்வல்லாத மெய்கள் வரின் இருவழியும் உகரச் சாரியை பெற்று முடியும், **முதலன** – இவற்றுள் முதனின்ற ஈமுங் கம்மும், **வேற்றுமைக் கவ்வும் பெறும்** – வேற்றுமைச் சந்தியில் அகரச் சாரியையையும் பெறும், எ–று.

இவற்றுள், கம் என்பது பல பொருளொரு சொல்லாதலால் எந்தப் பொருளை யுணர்த்தி நிற்பினும் இந்த விதி பொருந்துமெனக் கொள்க.

உ–ம்.:–

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை, நீட்சி, வன்மை எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் முறையே காண்க. பிறவுமிப்படியே கொள்க. கம் என்பது கம்மியரது தொழில், அத் தொழிலாற் செய்த குடமென்க. ஈம் என்பது ஈமம் என அம்முச் சாரியை பெற்றுத் தனி மொழியாயுஞ் சுடுகாட்டை யுணர்த்தி நிற்கும். உரும் – இடி, அம்மு, தம்மு, நம்மு, நும்மு, உம்மை எனச் சாரியை இடைச்சொற்கள், உகரமும் ஐகாரமும் பெறுதல் உரையிற் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி.

**உரை :– ஈமும் கம்மும் உருமும்** – 'ஈம்' 'கம்' 'உரும்' என்னும் மூன்று சொற்களும், **தொழிற் பெயர் மானும்** – (இருவழியிலும் முதனிலைத்) தொழிற்பெயர் போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியை பெற்று முடியும்; **முதலன** – (இவற்று) முதலில் நின்ற ஈமும் கம்மும், **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியில், **அவ்வும் பெறும்** – (உகரச்சாரியையேயன்றி) அகரச்சாரியையும் பெறும்.

குறிப்பு :-

(ஈம் – நன்காடு. கம் – கம்மாளரது தொழில். உரும் – இடி.)

உதாரணம் :

ஈம் + கடிது= ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது.
ஈம் + நீண்டது = ஈமுநீண்டது, கம்முநீண்டது, உருமுநீண்டது
ஈம் + வலிது = ஈமுவலிது, கம்முவலிது, உருமுவலிது.

(என அல்வழியில் உகரச்சாரியை பெற்றன).

ஈம் + கடுமை = ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை
ஈம் + நீட்சி= ஈமுநீட்சி, கம்முநீட்சி, உருமுநீட்சி
ஈம் + வன்மை = ஈமுவன்மை, கம்முவன்மை, உருமுவன்மை

(என வேற்றுமையில் உகரச்சாரியை பெற்றன).

ஈம் + குடம்= ஈமக்குடம் முதலன வேற்றுமையில் அகரச்
கம் + குடும் = கம்மக்குடம் சாரியை பெற்றன.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஈமும் கம்மும் உருமும் – ஈம் கம் உரும் என்னு மூன்று சொல்லும், தொழிற்பெயர் மானும்– இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகர மல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பெற்று முடியும், முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும் – இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் பெறும், எ–று.

உ–ம்.:–

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது எனவும், கடுமை –நீட்சி, வன்மை–எனவும், ஈமக்குடம், கம்மக்குடம் எனவும் வரும். (ஈம்–சுடுகாடு, கம்–கம்மியரது தொழில், உரும் – இடி.)

இது "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். ஈமும், கம்மும் உருமும் – ஈம் கம் உரும் என்னு மூன்று சொல்லும், – தொழிற்பெயர் மானும், – இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெற்றுமுடியும், – முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும் – இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமுங் கம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையன்றி அகரச்சாரியையும் பெறும். எ–று.

உ–ம்.:–

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, நீண்டது, வலிது, எனவும். கடுமை, நீட்சி, வன்மை, எனவும். ஈமக்குடம், கம்மக்குடம், எனவும். வரும். (ஈம்–சுடுகாடு, கம்–கம்மியரது தொழில், உரும்–இடி)

கம்மக்குடம் – கம்மியரது தொழிலாற் செய்தகுடம்.

இது 'மவ்வீறொற்றழிந்து' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– (1) **ஈமும் கம்மும் உருமும்** – ஈம் கம் உரும் என்னும் மூன்று சொற்களும், **தொழிற்பெயர் மானும்** – (இருவழியிலும்) முதனிலைத்தொழிற்பெயர் போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியை பெற்று முடியும்; (2) **முதலன** – (இவற்றுள்) முதலில் நின்ற ஈமும் கம்மும், **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியில், **அவ்வும் பெறும்** – (உகரச் சாரியையையே யன்றி) அகரச் சாரியையையும் பெறும்; எ–று. (ஈம்–நன்காடு, கம்–தொழில், உரும் –இடி).

ஈம் +கடிது = ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது,

கம் + நீண்டது = ஈமுநீண்டது கம்முநீண்டது, உருமுநீண்டது

உரும் + வலிது = ஈமுவலிது, கம்முவலிது, உருமுவலிது.
அல்வழி

ஈம் + கடுமை = ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை
– வேற்றுமை

கம் + நீட்சி = ஈமுநீட்சி, கம்முநீட்சி, உருமுநீட்சி

உரும் + வன்மை = ஈமுவன்மை , கம்முவன்மை, உருமுவன்மை

– என இருவழியிலும் உகரச்சாரியை பெற்றன.

(2) ஈம் + குடம் = ஈமக்குடம் – முதலன வேற்றுமையில் அகரச் சாரியைப் பெற்றன.

கம்+ குடம் = கம்மக்குடம்

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— ஈமும் கம்மும் உருமும் — ஈம் கம் உரும் என்னும் மூன்று சொல்லும், தொழிற்பெயர் மானும் — இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெற்று முடியும்; முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறும் — இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமும் கம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியை யன்றி அகரச்சாரியையும் பெறும். எ—று.

உ—ம்.:—

ஈம் + கடிது = ஈமுக்கடிது.

கம் + நூண்டது = கம்முநீண்டது.

உரும் + வலிது = உருமுவலிது.

என— அல்வழியிலும்,

ஈம் + நீட்சி = ஈமுநீட்சி.

கம் + வன்மை = கம்முவன்மை.

உரும் + கடுமை = உருமுக்கடுமை. — என வேற்றுமையிலும் உகரச்சாரியை பெற்றன.

ஈம் + குடம் = ஈமக்குடம்.

கம் + குடம் = கம்மக்குடம். — என ஈமும் கம்மும் வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.

(ஈம் — சுடுகாடு. கம் — கம்மியரது தொழில். உரும் — இடி.)

இது — ‘‘மவ்வீறொற்றழிந்து’’ என்னும், 219 — ஆவது சூத்திரத்தால் எய்திபது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) ஈமும் கம்மும் உருமும் — ஈம் கம் உரும் என்னும் மூன்று சொல்லும், தொழிற்பெயர் மானும் — (இருவழியிலும்) தொழிற் பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும்;

(2) முதலன — இவற்றுள்ளே முதற்கணின்ற ஈமும் கம்மும், வேற்றுமைக்கு — வேற்றுமைக்கண், அவ்வும் பெறும் — (உகரச் சாரியையே யன்றி) அகரச் சாரியையும் பெறும்.

உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) ஈம் | + | கடிது | = | ஈமுக்கடிது | |
| | + | நீண்டது | = | ஈமுநீண்டது | |
| | + | வலிது | = | ஈமுவலிது | |
| கம் | + | கடிது | = | கம்முக்கடிது | |
| | + | நீண்டது | = | கம்முநீண்டது | அல்வழி |
| | + | வலிது | = | கம்முவலிது | |
| உரும் | + | கடிது | = | உருமுக்கடிது | |
| | + | நீண்டது | = | உருமுநீண்டது | |
| | + | வலிது | = | உருமுவலிது | |

எனவும்,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈம் | + | கடுமை | = | ஈமுக்கடுமை | |
| | + | நீட்சி | = | ஈமுநீட்சி | |
| | + | வன்மை | = | ஈமுவன்மை | |
| கம் | + | கடுமை | = | கம்முக்கடுமை | |
| | + | நீட்சி | = | கம்முநீட்சி | வேற்றுமை |
| | + | வன்மை | = | கம்முவன்மை | |
| உரும் | + | கடுமை | = | உருமுக்கடுமை | |
| | + | நீட்சி | = | உருமுநீட்சி | |
| | + | வன்மை | = | உருமுவன்மை | |

எனவும் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) ஈம் | + | குடம் | = | ஈமக்குடம் |
| கம் | + | குடம் | = | கம்மக்குடம் |

என வேற்றுமையில் அகரச் சாரியை பெற்றன.

ஈம் = சுடுகாடு. கம் = கம்மியரது தொழில். உரும் = இடி.

## மோசசு பொன்னையா

ஈம், கம், உரும் என்னும் மூன்று சொற்களும் இருவழியும் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வரின், உகரச் சரியை பெற்று முடியும்; இவற்றுள் முதற்கண் நின்ற ஈம், கம் என்பன வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியை பெறுவது மல்லாமல் அகரச்சாரியை பெறுவதும் உண்டு, எ–று.

எ–டு.:–

ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது,

ஈமுக்கடுமை, கம்முக்கடுமை, உருமுக்கடுமை – இருவழியும் உகரச்சாரியை பெற்று முடிந்தன.

ஈமக்குடம், கம்மக்குடம் – வேற்றுமையில் அகரச்சாரியை

பெற்று முடிந்தன.

ஈம் – சுடுகாடு; கம் – கம்மியர் தொழில்; உரும் – இடி.

(19)

223. யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்

ய ர ழ முன்னர்க் க ச த ப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதி மேல்

ya ra ḷa muṉṉark ka sa ṭa pa alvaḷi
iyalpum mikalum ākum vēṟṟumai
mikalum iṉaṭṭōtu uṟaḷṭalum viṭi mēl

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH Y,R, AS FINAL

### Hard consonant after consonant final y,r,l

In **Incasual** combination, the hard initials are un-doubled after some words ending in y,r and l, and doubled after some others (ending in the same finals); in **casual** combination, they are doubled after some, while after others, they either double themselves or insert a kindred nasal (before them). This is the rule.

## ஒப்புமைப் பகுதி

யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே

(தொல்.: 358)

மெல்லெழுத் துறழூஉம் மொழியுமா ருளவே

(தொல்.: 361)

அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப

(தொல்.: 362)

ரகார இறுதி யகார இயற்றே

(தொல்.: 363)

ழகார இறுதி ரகார இயற்றே

(தொல்.: 384)

...................... யரழக்கள்
நிற்கப்பின் வல்லெழுத்து நேருமேல் –ஒற்றாம்
பிணைந்த வருக்கம் பெயர்த்தியல்பு...........

(நேமி.: 15:2–4)

...................... யவ் வோடு ரழ
ஈறா வரில்வன்மை பின்பில்வர்க் கத்தொற் றிடைப்படுமே.

( வீர.: 14:3–4)

யரழ முன்னர்க் கசதப வல்வழி
யியல்பு மிகலும் ஆகும் வேற்றுமை
மிகலும் மினத்தோ டுறழ்தலும் விதிமேல்

(இ.வி.: 133)

வேற்றுமை யல்வழி யகரவீ றியல்பே

(மு.வீ.: 343)

இயல்பாந் தாய்வேற் றுமைவழி யென்ப

(மு.வீ.: 344)

மெல்லினம் உறழ்தரும் மொழிகளு முளவே

(மு.வீ.: 346)

சிறப்பு ழகரமெய் யிருவழி யினுமிகும்

(மு.வீ.: 368)

யரழமுன் வலிவரின் அல்வழிக்கு இயல்பும்
அடைமொழிக் காக்கமும்அவை வேற்றுமைக்கண்
மிகலும் தன்னின மெய்யெய் தலுமாம்

(தொ.வி.: 30)

## மயிலை நாதர்

எ–ன், யரழவீறு வல்லினத்தோடு புணருமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இம் மூன்றீற்று மொழி முன்னும் கசதப வென்னும் நான்கும் வந்தால் அல்வழிக்கண் இயல்பாவனவும் மிகுவனவும் ஆம். வேற்றுமைக்கண் மிகுவனவும் தம்மினமான மெல்லெழுத்துக்களுடன் உறழ்வனவும் ஆம், எ–று.

வ—று.:—

(நாய், தேர், பூழ்) + (கடிது, சிறிது, தீது, பெரிது) என இயல்பாயின. [1]மெய்க்கீர்த்தி, பொய்ச்சொல், மெய்த்தெய்வம், நோய்ப்பகை, வேய்த்தோள், போய்க்கொண்டான், தாய்ச் சென்றான் எனவும்; கார்ப்பருவம், நீர்ப்பொருள் எனவும்; பாழ்க்கொல்லை; சாலை, தலை, பயிர், எனவும் அல்வழிக்கண் மிக்கன. (நாய், தேர், பூழ்) + ([2]கால், செவி, தலை,புறம்) என வேற்றுமைக்கண் மிக்கன. வேய்க்குறை —வேய்ங்குறை, வேர்க்குறை வேர்ங்குறை — வீழக்குறை, வீழ்ங்குறை, (வேய், வேர், வீழ்) + (சிறை, தலை, புறம்) எனவும், ஆர், வெதிர், பீர், துவர், குதிர், அவிர், சார் என்பன ஆர்க்கோடு ஆர்ங்கோடு ......சார்க்கோடு சார்ங்கோடு [3]எனவும் வேற்றுமைக்கண் உறழ்ந்தன.

'மேல்' என்றதனால் வேற்றுமைக்கண், "வாய்புகுவதனினுங் கால் பெரிது கெடுக்கும்", "தூங்குதோற்றுதிய [4]வள்ளுகிர் கதுவலின்" என்றற் றொடக்கத்து இயல்பும், பாழானகிணறு பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு என்றற்றொடக்கத்து அல்வழி யுறழ்வும் பிறவும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், யரழ மெய்யீற்று முன் க ச த பக்கள் புணருமாறு உணர்—ற்று.

இ—ள்.:— இம்மூன்று ஈற்றின் முன்னும் கசத பக்கள் வரின் அல்வழிக்கண் இயல்பாதலும் மிகுதலும், வேற்றுமைக்கண் மிகுதலும் வல்லினமாதல் மெல்லினமாதல் மிகுதலும் விதிபாம், எ—று.

உ—ம்.:—

வேய் கடிது, வேர்கடிது, வீழ்கடிது எனவும்; மெய்க்கீர்த்தி, போய்க்கொண்டான், கார்ப்பருவம், பூழ்ப்பறவை எனவும்; நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால் எனவும்; வேய்க்குழல்,

---

பாடவேறுபாடு .:—

1.மெய்க்கதி, மெய்ச்சொல்

2.கடி, செய்கை

3.என முறையே உறழ்ந்தன.

4. (1) வள்ளுகிர்தூவின,
(2) வள்ளுகிர் தாவின.

வேய்ங்குழல், ஆர்க்கோடு, ஆர்ங்கோடு எனவும் முறையே வந்தன. பிறவும் அன்ன.

மேல் என்ற மிகையானே, "வாய்புகு வதனினும் கால் பெரிது கெடுக்கும்" என வேற்றுமைக்கண் இயல்பாதலும், பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகைக்கண் உறழ்தலும் இன்னும் அமையாதன உளவேல் அவையுங் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், யரழ ஒற்றுறீ வல்லினத்தோடு புணருமாறு கூறியது.

**இ-ள்.:- யரழ முன்னர்**-நிலைமொழி ஈறாக நின்று யரழ என்னும் இம் மூன்றீற்று முன்னரும், **க ச த ப** - வருமொழி முதல் க ச த பக்கள் வந்தால், **அல்வழி** - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, **இயல்பும் மிகலும் ஆகும்** - இயல்பாய் முடிவனவும் மிகுமெனவுமாம், **வேற்றுமை மிகலும்** - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணே மிகுவனவும், **இனத்தோ டுறழ்தலும் விதிமேல்** - தம்மின மெல்லெழுத்துக்களோடு உறழ்ந்து வருவனவும் உள, எ-று.

உ-ம்.:-

நாய், தேர், பூழ்: கடிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின.

மெய்க்கீர்த்தி, பொய்ச்சொல், மெய்த்தெய்வம், நோய்ப்பகை எனவும் கார்ப்பருவம் எனவும் பாழ்க்கொல்லை, சாலை, தலை, பயிர் எனவும் அல்வழிக்கண் மிக்கன. நாய், தேர், பூழ்: கால், செலவு, தலை, புறம் என வேற்றுமைக்கண் மிக்கன. வேய்க்குறை வேய்ங்குறை வேர்க்குறை, வேர்ங்குறை.

வீழ்க்குறை வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஒட்டி வேற்றுமைக்கண் உறழ்ந்து வந்தது காண்க.

## விசாகப் பெருமாளையர்

**இது**, யரழ மெய்யீற்று முன் கசதபக்கள் புணருமாறு உணர்த்துகின்றது.

**இ-ள்.:** யரழ முன்னர் - யகர ரகர ழகர மெய்களின் முன், **கசதப** - ககர சகர தகர பகரங்கள் வரின், **அல்வழி** - அல்வழியில், **இயல்பும்** - இயல்பாதலும், **மிகலும்** - மிகுதலும், **வேற்றுமை** - வேற்றுமையில், **மிகலும்**-மிகுதலும், **இனத்தோடுறழ்தலும்** - வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், **விதியாகும்**- விதியாகும், எ-று.

**உ-ம்.:-**

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது எனவும்; மெய்க்கீர்த்தி,

கார்ப்பருவம், பூழ்ப்பறவை, எனவும்; அல்வழியில் இயல்பு மிகலுமாயின. நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால் எனவும்; வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு, ஆர்க்கோடு எனவும் வேற்றுமையின் மிகுந்தும் உறழ்ந்தும் வந்தன. மற்றவைகளு மிப்படியே. (மேலென்ற மிகையால் வாயப்புகுவதனினும் என வேற்றுமையி லியல்பாதலும் பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு, எனப் பண்புத்தொகையி லுறழ்தலும் இன்னும் அடங்காதவைக ளிருந்தால் அவைகளுங் கொள்க).

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

யகர ரகர ழகர வீறுகள் வன்கணத்தோடு புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும், வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.
(ய ர ழ முன்னர்க் க ச த ப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும் வேற்றமை
மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதி மேல்.)

இ–ள்.:– ய ர ழ முன்னர் – யகர ரகர ழகர மெய்களின் முன், க ச த ப – கரக சகர தகர பகரங்கள் வரின், அல்வழி இயல்பும் மிகலும் ஆகும் – அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும், **வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதி** – வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும், எ–று.

அல்வழியில் யரழ வொற்றின்முன் வல்லினம் வரின் எவ்வாறாம்?

"யரழ முன்னர்க் க ச த ப வல்வழி, இயல்பு மிகலுமாகும்"

வேற்றுமையில் யரழ வொற்றின்முன் வல்லினம் எவ்வாறாம்?

"வேற்றுமை மிகலுமினத்தோ டுறழ்தலும் விதிமேல்"

யரழ முன்னர் வல்லினம் புணருமாறு கூறி மற்றைக் கணங்கள் புணருமாறு கூறாத தென்னை?

ஏனைக்கணங்கள் புணரும்போது இயல்பா மென்பது "எண்மூவெழுத்தீற்று" என்னுஞ் சூத்திரத்தாற்கூறப்பட்டமையின் வல்லினமாத்திரங் கூறப்பட்டது.

அல்வழி இயல்பு மிகுதி இரண்டனுள், இயல்பு, எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலுங் கொள்ளப்படும். ரகர வீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ–ம்.:–

(1) வேய் குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது, என எழுவாய்த் தொடரிலும், பேய் பூதம், நீர்கனல், இகழ் புகழ், என உம்மைத்தொகையிலும், செய்கடன், தேர் பொருள், வீழ்புனல் என வினைத்தொகையிலும், உண்ணியர் போவான், என வினையெச்சத்தின் முன்னும் இயல்பாயின. பொய்க்கீர்த்தி, கார்ப் பருவம், பூழ்ப்பறவை எனவும், வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம் எனவும், போய்க்கொண்டான் எனவும், பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

(2) நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச்செவி, என வேற்றுமையில் மிகுந்தன. வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன.

மேல் என்ற மிகையால், 'வாய்புகுவதனினும்' என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு, எனப் பண்புத்தொகையில் உறழ்தலும், காய் – யாது – காயாது, நோய் – யானை – நோயானை, எனத் தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழி யிறுதி யகரங்கெடுதலும், மகிழம்பூ, மகிழங்கோடு, என வருவனவும் இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவைகளுங்கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ய ர ழக்கள் க ச த பக்களோடு புணருஞ் செய்கை கூறுகின்றது

இ–ள்.: யரழ முன்னர்–இந்த மூன்று ஒற்றுக்களின் முன்னும், கசதப – இந்த நான்கு மெய்களும் வந்து புணரின், **அல்வழி** – அல்வழிச் சந்தியில், **இயல்பு மிகலு மாகும்** – இயல்பாய் முடிதலும் மிக்கு முடிதலுமாம், **வேற்றுமை** – வேற்றுமைச் சந்தியில், **மிகலும்** – மிக்கு முடிதலும், **இனத்தோ டுறழ்தலும் விதி** – வந்த வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிக்கு விகற்பித்தலும் விதியாம், எ–று.

விதி–இலக்கணம்.

உ–ம்.:–

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது, சிறிது, தீது, பெரிது என இயல்பாயின. மெய்க்கீர்த்தி, போய்க்கொண்டான், கார்ப்பருவம், பூழ்ப்பறவை என மிக்கன. இவை அல்வழி, நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால் என வேற்றுமையில் மிக்கன. வேய்க்குழல்

– வேய்ங்குழல், ஆர்க்கோடு– ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன. பிறவுமிப்படிக் காண்க. மேலென்ற மிகையினாலே, வாய்புகுவதனினும் என வேற்றுமையில், இயல்பாதலும், பாழ்க்கிணறு–பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் விகற்பித்தலும், பீர்ங்கொடி – பீரங்கொடி; குமிழ்ங்கோடு – குமிழங்கோடு என ரகர ழகரவீறுகள் வேற்றுமையில் மெல்லெழுத்தும் அம்மும் பெற்றுறழ்தலும், வேயாது – வேயாப்பு என யகரவீறு, யகரத்தின் முன் இருவழியுங் கெடுதலும் இன்னும் அமையாதன வுளவாயின் அவையுங் கொள்க. பாழ்க்கிணறு – பாழங்கிணறு என்பதைப் பாழினுட்கிணறு எனப் பொருள் கூறி வேற்றுமையில் உறழ்ந்தன வென்பாருமுண்டு. உறழ்தல் – விகற்பித்தல்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :–** யரழ முன்னர் – யகர ரகர ழகர மெய்களின் முன், **கசதப** – ககர சகர தகர பகரங்கள் வந்தால், **அல்வழி** – அவ்வழியில், **இயல்பும்** – இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும்; **வேற்றுமை** – வேற்றுமையில், **மிகலும்** – மிகுதலும், **இனத்தோடு உறழ்தலும்** – வல்லினமாவது மெல்லினமாவது மிகுந்து விகற்பித்தலும், **விதி ஆகும்** – இலக்கணமாம்.

குறிப்பு :–

அல்வழியில் எழுவாய்த்தொடர், உம்மைத்தொகைகளில் இயல்பும்; பண்புத்தொகை உவமத் தொகைகளில் மிகுதலுமாம் என்றறிக. யகரவீற்று வினையெச்சத்தின் முன் வலிமிகுதலும், ரகரவீற்று வினை யெச்சத்தின்முன் வலி இயல்பாதலும் கொள்க.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| வேய் | + கடிது | = வேய்கடிது. |
| வேர் | + சிறிது | = வேர்சிறிது. |
| வீழ் | + தீது | = வீழ்தீது. |

மெய்+கீர்த்தி=மெய்க்கீர்த்தி.

| | | |
|---|---|---|
| கார் + | பருவம் | = கார்ப்பருவம். |
| யாழ்+ | கருவி | = யாழ்க்கருவி. |

(என அல்வழியில் இயல்பும் மிகலுமாயின.)

| | | |
|---|---|---|
| நாய் | + கால் | = நாய்க்கால். |
| தேர் | + தட்டு | = தேர்த்தட்டு. |

ஊழ் + பயன் = ஊழ்ப்பயன். – வேற்றுமையில் வலிமிக்கது.

வேய் +குழல்வேய்க்குழல், வேய்ங்குழல்
ஆர் +கோடு –ஆர்க்கோடு, ஆர்ங்கோடு

வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன்.

குமிழ் +கோடு – குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு

'மேல்' என்றதனால் – வாய் + புகுவது = 'வாய் புகுவது' எனவேற்றுமையில் இயல்பாதலும்; பாழ் + கிணறு = 'பாழ்க்கிணறு' பாழ்ங்கிணறு' என அல்வழியில் விகற்பித்தலும்; வேய் + யாது = 'வே யாது', வேய் + யாப்பு = 'வேயாப்பு' எனத் தனிக்குறிலைச்சாராத யகரவீறு யகரத்தின் முன் இருவழியிலுங் கெடுதலும்; இன்னும் அடங்காதவைகள் இருக்கின் அவையுங்கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: யரழ முன்னர் க ச த ப – யகர ரகர ழகர மெய்களின் முன் ககர சகர தகர பகரங்கள் வரின், **அல்வழி இயல்பும் மிகலும்** – அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும், **வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும்** – வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், **விதி ஆகும்**– விதியாகும், எ–று.

அல்வழி யியல்பு மிகுதி யிரண்டனுள் இயல்பு எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை வினைத்தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத்தொகைகளிலுங் கொள்ளப்படும். யகர வீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்; ரகர வீற்று வினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

உ–ம்.:–

(1) வேய்குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது எனவும், பேய்பூதம், நீர்கனல், இகழ்புகழ் எனவும் செய்கடன், தேர்பொருள், வீழ்புனல் எனவும், உண்ணியர் போவான் எனவும் எழுவாய்த் தொடர் முதலியவற்றில் இயல்பாயின. மெய்க்கீர்த்தி, கார்ப் பருவம், பூழ்ப்பறவை, எனவும் வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம் எனவும், போய்க்கொண்டான் எனவும் பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

(2) நாய்க்கால், தேர்த்தலை,பூழ்ச்செவி என வேற்றுமையில் மிகுந்தன. வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு, ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோ டுறழ்ந்தன.

'மேல்' என்ற மிகையால், வாய்புகுவதனினும் என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் உறழ்தலும், காய்+யாது = காயாது; நோய்+யானை = நோயானை எனத் தனிக் குறிலைச் சாராத யகரத்தின் முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழி யிறுதி யகரங் கெடுதலும், இன்னும் அடங்காதவைக ளிருந்தால் அவைகளுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள்.;- யரழ முன்னர்க் கசதப** - யகர ரகர ழகர மெய்களின் முன் ககர சகர தகர பகரங்கள் வரின், - **அல்வழி இயல்பும் மிகலும்** - அவ்வழியில் இயல்பாதலும் மிகுதலும். - **வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும்,** - வேற்றுமையில் மிகுதலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், - **விதி (ஆகும்)** - விதியாகும். **எ-று.**

அல்வழியியல்பு மிகுதியிரண்டனுள் இயல்பு எழுவாய்த் தொடர் உம்மைத் தொகை வினைத் தொகைகளிலும், மிகுதி பண்புத் தொகை உவமைத் தொகைகளிலுங் கொள்ளப்படும். யகரவீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்; ரகரவீற்று வினையெச்சத்தின்முன் வரும் வல்லினம் இயல்பாம்.

**உ-ம்:-**

(1). வேய் குறிது, வேர்சிறிது, யாழ்பெரிது, எனவும். பேய்பூதம் நீர் கனல், இகழ்புகழ், எனவும். செய்கடன், தேர்பொருள், வீழ்புனல், எனவும். உண்ணியர் போவான். எனவும். எழுவாய்த் தொடர்முதலியவற்றில் இயல்பாயின. மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், பூழப்பறவை. எனவும் வேய்த்தோள், கார்க்குழல், காழ்ப்படிவம். எனவும் போய்க்கொண்டான் எனவும் பண்புத்தொகை முதலியவற்றில் மிகுந்தன.

(2) நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச்செவி என வேற்றுமையில் மிகுந்தன. வேய்க்குழல், வேய்ங்குழல், ஆர்க்கோடு, ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடுறழ்ந்தன. மேல் என்றமிகையால், வாய்புகுவதனினும் என வேற்றுமையில், இயல்பாதலும், பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் உறழ்தலும், காய்+யாது=காயாது. நோய் + யானை = நோயானை எனத் தனிக்குறிலைச் சாராத

யகரத்தின்முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழியிறுதி யகரங்கெடுதலும், இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவைகளுங் கொள்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியர்

இ–ள்.:– (1) ய ர ழ முன்னர் – யகர ரகர ழகர மெய்களின் முன், க ச த ப – ககர சகர தகர பகரங்கள் வந்தால், அல்வழி – அல்வழியில், இயல்பும் – இயல்பாதலும், மிகலும் – மிகுதலும்; (2) வேற்றுமை –வேற்றுமையில், மிகலும் – மிகுதலும், இனத்தொடு உறழ்தலும் – வல்லினமாவது மெல்லினமாவது மிகுந்து விகற்பித்தலும், விதி ஆகும் –; எ–று.

உ–ம்.:–

(1) வேய் + கடிது =வேய்கடிது – மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி

வேர் + சிறிது = வேர்சிறிது – கார் + பருவம் = கார்ப்ருவம்

வீழ் + தீது =வீழ்தீது – யாழ் + கருவி =யாழ்க்கருவி

என அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.

(2) நாய் + கால் = நாய்க்கால் – வேற்றுமையில் வலிமிக்கது

தேர் + தட்டு = தேர்த்தட்டு

ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்

வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல் – வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு

குமிழ் + கோடு = குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு

'மேல்' என்ற மிகையால் வாய் + புகுவது = வாய்புகுவது என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்+கிணறு = பாழ்க்கிணறு – பாழ்ங்கிணறு என அல்வழியில் இனத்தோடு உறழ்தலும்; வேய்+யாது = வேயாது, வேய் + யாப்பு = வேயாப்பு எனத் தனிக்குறிலைச்சாராத யகரவீறு யகரம் வர இருவழியிலும் கெடுதலும், இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவையும் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **ய ர ழ முன்னர்க் க ச த ப** – யகர ரகர ழகர மெய்களின் முன் ககர சகர தகர பகரங்கள் வரின், **அல்வழி இயல்பும் மிகலும்**– அல்வழியில் இயல்பாதலும் மிகுதலும், **வேற்றுமை மிகலும் இனத்தோடு உறழ்தலும்** – வேற்றுமையில் மிகதுலும் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், **விதி ஆகும்** – விதியாகும். எ–று.

அல்வழி யியல்பு மிகுதி யிரண்டனுள், இயல்பு எழுவாய்த் தொடர் உம்மைத் தொகை வினைத் தொகைகளிலும், மிகுதி பண்புத் தொகை உவமைத் தொகைகளிலுங் கொள்ளப்படும். யகரவீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்; ரகர வீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ–ம்.:–

(1) வேய் + குறிது = வேய்குறிது (எழுவாய்.)

சீர் + சிறப்பு = சீர்சிறப்பு (உம்மை.)

வீழ் + புனல் = வீழ்புனல் (வினை.)

உண்ணியர் + போவாள் = உண்ணியர் போவான் (எச்சம்.) – என அல்வழியில் இயல்பாயின.

மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி (பண்பு.)

கார் + குழல் = கார்க்குழல்

காழ் + படிவம் = காழ்ப்படிவம் – (உவமை.)

போய் + சொன்னான் = போய்ச் சொன்னான் (எச்சம்) – என அல்வழியில் மிகுந்தன.

(2) நாய் + கால் = நாய்க்கால்

தேர் + தட்டு = தேர்த்தட்டு

ஊழ் + பயன் = ஊழ்ப்பயன் – வேற்றுமையில் வலி மிக்கது.

வேய் + குழல் = வேய்க் குழல், வேய்ங் குழல்.

ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு.

குமிழ் + கோடு = குமிழ்க்கோடு, குமிழ்ங்கோடு – என வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

'மேல்' என்ற மிகையால், வாய்புகுவது என வேற்றுமையில்

இயல்பாதலும், பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு எனப் பண்புத் தொகையில் உறழ்தலும், காண் + யாது = காயாது, நோய் + யானை = நோயானை எனத் தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின் இருவழியும் நிலைமொழி யிறுதி யகரங் கெடுதலும், இன்னும் அடங்காதவைகளிருந்தால் அவைகளுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– **ய ர ழ முன்னர்** – யகர ரகர ழகர மெய்களின்முன், **க ச த ப** – ககர சகர தகர பகரங்கள் வரின், **அல்வழி** – அல்வழியில், **இயல்பும்** – இயல்பாதலும், **மிகலும்** – மிகுதலும், **வேற்றுமை** – வேற்றுமையில், **மிகலும்** – மிகுதலும், **இனத்தோடு உறழ்தலும்** – வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், **விதி ஆகும்** – விதியாகும். எ–று.

**பொ–ரை.:–** யரழ ஆகிய மூன்று மெய் ஈற்றின் பின்னும், கசதபக்கள் வந்தால் அலவழியில் இயல்பாதலும், மிகுதலும், வேற்றுமையில் மிகுதலும், வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதி ஆகும்.

அல்வழி இயல்பு மிகுதி இரண்டனுள், இயல்பு – எழுவாய்த் தொடர், உம்மைத்தொகை, வினைத்தொகைகளிலும்; மிகுதி – பண்புத்தொகை, உவமைத் தொகைகளிலும் கொள்ளப்படும்.

உ–ம்.:–

வேய் + கடிது = வேய்கடிது.

வேர் + கடிது = வேர்கடிது.

வீழ் + கடிது = வீழ்கடிது.

இவற்றோடு சிறிது, தீது, பெரிது என்பவற்றை முறையே சேர்த்து இயல்பாதல் காண்க.

மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி.

கார் + பருவம் = கார்ப்பருவம்.

பூழ் + பறவை = பூழ்ப்பறவை என மிக்கன.

அல்வழியில் இயல்பு மிகலும் ஆயின.

நாய் + கால் = நாய்க்கால்.

தேர் + கால் =தேர்க்கால்.

பூழ் + கால் = பூழ்க்கால் என வேற்றுமையில் வலி மிக்கன.

வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்.

ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு என வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.

'மேல்' என்ற மிகையால், வாய் + புகுவது = வாய்புகுவது என வேற்றுமையில் இயல்பாதலும், பாழ்+கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் விகற்பித்தலும், பீர்+கொடி=பீர்ங்கொடி, பீரங்கொடி, குமிழ்+கோடு=குமிழ்ங் கோடு, குமிழங்கோடு என ரகர ழகர வீறுகள் வேற்றுமையில் மெல்லெழுத்தும் அம்மும் பெற்று உறழ்தலும், வேய் + யாது=வேயாது, வேய் + யாப்பு = வேயாப்பு என யகரவீறு யகரத்தின் முன் இருவழியுங் கெடுதலும், இன்னும் அமையாதன வுளவாயின் அவையுங் கொள்க. பாழ்க்கிணறு – பாழ்ங்கிணறு என்பதைப் பாழினுட் கிணறு எனப் பொருள் கூறி, வேற்றுமையில் உறழ்ந்தன வென்பாரு முண்டு. (உறழ்தல் – விகற்பித்தல். பாழி–ஊர்.)

## கா.நமச்சிவாய முதலியார்

(1) ய ர ழ முன்னர் – யகர ரகர ழகர மெய்களின்முன், க ச த ப – ககர சகர தகர பகரங்கள் வரின், அல்வழி – அல்வழியில், இயல்பும் – இயல்பாதலும், மிகலும் ஆகும் – மிகுதலும் ஆகும்;

(2) வேற்றுமை – வேற்றுமையில், மிகலும் – மிகுதலும், இனத்தோடு உறழ்தலும் – வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதி – விதியாகும்.

**உதாரணம்**

| | | | |
|---|---|---|---|
| (1) | வேய் + | கடிது | = வேய்கடிது |
| | வேர் + | சிறிது | = வேர்சிறிது |
| | வீழ் + | தீது | = வீழ்தீது |
| | மெய் + | கீர்த்தி | = மெய்க்கீர்த்தி |
| | கார் + | பருவம் | = கார்ப்பருவம் |
| | யாழ் + | கருவி | = யாழ்க்கருவி |

என அல்வழியில் இயல்பும் மிகலும் ஆயின.

## மோசசு பொன்னையா

யரழ என்னும் ஒற்றுக்களால் இறும் சொற்கள் முன்னர்க் கசதபக்களில் யாதானுமொன்றை முதலாகக் கொண்ட மொழிகள் வந்து புணரின்,

அல்வழிக்கண் இயல்பாதலும், மிகுதலும், வேற்றுமைக்கண் மிகுதலும், வல்லினமோ மெல்லினமோ மிகுதலும் விதியாகும், எ–று.

எ–டு.:–

வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது – அல்வழிக்கண் இயல்பாயின.

மெய்க்கீர்த்தி, போய்க்கொண்டான்

கார்ப்பருவம், பூழ்ப்பறவை – அல்வழிக்கண் மிக்கன.

நாய்க்கால், தேர்க்கால், பூழ்க்கால் – வேற்றுமைக்கண் மிக்கன.

வேய்க்குழல், வேய்ங்குழல்,

ஆர்க்கோடு, ஆர்ங்கோடு. – வேற்றுமைக்கண் உறழ்ந்தன.

மேல் என்ற மிகையால், வாய்புகுவது என வேற்றுமைக்கண் இயல்பாதலையும்; பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு என அல்வழிக்கண் உறழ்ந்து முடிதலையும்; வேயாது; வேயாப்பு எனத் தனிக்குறிலைச் சாராத யகரவீறு இருவழியுங் கெட்டு முடிதலையும் பிறவற்றையும் முடிக்க.

தொல்காப்பியர்,

*'யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்*
*வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே'*

எனவும்,

*அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப*

எனவும்,

*'ரகார இறுதி யகார இயற்றே'*

எனவும்,

*'ழகார இறுதி ரகார இயற்றே'*

எனவும் விதித்துள்ள வாற்றால் யரழ முன்னர்க் கசதபக்கள் அல்வழியில் இயல்பாதலே கொண்டார் என்பது போதரும்.

*வீரசோழிய ஆசிரியர்,*

*'.............................. யவ்வோடுரழ*
*ஈறா வரின்வன்மை பின்பில்வர்க் கத்தொற்*
*றிடைப்படுமே'*

எனப் பொதுவாகக் கூறினார். அதன் உரைகாரர், 'யகார, ரகார,

ழகார, ஒற்று ஈற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், இடையே வந்த அவ்வவ் வல்லொற்றும் வல்லின வருக்கவொற்றும் மிக்கு முடியும்' என உரை கூறினார். இவ்வாசிரியரும், தங்கால வழக்கு நோக்கி அல்வழியில் யரழக்கள் மிக்கு முடிதற்கும் விதியமைத்தார்.

(21)

224. தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே.

தமிழ் அ உறவும் பெறும் வேற்றுமைக்கே
தாழும் கோல் வந்து உறுமேல் அற்றே.

ṭamiḷ a uṟavum peṟum vēṟṟumaikkē
ṭāḷum kōl vanṭu uṟumēl aṟṟē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for tamil and tal

When tamil combines casually (with any initial), it may also add to itself (the increment) a; and **tal** may do likewise, when it combines with **kol**.

## ஒப்புமைப் பகுதி

தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்

(தொல்.: 385)

தமிழென் கிளவியும் அதனோ ரற்றே

(தொல்.: 386)

தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே

(இ.வி.: 134)

தமிழ்வேற் றுமைக்கு அச்சாரவும் பெறுமே

(தொ.வி.:34)

தாழ்முன் கோல்வரி னக்கொடு சிவணும்

(மு.வீ.:371)

தமிழு மவற்றோ ரற்றா கும்மே

(மு.வீ. 372)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: தமிழென்னு மொழி வேற்றமைக்கண் அகரம் [1]பெறும். தாழென்னு மொழியும் கோலென்பது வரின் அகரம் [2]பெறும், எ–று.

வ–று.:–

தமிழ்ப்பல்லவதரையர், தமிழக்கூத்து; சேரி, தோட்டம், பிள்ளை எனவும், தாழக்கோல் எனவும் வரும்.

உம்மையால், தமிழ்க்கூத்து, தாழ்க்கோலெனவும் வருமென்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இவ்விரு சொற்கும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ–ள்.: தமிழ் என்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியைப் பொருந்தவும் பெறும்; தாழ் என்னும் சொல்லும், கோல் என்னும் சொல் வந்து பொருந்துமாயின் அவ் அகரச் சாரியையைப் பெறும், எ–று.

தமிழிற்கு வருமொழி வரையாமையின், நாற்கணமும் என்றாம்.

உ–ம்.:–

தமிழ்ப் பல்லவதரையர், தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன் எனவும்; தாழக்கோல் எனவும் வரும். பிறவும் அன்ன.

---

பாடவேறுபாடு .:–

1.பெறவும்

2.பெறவும் உரிய

அவ்வுறவும் என்னும் எதிரதுதழீஇய எச்சவும்மையானே தமிழின் சுவை என இன் சாரியை பெறுதலும் கொள்க.

தமிழையுடைய பல்லவதரையர், தாழைத் திறக்கும் கோல் என விரியும். தாழக்கோல் எனினும் திறவுகோல் எனினும் அமையும். தாழாயகோல் என ஒருபொருட்கு இருபெயரொட்டாக்கலும் ஒன்று.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தமிழ் தாழ் என்னும் ழகர வீற்றுச் சொல் விகாரம் கூறியது.

இ–ள்.: **தமிழ்** – நிலைமொழி தமிழென்னும் ழகரவீற்றுச் சொல், **அவ்வுறவும் பெறும்** – அகரச் சாரியை பெறுதலுமுள, **தாழும்** – தாழென்னும் ழகர வீற்றுச் சொல்லும், **கோல் வந்துறுமேல்** – கோலென்னும் சொல் வந்து புணருமாயின், **அற்றே** – தமிழ்ப் போல் அகரச் சாரியை பெறும், எ–று.

**உ–ம்.:–**

தமிழப்பல்லவ தாசா, தமிழக்கூத்து, சேரி, தோட்டம், பிள்ளை எனவும்; தாழக்கோல் எனவும் வரும்.

உம்மையால் தமிழ்க்கூத்து, தாழ்க்கோல் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, தமிழ் தாழ் என்கிற விருசொற்களுக்கும் எய்தாத தெய்துவிக்கின்றது.

இ–ள்.:– **தமிழ்** – தமிழென்கிற சொல், **வேற்றுமைக்கு** – வேற்றுமைக்கண்ணே நாற்கணமும் வந்தால், **அவ்வுறவும்** – அகரச் சாரியை பொருந்தவும், **பெறும்** – பெறும், **தாழும்** – தாழென்னுஞ் சொல்லும், **கோல்** – கோலென்னுஞ் சொல்லானது, **வந்து** – வந்து, **உறுமேல்** – பொருந்துமாயின், **அற்று** – அவ்வகரச் சாரியை பெறும், எ–று.

**உ–ம்.:–**

தமிழப்பல்லவதரையர், தமிழநான், தமிழவளவன், தமிழவரசன் எனவும், தாழக்கோல் எனவும் வரும். அவ்வுறவுமென்ற எதிரது தழீஇய வெச்ச வும்மையால் தமிழின்சுவை யென இன் சாரியை பெறுதலுங் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அகரச்சாரியை பெறும் ழகாரவீற்றுச் சொற்களுமுளவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறமே லற்றே.
(தமிழ் அ உறவும் பெறும் வேற்றுமைக்கே
தாழும் கோல் வந்து உறுமேல் அற்றே)

**இ–ள்.:– தமிழ் வேறுமைக்கு அ உறவும் பெறும்** – தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச்சாரியை பொருந்தவும்பெறும், **தாழும் கோல் வந்து உறுமேல் அற்று** – தாழென்னுஞ் சொல்லுங் கோலென்னுஞ் சொல் வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியை பெறும், எ–று.

தமிழ் என்னுஞ் சொல் "யரழ முன்னர்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய விதியேயன்றி வேறுவிதியும் பெறுமோ?

"தமிழவ் வுறவும் பெறும் வேற்றுமைக்கே"

**உ–ம்.:–**

தமிழ்ப் பிள்ளை, தமிழப் பிள்ளை, தமிழ் நாகன், தமிழ நாகன், தமிழ் வளவன், தமிழ வளவன், தமிழரசன், தமிழவரசன், என வரும்.

தமிழப்பிள்ளை தமிழையுடைய பிள்ளையென விரியும்.

கோல்வரின் தாழ் வேறுவிதியும் பெறுமோ?

"தாழுங் கோல்வந் துறுமே லற்றே"

**உ–ம்.:–**

தாழ்க்கோல், தாழக்கோல் என வரும். தாழ்க்கோல் என்பது தாழைத் திறக்குங் கோல் என விரியும். (தாழ்க்கோல் திறவுகோல்.)

## முகவை இராமானுச கவிராயர்

**இது**, இந்த இரண்டு சொற்கும் எய்தாதது எய்துவிக்கின்றது.

**இ–ள்.:– தமிழவ்வுறவும் பெறும் வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சிக்குத் தமிழ் என்னுஞ் சொல் (நான்கு கணங்களும் வந்து புணரின்) அகரச் சாரியை பொருந்தவும் பெறும், **தாழுங்கேல் வந்துறு மேலற்று** – தாழ் என்னுஞ் சொல்லும் அதனோடு கோல் என்னுஞ் சொல் வந்து புணருமாயின் அவ்வாறு அகரச் சாரியையைப் பெறும், எ–று.

தமிழுக்கு வருமொழி யெடுத்துச் சொல்லாததினாலே நாற்கணமுங் கொள்க. நாற்கணமாவன: வன்கணம்,

மென்கணம், இடைக்கணம், உயிர்க்கண மெனக் காண்க.

**உ—ம்.:** தமிழப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன் எனவும் தாழக்கோல் எனவும், பிறவுமிப்படியே காண்க. 'அவ்வுறவும் பெறும்' என்ற எதிரது தழுவிய எச்சவும்மையால், தமிழின் சுவை என இன் சாரியை பெறுதலுங் கொள்க. தமிழை யுடைய பிள்ளை, தாழைத் திறக்குங் கோல் என விரியும். தாழக்கோல் என்பது திறவுகோல், தாழாகியது கோல் என விரித்து இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனினும் அமையும்.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :— தமிழ்** – 'தமிழ்' என்னுஞ் சொல், **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சியில் (நாற்கணமும் வந்தால்), **அ உறவும்**—அகரச்சாரியை பொருந்தவும், **பெறும்**—; **தாழும் கோல்வந்து உறுமேல்** – 'தாழ்' என்னுஞ் சொல்லும் 'கோல்' என்னுஞ் சொல்லும் (வருமொழியாக) வந்து பொருந்துமாயின், **அற்று** – அவ்வாறு அகரச்சாரியை பெறும்.

(தமிழுக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.)

**உ—ம் :—** தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழ வரசன் எனவும்; தாழ் + கோல் = தாழக்கோல் எனவும் வரும்.

குறிப்பு :—

தமிழையுடைய பிள்ளை, தாழைத் திறக்குங்கோல் என விரியும் தாழாகிய கோல் என இருபெபரொட்டுப் பண்புத்தொகையாகக் கொண்டு இருவழியிலும் அகரச்சாரியை பெறும் எனினும் ஒக்கும். (தாழக்கோல் – திறவுகோல்.)

இனி, 'அவ்வுறவும்' என்ற எச்ச உம்மையால் 'தமிழின் சுவை' என இன்சாரியை பெறுதலுங் கொள்க.

## ஆறுமுக நாவலர்

**இ—ள்.:** **தமிழ் வேற்றுமைக்கு அ உறவும் பெறும்** – தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியை பொருந்தவும் பெறும், **தாழும் கோல்வந்து உறுமேல் அற்று** – தாழென்னுஞ் சொல்லுங் கோலென்னுஞ் சொல்லும் வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியையைப் பெறும், எ—று.

உ–ம்.:– தமிழப் பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன். எனவும். தாழ்க்கோல். எனவும் வரும். தமிழையுடைய பிள்ளை, தாழைத்திறக்குங்கோல் என விரியும். (தாழக்கோல்– திறவுகோல்)

இது எய்தாத தெய்துவித்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். தமிழ் வேற்றுமைக்கு அ உறவும் பெறும் – தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச்சாரியை பொருந்தவும் பெறும், – தாழும் கோல் வந்து உறுமேல் அற்று – தாழென்னுஞ் சொல்லு ங்கோலென்னுஞ் சொல்வந்து பொருந்துமாயின் அவ்வகரச்சாரியையைப் பெறும். எ–று.

உ–ம்.:–

தமிழப் பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன், எ–ம். தாழக்கோல் எ–ம். வரும். தமிழையுடையபிள்ளை, தாழைத்திறக்குங்கோல் என விரியும். (தாழக்கோல்– திறவுகோல்).

இது எய்தாத தெய்துவித்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– (1) தமிழ் – தமிழ் என்னுஞ் சொல், வேற்றுமைக்கு – வேற்றுமைப்புணர்ச்சியில், (நாற்கணமும் வந்தால்), அ உறவும் –அகரச் சாரியை பொருந்தவும், பெறும் –: (2) தாழும் – தாழ் என்னுஞ் சொல்லும், கோல் வந்து உறுமேல் – கோல் என்னுஞ்சொல் (வருமொழியாக) வந்து பொருந்துமாயின். அற்றே – அவ்வாறேயாம் (அகரச் சாரியை பெறும்); எ–று.

தமிழுக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

(1) தமிழ்+பிள்ளை = தமிழப்பிள்ளை, தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன் எனவும்; (2) தாழ்+கோல் = தாழக்கோல் எனவும் வரும்.

தமிழையுடைய பிள்ளை, தாழைத்திறக்கும் கோல் என விரியும். தாழக்கோல் – திறவுகோல்; தாழாகிய கோல் என இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக் கொண்டு, இருவழியிலும் அகரச் சாரியை பெறுமெனினும் பொருந்தும்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– தமிழ் வேற்றுமைக்கு அ உறவும் பெறும் – தமிழென்னுஞ் சொல் நாற்கணமும் வரின் வேற்றுமைக்கண் அகரச் சாரியை பொருந்தவும் பெறும. தாழும் கோல்வந்து உறுமேல் அற்று – தாழென்னுஞ் சொல்லுங் கோலென்னுஞ் சொல் வந்து பொருந்துமாயின் அவ்வகரச் சாரியையைப் பெறும். எ–று.

உ–ம்.:–

தமிழ் + பிள்ளை = தமிழப் பிள்ளை.

தமிழ் + நாகன் = தமிழ நாகன்.

தமிழ் + வளவன் = தமிழ வளவன்.

தமிழ் + அரசன் = தமிழ வரசன்.

தாழ் + கோல் = தாழக் கோல்.

தமிழப்பிள்ளை – தமிழையுடைய பிள்ளை, தாழக்கோல் – தாழைத்திறக்குங் கோல் என விரியும். தாழக் கோல் – திறவுகோல்.

இது 'எய்தாத தெய்துவித்தல்.'

## கா.நமச்சிவாய முதலியார்

(1) தமிழ் – தமிழ் என்னும் சொல், வேற்றுமைக்கு – வேற்றுமைக்கண் (நாற்கணமும் வந்தால்), அ உறவும் பெறும் – அகரச்சாரியை பொருந்தவும் பெறும் ;

(2) தாழும் – தாழ் என்னுஞ் சொல்லும், கோல் வந்து – கோல் என்னுஞ் சொல்லானது வந்து, உறுமேல் – பொருந்துமாயின், அற்று – அந்த அகரச் சாரியை பெறும்.

உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | தமிழ் | + | பிள்ளை | : | தமிழப்பிள்ளை |
| | | + | நாகன் | : | தமிழநாகன் |
| | | + | வளவன் | : | தமிழவளவன் |
| | | + | அரசன் | : | தமிழவரசன் |
| (2) | தாழ் | + | கோல் | : | தாழக்கோல் |

'அவ்வுறவும்' என்ற எதிரது தழீஇய எச்சவும்மையால், தமிழின் சுவை என இன்சாரியை பெறுதலுங் கொள்க.

## மோசசு பொன்னையா

தமிழ் என்னுஞ் சொல் வேற்றுமைப் புணர்ச்சியில் நாற்கணமும் வர அகரச் சாரியை பெறும்; தாழ் என்னுஞ் சொல்லும், கோல் என்னுஞ் சொல் வந்து பொருந்துமாயின், அவ் அகரச் சாரியையைப் பெறும், எ-று.

எ-டு.:-

தமிழப்பிள்ளை; தமிழநாகன்,

தமிழவளவன்; தமிழவரசன்,

தாழக்கோல்

அவ்வுறவும் பெறும் என்ற எச்ச உம்மையால், தமிழின் சுவை என இன் சாரியை பெறுதலையுங் கொள்க.

(21)

225. **கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.**

**கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்.**

kīḻiṉ muṉ vaṉmai vikaṟpamum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for ki**

The hard initials may or may not be double after kil.

## ஒப்புமைப் பகுதி

கீழென் கிளவி உறழத் தோன்றும்

(தொல்.:396)

கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்

(இ.வி.: 135)

கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்

(மு.வீ.:378)

## மயிலைநாதர்

எ—ன், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்.:— கீழென்னு மொழியின் முன் வன்மை ஒருகால் மிக்கும் ஒருகால் மிகாதும் வரும், எ—று.

வ—று.:—

கீழ்க்குளம்,கீழ்குளம்: சேரி, துறை, பாடி என வரும். அல்வழியினும் ஏற்புழிக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ—னின், கீழ் என்னும் சொல்முன் வரும் வல்லினத்திற்கு *ம்'யரழ முன்னர்' என்னும் சூத்திரத்தான்'ம்* எய்தியது பெரும்பாலும் விலக்கல் நுதலிற்று.

இ—ள்.:— கீழ் என்னும் சொல்முன் வரும் வல்லினம், ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும், எ—று.

உ—ம்.:—

கீழ்குலம், கீழ்க்குலம், கீழ்சாதி, கீழ்ச்சாதி என வரும். பிறவும் அன்ன.

இழிவு சிறப்பும்மையான், இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்க. கீழ்மை என்னும் பண்பொடு புணர்தல் பதவியலுள் முடித்துப் போந்தமையின், ''கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்'' என்றாற் போலக் கீழ் என்பது பண்பாகுபெயராய், இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், திசையை உணர்த்தும் கீழென்னும் ழகர வீற்றுப் புணர்ச்சி கூறியது.

இ—ள்.:— கீழின் முன் — கீழென்னும் நிலைமொழி ஈறாக நின்று ழகார வீற்று முன், வன்மை — வருமொழி முதல் வல்லினம் வந்தால், விகற்பமுமாகும் — ஒரு கால் இயல்பாயும், ஒருகால் மிக்கும் உறழ்ந்தும் முடியும், எ—று.

உ—ம்.: —

கீழ்க்குளம், கீழ்குளம், சேரி, துறை, பாடி என வரும். அல்வழிக்கும் ஒப்பன கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, கீழென்பதன் முன்வருகிற வல்லினத்திற்கு யரழமுன்ன ரென்பதனால் எய்தியது பெரும்பாலும் விலக்குகின்றது.

**இ–ள்.:– கீழின் முன்** – கீழென்கிற சொல்லின் முன் வருகிற, **வன்மை** – வல்லினம், **விகற்பமாகும்** – ஒரு காலியல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற விகற்பத்தையும் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

கீழ்குலம்–கீழ்க்குலம், கீழ்சாதி–கீழ்ச்சாதி என வரும். மற்றவைகளு மிப்படியே. விகற்பமு மென்னும் மிழிவுசிறப்பும்மையால் இவற்றுளியல்பே சிறப்புடைத் தென்றறிக.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ழகாரவீற்றுள் வல்லினத்தோடு விகற்பமாகப் புணருஞ்சொல் இது வெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

கீழின்முன் வன்மை விகற்பமு மாகும்.

(கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்.)

**இ–ள்.: கீழின்முன் வன்மை** – கீழென்னுஞ், சொல்லின்முன் வரும் வல்லினம், **விகற்பமும் ஆகும்** – ஒருகால் இயல்பாகியும் ஒரு கான் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

கீழ்குலம். கீழ்க்குலம்; கீழ்சாதி, கீழ்ச்சாதி, என வரும்.

விகற்பமும் என்னும் இழிவுசிறப் பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப் புடைத்தென்றறிக.

வன்மை விகற்பமுமாகும் என்றது ''யரழ முன்னர்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, கீழென்னுஞ் சொன்முன் வரும் வல்லினத்திற்கு எய்தியது பெரும்பாலும் விலக்குகின்றது.

**இ–ள்.:– கீழின் முன் வன்மை** – கீழென்னுஞ் சொன் முன் வரும் வல்லினம், **விகற்பமு மாகும்** – ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும், எ–று.

உ-ம்.:-

கீழ்குலம், கீழ்க்குலம். கீழ்சாதி, கீழ்ச்சாதி என வரும். 'விகற்பமும்' என்ற இழிவு சிறப்பும்மையால் இயல்பே சிறப்புடையது. கீழ்மை என்னும் பண்புடன் புணர்வது பதவியலிலே சொல்லி வந்தமையால் இது, 'கீழிருந்துங் கீழல்லர் கீழல்லவர்' என்றது போலக் கீழ் என்பது பண்பாகு பெயராய் நின்று, குலம் - சாதி என்பனவற்றொடு புணர்ந்து கீழாகிய குலம், கீழாகிய சாதி என விரிந்து, இருபெயரொட்டுப் பண்புத் தொகையா மென்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :- கீழின்முன்** - 'கீழ்' என்னும் சொல்லின் முன் வருகிற, **வன்மை** - வல்லினம், **விகற்பமும் ஆகும்** - (ஒருகால் இயல்பாகியும் ஒரு கால் மிக்கும் வருகிற) விகற்பத்தைப் பொருந்தும்.

உ.ம்:- கீழ் + குலம் = கீழ்குலம் = கீழ்க்குலம் கீழ் + சாதி = கீழ்சாதி. = கீழ்ச்சாதி.

குறிப்பு :-

'விகற்பமும்' என்னும் இழிவு சிறப்பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்க

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.:- கீழின் முன் வன்மை** - கீழென்னுஞ் சொல்லின் முன் வரும் வல்லினம், **விகற்பமும் ஆகும்** - ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும், எ-று.

உ-ம்.:-

கீழ்குலம்,கீழ்க்குலம், கீழ்சாதி,கீழ்ச்சாதி எனவரும். விகற்பமுமென்னும் இழிவுசிறப்பும்மையால், இவற்றுளியல்பே சிறப்புடைத்தென்றறிக.

வன்மை விகற்பமாகும் என்றது ''யாரழ முன்னர்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ-ள்.:- கீழின்முன் வன்மை** - கீழென்னுஞ் சொல்லின்முன் வரும் வல்லினம், - **விகற்பமும் ஆகும்** - ஒருகால் இயல்பாகியும் ஒருகான் மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும். எ-று.

உ–ம்.:–

கீழ்குலம், கீழ்க்குலம், கீழ்சாதி, கீழ்ச்சாதி எனவரும்.

விகற்பமும் என்னும் இழிவுசிறப்பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்றறிக.

வன்மை விகற்பமுமாகும் என்றது 'யரழமுன்னர்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– கீழின் முன் – கீழ் என்னுஞ் சொல்லின் முன்வருகிற, வன்மை – வல்லினம், விகற்பமும் ஆகும் – (ஒருகால் இயல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற) விகற்பத்தையும் பொருந்தும்; எ–று.

உ–ம்.:– கீழ்+குலம் = கீழ்குலம் – கீழ்+சாதி = கீழ்சாதி

= கீழ்க்குலம் – = கீழ்ச்சாதி

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– கீழின் முன் வன்மை – கீழெனனுஞ் சொல்லின் முன் வரும் வல்லினம், விகற்பமும் ஆகும் – ஒருகால் இயல்பாகியும் ஒருகான்மிக்கும் வரும் விகற்பத்தையும் பொருந்தும். எ–று.

உ–ம்.:–

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்; கீழ் + சாதி = கீழ்சாதி, கீழ்ச்சாதி.

'விகற்பமும்' என்னும் இழிவுசிறப் பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்றறிக.

'வன்மை விகற்பமுமாகும்' என்றது "யரழ முன்னர்" என்னும் 224–ஆவது சூத்திரத்தால் எய்தியது பெரும்பாலும் விலக்கல்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– கீழின் முன்– கீழ் என்கின்ற சொல்லின்முன், வன்மை– (வருகிற) வல்லினம், விகற்பமும் ஆகும் – (ஒருகா லியல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற) விகற்பத்தையும் பொருந்தும். எ–று.

பொ–ரை.:– கீழ் என்கின்ற சொல்லின் முன் வருகிற வல்லினம் (ஒருகா

லியல்பாகியும் ஒருகால் மிக்கும் வருகிற) விகற்பத்தையும் பொருந்தும்.

உ-ம்:-

கீழ் + குலம் = கீழ்குலம்.

=கீழ்க்குலம்.

கீழ் + சாதி = கீழ்சாதி.

= கீழ்ச்சாதி.

விகற்பமும் என்னுமிழிவுசிறப்பும்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத் தென்றறிக.

(கீழாகிய குலம், கீழாகிய சாதி யெனவிரிதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகை.)

## கா.நமச்சிவாய முதலியார்

கீழின் முன் – கீழ் என்னும் சொல்லின்முன் வரும், வன்மை – வல்லினம், விகற்பமும் ஆகும் – (ஒரு கால் இயல் பாகியும் ஒருகால் மிக்கும் வரும்) விகற்பத்தையும் பொருந்தும்.

உதாரணம்

கீழ் + குலம் = கீழ்குலம், கீழ்க்குலம்

'விகற்பமும்' என்னும் இழிவுசிறப்பு உம்மையால், இவற்றுள் இயல்பே சிறப்புடைத்தென்றறிக.

## மோசகு பொன்னையா

கீழ் என்னுஞ் சொல்லின் முன்னர் வல்லினம் வர ஒருகால் இயல்பாகியும், ஒருகால் மிக்கும் முடியும், எ—று.

எ—டு.

கீழ்த்திசை

கீழ் திசை

226. லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.

ல ள வேற்றுமையில் ற டவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலி வரின் ஆம் மெலி
மேவின் ன ணவும் இடை வரின் இயல்பும்
ஆகும் இரு வழியானும் என்ப.

la ḻa vēṟṟumaiyil ṟa ṭavum alvaḻi
avaṟṟōṭu uṟaḻvum vali variṉ ām meli
mēviṉ ṉa ṇavum iṭai variṉ iyalpum
ākum iru vaḻiyāṉum eṉpa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH I AS FINAL

### General rule

When final and are followed **casually** by hard initials, they are changed (respectively) into r and but when they are followed **incasually** (by the same), they may or may not be changed; while in both combinations, they become n and ṅ before nasals, but are never changed before medials.

## ஒப்புமைப் பகுதி

லகார இறுதி னகார இயற்றே

(தொல்.: 367)

மெல்லெழுத் தியையின் னகார மாகும்

(தொல்.: 368)

அல்வழி யெல்லாம் உறழென மொழிப

(தொல்.: 369)

ளகார இறுதி னகார இயற்றே

(தொல்.: 397)

மெல்லெழுத் தியையின் ணகார மாகும்

(தொல்.: 398)

அல்வழி யெல்லாம் உறழென மொழிப

(தொல்.: 399)

எண்ணிரண் டாமொற்று வன்மைவந் தாற்பின் பியைந்த வைந்தா
நண்ணிய வொற்றாம்............

(வீர.: 16:1–2)

பன்மூன்ற தாமுடல் ...........
பன்னேழதாம் வன்மை பின்வரின் ........

(வீர.: 17:1–2)

லளவேற் றுமையிற் றடவு மல்வழி
யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பு
மாகு மிருவழி யானு மென்ப

(இ.வி.: 137)

லள வேற்றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரின் தவ்வரின்
இயல்பும் திரிந்தபின் கெடுதலும் ஆகும்
லளதனிக் குறில்கீழ் அல்வழித் தவ்வரின்
திரிந்து ஒழிந்து ஆய்தம் சேரும் என்ப
லளமுன் மெலிவரின் இருவழி னணஆம்
அவற்றுள் னத்திரிந்து அழிவாம் தனிக்குறில்
நண்ணிய லளமுன் நவ்வும் னண ஆம்

(தொ.வி.: 26)

லகாரம்வேற் றுமைக்கண் றகர மாகும்

(மு.வீ.: 350)

மெல்லெழுத் தியையி னகர மாகும்

(மு.வீ.:351)

அல்வழி யெல்லாம் உறழு மென்ப

(மு.வீ.: 354)

## மயிலை நாதர்

எ–ன், லள வீறு புணருமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:–லகார ளகாரமான [1]இரண்டீறும் வல்லினம் வரின் வேற்றுமைக்கண் முறையே றகார டகாரங்களாம்; அல்வழியில் றகார டகாரங்களுடனே உறழ்வனவாம் ; இருவழியும் மெல்லினம் வரின் னகார ணகாரங்களாம்; இடையினம் வரின் இயல்புகளா மென்று சொல்லுவர் புலவர், எ–று.

வ–று.:–

(கல், நூல், விரல், வரால், ஆரல்) + (குறை, சிறை, தலை, புறம்) எனவும் (முள், வாள், புரள்) + (குறை, சிறை, தலை, புறம்) எனவும் வேற்றுமைக்கண் திரிந்தன. கல்குறிது கற்குறிது, நூல் குறிது நூற்குறிது, விரல்குறிது, விரற்குறிது; சிறிது, பெரிது எனவும், முள்குறிது முட்குறிது, வாள்குறிது வாட்குறிது, புரள்குறிது புரட்குறிது; சிறிது, பெரிது எனவும் அல்வழிக்கண் [2]உறழ்ந்தன. (கல், நூல், விரல், வரால், ஆரல்) + (ஞெரிந்தது, மாண்டது) எனவும், (ஞெரி, முரி) எனவும். (முள், வாள், புரள்) + (ஞெரிந்தது, மாண்டது) எனவும் (ஞெரி, முரி) எனவும் [3]இருவழியும் லகார ளகாரங்கள் [4]னகார ணகாரங்களாயின. (கல், விரல், நூல் வரால், ஆரல்) + (யாது, வலிது) எனவும், (யாப்பு, வலிமை) எனவும் (முள், வாள், புரள்) + (யாது, வலிது) எனவும், (யாப்பு, வலிமை) எனவும் இருவழியும் இயல்பாயின.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், ல ள ஈறு புணருமாறு உணர் – ற்று.

இ–ள்.: லகார ளகாரமான இரண்டு ஈறும், வல்லினம் வரின் வேற்றுமைக்கண் முறையே றகார டகாரங்களாம்; அல்வழிக்கண்ணே றகார டகாரங்களுடனே உறழ்வனவாம்; இரு வழிக்கண்ணும் மெல்லினம் வரின், னகார ணகாரங்களாம்; இடையினம் வரின் இயல்பாம் என்று சொல்லுவர் புலவர், எ–று.

---

பாடவேறுபாடு .:–

1.இரண்டீற்றினும்

2.(1) உறழ்வுமாம்

(2) உறழ்வாம்

3.னகார ணகாரங்களயின

4.திரிந்தன.

உ-ம்.:-

கற்குறை, முட்குறை எனவும்; கல்குறிது, கற்குறிது, முள் குறிது, முட்குறிது எனவும்; கன்ஞெரிந்தது, முண்ஞெரிந்தது எனவும்; கன்ஞெரி, முண்ஞெரி எனவும்; கல்யாது, முள்யாது எனவும்; கல்யாப்பு, முள்யாப்பு எனவும் முறையே வந்தன. பிறவும் அன்ன.

'அல்வழியவற்றோடு உறழ்வும்' என்றாரேனும் இவற்றோடு மயங்காது என விலக்கிய தகரம் வரின், ஏற்புழிக்கோடலான் உறழ்ச்சியுள் இயல்பு ஒழித்துத் திரிபு ஒன்றுமே பெறுதல் கொள்க; கற்றீது, முட்டீது என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், லகார ளகார ஒற்றிறு புணருமாறு கூறியது.

இ-ள்.:- **லள** - நிலைமொழி ஈறாக நின்ற லகார ளகார மெய்கள், **வேற்றுமையில்** - வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணே, **றடவும்** - லகாரம் றகாரமும் ளகாரம் டகாரமுமாய்ப் புணர்தலுமாம், **அல்வழி** - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண்ணே, **அவற்றோ டுறழ்வும்** - றகார டகாரத்துடனே உறழ்வனவும், **வலிவரினாம்** - வருமொழி முதல் வல்லினம் வந்தால், ஆம் என்றதனை முன்னே கூட்டுக. **மெலி மேவின்** - லகர ளகர ஈற்றின் முன்னே வருமொழி முதல் மெல்லினம் வந்தால், **னணவும்** - லகரம் னகரமும் ளகரம் ணகரமுமாம், **இடை வரின்** - வருமொழி முதல் இடையினம் வந்தால், **இயல்பு மாகும்** - நிலைமொழி ஈறு விகாரப்படாமல் இயல்பாய் முடியும், **இருவழியானும் என்ப** - இரு வழிப் புணர்ச்சியினு மென்று சொல்லுவர் புலவர், எ-று.

உ-ம்.:-

கல், முள் குறை, சிறை, தலை, புறம் என வேற்றுமைக்கண் திரிந்தன. கல் குறிது கற்குறிது, முள் குறிது முட்குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் உறழ்ந்தன. கல், முள் ஞெரிந்தது, நீண்டது, மாண்டது எனவும், ஞெரி, நுனி, முரி எனவும் லகார ளகாரங்கள் னகார ணகாரங்களாய்த் திரிந்தன. கல், முள் யாது, வலிது எனவும், யாப்பு, வலிமை எனவும் இரு வழியும் இயல்பாயின.

## விசாகப் பெருமாளையர்

இது, லள மெய்யீறுகள் புணருமாறு உணர்த்துகின்றது.

இ-ள்.:- **லள** - லகர ளகரமாகிய விரண்டு மெய்யீறுகளும், **வலிவரின்**

- வல்லினம் வந்தால், **வேற்றுமையில்** - வேற்றுமைக்கண், **றடவும்** - முறையே றகார டகார மெய்களும், **அல்வழி** - அல்வழிக்கண், **அவற்றோடு றழ்வும்** - றகார டகாரங்களுடனே யுறழ்வனவும், **ஆம்** -ஆகும், **இருவழியானும்** - இருவழிக்கண்ணும், **மெலிமேவின்** - மெல்லினம் வந்தால், **னணவும்** - முறையே னகார ணகார மெய்களும், **இடைவரின்** - இடையினம் வந்தால், **இயல்பும்** - இயல்பும், **ஆகும்**-ஆகும், **என்ப**-என்று சொல்லுவர் புலவர், எ-று.

**உ-ம்.:-**

கற்குறை, முட்குறை எனவும், கல்குறிது, கற்குறிது, முள்குறிது, முட்குறிது எனவும், கன்ஞெரிந்தது, முண்ஞெரிந்தது, கன்ஞெரி, முண்ஞெரி எனவும், கல்யாது, முள்யாது, கல்யாப்பு, முள்யாப்பு எனவும், முறையே வந்தன. மற்றவைகளும் இப்படியே, அல்வழி யவற்றோடுறழ்வு மென்றாலும் இவற்றோடு மயங்காத தகரம் வரின் ஏற்புழிக்கோடலால் கற்றீது, முட்டீது, எனத் திரிபொன்றுமே கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

லகார ளகார வீற்றுப் புணர்ச்சி கூறுஞ் சூத்திரம் யாது?

லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப.
(லள வேற்றுமையில் றட வும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலி வரின் ஆம்: மெலி
மேவின் ன ண வும், இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழியானும் என்ப.)

**இ-ள்.:- லள வலிவரின் வேற்றுமையில் றட வும்** - லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும் வல்லினம் வந்தால் வேற்றுமைக்கண் முறையே றகார டகார மெய்களும், **அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம்** - அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும், **இருவழியானும் மெலி மேவின் னணவும்** - இருவழிக்கண்ணும் மெல்லினம் வந்தால் முறையேனகார ணகார மெய்களும், **இடைவரின் இயல்பும் ஆகும் என்ப** - இடையினம் வந்தால் இயல்பும் ஆகும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

ல ள வல்லினம் வரின் எவ்வாறு புணரும்?

"ல ள வேற்றுமையிற் றடவு மல்வழி அவற்றோ டுறழ்வும் வலிவரினாம்"

உ–ம்.:– (1) கல் – குறை – கற்குறை. முள் – குறை – முட்குறை, என வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(2) கல் – குறிது –கல்குறிது, கற்குறிது; முள் – குறிது – முள்குறிது, முட்குறிது, என வல்லினம் வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற் றிரிந்தும் உறழ்ந்தன.

மெல்லினம் வரின் ல ள எவ்வாறு புணரும்?

''மெலி மேவி னணவு மாகு மிருவழி யானு மென்ப''

(3) கல் – மாண்டது – கன்மாண்டது. முள் – மாண்டது – முண்மாட்து எனவும், கல் – மாட்சி – கன் மாட்சி, முள் – மாட்சி – முண்மாட்சி, எனவும். மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன.

இடையினம் வரின் ல ள எவ்வாறு புணரும்?

''இடைவரி னியல்பும் ஆகு மிருவழி யானுமென்ப''

(4) கல் – யாது – கல்யாது, முள் – யாது – முள்யாது எனவும் கல் – யாப்பு – கல்யாப்பு, முள் – யாப்பு – முள்யாப்பு எனவும் இடையினம் வர இருவழியும் இயல்பாயின.

அல்வழியவற்றோடுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமே கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, ல ளக்கள் புணருஞ் செய்கை கூறுகின்றது.

இ–ள்.:– ல ள **வேற்றுமையில்** – வேற்றுமைச் சந்தியிலே ல ள வென்கின்ற இரண்டீறும், **றடவும்** – முறையே றகரமாகவும் டகரமாகவும், **அல்வழி** – அல்வழிச் சந்தியிலே, **அவற்றோடுறழ்வும்**– அந்த றகர டகரங்களுடனே அந்த லளக்கள் விகற்பித்தலும், **வலிவரினாம்** – வல்லினம் வந்து புணரினாகும், **மெலி மேவின்** – மெல்லினம் வந்து புணரின், **னணவும்** – அவை னகர ணகரங்களும், **இடை வரின்** – இடையினம் வந்து புணரின், **இயல்பும்** – திரியாது இயல்பாதலும், **ஆகுமென்ப** – ஆமென்று சொல்லுவர் புலவர், **இருவழியானும்** – அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும், எ–று.

**உ–ம்.:–**

கற்குறை, முட்குறை எனவும், கல்குறிது – கற்குறிது, முள்குறிது – முட்குறிது எனவும், கன்ஞெரிந்தது,

முண்ஞெரிந்தது, மலிந்தது எனவும், கன்ஞெரி, முண்ஞெரி, மலிவு எனவும், மெலிமேவ இருவழியும் னணக்களாயின. கல்யாது, முள்யாது, வலிது எனவும், கல்யாப்பு, முள்யாப்பு, வன்மை எனவும். இடையினம் வர இருவழியு மியல்பாயின. பிறவுமிப்படியே காண்க. 'அல்வழி யவற்றோடு றழ்வு' மென்றாராயினும் இவற்றொடு மயங்காதென விலக்கிய தகரம் வரின் ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியினாலே திரிபொன்றுமே பெறுமெனக் கொள்க. அவை வருமாறு: கற்றீது–முட்டீது எனக் காண்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை** :– லள – (மொழி இறுதியிலுள்ள) லகர ளகர மெய்கள், **வலிவரின்** – வல்லினம் வந்தால், **வேற்றுமையில்,** – **றடவும்** – (முறையே) றகர டகர மெய்களாகத் திரிதலும், **அல்வழி** – அல்வழியில், **அவற்றோடு உறழ்வும்** – அந்த றகர டகர மெய்களாகத் திரிந்துந் திரியாமலும் விகற்பித்தலும், **ஆம்**–ஆகும்; **இருவழியானும்** – வேற்றுமை அல்வழி இரண்டிலும், **மெலிமேவின்** – மெல்லினம்வந்தால், **னணவும்** – (முறையே னகர ணகர மெய்களாகத்திரிதலும், **இடைவரின்** – இடையினம் வந்தால், **இயல்பும்** – இயல்பாதலும், **ஆகும்** –, **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

உதாரணம்

| வேற்றுமை. | அல்விழி. |
|---|---|
| கல் + குறை = கற்குறை | கல் + குறிது = கல்குறித்து, கற்குறிது. |
| முள் + குறை = முட்குறை | முள் + குறிது = முள்குறிது, முட்குறிது |

(என வேற்றுமையில் வலிவர றகர டகரங்களாகத் திரிந்தும்,அல்வழியில் உறழ்ந்தும் வந்தன.)

| | |
|---|---|
| நெல் + மலிவு = நென்மலிவு | நெல் + மலிந்தது = நென்மலிந்தது. |
| முள் + முனை = முண்முனை | முள் + மாய்ந்தது = முண்மாய்ந்தது. |

(என இருவழியிலும் இடைவர இயல்பாயின.)

| | |
|---|---|
| நெல் + வளம் = நெல்வளம் | நெல் + விளைந்தது = நெல்விளைந்தது. |
| முள் + வன்மை = முள்வன்மை | முள் + வலிது = முள்வலிது. |

(என இருவழியிலும் இடைவர ·இயல்பாயின.)

குறிப்பு :–

'அல்வழியவற்றோ டுறழ்வும்' என்றாலும், இவற்றோடு மயங்காத தகரம் வந்தால் ஏற்புழிக் கோடலால்

'நெற்றழைத்தது', 'முட்டீது' எனத் திரிந்தே வரும்.

இச்சூத்திரம் பெரும்பாலும் குறிலணைந்த லளக்களுக்கென்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ல ள – லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும், **வலி வரின்** – வல்லினம் வந்தால், **வேற்றுமையில் றடவும்** – வேற்றுமைக்கண் முறையே றகார டகார மெய்களும், **அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம்** – அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும், **இருவழியானும்** – இருவழிக் கண்ணும், **மெலி மேவின் னணவும்** – மெல்லினம் வந்தால் முறையே னகார ணகார மெய்களும், **இடை வரின் இயல்பும் ஆகும்** – இடையினம் வந்தால் இயல்பும் ஆகும், **என்ப** – என்று சொல்லுவர் புலவர், எ–று.

உ–ம்.:–

(1) கல் + குறை = கற்குறை, முள் + குறை = முட்குறை என வல்லினம் வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(2) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது; முள் + குறிது = முள்குறிது, முட்குறிது என வல்லினம் வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற் றிரிந்தும் உறழ்ந்தன.

(3) கல் + மாண்டது = கன்மாண்டது, முள் + மாண்டது = முண்மாண்டது எனவும், கல் + மாட்சி = கன்மாட்சி, முள் + மாட்சி = முண்மாட்சி எனவும், மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன.

(4) கல் + யாது = கல்யாது; முள் + யாது = முள்யாது எனவும், கல் + யாப்பு = கல்யாப்பு, முள் + யாப்பு = முள்யாப்பு எனவும், இடையினம் வர இருவழியும் இயல்பாயின.

அல்வழி யவற்றோ டுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமே கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– லள– லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும், – **வலிவரின்** – வல்லினம் வந்தால், – **வேற்றுமையில் றடவும்,** – வேற்றுமைக்கண் முறையே றகார டகாரமெய்களும், – **அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம்** – அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும், **இருவழியாலும்** – இருவழிக்கண்ணும்; – **மெலி மேவின் ன ணவும்** – மெல்லினம் வந்தால் முறையே னகார ணகாரமெய்களும், – **இடைவரின் இயல்பும் ஆகும்** –

இடையினம் வந்தால் இயல்பும் ஆகும், – **என்ப** – என்று சொல்லுவர் புலவர். எ–று.

உ–ம்.:–

(1).கல்+குறை=கற்குறை, முள்+குறை = முட்குறை என வல்லினம்வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(2)கல் + குறிது = கல்குறிது, கற்குறிது; முள் + குறிது = முள்குறிது, முட்குறிது என வல்லினம்வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற்றிரிந்தும் உறழ்ந்தன.

(3)கல் + மாண்டது = கன்மாண்டது, முள் + மாண்டது = முண்மாண்டது, எனவும் கல்+மாட்சி = கன்மாட்சி, முள்+மாட்சி=முண்மாட்சி, எனவும் மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரியும்.

(4)கல்+யாது=கல்யாது, முள்+யாது=முள்யாது, எனவும் கல்+யாப்பு = கல்யாப்பு, முள்+யாப்பு=முள்யாப்பு. எனவும் இடையினம் வர இருவழியும் இயல்பாயின. அல்வழியவற்றோடுறழ்வும் என்றாரேனும், இவற்றோடு மயங்காத தகரம் வரின், ஏற்புழிக் கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றமே கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** (1) **லள** – (மொழியிறுதியிலுள்ள) லகர ளகர மெய்கள், **வலிவரின்** – வல்லினம் வந்தால், **வேற்றுமையில் றட வும்** – வேற்றுமையில் புணர்ச்சியில் (முறையே) றகர டகர மெய்களாகத் திரிதலும், (2) **அல்வழி**– அல்வழியில், **அவற்றோடு உறழ்வும்** –அந்த றகர டகரங்களாகத் திரிந்தும் திரியாமலும் விகற்பித்தலும், **ஆம்** – ஆகும்;– (3) **இருவழியானும்** – வேற்றுமை அல்வழி இரண்டிலும், **மெலிமேவின்** – மெல்லினம் வந்தால், **ன ண வும்** – (முறையே) னகர ணகர மெய்களாகத் திரிதலும், (4) **இடை வரின்** – இடையினம் வந்தால், **இயல்பும்** – இயல்பாதலும், **ஆகும்** –: என்ப – என்று சொல்வர் (புலவர்), எ–று. 'இருவழியான்' என்றது, உருபுமயக்கம்.

உ–ம்.:–

(1)கால் +குறை = காற்குறை, முள்+ குறை = முட்குறை வேற்றுமையில் வலிவர றகர டகரங்களாகத் திரிந்தன.

(2) கால் + குறிது = கால்குறிது, காற்குறிது; முள் + குறிது =

முள்குறிது, முட்குறிது அல்வழியில் வலிவர உறழ்ந்து வந்தன.

(3)கல் +நெரிந்தது = கன்னெரிந்தது, வாள் + மாண்டது = வாண்மாண்டது, கல்+மலை = கன்மலை, வாள் + மாண்பு = வாண்மாண்பு இருவழியிலும் மெல்லினம் வர னகர ணகரங்களாகத் திரிந்தன.

(4) கால் + யாது = கால்யாது, முள் + வலிது = முள்வலிது, கல் + யானை = கல்யானை, தோள் + வலிமை = தோள்வலிமை இருவழியிலும் இடையினம் வர இயல்பாயின.

'அல்வழி யவற்றோடுறழ்வும்' என்றாலும், இவற்றோடு மயங்காத தகரம் வருமிடத்து ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிந்தே வரும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** **ல ள** – லகர ளகர மாகிய இரண்டு மெய்யீறுகளும், **வலிவரின்** – வல்லினம் வந்தால், **வேற்றுமையில் ற டவும்** – வேற்றுமைக் கண் முறையே றகார டகார மெய்களும், **அல்வழி அவற்றோடு உறழ்வும் ஆம்** – அல்வழிக்கண் றகார டகாரங்களுடனே உறழ்வனவும் ஆகும்; **இருவழியானும்** – இருவழிக்கண்ணும், **மெலி மேவின் ன ண வும்** – மெல்லினம் வந்தால் முறையே னகார ணகார மெய்களும், **இடைவரின் இயல்பும் ஆகும்** – இடையினம் வந்தால் இயல்பும் ஆகும் என்ப – என்று சொல்லுவர் புலர். எ–று.

**உ–ம்.:–**

(1) கல் + குறை = கற்குறை, முள் + குறை = முட்குறை – என வல்லினம் வரவேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

(2) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது; முள் + குறிது = முள்குறிது, முட்குறிது – என வல்லினம் வர அல்வழியில் ஒருகால் இயல்பாகியும் ஒருகாற் றிரிந்தும் உறழ்ந்தன.

(3) கல் + மாண்டது = கன்மாண்டது, முள் + மாண்டது = முண்மாண்டது. கல் + மாட்சி = கன் மாட்சி, முள் + மாட்சி = முண்மாட்சி – என மெல்லினம் வர இருவழியும் னகர ணகரமாகத் திரிந்தன.

(4) கல் + யாது = கல்யாது, முள் + யாது = முள்யாது, கல் + யாப்பு = கல்யாப்பு, முள் + யாப்பு = முள்யாப்பு – என இடையினம் வர இருவழியும் இயல்பாயின.

'அல்வழி யவற்றோ டுறழ்வும்' என்றாரேனும், இவற்றோடு

மயங்காத தகரம் வரின், ஏற்புழிக்கோடலால், கற்றீது, முட்டீது எனத் திரிபொன்றுமே கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– ல ள – லகர ளகரமாகிய இரண்டு மெய்யீற்றுக்களும், வலி வரின் – வல்லினம் வந்தால், வேற்றுமையில் – வேற்றுமைக் கண், ற டவும் – முறையே றகர டகரமெய்களும், அல்வழி – அல் வழிக்கண், அவற்றோடு உறழ்வும் ஆம் – றகர டகரங்களுடனே உறழ்வனவும் ஆகும்; இருவழியானும் – அல்வழி வேற்றுமைக்கண்ணும், மெலி மேவின் – மெல்லினம் வந்தால், ன ணவும் – முறையே னகர ணகரமெய்களும், இடை வரின் – இடையினம் வந்தால், இயல்பும் ஆகும் என்ப – இயல்பும் ஆகும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

பொ–ரை.:– ல, ள ஆகிய இரண்டு மெய் ஈறும் வல்லினம் வந்தால் வேற்றுமையில் முறையே ற, ட ஆகும்; அல்வழியில் ற, ட ஆகாமையும் ஆதலுமாகும்; இருவழியிலும் மெல்லினம் வந்தால் ன, ண ஆகும்; இடையினம் வந்தால் இயல்பும் ஆகும் என்று சொல்லுவர் புலவர்.

உ–ம்.:–

கல் + குறை = கற்குறை. – வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

முள் + குறை = முட்குறை.

கல் + குறிது = கல்குறிது. – அல்வழியில் உறழ்ந்துவந்தன.

= கற்குறிது.

முள் + குறிது = முள்குறிது.

= முட்குறிது.

கல் + நெரிந்தது = கன்னெரிந்தது. – இருவழியிலும் மெல்லினம் வரனகர ணகரங்களாகத் திரிந்தன.

முள் + நெரிந்தது = முண்ணெரிந்தது.

கல் + ஞெரி = கன்ஞெரி.

முள் + ஞெரி = முண்ஞெரி.

கல் + யாது = கல்யாது. – இருவழியிலும் இடையினம் வர இயல்பாயின.

முள் + யாது = முள்யாது.

கல் + யாப்பு = கல்யாப்பு.

முள் + யாப்பு = முள்யாப்பு.

'அல்வழி யவற்றோ டுறழ்வும்' என்றாலும், இவற்றோடு மயங்காத தகரம் வரின் ஏற்புழிக் கோடலால், கல்+தீது = கற்றீது, முள்+தீது = முட்டீது எனத் திரிபு ஒன்றுமே கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) லள – லகர ளகரமாகிய இரண்டு மெய்யீறுகளும், **வலி வரின்** – வல்லினம் வந்தால், **வேற்றுமையில்** – வேற்று மைக்கண், **றடவும்** – (முறையே) றகர டகர மெய்களாதலும்;

(2) **அல்வழி** – அல்வழிக்கண், **அவற்றோடு உறழ்வும்** – றகர டகரங்களாதலோடு திரிந்தும் திரியாதும் விகற்ப மடைதலும், **ஆம்** – ஆகும்.

(3) **இருவழியானும்** – இருவழிக் கண்ணும், **மெலி மேவின்** – மெல்லினம் வந்தால், **னணவும்** – (முறையே) னகர ணகர மெய்களாகவும்;

(4) **இடைவரி** – இடையினம் வந்தால், **இயல்பும் ஆகும்** – இயல்பாகவும் ஆகும், **என்ப** – என்று சொல்லுவர் புலவர்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1)கல் | + | குறை | : | கற்குறை |
| முள் | + | குறை | : | முட்குறை |

என லகர ளகரங்கள் வல்லினம்வர வேற்றுமையில் றகர டகரங்களாகத் திரிந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (2)கல் | + | தீது | : | கற்றீது |
| வில் | + | படை | : | விற்படை |
| | + | புருவம் | : | விற்புருவம் |
| முள் | + | தீது | : | முட்டீது |
| | + | படை | : | முப்படை |
| | + | பல் | : | முட்பல் |

என அல்வழியில் றகர டகரங்களாகத் திரிந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | குறிது | : | கல்குறிது, கற்குறிது |
| முள் | + | குறிது | : | முள்குறிது, முட்குறிது |

என வல்லினம்வர அல்வழியில் உறழ்ந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (3)கல் | + | ஞெரிந்தது | : | கன்ஞெரிந்தது |
| முள் | + | ஞெரிந்தது | : | முண்ஞெரிந்தது |
| கல் | + | ஞெரி | : | கன்ஞெரி |

| | | | | |
|---|---|---|---|---|
| முள் | + | ஞெரி | = | முண்ஞெரி |

என மெல்லினம்வர அல்வழியிலும் வேற்றுமையிலும் னகர ணகரங்களாகத் திரிந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (4)கல் | + | யாது | = | கல்யாது |
| முள் | + | யாது | = | முள்யாது |
| கல் | + | யாப்பு | = | கல்யாப்பு |
| முள் | + | யாப்பு | = | முள்யாப்பு |

என இடையினம்வர இருவழியிலும் இயல்பாயின.

## மோசகு பொன்னையா

லகர, ளகர மெய்யீறு வல்லினம் வரின் வேற்றுமைப் புணர்ச்சிக்கண் முறையே றகர டகரமாகவும், அல்வழிக்கண் றகர டகரங்களாவதுடன் உறழ்வும் ஆகும்; மெல்லினம் வரின், இருவழிக்கண்ணும் முறையே னகர ணகரமாகத் திரிதலையும்; இடையினம் வரின், இயல்பாதலையும் பெறும் என்பர், எ–று.

எ–டு.:–

கற்குறை, முட்குறை – வல்லினம் வர வேற்றுமையில் றடவாயின.

கல்குறிது, கற்குறிது

முள்குறிது; முட்குறிது – வல்லினம் வர அல்வழியில் உறழ்ந்தன.

கன்மாண்டது, முண்மாண்டது

கன்மாட்சி, முண்மாட்சி – மெல்லினம் வர இருவழியும் னணவாகத் திரிந்தன.

கல்யாது, முள்யாது

கல்யாப்பு, முள்யாப்பு – இடையினம் வர இருவழியும் இயல்பாயின.

ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், கற்றீது, கஃறீது, முட்டீது, முஃடீது என இவற்றோடு மயங்காத தகரம் அல்வழியில் திரிந்தே முடிதலைக் கொள்க.

(23)

227. குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.

குறில் வழி ல ளத் தவ் அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.

kuṟil vaḻi la ḷat ṭav aṇaiyiṉ āyṭam
ākavum peṟūum alvaḻi yāṉē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Consonant finals l and changed into guttural**

In the Incasual combination of final l and l, preceded by a (single) short vowel, with an initial t, they may also be changed into gutturals.

## ஒப்புமைப் பகுதி

தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே

(தொல்.: 370)

ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான

(தொல்.: 400)

குறில்வழி லளத்தவ் வணையி னாய்த
மாகவும் பெறூஉ மல்வழி யானே

(இ.வி.: 138)

தகரம் வரும்வழி தனிநிலை யாகும்

(மு.வீ.:353)

தகரம் வரும்வழி தனிநிலை யாகும்

(மு.வீ.:382)

லளதனிக் குறிற்கீழ் அல்வழித் தவ்வரின்
திரிந்து ஒழிந்து ஆய்தம் சேருமென்ப

(தொ.வி.: 26:4–5)

## மயிலை நாதர்

எ—ன், எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:– தனிக்குறில் முன்னின்ற லகார ளகாரங்கள் தகாரம் வரின் ஆய்தமாகவும் பெறும், அல்வழிக்கண், எ—று.

வ—று.:–

கஃறீது, முஃடீது, என வரும்.

"திரிந்ததன் றிரிபு மதுவா மொரோவழி" என்பவாகலின், ஆய்தமானாலும் லகார [1]ளகார முன்னென்றே வருமொழித் தகாரந் திரிக்க. உம்மையான் ஆய்தமாகாது [2]முன்னர்த் திரிபாதலே வலியுடைத்தெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞானமுனிவர்

எ—னின், இவ்விரண்டு ஈற்றிற்கும் *ம்*மேலைச் சூத்திரத்தான்*ம்* எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்—ற்று.

இ—ள்.:– தனிக் குறிலின் பின் நின்ற லகர ளகரங்கள், அல்வழிக் கண்ணே தகரம் வருமாயின், றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ – று.

உ – ம்.:–

கஃறீது, முஃடீது என வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், குற்றெழுத்தை அடுத்த லகர ளகர வீற்றுப் புணர்ச்சி கூறியது.

இ—ள்.:– **குறில் வழி லள** – தனியே ஒரு குற்றெழுத்தின் பின்னின்ற லகார ளகார மெய்கள், **தவ்வணையின்** – வருமொழி முதல் தகரம் வந்தால், **ஆய்தமாகவும் பெறும்** – அவ்வீற்று லளக்கள் ஆய்தமாகவும் பெறும், **அல்வழியானே** – அல்வழிப் புணர்ச்சிக்கண், எ—று.

---

பாடவேறுபாடு .:–

1. ளகாரத்தின்முன் வருமொழித்

2. முன்னருறழ்ச்சியே

உ-ம்.:-

கஃறீது, முஃடீது என வரும்.

உம்மைபால் முன்னுறழ்ச்சியே பெறுமென்க.

## விசாகப் பெருமாளையர்

இது, இவ்விரண்டீற்றிற்கும் மேலைச் சூத்திரத்தா லெய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

இ-ள்.:- குறில்வழி-தனிக்குறிலின் பின்னின்ற, லள-லகர ளகர மெய்களானவை, அல்வழியான் - அல்வழிக்கண், த-தகரமானது, அணையின்-வருமாயின், ஆய்தமாகவும்-றகர டகரங்களாகத் திரிதல்லலாமலும் ஆய்த மாகத் திரிதலையும், பெறூஉம் - பொருந்தும், எ-று.

உ-ம்.:-

கல்+தீது-கஃறீது, முள்+தீது-முஃடீது, என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அல்வழிக்கண்ணே தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள் தகரத்தோடு புணரும்போது "லளவேற்றுமை" என்னுஞ் சூத்திரவிதியேயன்றி வேறுவிதியும் பெறுமோ?

குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்.
ஆகவும் பெறூஉ மல்வழி யானே.
(குறில்வழி ல ள, த அணையின், ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழியானே.)

இ-ள்.:- குறில்வழி ல ள - தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரமெய்கள், அல்வழியான் த அணையின் - அல்வழிக்கண்ணே தகரம் வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம் - றகர டகரங்களாகத் திரிதலேயன்றி, ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ-று.

உ-ம்.:-

கல் - தீது - கற்றீது, கஃறீது, முள் - தீது - முட்டீது, முஃடீது,
என வரும்.

இஃது என்ன ஆய்தம்?

"லளவீற்றியைபினாமாய்தமஃகும்" என்றமையிற்குற்றாய்தம்.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அவ்விரண் டொற்றினுக்கும் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ–ள்.:– குறில் வழி ல ள – தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள், தவ்வணையின் – தகரம் வந்து புணரின், ஆய்தமாகவும் பெறூஉம் – (றகர டகரங்களாகத் திரிவது மன்றி) ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், அல்வழியான் – அல்வழிச் சந்தியில், எ–று.

உ–ம்.:–

கல்+தீது–கஃறீது, முள்+தீது–முஃடீது என வரும். புணர்ச்சி பெறு மென முடிக்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– குறில்வழி – தனிக்குறிலின் பின்நின்ற, லள – லகரளகர மெய்கள், அல்வழியான் – அல்வழிப் புணர்ச்சியில், த அணையின் – தகரம் (வருமொழி முதலில்) வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம் – (றகர டகரங்களாகத் திரிதலேயன்றி) ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்.

உ–ம் :–

கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– குறில் வழி லள – தனிக் குறிலின் பின்னின்ற லகர ளகர மெய்கள், அல்வழியான் த அணையின் – அல்வழிக் கண்ணே தகரம் வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம் – றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

கல் + தீது = கஃறீது, முள்+தீது = முஃடீது என வரும். இது மேலைச் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– குறில் வழி லள – தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகர மெய்கள், – அல்வழியான் த அணையின் – அல்வழிக்கண்ணே தகரம் வருமாயின், – ஆய்தம் ஆகவும் பெறூஉம் – றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ–று.

உ–ம்.:–

கல்+தீது=கஃறீது, முள்+தீது=முஃடீது எனவரும்.

இது மேலைச் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– குறில் வழி – தனிக் குறிலின்பின் நின்ற, ல ள – லகர ளகர மெய்கள், அல்வழியான் – அல்வழிப் புணர்ச்சியில், த அணையின் – தகரம் (வருமொழி முதலில்) வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம்– (றகரடகரமெய்களாகத் திரிதலே யன்றி) ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்; எ–று. 'அல்வழியான்' என்பது – உருபுமயக்கம்.

உ–ம்.:–

கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

இது, ஆய்தக்குறுக்கம்; 97 ஆஞ் சூத்திரத்திற் கூறியது.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– குறில் வழி ல ள – தனிக் குறிலின் பின்னின்ற லகர ளகர மெய்கள், அல்வழியான் த அணையின் – அல்வழிக்கண்ணே தகரம் வருமாயின், ஆய்தம் ஆகவும் பெறூஉம் – றகர டகரங்களாகத் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும். எ–று.

உ–ம்.:–

கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

இது மேலைச்சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– குறில் வழி ல ள – கனிக்குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்களானவை, அல்வழியான் – அல்வழிக்கண், த அணையின் – தகரம் வருமாயின், ஆய்தம் ஆகவும் – (றகர டகரங்களாகக் திரித லல்லாமலும்) ஆய்தமாகத் திரிதலையும், பெறும் – பொருந்தும். எ–று.

பொ–ரை.:– தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்களானவை, அலவழிப் புணர்ச்சியில் தகரம் வருமாயின, (றகர டகரங்களாகத் திரிதலல்லாமலும்) ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும்.

உ–ம்.:–

கல் + தீது = கஃறீது.

முள் + தீது = முஃடீது.

(லகர ளகர லீற்றின் கேடு முதலியன.)

## மோசகு பொன்னையா

தனிக் குறிலின் பின்னர் நின்ற லகர ளகரங்கள் அல்வழிப் புணர்ச்சியில் தகரம் வரின், றகர டகரங்களாகத் திரிதலே யன்றி ஆய்தமாகத் திரிதலையும் பொருந்தும், எ–று.

எ–டு.:–

கஃறீது, முஃடீது.

மெய்பிறிதாதல் கட்களிறு, பொற்றகடு என நிலையொலியீற்றுத் திரிபாகவும், தூணன்று கோனல்லன் என வருவொலி முதற்றிரிபாகவும் கஃறீது, முஃடீது என்றிவ்வாறு நிலையொலியும், வருவொலியும் திரியும் இருவழித் திரிபாகவும் அமையும் என்பர்.

(25)

228. குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநந் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற.

குறில் செறியா ல ள அல்வழி வந்த
தகரந் திரிந்த பின் கேடும் ஈர் இடத்தும்
வரும் நந் திரிந்த பின் மாய்வும் வலி வரின்
இயல்பும் திரிபும் ஆவன உள பிற.

kuṟil seṟiyā la ḷa alvaḷi vanta
ṭakaran ṭirinṭa piṉ kētum īr itaṭṭum
varum nan ṭirinṭa piṉ māyvum vali variṉ
iyalpum ṭiripum āvaṉa uḷa piṟa.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Consonant finals l and l dropped

When final l and l preceded by other letters than a (single)short vowel, combine incasually with an initial t, they are dropped as soon as the t is changed (into or t); and they are also dropped as soon as the initial n with which they may combine in both ways, is changed (into n or ñ') ; and there are some(words) which when followed (by the other) hard initials, retain their finals unchanged or changed (for incasual combination) and changed (for casual).

## ஒப்புமைப் பகுதி

குறில் செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரி
னியல்புந் திரிபு மாவன வுளபிற

(இ.வி.: 139)

## மயிலை நாதர்

எ – ன், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– தனிக் குறிலொன்றனையும் ஒழித்து ஒருமொழி தொடர் மொழிகளைச் சார்ந்த லகார ளகாரங்கள், அல்வழிக்கண் வருமொழி முதற்கணின்ற தகாரம் திரிந்த பின் கெடுவனவும், [1]அல்வழி வேற்றுமைகளில் வருமொழி நகாரம் திரிந்த பின் கெடுவனவும், வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாயும் திரிபாயும் வருவனவும், வேற்றுமைக்கண் திரியாது வருவனவும் உளவாம், எ – று.

வ–று.:–
(வேல், விரல், வரால், ஆரல், கருங்கோல், [2]என்கொல்,) + (தீது) எனவும், (தோள், சுருள், நெஞ்சுள்) + (தீது) எனவும் அல்வழிக்கண் கெட்டன. (சூல், குழல், கேழல், [3]செங்கல்

---

பாடவேறுபாடு .:–

1. இருவழியும்
2. எண்கோல்
3. செங்கோல்

பைம்புல்) + (நன்று, நன்மை) எ – ம், (நாள், இருள்,[1]உருள்) + (நன்று, நன்மை) எனவும் இருவழியும் கெட்டன. (மரல், பரல், கால், மயல், எழால்) + (கடிது, சிறிது, பெரிது) எனவும், உருள் கடிது; சிறிது, பெரிது எனவும் அல்வழியில் உறழாது இயல்பாயின. புழுங்கற்கறி; சோறு துவரை பயறு; அழுங்கற்காய்; [2]சோறு தோரை பாக்கு எனவும், [3]சழுங்கற்கூரை, ஆரற்சுவர், "புழற்காலாம்பல்", புலிவிற் [4]கெண்டை எனவும் அல்வழியில் திரிந்தே நின்றன. "ஏனல்காவலிவளுமல்லள்" [5]"ஏனல்காவலிவ ளாயின ளெனவே", "அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட", "நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென, வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர்; மாதோ" எனவும் வேற்றுமைக்கண் இயல்பாயின.

'பிற' என்ற மிகையானே நூற்கடல், நூல்சில, நூல்பல என ஒன்றே அல்வழிக்கண் உறழாது ஓரிடத்துத் திரிந்தும் ஓரிடத்துத் திரியாதும் வந்தது. கொல்களிறு, செல்சாத்து, கொள்பொருள் என வினைத்தொகை உறழாது இயல்பாயின. "வெஞ்சொற் [6]றீதென்றே விடு". "பெயர்ச்சொற் றொகுமாறு பேசு" என இவை கெடாது திரிந்து வந்தன. பிறவும் இவ்விரண்டீற்றினும் இருவழியும் முடியாதன உளவேல் அவையும் இதனான் முடிக்க.

---

பாட வேறுபாடு .:–

1. சுருள்

2. சாறு

3. சழுங்கற்கூறை

4. கெண்டைநாண் எனவும்,

5. (1) "ஏனல் காவலாயினளிவளே.

   (2) ஏனல் காவலாயினளெனவே" எனவும்

6. (1) தீதன்றோவிடும்;

   (2) தீதன்றேவிடு

## சங்கர நமச்சிவாயர்

## சிவஞான முனிவர்

**எ-னின், *'ல ள வேற்றுமையிற் றடவும்' என்னும் சூத்திரத்தான்*** எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

**இ-ள்.:-** தனிக் குறிலொன்றனையும் சாராது வரும் லகார ளகாரங்கள், அல்வழிக்கண் வந்த தகரம் திரியுமிடத்துக் கெடுதலும், இருவழிக்கண்ணும் வந்த நகரம் திரியுமிடத்துக் கெடுதலும், வல்லினம் வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும் திரிதலும், வேற்றுமைக்கண் திரியாது இயல்பாதலும் பொருந்துவன உள, எ-று.

திரியுமுன் கெடுவனவற்றைத் திரிந்தபின் கேடும் மாய்வும் என்றமையின் கால வழுவமைதி.

**உ-ம்.:-**

தோன்றறியன், வேடீயன் எனவும்; தோன்றனல்லன், வேணல்லன் எனவும்; தோன்றனன்மை, வேணன்மை எனவும்; கால்கடிது, மரங்கள்கடிய எனவும்; வேற்படைக் குமரன், வாட்படைக் கையன் எனவும்;

[1]"கால்குதித்தோடிக் கடல்புக மண்டி", [2]"வாள்பேழ்ந் திட்ட", [3]"நீள்கழல் மறவர்" எனவும் முறையே காண்க.

'பிற' என்ற மிகையானே, தோன்றறீமை, வேடீமை என வேற்றுமைக்கண்ணும் தகரம் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை தாட்டுணை எனக் கெடாமையும், விற்படை என உறழாது திரிதலும், கொல்களிறு கொள்பொருள் என வினைத்தொகை இயல்பாதலும் இன்னும் இவ்விரண்டு ஈற்றுள் அமையாதன பிறவும் கொள்க. இங்ஙனம் உயர்திணைச் சொல்லின்கண் காட்டிய விகாரங்கள், மபக்கவிதி இன்மையிற் படுவனவாதலின், 'சில விகாரமாம் உயர்திணை' என்பதனுள் அடங்கா என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், ஒரு குற்றெழுத்தை அடாது வந்த லகர ளகர வீற்றுப் புணர்ச்சி கூறியது.

**இ-ள்.:- குறில் செறியா லள** – தனிக்குறில் ஒன்றனை ஒழிந்து வந்த லகர ளகர மெய்கள், **அல்வழி வந்த தகரந் திரிந்த பின்**– அல்வழிக்கண் வந்த தகரம் திரிந்த பின், **கேடும்** – ஈற்று லளக்கள் கெடுதலும், **ஈரிடத்தும் வரும் நத் திரிந்த பின்** – இருவழியினும் வருமொழி முதல் வந்த நகரம் திரிந்த பின்,

மாய்வும் – ஈற்று ல ளக்கள் கெடுதலும், வலி வரின் – வருமொழி முதல் தகர மொழிந்த வல்லினம் வந்தால், இயல்பும் திரிபும் ஆவன உள பிற – இயல்பாய் முடிதலுமுள பிறவுமாம், எ–று.

உ–ம்.:–

வேல், கருங்கோல், தோள், நெஞ்சுள், தீது என அல்வழிக்கண் கெட்டன. சூல், செங்கல், வாள், நன்று எனவும் நன்மை எனவும் இருவழியும் கெட்டன.

## விசாகப் பெருமாளையர்

இது, லள வேற்றுமையிற் றடவு மென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ–ள்.:– குறில்செறியா – தனிக் குறி லொன்றனையுஞ் சாராத, லள– லகார ளகார மெய்களானவை, அல்வழி – அல்வழிக்கண், வந்த–வருமொழிக்கு முதலாய் வந்த, தகரம்–தகரமானது, திரிந்தபின்–திரியுமிடத்து, கேடும் – கெடுதலும், ஈரிடத்தும் – இருவழிக்கண்ணும், வரு–வருமொழிக்கு முதலாய் வந்த, ந–நகரமானது, திரிந்தபின்–திரியுமிடத்து, மாய்வும்–கெடுதலும், வலி–வல்லெழுத்து முதன்மொழி, வரின்–வந்தால், இயல்புந் திரிபும் – அல்வழிக்கண் ணுறழாதியல் பாதலுந் திரிதலும் வேற்றுமைக் கண்ணே திரியாதியல்பாதலும், ஆவனவுள – பொருந்துவன வுள, எ–று.

உ–ம்.:–

தோன்றல்+தீயன்–தோன்றறீயன், வேள்+தீயன்–வேடீயன், அல்வழியிலே தகரந் திரியு மிடத்துக் கெட்டன. தோன்றல்+நல்லன்–தோன்றனல்லன், வேள்+நல்லன்– வேணல்லன் எனவும், தோன்றல்+நன்மை–தோன்றனன்மை, வேள்+நன்மை–வேணன்மை எனவும், இருவழியிலும் நகரந் திரியுமிடத்துக் கெட்டன. கால்கடிது, மரங்கள்கடிய எனவும், வேற்படைக்குமரன், வாட்படைக்கையன் எனவும், அல்வழியில் வல்லினம் வர வுறழாதியல்புந் திரிபுமாயின. கால்குதித்தோடிக் கடல்புகமண்டி, வாள்போழ்ந்தட்ட நீள்கழன் மறவர் என வேற்றுமையிலே வலிவரத் திரியா தியல்பாயின, (பிறவென்ற மிகையால் தோன்றறீமை, வேடீமை, என வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை, தாட்டுணை, எனக் கெடாமையும், விற்படைஎன உறழாது திரிதலும், கொள்களிறு, கொள்பொருள், என வினைத்தொகை யியல்பாதலும் இன்னுமிவ் விரண்டீற்றுள் அமையாதன பிறவுங் கொள்க, உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள் மயக்க

விதியில்லா விடத்து வருதலால் சில விகாரமா முயர்திணை யென்றவற்று ளடங்காவாம்)

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

குற்றெழுத்தினைச் சாராத லளக்கள் புணருமாறு கூறுஞ் சூத்திரம் யாது?

குறில்செறி யாலள வல்வழி வந்த

தகரந் திரிந்தபிற் கேடுமீரிடத்தும்

வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்

இயல்புந் திரிபு மாவன வுளபிற.

(குறில் செறியா ல ள அல்வழி வந்த

தகரம் திரிந்தபின் கேடும், ஈரிடத்தும்

வரு நத் திரிந்தபின் மாய்வும், வலி வரின்

இயல்பும் திரிபும் ஆவன உள பிற.)

**இ-ள்.:- குறில் செறியா ல ள** - தனிக்குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகார மெய்கள், **அல்வழி வந்த தகரம் திரிந்தபின் கேடும்** - அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய் வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **ஈரிடத்தும் வரு நத் திரிந்தபின் மாய்வும்** - இருவழிக் கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **வலிவரின் இயல்பும் திரிபும் ஆவன உள** - வல்லெழுத்து முதன்மொழி வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலுந் திரிதலும். வேற்றுமைக் கண்ணே திரியாதியல்பாதலும் பொருந்துவன வுள, எ-று.

லளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாதியல்பாவது எழுவாய்த்தொடர், விளித்தொடர், உம்மைத்தொகை, வினை முற்றுத்தொடர், வினைத்தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை, உவமைத்தொகை, வினையெச்சங்களிலு மெனக் கொள்க.

தகரம் வரின் குறில்செறியா லளக்கள் எவ்வாறு புணரும்?

"குறில்செறி யாலள வல்வழி வந்த தகரந் திரிந்தபிற் கேடும்"

**உ-ம்.:-**

**(1)** வேல் - தீது - வேறீது, வாள் - தீது - வாடீது, மக்காள் - தின்மின் - மக்காடின்மின், தோன்றல் - தீயன் - தோன்றறீயன்,

வேள் – தீயன் – வேடீயன், என அல்வழியிலே தகரந் திரியுமிடத்துக் கெட்டன.

நகரம் வரின் குறில் செறியா ல ள எவ்வாறு புணரும்?

"ஈரிடத்தும் வருநத் திரிந்தபின் மாய்வும்"

(2) வேல் – நன்று – வேனன்று, குரல் – நன்று – குரனன்று, வாள் – நன்று – வாணன்று. பொருள் – நன்று – பொரு. ணன்று, எனவும், வேல் – நன்மை – வேனன்மை, குரல் – நன்மை – குரனன்மை; வான் – நன்மை – வாணன்மை எனவும், இருவழியிலும் நகரந் திரியுமிடத்துக் கெட்டன.

வல்லினம் வரின் குறில் செறியா ல ள எவ்வாறு புணரும்?

"வலிவரின் இயல்புந் திரிபு மாவன வுள"

(3) கால்கடிது, மரங்கள்கடிய எனவும், மக்காள்சென்மின், கால்கை, பொருள் புகழ் எனவும், உண்டாள் சீதை, உண் பல் சிறியேன், கேள் சாத்தா எனவும், கால் சுடர், அருள் குரு எனவும், அல்வழியிலே எழுவாய்த்தொடர் முதலியவற்றில் உறழாதியல்பாயின, வேற்படைக்குமன், வாட்படைக்கையன் எனவும். வேற்கண், வாட்கண் எனவும், அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

"கால்குதித்தோடிக் கடல்புகமண்டி" "வாள்போழ்ந் தட்ட நீள் கழன் மறவர்" என வேற்றுமையிலே வலிவரத் திரியாதியல் பாயின.

பிறவென்ற மிகையானே கல்குறுமை, கற்குறுமை, முள்குறுமை, முட்குறுமை, கொள்கடுமை, கொட்கடுமை, வாள்கடுமை, வாட்கடுமை, எனக் குணவேற்றுமைக்கண் உறழ்தலும், வேறீது, வேற்றீது, வாடீது, வாட்டீது, என நெடியதனிறுதி அல்வழிக்கட் கெட்டுந் திரிந்தும் உறழ்தலும், விழல் – காடு – விழன்காடு, விழன்சேறு தாள் புறம் என லகாரஈறு வேற்றுமைக்கண் றகரமாகாது னகரமாய்த் திரிதலும், நூற்கடல் நூல்சில என அல்வழிக்கண் உறழாது ஓரிடத்துத் திரிதலும் ஓரிடத்துத் திரியாமையும், முன்னாளைவாழ்வு முன்னாளையரசு ஒருநாளைக்குழவி ஒருதிங்களைக்குழவி என ளகரஈறு ஐகாரம் பெறுதலும், பூலங்கோடு உதளங்கோடு எனவும், வெயிலத்துக்கொண்டான் வெயிலிற்கொண்டான் இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் எனவும்,

முறையே வேற்றுமைக்கட்டிரியாது அம்முப்பெறுதலும் அத்துப் பெறுதலும் இன்பெறுதலும், இன்னோரன்ன பிறவுங்கொள்க.

இது "லளவேற் றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

வேடீயன், தோன்றறீயன் என வரும் உயர்திணைப்பெயர்ப் புணர்ச்சிக்கு உதாரணங்கள் "பொதுப்பெயருயர் திணைப்பெயர்கள்" என்னுஞ் சூத்திரவுரையிற் கூறப்பட்டதாயினும் லளக்கள் கெடுதலுக்கு விதி இச்சூத்திரத்தாற் பெறப்படுதலின் மீண்டும் உதகரிக்கப்பட்டன.

வருமொழித் தகரம் திரிந்தபின்னர் லகர ளகரங்கள் கெடுமென்ற தென்னை?

லகர ளகரங்களோடு தகர மயங்காதாதலின் அவை நோக்கி றகர டகரமாகத் திரியற்பாலதாகிய தகரந்திரியு முன்னே லளக்கள் கெடுமாயின் பின்னர்த் திரியுமாறில்லையாதலின் அங்ஙனங் கூறப்பட்டது.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ—ள்: குறில் செறியா லள—தனிக் குறிலொன்றையுஞ் சாராமல் (நெடிலையுங் குறினெடிலையுங் குறிலிணையையுஞ்) சார்ந்து வரும் லகார ளகாரங்கள், அல்வழி – அல்வழிச் சந்தியில், வந்த தகரத் திரிந்தபிற் கேடும் – வருமொழிக்கு முதலாக வந்த தகரத் திரியும் இடத்துக் கெடுதலும், ஈரிடத்தும் – அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும், வரு நத் திரிந்த பின் மாய்வும் – வருமொழிக்கு முதலாக வரும் நகரந் திரியும் இடத்துக் கெடுதலும், வலி வரின் – மற்ற வல்லினம் வந்து புணரின், இயல்புந் திரிவும் – (அல்வழியிலே விகற்பித்து வாராமல்) இயல்பாதலுந் திரிந்தே வருதலும் (வேற்றுமையில்–திரியாமல்) இயல்பாதலும், ஆவன வுள – பொருந்துவன வுளவாம், எ—று.

திரியுமுன் கெடுவனவற்றைத் 'திரித்தபிற் கேடும் மாய்வும்' என்றது, காலவழுவமைதி.

உ—ம்.:–

வேல்+தீது– வேறீது, விரால்+ தீது–விராறீது, விரல்+ தீது–விரறீது, ஆரல்–ஆரறீது, கருங்கோல்–கருங்கோறீது, எனவும், வாள்+தீது–வாடீது, வராள்+தீயள்–வராடீயள், பொருள்+ தீது–பொருடீது, மஞ்சள்–மஞ்சடீது, எனவும் அல்வழியிலே தகரந் திரிய, லளக்கள் கெட்டன. வேல்+நன்று–வேனன்று, வரால்+நன்று–வரானன்று, விரனன்று, ஆரனன்று,

கருங்கோனன்று எனவும்; வாள்–நன்று–வாணன்று, வராள்+நல்லள்–வராணல்லள், பொருள்+நன்று, பொருணன்று, மஞ்சணன்று எனவும்; நன்மை எனவும் ஈரிடத்தும் வரு நத் திரிந்து பின் – லளக் கெட்டன. கால்கடிது–தேள்கொடிது– சிறிது–பெரிது எனவும் புழுங்கல்–புழுங்கற்கறி, சோறு, பயறு, அழுங்கல்–அழுங்கற்காய், சோறு, போர், கழுங்கற்சுடர், ஆரற்சுவர், 'புழற்காலாம்பல்', புலிவிற்கெண்டை, வந்தால் – வந்தாற் கொள்ளும், செல்லும், போம் எனவும் வலிவர அல்வழியிலே இயல்பாகியுந் திரிந்தும் வந்தன. 'கால் குதித் தோடிக் கடல்புக மண்டி' 'வாள்போழ்ந்தட்ட' 'நீள்கழன்மறவர்' என வேற்றுமையிலே திரியாமல் இயல்பாயின.

இனிப் பிற வென்ற மிகையாலே, தோன்றறீமை, வேஃமை என வேற்றுமையிலும் தகரம் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை, தாட்டுணை எனக் கெடாமையும்; கொல்களிறு, கொள்பொருள் என வினைத்தொகையில் இயல்பாதலும், வேறீது – வேற்றீது, வாஃது–வாட்ஃது என நெடிலிறுதி யல்வழியிலே கெட்டுந் திரிந்தும் விகற்பித்தலும், விழல்காடு– விழன்காடு, சேறு, தாள், புறம் என. லகர ஈறு வேற்றுமையிலே றகரமாகத் திரியாது னகரமாய்த் திரிதலும், முன்னாளை வாழ்வு, ஒருநாளைக் குழவி என ளகார ஈறு ஐகாரம் பெறுதலும்; இன்னுமிவ் விரண்டீற்றுள் அமையாதன பிறவுங் கொள்க. இங்கே யுயர்திணையிலே காட்டிய விகாரங்கள் மயக்க விதி யில்லாத தினாலே வந்தன. ஆதலால், 'சில விகாரமாமுயர்திணை' யென்பதில் அடங்காமை காண்க. ஆவன உள என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :–** குறில் செறியா – தனிக்குறிலைச் சாராத, லள–லகர ளகர மெய்கள்; அல்வழி – அல்வழிப் புணர்ச்சியில், வந்த – (வருமொழி முதலாக) வந்த, தகரம் –, திரிந்தபின் – திருயுமிடத்து, கேடும் – கெடுதலும்; ஈரிடத்தும் – அல்வழி வேற்றுமை இரண்டிலும், வருந – (வருமொழி முதலில்) வந்த நகரமானது, திரிந்தபின் – திரியுமிடத்து, மாய்வும்–கெடுதலும்; வலிவரின் – (வருமொழி முதலில்) வல்லெழுத்து வந்தால், இயல்பும் திரிபும் – (அல்வழிப் புணர்ச்சியில் உறழாமல்) இயல்பாதலுந்திரிதலும் (வேற்றுமைப்புணர்ச்சியில்) திரியாமல் இயல்பாதலும், ஆவன–பொருந்துவன, உள – உண்டு.

குறிப்பு :–

லளக்கள் இயல்பாதல் எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை,

விளித்தொடர், வினைமுற்றுத் தொடர் வினைத்தொகை ஆகிய இவற்றிலும், திரிவது பண்புத்தொகை, உவமத்தொகை, வினையெச்சத்தொடர் ஆகிய இவற்றிலு மென்றறிக.

உதாரணம்

தோன்றல்+தீயன்=தோன்றறீயன்
வேள் +தீயன்=வேடீயன்
– அல்வழியில்வந்த தகரந்திரிய லள கெட்டன.

தோன்றல்+நல்லன்=தோன்றனல்லன்
வேள் +நல்லன்=வேணல்லன்
– அல்வழியில்வந்த நகரந் திரிய லள கெட்டன.

தோன்றல்+நன்மை=தோன்றனன்மை
வேள் +நன்மை =வேணன்மை
– வேற்றுமையில் வந்த நகரந்திரிய லள கெட்டன.

கால் +கடிது = கால்கடிது
மரங்கள்+கடிய=மரங்கள் கடிய
வேல் +படை=வேற்படை
– அல்வழியில் வலிவர லளபொதுவிதிப்படி உறழாமல் இயல்புந் திரிபுமாயின.

வாள் +படை = வாட்படை
கால் +குதித்து =கால்குதித்தது
வாள் +போழ்ந்தது= வாள்போழ்ந்தது
– வேற்றுமையில் வலி வரபொதுவிதிப்படி திரியாமல் இயல்பாயின.

குறிப்பு :–

'பிற' என்றதனால், 'தோன்றறீமை', 'வேடீமை' எனக் குறில்செறியாலள வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்; 'காற்றுணை', 'தாட்டுணை' என அவ்வழியிலும் கெடாமையும்; 'விற்படை' எனக் குறில்செறிந்த லகரம் அல்வழியில் உறழாமல் திரிதலும்; 'கொல்களிறு', 'கொள்பொருள்' என அல்வழியில் உறழாமல் இயல்பாதலும்; அகல் + பரப்பு = அகன்பரப்பு, விழல் + காடு = விழன்காடு என இருவழியிலும் லகரம் வல்லினம் வர னகரமாகத் திரிதலும்; இன்னும் இவ்விரண்டீற்றுள் அடங்காதன உளவாயின், அவையுங் கொள்க. உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள்

மயக்கவிதியில்லாத விடத்து வருதலால் "சில விகாரமா முயர்திணை" என்றவற்று ளடங்காவாம். 'மக்கட் பண்பு' முதலியவற்றைச் 'சில விகாரமா முயர்திணை' என்றதாற் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ – ள்.:– குறில் செறியா ல ள – தனிக்குறி லொன்றையுஞ் சாராத லகார ளகார மெய்கள், அல்வழி வந்த தகரந் திரிந்தபின் கேடும் – அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய் வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், ஈரிடத்தும் வரு நத் திரிந்த பின் மாய்வும் – இருவழிக்கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும், வலி வரின் இயல்பும் திரிபும் ஆவன உள – வல்லெழுத்து முதன்மொழி வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும், திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியா தியல்பாதலும் பொருந்துவனவுள, எ – று.

ல ளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழா தியல்பாவது எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை விளித்தொடர் வினைமுற்றுத் தொடர் வினைத்தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை வினையெச்சங்களிலு மெனக் கொள்க.

உ–ம்.:–

(1) வேல் + தீது = வேறீது, தோன்றல் + தீயன் = தோன்றறீயன், வாள் + தீது = வாடீது, வேள் + தீயன் = வேடீயன் என அல்வழியிலே தகரந் திரியுமிடத்துக் கெட்டன.

(2) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்; வேள் + நல்லன் = வேணல்லன் எனவும், தோன்றல் + நன்மை = தோன்றனன்மை; வேள் + நன்மை = வேணன்மை எனவும் இருவழியிலும் நகரந் திரியுமிடத்துக் கெட்டன.

(3) கால்கடிது, மரங்கள்கடிய எனவும், கால்கை, பொருள் புகழ் எனவும், தோன்றல் கூறாய்; மக்காள் சொல்லீர் எனவும், உண்பல் சிறியேன், கேள் சாத்தா எனவும் கால் சுடர், அருள்குரு எனவும், அல்வழியிலே எழுவாய்த் தொடர் முதலியவற்றில் உறழா தியல்பாயின. வேற்படைக் குமரன், வாட்படைக்கையன் எனவும், வேற்கண், வாட்கண் எனவும், வந்தாற்கொள்ளும், வந்தக்காற்கொள்ளும் எனவும், அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

(4) "கால்குதித்தோடிக் கடல்புகமண்டி, வாள்போழ்ந்தட்ட நீள்கழன் மறவர்" என வேற்றுமையிலே வலி வரத் திரியா தியல்பாயின.

'பிற' என்ற மிகையால், தோன்றறாள், வேடோள் என நிலைமொழி உயர்திணைப் பெயராயின், வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை, தாட்டுணை எனவும், பிறங்கற்றோள், வாட்டாரை எனவும், அல்வழியிலும் பண்புத்தொகை உவமைத் தொகைகளிற் கெடாமையுங் கொள்க. இன்னும் பிற என்ற மிகையால், தனிக்குறிலைச் சார்ந்த ல ளக்களும், விற்படை எனவும், விற்புருவம் எனவும், பண்புத்தொகை உவமைத் தொகைகளில் உறழாதுதிரிதலும், கொல்களிறு, கொள்பொருள் எனவும், நில் கொற்றா, கொள்பூதா, எனவும் வினைத்தொகை வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலுங் கொள்க.

இது ''லளவேற் றுமையிற் றடவும்'' என்னும் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– குறில் செறியர லள**–தனிக்குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகாரமெய்கள், – **அல்வழிவந்த தகரம் திரிந்தபின் கேடும்**–அல்வழிக் கண் வருமொழிக்கு முதலாய்வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், – **ஈரிடத்தும் வரு நத் திரிந்தபின் மாய்வும்** – இருவழிக்கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும், – **வலி வரின் இயல்பும் திரிபும் ஆவன உள** – வல்லெழுத்து முதன்மொழிவந்தால் அல்வழிக் கண் உறழாது இயல்பாதலுங் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியாதியல்பாதலும் பொருந்துவனவுள. எ–று.

ல ளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாதியல்பாவது எழுவாய்த் தொடர் உம்மைத் தொகை விளித்தொடர் வினைமுற்றுத் தொடர் வினைத் தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை உவமைத் தொகை வினையெச் சங்களினு மெனக் கொள்க.

உ–ம்:–

(1)வேல்+தீது=வேறீது,
தோன்றல்+தீயன் = தோன்றறீயன்,
வாள் + தீது=வாடீது,
வேள் +தீயன் = வேடீயன் – என அல்வழியிலே தகரந் திரியுமிடத்துக் கெட்டன.

(2)தோன்றல்+நல்லன்=தோன்றனல்லன்,
வேள்+ நல்லன்=வேணல்லன், எனவும்
தோன்றல் + நன்மை = தோன்றனன்மை,
வேள்+நன்மை = வேணன்மை, – எனவும் இருவழியிலும் நரகந் திரியுமிடத்துக் கெட்டன.

(3) கால்கடிது, மரங்கள்கடிய, எனவும் கால் கை, பொருள் புகழ், எனவும் தோன்றல்கூறாய், மக்காள்சொல்லீர், எனவும் உண்பல்சிறியேன், கேள்சாத்தா, எனவும் கால் சுடர், அருள்குரு. எனவும் அல்வழியிலே எழுவாய்த் தொடர் முதலியவற்றில் உறழாதியல்பாயின. வேற்படைக்குமரன், வாட்படைக்கையன். எனவும் வந்தாற்கொள்ளும், வந்தக்காற்கொள்ளும், எனவும் அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

(4) கால்குதித் தோடிக்கடல்புகமண்டி, வாள்போழ்ந்தட்ட நீள்கழன்றவர் என வேற்றுமையிலே வலி வரத் திரியாதியல்பாயின.

பிற என்றமிகையால், தோன்றாள், வேடோள் என, நிலைமொழி உயர்திணைப் பெயராயின, வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை, தாட்டுணை, எனவும் பிறங்கற்றோள், வாட்டாரை, எனவும் அல்வழியிலும் பண்புத் தொகை உவமைத் தொகைகளிற் கெடாமையுங் கொள்க. இன்னும் பிறஎன்ற மிகையால், தனிக்குறிலைச் சார்ந்த லளக்களும், விற்படை எனவும் விற்புருவம், எனவும் பண்புத்தொகை உவமைத் தொகைகளில் உறழாது திரிதலும், கொல்களிறு, கொள்பொருள், எனவும் நில்கொற்றா, கொள்பூதா, எனவும் வினைத்தொகை வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலுங் கொள்க.

இனிப் பிற என்றமிகையாலே, தோன்றறீமை, வேடீமை என வேற்றுமையிலும் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை, தாட்டுணை எனக் கொடாமையும்; செல்களிறு, கொள் பொருள் என வினைத்தொகையில் இயல்பாதலும் இன்னும் இவ்விரண்டீற்றுள் அமையாதன பிறவுங் கொள்க.

இங்கே உயர்திணையிலே காட்டிய விகாரங்கள் மயக்கவிதியில்லாததினாலே வந்தனவாதலால் சிலவிகாரமா முயர்திணை என்பதில் அடங்காமை காண்க.

இது 'லனவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்திய விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

# வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— (1) குறில் செறியா — தனிக்குறிலைச் சாராத, ல ள — லகர ளகர மெய்கள், அல்வழி — அல்வழிப் புணர்ச்சியில், வந்த — (வருமொழிக்கு முதலாக) வந்த, தகரம் — , திரிந்த பின் — ( றகர டகரங்களாகத் திரிந்தமைவிடத்து), கேடும் — தாம் கெடுதலும் — (2) ஈர் இடத்தும் — அல்வழி வேற்றுமையிரண்டிலும், வரு ந திரிந்தபின் — (வருமொழிக்கு முதலாக) வந்த நகரம் ( னகர ணகரங்களாகத்) திரிந்தவிடத்து, மாய்வும் — (தாம்) கெடுதலும்; (3) வலிவரின் — (வருமொழி முதலில்) வல்லெழுத்து வந்தால், இயல்பும் திரிபும் — (அல்வழிப் புணர்ச்சியில் விகற்பியாமல்) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைப்புணர்ச்சியில்) திரியாமல் இயல்பாதலும், ஆவன — பொருந்துவன, உள — உண்டு; எ—று.

உயிர்த்தொடர் குற்றியலுகரங்கட்குமுன் — வரும் வல்லினம் — வீட்டுச்சுவர், வயிற்றுக்கடுப்பு என வேற்றுமையிலும், மூட்டுப்பூச்சி, வெளிற்றுப்பனை என அல்வழியிலும் மிக்குவருமென்று அறிக.

இங்குக் கூறப்படாத மென்றொடரின் முன்னும், வன்றொடரின் முன்னும் வண்டுக்கால், கொக்குச்சிறகு எனவேற்றுமையில் வலிமிகு மென்க.

எனவே, ஆறுவகைக் குற்றியலுகரங்களுள் இடைத்தொடர், ஆய்தத்தொடர் (ஒற்றிடைமிகாத) நெடிற்றொடர் (ஒற்றிடைமிகும்) உயிர்த்தொடர், வன்றொடர் இவற்றுக்குமுன் இருவழியிலும் வலிமிகுமென்றும், மென்றொடர்முன் அல்வழியில் மிகா, வேற்றுமையில் மிகுமென்றுங் கூறியதாயிற்று.

உ—ம்.: (1) தோன்றல் + தீயன் = தோன்றறீயன்

வேள் + தீயன் = வேடீயன் (அல்வழியில்வந்த தகரம் திரிய ல ள கெட்டன)

(2) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்

வேள் + நல்லன் = வேணல்லன் (அல்வழியில் வந்த நகரம் திரிய ல ள கெட்டன)

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை

வேள் + நன்மை = வேணன்மை (வேற்றுமையில் வந்த நகரம் திரிய ல ள கெட்டன.

(3) கால் + கடிது = கால்கடிது

மரங்கள் + கடிய = மரங்கள் கடிய

வேல் + படை = வேற்படை

வாள் + படை = வாட்படை (அல்வழியில் வலிவர ல ள

பொதுவிதிப்படி விகற்பியாமல் இயல்பும் திரிபுமாயின)

கால் + குதித்து = கால்குதித்து

வாள் + போழ்ந்து = வாள் போழ்ந்து (வேற்றுமையில் வலிவரப் பொதுவிதிப்படி திரியாமல் இயல்பாயின)

'பிற' என்ற மிகையால் – தோன்றறீமை, வேடீமை எனக் குறில் செறி யா ல ள வேற்றுமையிலும் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்; காற்றுணை, தாட்டுணை என அல்வழியிலும் கெடாமையும்; விற்படை எனக் குறில் செறிந்த லகரம் அல்வழியில் உறழாமல் திரிதலும்; கொல்களிறு, கொள்பொருள் எனக் குறில் செறிந்த லகர ளகரங்கள் அல்வழியல் உறழாமல் இயல்பாதலும்; அகல் + பரப்பு = அகன்பரப்பு, விழல் + காடு = விழன்காடு என இருவழியிலும் லகரம் வல்லினம் வர னகரமாகத் திரிதலும், இன்னும் இவ்விரண்டீற்றுள் அடங்காதன உளவாயின் அவையுங் கொள்க.

(உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள், மயக்க விதியில்லாதவிடத்து வருதலால், 'சில விகாரமா முயர்திணை' என்றவற்றுள் அடங்காவாம்)

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– குறில் செறியா ல ள** – தனிக்குறிலொன்றனையுஞ் சாராத லகார ளகார மெய்கள், **அல்வழி வந்த தகரந் திரிந்தபின் கேடும்** – அல்வழிக்கண் வருமொழிக்கு முதலாய் வந்த தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **ஈரிடத்தும் வரு நத் திரிந்தபின் மாய்வும்** – இருவழிக் கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரந் திரியுமிடத்துக் கெடுதலும், **வலிவரின் இயல்பும் திரிபும் ஆவன உள** – வல்லெழுத்து முதன்மொழி வந்தால் அல்வழிக்கண் உறழாது இயல் பாதலும் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியா தியல்பாதலும் பொருந்துவனவுள. எ–று.

ல ளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாதியல்பாவது எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை விளித்தொடர் வினைமுற்றுத்தொடர் வினைத்தொகைகளிலும், திரிவது பண்புத்தொகை உவமைத்தொகை வினையெச்சங்களிலு மெனக்கொள்க.

**உ–ம்.:–**

(1) வேல் + தீது = வேறீது, தோன்றல் + தீயன் = தோன்றறீயன், வாள் + தீது = வாடீது, வேள் + தீயன் = வேடீயன் – என அல்வழியிலே தகரந் திரியுமிடத்துக் கெட்டன.

(2) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன், வேள் + நல்ன் = வேணல்லன், தோன்றல் + நன்மை= தோன்றனன்மை, வேள் + நன்மை = வேணன்மை. – என இருவழியிலும் நகரந்

திரியுமிடத்துக் கெட்டன.

(3) கால் + கடிது = கால்கடிது

மரங்கள் + கடிது = மரங்கள் கடிய – (எழுவாய்)

கால் + கை = கால் கை

பொருள் + புகழ் = பொருள் புகழ் – (உம்மை)

தோன்றல் + கூறாய் = தோன்றால் கூறாய்

மக்காள் + சொல்லீர் = மக்காள் சொல்லீர்

சொல்வல் + சிறியேன் = சொல்வல் சிறியேன்

கேள் + சாத்தா = கேள் சாத்தா

கால் + சுடர் = கால்சுடர்

அருள் + குரு = அருள் குரு

– என அல்வழியிலே எழுவாய்த்தொடர் முதலியவற்றில் உறழாதியல்பாயின.

வேல் + படை = வேற்படை

வாள் + படை = வாட்படை

வேல் + கண் = வேற்கண்

வாள் + கண் = வாட்கண்

வந்தால் + கொள்ளும் = வந்தாற்கொள்ளும் – (வினையெச்சம்)

– என அல்வழியிலே பண்புத்தொகை முதலியவற்றில் உறழாது திரிந்தன.

(4) கால்குதித்தோடிக் கடல்புக மண்டி, வாள்போழ்ந் தட்ட நீள்கழன் மறவர் – என வேற்றுமையிலே வலிவரத் திரியா தியல்பாயின.

'பிற' என்ற மிகையால், தோன்றறாள் வேடோள் என நிலைமொழி உயர்திணைப் பெயராயின் வேற்றுமையிலுந் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும், காற்றுணை தாட்டுணை என்றும் பிறங்கற்றோள் வாட்டாரை என்றும் அல்வழியிலும் பண்புத்தொகை உவமைத்தொகைகளிற் கெடாமையுங் கொள்க. இன்னும் 'பிற' என்ற மிகையால், தனிக் குறிலைச் சார்ந்த ல ளக்களும், விற்படை, விற்புருவம் எனப் பண்புத்தொகை உவமைத்தொகைகளில் உறழாதுதிரிதலும்; கொல்களிறு, கொள்பொருள் என்றும் நில் கொற்றா, கொள் பூதர என்றும் வினைத் தொகை வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலுங் கொள்க.

இது "வளவேற் றுமையிற் றடவும்" என்னும் 227–ஆவது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

# கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.;– குறில் செறியா ல ள – தனிக்குறி லொன்றனையும் சாராத லகார ளகார மெய்களானவை, அல்வழி – அல்வழிக்கண், வந்த தகரம் – (வருமொழிக்கு முதலாய் ) வந்த தகரமானது, திரிந்தபின் – திரியுமிடத்து, கேடும் – கெடுதலும், ஈரிடத்தும் – அல்வழி வேற்றுமைக்கண்ணும், வரு ந – (வருமொழிக்கு முதலாய்) வந்த நகரமானது, திரிந்த பின் – திரியுமிடத்து, மாய்வும் – கெடுதலும், வலி வரின் – வல்லெழுத்து (முதன்மொழி) வந்தால், இயல்பும் திரியும் – (அல்வழிக்கண் உறழாது) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைக்கண்ணே) திரியா தியல்பாதலும், ஆவன உள–பொருந்துவன வுள. எ–று.

பொ–ரை.:– தனிக்குறில் அல்லாத மற்றை யெழுத்துக்களைச் சார்ந்துவரும் ல ள ஆனவை அல்வழியில் வந்த தகரம் திரிந்த இடத்திற் கெடுதலும், இருவழியிலும் வந்த நகரம் திரியுமிடத்திற் கெடுதலும், வல்லினம் வந்தால் அல்வழியில் உறழாமல் இயல்பாதலும், திரிதலும், வேற்றுமையில் திரியாமல் இயல்பாதலும் உண்டு.

ல ளக்கள் அல்வழியில் வல்லினம் வர உறழாது இயல்பாவது எழுவாய்த்தொடர், உம்மைத்தொகை, விளித்தொடர், வினைமுற்றுத்தொடர், வினைத்தொகைகளிலும்; திரிவது பண்புத்தொகை, உவமைத்தொகை வினையெச்சங்களிலும் எனக் கொள்க.

உ–ம்;–

தோன்றல் + தீயன் = தோன்றறீயன். – அல்வழியிலே தகரந் திரியுமிடத்து ல ள கெட்டன.

வேள் + தீயன் = வேடீயன்.

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன். – இருவழியிலும் நகரம் திரியு மிடத்து ல ள கெட்டன.

வேள் + நல்லன் = வேணல்லன்.

தோன்றல் + நன்மை = தோன்றனன்மை.

வேள் + நன்மை = வேணன்மை.

கால் + கடிது = கால்கடிது. – அல்வழியில் வல்லினம் வர லள உறழாது இயல்புந் திரிபுமாயின.

மரங்கள் + கடிய = மரங்கள்கடிய.

வேல் + படை = வேற்படை.

வாள் + படை = வாட்படை.

"கால்குதித் தோடிக் கடல்புக மண்டி" – வேற்றுமையிலே லள வலி வரத் திரியாதியல்பாயின.

"வாள்போழ்ந் திட்ட நீள்கழன் மறவர்"

பிற என்ற மிகையால், தோன்றல்+துமை=தோன்றறுமை, வேள்+தீமை=வேடீமை என வேற்றுமையிலும், தகரம் திரியுமிடத்துக் கெடுதலும்; கால்+துணை=காற்றுணை, தாள்+துணை=தாட்டுணை என அல்வழியிலும் கெடாமையும்; வில்+படை=விற்படை என உறழாது திரிதலும்; கொல்+களிறு=கொல் களிறு, கொள்+பொருள்=கொள்பொருள் என வினைத்தொகையில் இயல்பாதலும், இன்னும் இவ்விரண்டீற்றுள் அமையாதன பிறவுங் கொள்க. உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள் மயக்க விதி யில்லாவிடத்து வருதலால், 'சில விகாரமா முயர்திணை' என்றவற்று ளடங்காவாம்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) குறில்செறியா – தனிக்குறிலொன்றனையுஞ்சாராத, லள – லகர ளகர மெய்களானவை, அல்வழி – அல்வழிக்கண், வந்த – வருமொழிக்கு முதலாய்வந்த, தகரம் – தகரமானது, திரிந்தபின் – திரியுமிடத்து, கேடும் – கெடுதலும்;

(2) ஈரிடத்தும் – இருவழிக் கண்ணும், வரு – (வரு மொழிக்கு முதலாய்) வந்த, ந – நகரமானது, திரிந்தபின் – திரியுமிடத்து, மாய்வும் – கெடுதலும்;

(3) வலி – வல்லெழுத்து முதன் மொழி, வரின் – வந்தால், இயல்பும் திரிபும் – (அல்வழிக் கண் உறழாது) இயல்பாதலும் திரிதலும் (வேற்றுமைக்கண்ணே) திரியாது இயல்பாதலும், ஆவன உள – பொருந்துவன உண்டு.

உதாரணம்

(1)தோன்றல் +தீயன் = தோன்றறீயன்
வேள்+ தீயன் = வேடீயன்
என அல்வழியில் வந்த தகரந்திரிய ல ள கெட்டன.
(2)தோன்றல் +நல்லன்= தோன்றனல்லன்
வேள்+ நல்லன்= வேணல்லன்
என அல்வழியில் வந்த நகரந் திரிய ல ள
கெட்டன.
தோன்ற+நன்மை= தோன்றனன்மை

வேள்+ நன்மை= வேணன்மை

என வேற்றுமையில் வந்த நகரந் திரிய ல ள கெட்டன.

(3)கால்+கடிது=கால்கடிது

மரங்கள்+கடிய=மரங்கள்கடிய

வேல்+படை =வேற்படை

வாள்+படை =வாட்படை

என அல்வழியில் வலிவர ல ள இயல்பும் திரிபுமாயின.

கால்+குதித்து =கால்குதித்து

வாள்+போழ்ந்து=வாள்போழ்ந்து

என வேற்றுமையில் வலி வர பொதுவிதிப்படி திரியாமல் இயல்பாயின.

'பிற' என்ற மிகையால்,

| | | | | |
|---|---|---|---|---|
| தோன்றல் | + | தீமை | = | தோன்றறீமை |
| வேள் | + | தீமை | = | வேடீமை |

என வேற்றுமையிலும் தகரந் திரியுமிடத்துக் கெடுதலும்;

| | | | | |
|---|---|---|---|---|
| கால் | + | துணை | = | காற்றுணை |
| தாள் | + | துணை | = | தாட்டுணை |

என அல்வழியில் கெடாமையும்;

கொள்களிறு, கொள்பொருள் ; நில்கொற்றா, கொள்பூதா என வினைத்தொகை, வினைமுற்றுத் தொடர்களில் இயல்பாதலும், இன்னும் இவ்விரண்டீற்றுள் அமையாதன பிறவும் கொள்க.

உயர்திணையிற் காட்டிய உதாரணங்கள் மயக்கவிதி யில்லாவிடத்து வருதலால் 'சிலவிகாரமா முயர்திணை' (சூ – 159.) என்றதனுள் அடங்காவாம்.

## மோசகூ பொன்னையா

தனிக்குறிலைச் சாராது பிறவழி வரும் லகர ளகரங்கள் அல்வழிக்கண் வருமொழி முதலில் வந்த தகரந் திரியுமிடத்துக் கேடுறுதலும்; இருவழிக்கண்ணும் வருமொழி முதலில் வந்த நகரந் திரியுமிடத்துக் கேடுறுதலும்; வல்லெழுத்து முதன்மொழி வரின், அல்வழிக்கண் உறழாது இயல்பாதலும்; வேற்றுமைக்கண் திரியாது இயல்பாதலும் ஆகும், எ–று.

எ–டு.;–

தோன்றறீயன்
வேடீயன் அல்வழியில் வந்த தகரந் திரிய லள கெட்டன.

தோன்றனல்லன்
வேணல்லன் அல்வழியில் வந்த நகரந் திரிய லள கெட்டன.

| | |
|---|---|
| தோன்றனன்மை<br>வேணன்மை | வேற்றுமையில் வந்த நகரந்திரிய லள கெட்டன. |
| கல்கடிது<br>மரங்கள் கடிய<br>வேற்படை<br>வாட்படை | அல்வழியில் வலிவர லள பொது விதிப்படி<br>விகற்பமடையாமல் இயல்புந் திரிபுமாயின. |
| கால் குதித்தது<br>வாள் போழ்ந்தது | வேற்றுமையில் வலிவரப் பொது விதிப்படி<br>திரியாமல் இயல்பாயின. |

பிற என்ற மிகையால், தோன்றறீமை, வேடீமை எனக் குறில் செறியா லள வேற்றுமையில் தகரந் திரியுமிடத்துக் கேடுறு தலையும், காற்றுணை, தாட்டுணை என அல்வழியில் கெடாமையையும்; விற்படை எனக் குறில் செறிந்த லகரம் அல்வழியில் திரிதலையும்; கொல்களிறு, கொள்பொருள் என வினைத்தொகை இயல்பாதலையும்; அகன்பரப்பு, விழன்காடு என இருவழியும் லகரம் வலி வர னகரமாய்த் திரிதலையும் இவ்வாறு வருவன பிறவுளவேல் அவற்றையும் முடிக்க.

(25)

229\. லளவிறு தொழிற்பெயர் ரீரிடத்து முவ்வுறா
வலிவரி னல்வழி யியல்புமா வனவுள

ல ள ஈறு தொழில்பெயர் ஈர் இடத்தும் உவ் உறா
வலி வரின் அல்வழி இயல்பும் ஆவன உள

la l̲a īṟu tol̤ilpeyar īr itaṭṭum uv uṟā
vali variṉ alval̤i iyalpum āvaṉa ul̲a

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Verbal nouns ending with la and l̲a

In both combinations verbal nouns ending in l! and l! do not take (the increment) u, when followed by hard initials; and there are also some (words) which do not change their finals in Incasual combination.

## மயிலைநாதர்

இதுவுமது.

இ–ள்.: [1]லகார ளகார வீற்றுத் தொழிற்பெயர்களுள்ளும் சில இருவழியும் மேல்விதித்த உகரம் ஏலா; வல்லினம் வந்தால் அல்வழிக்கண் மேற்சொன்ன உறழ்வு உறழாது இயல்பாவனவுமுள, எ – று.

எனவே அல்வழிக்கண் ஏனைமெய்கள் வந்தாலும் வேற்றுமைக்கண் அனைத்து மெய்களும் வந்தாலும் இவற்றிற்கு மேற்சொன்ன பொதுவிதிகளே ஆமென்பதுவும் கொள்க.

வ – று.:–

(முன்னல், பின்னல், உள்ளல், துள்ளல், [3]அலவல், ஆடல், பாடல், ஓதல், ஈதல்) + (கடிது, சிறிது, பெரிது) என லவ்வீறு, அல்வழிக்கண் உகரம் பெறாது இயல்பாயிற்று; முன்னற்கடுமை என வேற்றுமைக்கண் உகரம் பெறாது திரிந்தது. கோள்கடிது; சிறிது, பெரிது எனவும், கோட்கடுமை; சிறுமை, பெருமை எனவும், ளகார வீறு, இருவழியும் உகரம் பெறாது அல்வழிக்கண் இயல்பாயும் வேற்றுமைக்கண் திரிந்தும் வந்தது. பிறவுமன்ன.

இவற்றை முன்னர்த் தொழிற்பெயரைச் சார வையாது ஈண்டுப் போதந்து வைத்தது இவற்றின் வாய்பாட்டு வேற்றுமை தோன்றற்கெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ – னின், விகுதி பெற்ற தொழிற்பெயர்க்கும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்க்கும் வருவதோர் ஐயம் அறுத்தலும், ஒருவாற்றால் *ம்'அல்வழி அவற்றோடு உறழ்வும்' எனம்* எய்தியது விலக்கலும் நுதலிற்று.

இ–ள்.: லகாரத்தை இறுதியாக உடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும், முதனிலைத் தொழிற்பெயர் போல யவ்வன் மெய்வரின் உகரம் பெறுமோ பெறாவோ என்று ஐயுறற்க; இருவழியும் உகரம் பெறாவாம்; வல்லினம் வரின் அல்வழிக்கண் உறழாது இயல்பாவனவும் சில உள, எ – று.

உ – ம்.:–

ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல் வலிது எனவும்; ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை எனவும்;

கோள்கடிது, கோட்கடிது, கோணன்று, கோள்வலிது எனவும்; கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்மை எனவும் இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன. நடத்தல் கடிது, நடப்பித்தல் கடிது எனச் சில உறழாது அல்வழிக்கண் இயல்பாயின.

இறந்ததுதழீஇய எச்ச இழிவு சிறப்பும்மையானே, பின்னல் கடிது, பின்னற்கடிது; உன்னல் கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியான் உறழ்தலே பெரும்பால என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், லகர ளகர வீற்றுப் புடைபெயர்ச்சித் தொழிற்பெயர்ப் புணர்ச்சி கூறியது.

இ-ள்.:- லளவிறு தொழிற்பெயர் - நிலைமொழியான் லகர ளகர வீற்றுப் புடைபெயர்ச்சித் தொழிற்பெயர்க்கண் முக்கணம் வரினும், ஈரிடத்தும் - அல்வழி வேற்றுமை இரண்டிடத்தும், உவ்வுறா - மேல் விதித்த உகரம் இவ் வீற்று லளக்கள் ஏலாதாம், வலி வரின் அல்வழி - வல்லினம் வந்தால் அல்வழிப் புணர்ச்சிக்கண்ணே, இயல்பும் ஆவனவுள - மேற்சொன்ன உறழ்வு உறழாது இயல்பாய் முடிவனவும் உள, எ-று.

உ-ம்.:-

ஆடல், பாடல், ஓதல், ஈதல், முன்னல், பின்னல், உள்ளல், துள்ளல், செய்யுள், விளையுள், கோள் கடிது, சிறிது, தீது, பெரிது எனவும் கடுமை, சிறுமை எனவும் இருவழியும் உகரம் ஏலாது இயல்பாய் முடிந்தன.

## விசாகப் பெருமாளையர்

இது, லகர ளகர மெய்யீற்றுத் தொழிற்பெயர்களுக்கு வருவதோரைய மறுத்தலும் ஒருவாறு அல்வழி யவற்றோ டுறழ்வு மென வெய்தியது விலக்கலும் உணர்த்துகின்றது.

இ-ள்.: லளவிறு தொழிற்பெயர்-லகாரத்தை யிறுதியாக வுடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாக வுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்தும்-இரு வழியிலும், உவ்வுறா-யகர மல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாவாம், வலி-வல்லினம், வரின்-வந்தால், அல்வழி-அல்வழிக்கண், இயல்புமாவன-உறழா தியல்பாவனவும், உள-சிலவுள, எ-று.

உ-ம்.:-

ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது, ஆடனன்று, ஆடல்வலிது

எனவும், ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை எனவும், கோள்கடிது–கோட்கடிது, கோணன்று, கோள்வலிது எனவும், கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்மை எனவும், இருவழியும், உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன, நடத்தல்கடிது, நடப்பித்தல்கடிது, எனச் சில வுறழாது அல்வழியி லியல்பாயின. (இயல்பு மென்ற வும்மையால் பின்னல்கடிது பின்னற்கடிது, உன்னல்கடிது, உன்னற்கடிது, எனப் பொதுவிதியானுறழ்தலே பெரும்பாலன வென்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

லகரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் எவ்வாறு புணரும்?

லளவிறு தொழிற்பெயரீ ரிடத்து முவ்வுறா

வலிவரி னல்வழி யியல்புமா வனவுள.

(ல ள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா

வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன வுள)

இ–ள்.: ல ள இறு தொழிற்பெயர் – லகரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்தும் உவ்வுறா – இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாவாம், வலிவரின் அல்வழி இயல்பும் ஆவுன உள – வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழாதியல்பாவனவுஞ் சிலவுள, எ–று.

உ–ம்.:–

(1) ஆடல் சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல் வலிது எனவும், ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை. எனவும், கோள்கடிது, கோட்கடிது; கோணன்று, கோள்வலிது. எனவும், கோட்கடுமை. கோணன்மை, கோள்வன்மை எனவும் இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

(2) நடத்தல்கடிது, நடப்பித்தல்கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது; உன்னல்கடிது, உன்னற்கடிது, எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலன வென்க.

ஈரிடத்தும் உவ்வுறா என்றது ஐயமறுத்தல்; வலிவரினல் வழியியல்புமா வனவுன என்றது ஒருவாறு "அல்வழியவற்றோடு றழ்வும்" என எய்தியது விலக்கல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, விகுதி பெற்ற தொழிற்பெயர்க்கும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்க்கும் வருவதோர் சந்தேக மறுத்தலும் ஒருவிதத்தால் எய்தியது விலக்கலு முணர்த்துகின்றது.

இ–ள்:– லளவிறு தொழிற்பெயர்–லகரத்தை யிறுதியாக வுடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை யிறுதியாக வுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்து முவ்வுறா – அல்வழி வேற்றுமை யிரண்டிடத்தும், முதனிலைத்தொழிற்பெயர்போல யவ்வல்லாத மெய் வரின் உகரச் சாரியை பெறாவாம், வலிவரி னல்வழி யியல்பு மாவன வுள–அல்வழிச் சந்தியிலே வல்லினம் வந்து புணரின் உறழாமல் இயல்பாவனவுஞ் சிலவுளவாம், எ–று.

உ–ம்.:–

ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது, ஆடனன்று, ஆடல் வலிது எனவும், ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வலிமை எனவும் விகுதிபெற்றதொழிற்பெயர் இரு வழியு முகரச்சாரியை பெறாது பொதுவிதியால் முடிந்தது. கோள்கடிது–கோட்கடிது–கோணன்று–கோள்வலிது–எனவும். கோட்கடுமை–கோணன்மை–கோள்வலிமை எனவும். இருவழியும் கொள் என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயருமவ்வாறே முடிந்தது. நடத்தல்கடிது–நடப்பித்தல்கடிது–என அல்வழியிற் சிலவுறழாமல் இயல்பாயின. இயல்புமாவனவுளவென்ற–இறந்தது தழுவிய எச்ச இழிவுசிறப்புஉம்மையால்–பின்னல்கடிது–பின்னற்கடிது–உன்னல்கடிது – உன்னற் கடிது – எனப் பொதுவிதியால் உறழ்ந்து வருதலே பெரும்பாலன வெனக் காண்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :– லள இறுதொழிற்பெயர் – லகர ளகரங்களை இறுதியாகவுடைய (விகுதிபெற்ற) தொழிற்பெயரும், ளகரத்தை இறுதியாகவுடைய (முதனிலை திரிந்த) தொழிற்பெயரும், ஈர் இடத்தும் – இருவழியிலும், உ உறா – (யகரமல்லாத) மெய்கள் வந்தால்) உகரம் பெறாவாம்; வலிவரின் – வல்லினம் வந்தால், அல்வழி – அல்வழியில், இயல்பும் ஆவன – (உறழாமல்) இயல்பாகுந் தொழிற்பெயர்களும், உள – சில உண்டு.

உதாரணம்

ஆடல்சிறந்தது, செய்புணன்று, கோள்வலிது – அல்வழி,
ஆடனன்மை, விக்குள்வன்மை, கோட்கடுமை – வேற்றுமை.

(என இருவழியிலும் உகரச்சாரியை பெறாமல் முடிந்தன).

நடத்தல் கடிது – அல்வழியில் உறழாமல் இயல்பாயிற்று.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ல ள றுதொழிற்பெயர்–லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் விகாரத்தை யிறுதியாகவுடைய முதனிலைதிரிந்ததொழிற்பெயரும்; ஈரிடத்தும்–இருவழியிலும், உவ்வுறா–யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரம்பெறாவாம், வலி–வல்லினம், வரின்–வந்தால், அல்வழி–அல்வழிக்கண், இய்லபுமாவன–உறழாதியல்பாவனவும், உள–சிலவுள, எ–று.

உ–ம்:–

(1) ஆடல்சிறந்து, ஆடற்சிறந்தது, ஆடனன்று, ஆடல்வலிது–எனவும், ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை எனவும், கோள்கடிது–கோட்கடிது, கோணன்று, கோள்வலிது எனவும், கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்னம எனவும், இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

(2) நடத்தல்கடிது, நடப்பித்தல் கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது; உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலனவென்க.

ஈரிடத்தும் உவ்வுறா என்றது ஐயமறுத்தல்; 'வலிவரினல் வழியியல்புமாவன வுள' என்றது ஒருவாறு "அல்வழி யவற்றோடு றழ்வும்" என எய்தியது விலக்கல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். லள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா – லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாகவுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும் இருவழியிலும் யகரமல்லாத மெய்கள்வந்தால் உகரம் பெறாவாம், – வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன உள – வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழா தியல்பாவனவுஞ் சிலவுள.

உ–ம்.:–

(1).ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடனன்று, ஆடல்வலிது எனவும் ஆடற்சிறப்பு, ஆடனன்மை, ஆடல்வன்மை, எனவும் கோள்கடிது, கோட்கடிது; கோணன்று, கோள்வலிது, எனவும்

கோட்கடுமை, கோணன்மை, கோள்வன்மை, எனவும் இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன. (கோள் – கொள்ளுதல்).

(2)நடத்தல்கடிது, நடப்பித்தல்கடிது எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

இயல்பும் என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற்கடிது, உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலனவென்க.

ஈரிடத்தும் உவ்வுறா என்றது ஐயமறுத்தல்; வலிவரி னல்வழியியல் புமாவனவுள என்றது ஒருவாறு 'அல்வழியவற்றோடுறழ்வும்'என எய்தியது விலக்கல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:** ல ள இறு தொழிற்பெயர் – லகர ளகரங்களை இறுதியாக வுடைய (விகுதி பெற்ற) தொழிற்பெயரும் (ளகரத்தை இறதியாக வுடைய முதனிலை திரிந்த) தொழிற்பெயரும், ஈர் இடத்தும் – இருவழியிலும், உ உறா – (யகர மல்லாத மெய்கள் வந்தால்) உகரம் பெறாவாம்; (2) **வலிவரின்**–வல்லினம் வந்தால், **அல்வழி** – அல்வழியில், **இயல்பும் ஆவன** – (உறழாமல்) இயல்பாகும் தொழிற்பெயர்களும், **உள** – சில உண்டு; எ–று.

உ–ம்.:–

ஆடல்சிறந்தது, விக்குணன்று, கோள்வலிது–அல்வழி.

கோட்கடுமை, ஆடனன்மை, விக்குள்வன்மை–வேற்றுமை.

என இருவழியிலும் உகரச் சாரியை பெறாமல் முடிந்தன. நடத்தல்கடிது–அல்வழியில் உறழாமல் இயல்பாயிற்று.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– ல ள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா** – லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதி பெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாகவுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும் இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரம் பெறாவாம்; **வலி வரின் அல்வழி இயல்பும் ஆவன உள** – வல்லினம் வந்தால் அல்வழிக்கண் உறழா தியல்பாவனவுஞ் சிலவுள.

உ–ம்.:–

(1) ஆடல் + சிறந்தது = ஆடல் சிறந்தது, ஆடற்சிறந்தது; ஆடல் + நன்று = ஆடனன்று; ஆடல் + வலிது; ஆடல் + சிறப்பு =

ஆடற்சிறப்பு; ஆடல் + நன்மை = ஆடனன்மை; ஆடல் + வன்மை = ஆடல் வன்மை. கோள் + கடிது = கோள் கடிது, கோட்கடிது; கோள் + நன்று = கோணன்று; கோள் + வலிது = கோள்வலிது; கோள் + கடுமை = கோட்கடுமை; கோள் + நன்மை = கோணன்மை; கோள் + வன்மை = கோள் வன்மை – என இருவழியும் உகரம் பெறாது பொதுவிதியான் முடிந்தன.

(2) நடத்தல் கடிது, நடப்பித்தல் கடிது – எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

'இயல்பும்' என்ற உம்மையால், பின்னல்கடிது, பின்னற் கடிது; உன்னல்கடிது, உன்னற்கடிது எனப் பொதுவிதியால் உறழ்தலே பெரும்பாலன வென்க.

'ஈரிடத்தும் உவ்வுறா' என்றது ஐயமறுத்தல்; 'வலிவரி னல்வழி யியல்புமாவன வுள' என்றது ஒருவாறு "அல்வழி யவற்றோ டுறழ்வும்" (சூ–227) என எய்தியது விலக்கல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) லள இறு தொழிற்பெயர் – லகரத்தை இறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தை இறுதியாக வுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்தும் – இருவழியிலும், உ உறா – (யகரமல்லாத மெய்கள்வந்தால்) உகரம் பெறாவாம்;

(2) வலி – வல்லினம், வரின் – வந்தால், அல்வழி – அல்வழிக்கண், இயல்பும் ஆவன – (உறழாது) இயல்பாவனவும், உள – சிலவுள.

### உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) ஆடல் | + | சிறந்தது | = | ஆடல்சிறந்தது, ஆடற்சிறந்தது |
| | + | நன்று | = | ஆடனன்று |
| | + | வலிது | = | ஆடல்வலிது |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடல் | + | சிறப்பு | = | ஆடற்சிறப்பு |
| | + | நன்மை | = | ஆடனன்மை |
| | + | வன்மை | = | ஆடல்வன்மை |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| கோள் | + | கடிது | = | கோள்கடிது, கோட்கடிது |
| | + | நன்று | = | கோணன்று |
| | + | வலிது | = | கோள்வலிது |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| கோள் | + | கடுமை | = | கோட்கடுமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | + | நன்மை | = | கோணன்மை |
| | + | வன்மை | = | கோள்வன்மை |

எனவும் இருவழியிலும் உகரம்பெறாது பொது விதியான் முடிந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) நடத்தல் | + | கடிது | = | நடத்தல்கடிது |
| நடப்பித்தல் | + | கடிது | = | நடப்பித்தல்கடிது |

எனச் சில உறழாது அல்வழியில் இயல்பாயின.

'இயல்பும்' என்ற உம்மையால்,

| | | | | |
|---|---|---|---|---|
| பின்னல் | + | கடிது | = | பின்னல்கடிது, பின்னற்கடிது |
| உன்னல் | + | கடிது | = | உன்னல்கடிது, உன்னற்கடிது |

எனப் பொது விதியான் உறழ்தலே பெரும்பாலன என்க.

## மோசகு பொன்னையா

லகர ளகரத்தை இறுதியாக உடைய தொழிற்பெயர்கள் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வரின் உகரம் பெறாவாம்; வல்லினம் வரின், அல்வழிக்கண் உறழாது இயல்பாவனவும் சில உள, எ–று.

விகுதி பெற்றும் திரிந்தும் அமைந்துள்ள தொழிற் பெயர்களுக்கு இந்நூற்பா விதியமைக்கின்றது.

தொல்காப்பியர், 'ஞகாரை ஒற்றிய', ஞநமவ இயையினும், நகர இறுதியும், 'தொழிற் பெயரெல்லாம்', 'மின்னும் பின்னும்' என்ற நூற்பாக்களில் விதித்த தொழிற்பெயர் புணர்ச்சியை இவ்வாசிரியர் 'ஞணநம லவளன வொற்றிறு தொழிற்பெயர்' என்ற ஒரே நூற்பாவில் மிகப் பொருத்தமாக அடக்கி விதித்தார். தொல்காப்பியர் முதனிலைத் தொழிற் பெயரையே புணர்ச்சி வகைக்குத் தொழிற்பெயர் எனக் கொண்டார். விகுதிபெற்ற அல்லது திரிந்து முடிந்த தொழிற்பெயர்களை அவர் தொழிற்பெயரொடு வைத்துப் புணர்ச்சி முடிபு கூறவில்லை; தொழிற் பெயர்ப் புணர்ச்சி முடிபுகள் அவற்றிற்குப் பொருந்தவும் இல்லை என்பது வெளிப்படை. அவ்வாறிருந்தும், உரையாசிரியர் 'தொழிற்பெயரெல்லாம் தொழிற் பெயரியல' என்ற நூற்பாக்களின் 'எல்லாம்' என்ற இலேசால் விகுதி பெற்றும் பிறவாறும் வழங்கிய தொழிற்பெயரையும் முதனிலைத் தொழிற்பெயர் புணர்ச்சியோடு அடக்கி முடிக்க முற்பட்டனர். அவையெல்லாம் பொது விதிகளாலே முடிவன என்பதை உணர்ந்தபிற இலக்கண ஆசிரியர்கள் இவ்வாசிரியர் போன்று இம்முடிபுக்கு நூற்பா அமைத்துக் கொள்ளவில்லை.

தொழிற்பெயர்களிற் பெரும்பாலானவற்றைத் துன்னல்,

ஆடல்,பாடல், உருளுதல், பொருநுதல் என லகர ஒற்றீற்றனவாக அடக்கலாம். விக்குள், நடவு முதலிய வேறு விகுதி பெற்று வருவனவும் உண்டு. முதனிலை திரிந்து, கோள், பாடு என்பனபோல் வருவனவும் உண்டு. இவற்றையெல்லாம் அவ்வவ் வீற்றுப் பொது விதிகளால் முடிப்பதே பொருந்தும் எனக் கொள்க.

(26)

230. **வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்**
**பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.**

வல்லே தொழிற்பெயர் அற்று இரு வழியும்
பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வும் ஆம்.

vallē ṭoḷiṛpeyar aṟṟu iru vaḷiyum
palakai nāy varinum vēṟṟumaikku avvum ām.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for regarding val

The noun **'val'** follows the general rule for verbal nouns, in both combinations (an add u); in casual combinations, it will add also a, if followed by **palakai or nay.**

## ஒப்புமைப் பகுதி

வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே

(தொல்.: 374)

நாயும் பலகையும் வரூஉங் காலை
ஆவயி னுகரங் கெடுதலு முரித்தே
உகரம் கெடுவழி அகரம் நிலையும்

(தொல்.: 375)

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்

(இ.வி.: 141)

வல்லுக ரத்தொடு வருமென மொழிப

(மு.வீ.:357)

பலகையு நாயும் வருஉங் காலை
அகரச் சாரியை யடையு மென்ப

(மு.வீ.: 358)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: வல்லென்னும் பெயர் தொழிற்பெயரே போல இருவழியும் உகரம் பெறும். பலகையும் நாயும் வருமொழியாயின் வேற்றுமைக்கண் உகரமே யன்றி அகரமும் பெறும் , எ–று.

வ–று.:–

வல்லுக்கடிது; ஞான்றது, வலிது எனவும், வல்லுக்கடுமை; ஞாற்சி, [1]வலிமை எனவும், இருவழியும் மூவினமும் வர உகரம் பெற்றது. வல்லப்பலகை, வல்லநாய் என வேற்றுமைக்கண் அகரம் பெற்றது.

'வரினும்' என்ற உம்மையான், வல்லக்கடுமை [2]யெனவுங் கொள்க. 'அவ்வும்' என்ற உம்மையான், உகரப்பேறே வலியுடைத்தென்க.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், *'லள வேற்றுமையிற் றடவும்'* என்னும் சூத்திரத்தான் எய்திபது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

இ–ள்.:– வல் என்னும் சூதாடுகருவிப் பெயர், யவ்வன் மெய்வரின் தொழிற்பெபரே போல இருவழியும் உகரச் சாரியை பெறும்; பலகை நாய் என்னும் இருபெயர் வரினும், பிறபெயர் வரினும், வேற்றுமைக்கண் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெறும், எ–று.

---

பாடவேறுபாடு .:–

1. நீட்சி, மாட்சி, வலுமை
2. யெனவும், வன்றோல், வன்மரமென உரிச்சொல் ஈறுதிரிவனவும் கொள்க.

வரினும் என்னும் எதிரது தழீஇய எச்சவும்மையான் பிறபெயர் என்பதூஉம், அவ்வும் என்னும் இறந்தது தழீஇய எச்சவும்மையான் உகரச் சாரியை என்பதூஉம் பெற்றாம்.

உ–ம்.:–

வல்லுக் கடிது, நன்று, வலிது எனவும்; வல்லுக் கடுமை, நன்மை, வன்மை எனவும்; வல்லப்பலகை, வல்லநாய், வல்லப்புலி, வல்லக்குதிரை எனவும்; வல்லுப்பலகை, வல்லுநாய், வல்லுப்புலி, வல்லக்குதிரை எனவும் முறையே காண்க.

வல்லினது அறை வரைந்த பலகை, வல்லினுள்நாய் என விரியும். வேற்றுமைக்கு என்றமையின் வல்லாய நாய் என இருபெயரொட்டாயவழி அகரச்சாரியை பெறாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வல்லென்னும் லகர வீற்றுப் பெயர்ப் புணர்ச்சி கூறியது.

இ–ள்.:– **வல்லே** – வல் என்னும் லகர ஒற்றீற்றுச் சொல் மூவினம் வரினும், **தொழிற்பெயரற்று** – முதனிலை தனிநிலை தொழிற்பெயரே போல உகரம் பெற்றும், **இருவழியும்** – அல்வழி வேற்றுமை இரண்டிடத்துமாம், **பலகை நாய் வரினும்** – பலகையும் நாயும் வருமொழியாக வரில், **வேற்றுமைக்கு** – வேற்றுமைப் புணர்ச்சிக்கண், **அவ்வுமாம்** – உகரமே யன்றி அகரமும் பெறும், எ–று.

உ–ம்:–

வல்லுக் கடிது, ஞான்றது, வலிது எனவும் கடுமை, ஞாற்சி, வலிமை எனவும் இருவழியும் மூவினம் வர உகரம் பெற்றது. வல்லப் பலகை, வல்லநாய் என வேற்றுமைக்கண் அகரம் பெற்றது.

## விசாகப் பெருமாளையர்

**இது**, லள வேற்றமையிற் றடவுமென்பதனால் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ–ள்.:– **வல்**–வல்லென்கிற (சூதாடு கருவிப்பெயர்) **இருவழியும்** – இருவழிக் கண்ணும், **தொழிற்பெயரற்று**–யகர மல்லாத மெய்கள் வந்தால் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெறும், **பலகை நாய் வரினும்** – பலகை நாய் என்கிற விருபெயர் வரினும் பிறபெயர்கள் வரினும், **வேற்றுமைக்கு** – வேற்றுமைக்கண், **அவ்வுமாம்**–உகரச் சாரியை யல்லாமலும் அகரச் சாரியையும் பெறும், எ–று.

உ-ம்.:-

வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும், வல்லுக்கடிமை, நன்மை, வன்மை எனவும், வல்லப்பலகை, நாய், புலி, குதிரை எனவும், வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை எனவும் வரும். (வல்லினதறை வரைந்த பலகை, வல்லினுணாய், என விரியும்)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வல்லென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

வல்லே தொழிற்பெய ரற்றிரு வழியும்

பலகை நாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம்.

(வல் தொழிற்பெயர் அற்று இருவழியும்

பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்.)

**இ-ள்.: வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று** - வல்லென்னுஞ் சூதாடுகருவிப்பெயர் யகரமல்லாத மெய்கள் வரின் முதனிலைத் தொழிற்பெயர்போல இருவழியும் உகரச்சாரியை பெறும், **பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்** - பலகை நாயென்னும் இருபெயர் வரினும் பிறபெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெறும், எ-று.

உ-ம்.:-

(1) வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும், வல்லுக்கடுமை, நன்மை, வன்மை எனவும், இருவழியுந் தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெற்றது. (வல்-சூதாடுகருவி.)

(2) வல்லப்பலகை, நாய், புலி, குதிரை. எனவும். வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை எனவும், வேற்றுமையில் அகரச்சாரியையம் உகரச்சாரியையும் பெற்றது. வல்லப்பலகை - வல்லின தறை வரைந்த பலகை. வல்லநாய் - வல்லினுணாய் என விரியும்.

இது "லளவேற்றுமையிற்றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

இஸது எச்சூத்திர விதியை விலக்குவது?

"லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திர விதியை.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

**இ–ள்.:– வல்லே தொழிற் பெயரற் றிருவழியும்** – வல்லென்னும் லகர வீற்றுச்சொல் அல்வழி வேற்றுமை யென்னும் இரண்டிடத்தும் யகர மல்லாத மெய்கள் வந்து புணர்ந்தால் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும், **பலகை நாய் வரினும்**–அதன்முன் பலகை நாய் என்னு மிரண்டு பெயரும் பிற பெயரும் வந்து புணர்ந்தாலும், **வேற்றுமைக்கவ் வுமாம்** – வேற்றுமைச் சந்திக்கு உகரச் சாரியை யன்றி அகரச் சாரியையும் வரும், எ–று.

'வரினு'மென்ற எதிரது தழுவிய எச்சவும்மையினாலே பிறபெயர் என்பதும், 'அவ்வும்' என்ற இறந்தது தழுவிய எச்சவும்மையினாலே உகரச் சாரியை யன்றி என்பதும் பெறப்பட்டன.

உ–ம்.:–

வல்லுக்கடிது, வல்லுநன்று, வல்லுவலிது எனவும்; வல்லுக்கடுமை, நன்மை, வன்மை எனவும்; முறையே இருவழியும் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றது. வல்லப்பலகை, வல்லநாய், வல்லப்புலி, வல்லுக்குதிரை எனவும் வேற்றுமைச் சந்தியில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் வந்தன. வல்லப்பலகை–வல்லினது அறை கீறிய பலகை எனவும்; வல்லநாய்–வல்லினுள்நாய் எனவும் விரியும். 'வேற்றுமைக்கவ்வு' மென்றதினாலே வல்லாகியாயென இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக விரியும் போது, அகரச் சாரியை பெறாதென்க. வல்–சூதாடுகருவி.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– வல்–** 'வல்' என்னும்பெயர், '**இருவழியும்** – இருவழியிலும், **தொழிற்பெயர் அற்று** – தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியை பெறும்; **பலகை நாய்வரினும்** – 'பலகை' 'நாய்' என்னும் பெயர்கள்வந்தாலும் (பிறபெயர்கள் வந்தாலும்), **வேற்றுமைக்கு** – வேற்றுமையில், **அவ்வும் ஆம்** – (உகரச்சாரியையே யல்லாமல்) அகரச்சாரியையும் பெறும். (வல் – சூதாடுகருவி).

குறிப்பு :–

'வரினும்' என்ற எச்சஉம்மையால் பிறபெயரும் என்பதும் 'அவ்வும்' என்ற எச்சவும்மையால் உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையும் என்பதும் கொள்ளப்பட்டன.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாகும்போது அகரச்சாரியை பெறாதென்க.

**உதாரணம்**

| அல்வழி | | | | | உதாரணம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வல் | + | கடிது | = | வல்லுக்கடிது | வல் | + | கடுமை | = | வல்லுக்கடுமை |
| வல் | + | நன்று | = | வல்லுநன்று | வல் | + | நன்மை | = | வல்லுநன்மை |
| வல் | + | வலிது | = | வல்லுவலிது | வல் | + | வலிமை | = | வல்லுவலிமை |

(என இருவழியிலும் யகரமல்லாத மெய்கள்வர உகரச்சாரியை பெற்றது).

**வேற்றுமை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வல் | + | பலகை | = | வல்லுப்பலகை | வல் | + | புலி | = | வல்லுப்புலி |
| வல் | + | பலகை | = | வல்லுப்பலகை | வல் | + | புலி | = | வல்லப்புலி |
| வல் | + | நாய் | = | வல்லுநாய் | வல் | + | குதிரை | = | வல்லுக்குதிரை |
| வல் | + | நாய் | = | வல்லுநாய் | வல் | + | குதிரை | = | வல்லக்குதிரை |

(என வேற்றுமையில் பலகை நாயும் பிறவும் வர அகரமும் பெற்றது).

இவை வல்லினது அறைகீறிய பலகை, வல்லினுள் நாள் என விரியும்.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:- வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று – வல்லென்னுஞ் சூதாடு கருவிப்பெயர் யகரமல்லாத மெய்கள் வரின் முதனிலைத் தொழிற்பெயர் போல இருவழியும் உகரச் சாரியை பெறும், பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம் – பலகை நாயென்னும் இருபெயர் வரினும் பிறபெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெறும், எ—று.

உ—ம்.:-

(1) வல்லுக்கடிது, நன்று, வலிது எனவும், வல்லுக்கடுமை, நன்மை, வன்மை எனவும், இருவழியுந் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றது. (வல்—சூதாடு கருவி.)

(2) வல்லப்பலகை, நாய், புலி, குதிரை எனவும், வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை எனவும், வேற்றுமையில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெற்றது. வல்லப்பலகை—வல்லினதறை வரைந்த பலகை. வல்லநாய்—வல்லினுணாய் என விரியும்.

இது "ளளவேற்றுமைபிற்றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று** – வல்லென்னுஞ் சூதாடுகருவிப் பெயர் யகரமல்லாதமெய்கள் வரின் முதனிலைத் தொழிற்பெயர் போல இருவழியும் உகரச்சாரியை பெறும், – **பலகைநாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்** – பலகை நாயென்னும் இருபெயர்வரினும் பிறபெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையும் பெறும். எ–று.

உ–ம்.:–

(1).வல்லுக்கடிது, கன்று, வலிது எனவும். வல்லுக்கடுமை, நன்மை வன்மை, எனவும் இருவழியுந் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்றது. (வல்–சூதாடுகருவி).

(2)வல்லப்பலகை, நாய், புலி, குதிரை, எனவும். வல்லுப்பலகை, நாய், புலி, குதிரை, எனவும் வேற்றுமையில் அகரச்சாரியையும் உகரச்சாரியையும் பெற்றது. வல்லப்பலகை – வல்லினதறைவரைந்த பலகை வல்லநாய் – வல்லினுணாய் எனவிரியும். வல் என்பது 'வன்முலையணங்கினோரும்' என்பதில் உகரச்சாரியை பெறாது லகரந் திரிந்தருகி வந்ததுங் காண்க.

இது 'ளளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசா சாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: (1) **வல்** – வல் என்னும் பெயர், **இரு வழியும்** – இருவழியிலும், **தொழிற் பெயர் அற்று** – தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பெறும்;– (2) **பலகை நாய் வரினும்** – பலகை நாய் என்னும் பெயர்கள் வந்தாலும் (பிறபெயர்கள் வந்தாலும்), **வேற்றுமைக்கு** – வேற்றுமையில், **அவ்வும் ஆம்** – (உகரச் சாரியையே யல்லாமல்) அகரச் சாரியையும் பெறும்; எ–று. (வல்–சூதாடு கருவி.)

'வரினும்' என்ற எதிரதுதழுவிய எச்சவும்மையால் 'பிறபெயர்கள்' என்பதும், 'அவ்வும்' என்ற இறந்ததுதழுவிய எச்சவும்மையால் 'உகரச் சாரியையே யல்லாமல்' என்பதும் பெறப்பட்டன.

உ–ம்.:–

அல்வழி. வேற்றுமை.

வல் + கடிது = வல்லுக்கடிது வல்+கடுமை = வல்லுக்கடுமை.

நன்று = வல்லுநன்று நன்மை = வல்லுநன்மை

வலிது = வல்லுவலிது வலிமை = வல்லுவலிமை

என இருவழியிலும் யகரமல்லாத மெய்கள் வர உகரச் சாரியை பெற்றது.

வல் + பலகை = வல்லுப்பலகை வல் + புலி = வல்லுப்புலி

= வல்லப்பலகை = வல்லப்புலி

+ நாய் = வல்லுநாய் குதிரை = வல்லுக்குதிரை

= வல்லநாய் = வல்லக்குதிரை

என வேற்றுமையில் பலகை நாயும் பிறவும் வர, உகரமும் அகரமும் பெற்றது. இவை வல்லினது அறைகீறிய பலகை, வல்லினுள் நாய் என விரியும்.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– வல் இருவழியும் தொழிற்பெயர் அற்று** –வல்லென்னுஞ் சூதாடுகருவிப் பெயர் யகரமல்லாத மெய்கள் வரின் முதனிலைத்ம தொழிற்பெயர்போல இருவிழயும் உகரச்சாரியை பெறும்; **பலகை நாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்** – பலகை நாயென்னும் இரு பெயர் வரினும் பிற பெயர்கள் வரினும் வேற்றுமைக்கண் உகரச்சாரியையேன்றி அகரச்சாரியையும் பெறும். எ–று.

**உ–ம்.:–**

**அல்வழி.**

(1) வல் + கடிது : வல்லுக்கடிது.

நன்று : வல்லுநன்று.

வலிது : வல்லுவலிது.

**வேற்றுமை.**

வல் +கடுமை : வல்லுக்கடுமை

நன்மை : வல்லுநன்மை.

வலிமை : வல்லுவலிமை.

– என இருவழியுந் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்றது. (வல் – சூதாடுகருவி.)

(2)வல் + பலகை = வல்லுப்பலகை, வல்லப்பலகை.

நாய் = வல்லுநாய், வல்லநாய்.

புலி = வல்லுப்புலி, வல்லப்புலி.

குதிரை = வல்லக்குதிரை, வல்லக் குதிரை.

என வேற்றுமையில் உகரச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்றது.

(வல்லப்பலகை – வல்லினது அறை வரைந்த பலகை; வல்லநாய் – வல்லினுள் நாய் என விரியும்.)

இது "ளளவேற்றுமையிற்றடவும்" என்னும் 227–வது சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) வல் – வல் என்னும் சூதாடு கருவிபெயர், இரு வழியும் – இருவழிக்கண்ணும், தொழிற்பெயர் அற்று – (யகர மல்லாத மெய்கள் வந்தால்) தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெறும்;

(2) **பலகை நாய் வரினும்** – பலகை நாய் என்னும் இரு பெயர் வரினும் (பிறபெயர்கள் வரினும்), **வேற்றுமைக்கு** – வேற்றுமைக்கண், அவ்வுமாம் – (உகரச்சாரியையே யன்றி) அகரச் சாரியையும் பெறும்.

**உதாரணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| (1) வல் | + | கடிது | = | வல்லுக்கடிது |
| | + | நன்று | = | வல்லுநன்று |
| | + | வலிது | = | வல்லுவலிது |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| வல் | + | கடுமை | = | வல்லுக்கடுமை |
| | + | நன்மை | = | வல்லுநன்மை |
| | + | வன்மை | = | வல்லுவன்மை |

எனவும் இருவழியும் தொழிற்பெயர்போல் உகரம் பெற்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) வல் | + | பலகை | = | வல்லுப்பலகை |
| | + | நாய் | = | வல்லுநாய் |
| | + | புலி | = | வல்லுப்புலி |
| | + | குதிரை | = | வல்லுக்குதிரை |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| வல் | + | பலகை | = | வல்லப்பலகை |
| | + | நாய் | = | வல்லநாய் |
| | + | புலி | = | வல்லப்புலி |
| | + | குதிரை | = | வல்லக்குதிரை |

எனவும் வேற்றுமையில் உகரச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்றன.

வல்லப்பலகை = வல்லினது அறை வரைந்த பலகை;
வல்லநாய் = வல்லினுள் நாய் என விரியும்.

## மோசசு பொன்னையா

வல் என்னும் சூதாடு கருவிப்பெயர் யகரமல்லாத மெய்கள் வரின், முதனிலைத் தொழிற்பெயரே போல் இருவழியும் உகரச் சாரியை பெறும்; பலகை, நாய் என்னும் பெயர்கள் வரினும், பிற பெயர்கள் வரினும் வேற்றுமைப் புணர்ச்சியில் உகரச் சாரியையே யல்லாமல் அகரச்சாரியையும் பெறும். எ–று.

எ–டு.

வல்லுக்கடிது, வல்லுநன்று, வல்லுவலிது,

வல்லுக்கடுமை, வல்லுநன்மை, வல்லுவலிமை – இரு வழியும் யகரமல்லாத மெய்கள் வர, உகரம் பெற்றது.

வல்லுப்பலகை, வல்லப்பலகை.

வல்லுநாய், வல்லநாய்.

வல்லுப்புலி, வல்லப்புலி.

வல்லுக்குதிரை, வல்லக்குதிரை – வேற்றுமையில் பலகை, நாய் என்பனவும் பிறவும் வர உகரமும் அகரமும் பெற்றன.

(28)

**231. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்**
**அல்வழி யானும் றகர மாகும்**

**நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**
**அல்வழியானும் றகரம் ஆகும்**

nellum sellum kollum sollum
alvaḷiyāṉum ṟakaram ākum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for nel, cel, kol, col**

Even in Incasual combination, (the nouns) nel, cel, kol and col change the l into r.

## ஒப்புமைப் பகுதி

நெல்லுஞ் செல்லுஞ் கொல்லுஞ் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல

(தொல்.: 372)

நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றமை யியல

(இ.வி.: 140)

நெல்லும் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும்

(தொ.வி.: 355)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– இந் நான்கு சொல்லும் அல்வழிக்கண்ணும் றகரமாகும், எ – று.

வ–று.:–

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

## சங்கர நமச்சிவாயர்
## சிவஞான முனிவர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: இந் நான்கு சொல்லும், வல்லினம் வரின் பொதுவிதியான் உறழாது, அல்வழிக்கண்ணும் வேற்றுமை போல றகரமாய்த் திரிந்து முடியும், எ–று.

உ-ம்.:-

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

செல் என்பது மேகம். கொல் என்பது "சூருயிர் குடித்த" என்றாற் போலக் கொல்லன் என்னும் உயர்திணைப் பொருளை உணர்த்தி நின்றதோர் அஃறிணைச்சொல்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், நெல் செல் கொல் சொல் என்னும் இந் நான்கு சொல்லும் புணருமாறு கூறியது.

**இ-ள்.:- நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்** - நெல் செல் கொல் சொல் என்னும் இந்நான்கு சொல்லும், **அல்வழியானும்** - அல்வழிப் பொருட் புணர்ச்சிக்கண், றகர மாகும் - அவ்வீற்று லகரம் றகரமாகத் திரிந்து வரும், எ-று.

உ-ம்.:-

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ-ள்.:- நெல்லுஞ் செல்லுங் கொல்லும் சொல்லும்** - நென் முதலிய நான்கு சொற்களி னீற்று லகர மெய்யானது, **அல்வழியானும்**- அல்வழிக்கண்ணும், றகரமாகும் - பொது விதியா லுறழாது வேற்றுமை போல றகர மெய்யாகத் திரியும், எ-று.

உ-ம்.:-

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது, என வரும் (செல்-மேகம், கொல்-கொல்லன்,)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அல்வழிக்கண்ணும் றகரமாய்த் திரிந்து முடியுஞ்சொற்க ளிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்

அல்வழி யானும் றகர மாகும்.

(நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்

அல்வழி யானும் றகர மாகும்.)

**இ—ள்.:— நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்** — நென் முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய், **அல்வழியானும் றகரம் ஆகும்** — பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகர மெய்யாகத் திரியும், எ—று.

உ—ம்.:—

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும். (செல் — மேகம், கொல் — கொற்றொழில்.)

இதுவும் ''ளள வேற்றுமையிற் றடவும்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ—ள்.:— நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும் —இந்த நான்கு லகர வீற்றுச் சொற்களும், (வல்லினம் வந்து புணரின்) அல்வழியானும் றகரமாகும் — (பொது விதியால் உறழ்ந்து முடியாமல்) அல்வழிச் சந்தியிலும் வேற்றுமைச் சந்தி போல றகரமாகத் திரிந்து முடியும், எ—று.

உ—ம்.:—

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும். செல்—மேகம், கொல் என்பது சூர் என்றாற் போலக் கொல்லன் என்னும் உயர்திணைப் பொருளைக்காட்டி நின்ற அஃறிணைச் சொல், இந்த நான்கு சொல்லிறுதி, லகரம் றகரமாகு மென முடிக்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :— நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்** — 'நெல்' முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகரமெய், **அல்வழியானும்** — அல்வழியிலும்; **றகரம் ஆகும்** — (பொதுவிதியால் உறழாமல் வேற்றுமைபோல) றகர மெய்யாகத் திரியும். (செல் — மேகம், கொல் — கொல்லனது தொழில்)

**உ—ம்:—**

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்+ கடிது | = நெற்கடிது | கொல் + தீது | = | கொற்றீது. |
| செல்+ சிறிது | = செற்சிறிது | சொல் + பெரிது | = | சொற்பெரிது |

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்—நென்முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய், அல்வழியானும் றகரம் ஆகும் — பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமை போல றகர மெய்யாகத் திரியும், எ—று.

உ—ம்.:—

நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும். (செல்—மேகம், கொல்—கொல்லன்.)

இதுவும் ''ல ள வேற்றுமையிற் றடவும்'' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் — நெல்முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய், — அல்வழியானும் றகரம் ஆகும் — பொது விதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகரமெய்யாகத் திரியும். எ—று.

உ—ம்.:—

நெற்கடிது, செற்கடிது, சொற்கடிது, கொற்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும். (செல்—மேகம், கொல்—கொல்லன்) கொல் என்பது உயர்திணைப் பொருடந்து நின்றதோர் அஃறிணைச் சொல்லாதலின் கடிது என அஃறிணை முடிப்பாயிற்று.

இதுவும் 'லளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் — நெல் முதலிய நான்கு சொற்களின் ஈற்று லகர மெய், அல்வழியானும் — அல்வழியிலும், றகரம் ஆகும் — (பொதுவிதியால் உறழாமல் வேற்றுமையிற் போல) றகரமெய்யாகத் திரியும்; எ—று. செல்—மேகம், கொல்—கொல்லனது தொழில்.)

'நெல்' முதலில் வைத்தது, பிறவும் பெய ரென்றற்கு.

உ—ம்.:—

நெல் + கடிது = நெற்கடிது கொல் + தீது = கொற்றீது
செல் + சிறிது = செற்சிறிது சொல் + பெரிது = சொற்பெரிது.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:– நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் – நெல்முதலிய நான்கு சொற்களினீற்று லகரமெய், அல்வழியானும் றகரம் ஆகும் – பொதுவிதியால் உறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகர மெய்யாகத் திரியும். எ—று.

உ—ம்.:–

நெல் + கடிது = நெற்கடிது.

செல் + கடிது = செற்சிறிது.

கொல் + தீது = கொற்றீது.

சொல் + பெரியது = சொற்பெரிது.

(செல் – மேகம், கொல் – கொல்லன்.)

இதுவும் "லள வேற்றுமையிற் றடவும்" என்னும் 227 ஆம் சூத்திரத்தால் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும் – நெல் செல் கொல் சொல் ஆகிய நான்கு சொற்களிலும் ஈற்றிலுள்ள லகர மெய்யானது, அல்வழியானும் – அல்வழிக்கண்ணும், றகரம் ஆகும் – றகரமெய்யாகத் திரியும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| நெல் | + | கடிது | = | நெற்கடிது |
| | + | சிறிது | = | நெற்சிறிது |
| | + | தீது | = | நெற்றீது |
| | + | பெரிது | = | நெற்பெரிது |
| செல் | + | கடிது | = | செற்கடிது |
| | + | சிறிது | = | செற்சிறிது |
| | + | தீது | = | செற்றீது |
| | + | பெரிது | = | செற்பெரிது |

சொல் – மேகம். கொல் = கொற்றொழில்.

## மோசசு பொன்னையா

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு சொற்களின் ஈற்று லகரமெய் அல்வழிக்கண்ணும் பொதுவிதியால் உறழாது றகரமாகத் திரியும், எ—று.

எ—டு.:–

நெற்கடிது; செற்கடிது, கொற்கடிது, சொற்கடிது.

செல் – மேகம்; கொல் – உயர்திணை உணர்த்திய அஃறிணைச் சொல் (கொற்றொழிலாளன்).

இந்நூற்பா,

*நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்*
*அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.*

எனத் தொல்காப்பியர் விதித்தபடியே அமையாது, பொது விதியையே புதுவிதிபோல் கூறிவைப்பது மயக்கந் தருகிறது.

(28)

**232. இல்லெ னின்மைச் சொற்கை யடைய**
**வன்மை விகற்பமு மாகா ரத்தொடு**
**வன்மை யாகலு மியல்பு மாகும்.**

இல் என் இன்மைச் சொல்லை அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத்தொடு
வன்மை ஆகலும் இயல்பும் ஆகும்.

il e̱n i̱nmais sollai ataiya
va̱nmai vikaṛpamum ākāraṭṭotu
va̱nmai ākalum iyalpum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for regarding il

When the increment ai is added to the negative word il, the combining hard initial may or may not be doubled; but when â is added, it is always doubled (some times, however) the il is left unchanged.

## ஒப்புமைப் பகுதி

இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே

(தொல்.: 373)

இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்

(இ.வி.:142)

இன்மை யுணர்த்து மில்லென் கிளவிக்
கைகாரம் வரும்வழி யியல்பொடு மிகலும்
ஆகாரம் வரும்வழி மிகலுமாம் வேற்றுமை

(மு.வீ.: 356)

## மயிலை நாதர்

எ–ன், எய்தாததெய்துவித்தல் நுதலிற்று.

இ–ள்.:– [1]இல்லென்னும் இன்மைச் சொல்லிற்கு ஐகாரம் இறுதி வர வல்லொற்று ஒருகால் மிக்கும் ஒருகால் மிகாதும் வருதலும், ஆகாரம் இறுதி வர வல்லொற்று மிகுதலும் இயல்பே யாதலு மென்னும் [2]இம் மூன்றுமாம், எ–று.

வ–று.:–

இல்லைப்பொருள், இல்லைபொருள்; இல்லாப்பொருள்;
இல்பொருள் என வரும்.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், இல் என்னும் பண்புச்சொற்கு *ம்'ல ள வேற்றுமையிற்றடவும் அல்வழி அவற்றோடு றழ்வும்'* என எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தலும், அவற்றின் முன்வரும் வல்லினத்திற்கு *'அல்வழி இஐம் முன்னராயின்'* என்னும் சூத்திரத்தானும் *'இயல்பினும் விதியினும்'* என்னும் சூத்திரத்தானும் ம் எய்தியது இகந்துபடாமற் காத்தலும் நுதலிற்று.

இ–ள்.: இல்லிடத்தை உணர்த்தாது இன்மைப் பண்பை உணர்த்தி நிற்கும் இல் என்னும் சொற்கு ஐகாரச் சாரியை பொருந்த அவ்வழி வரும் வல்லினம் விகற்பித்தலும், ஆகாரச் சாரியை பொருந்த அவ்வழிவரும் வல்லினம் மிகுதலும், இவ் விருவிதியும் பெறாது இயல்பாதலும் பொருந்தும், எ–று.

---

பாடவேறுபாடு .:–

1. இல்லென்னுஞ் சொல்லினான் ஒரு பொருளின்மை யென்னுஞ் சொற்கு அவ்விறுதி ஐகாரம் வர

2. இந் நான்குமாம்.

சாரியைப் பேற்றிற்கு வருமொழி வரையாமையின் நாற்கணமும் கொள்க.

உ–ம்.:–

இல்லைப்பொருள், இல்லைபொருள்; இல்லாப்பொருள், இல்பொருள், ஞானம், வன்மை, அணி என வரும்.

இல் என்னும் பண்படி நின்று வருமொழியோடு புணர்வழி வரும் சாரியை யாதலின், இவ் விருசாரியை தோன்றிய வழியும், இல்பொருள் என்னும் இயல்புபுணர்ச்சி போல் பண்புத்தொகையாம் என்க. இது மெய்யீற்றுப்புணரியல் ஆதலானும், லகர ஈற்றிற்குப் பொதுவிதி கூறிச் சிறப்புவிதி கூறும்வழி இன்மைப் பொருளைத் தரும் இல் என்னும் சொற்கு என விதந்தமையானும், விகுதியடைதல் பதவியலுளன்றி ஈண்டுக் கூறவேண்டாமையானும், ஆகாரத்தொடு வன்மையாகலும் என வல்லினப் பேற்றோடு ஆகாரத்தையும் உடனிகழ்த்திக் கூறுதலானும், இயல்புமாகும் என்றமையானும், மறைப்பொருளை இல் என்னும் பகுதி யன்றி ஆகாரம் தர வேண்டாமையானும், தருமேல் இன்மைக்கு மறையாய உண்மைப்பொருளைத் தரவேண்டும் ஆதலானும், ஆகார மறைவிகுதி தெரிநிலைக்கன்றிக் குறிப்பிற்கு வாராமையானும், ஈண்டுப்பெறும் ஐகார ஆகாரங்கள் சாரியையே யன்றிக் குறிப்புமுற்று விகுதியும் எச்சத்தின்கண் வந்த மறைவிகுதியும் அல்ல என்க.

இல்லைபொருள் இல்லைப்பொருள் என்பன இங்ஙனம் கூறியவாறே பண்புத்தொகையாகவும் ஐகார ஈற்றுக் குறிப்புமுற்றுப் பயனிலையோடு முடிந்த தொகாநிலையாகவும் கொள்ளப்படுமாதலின் தம்முள் வேற்றுமை யாதோவெனின்:– தொகைநிலை ஒருமொழி போல் நடத்தலும் தொகாநிலை விட்டிசைத்து நடத்தலும் தம்முள் வேற்றுமை என்க. இல்லாப்பொருள் என்பது, இங்ஙனம் கூறியவாறே பண்புத்தொகையாகவும், இல்லாத என்னும் பெயரெச்சக் குறிப்பினது இறுதி கெட்டுப் பயனிலையோடு முடிந்த தொகாநிலையாகவும் கொள்ளப்படும். இவற்றிற்கும் தம்முள் வேற்றுமை அதுவாம் என்க.

இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியரும்,

**"இல்லென் கிளவி இன்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும் இயற்கை**

யாதலும் ஆகாரம் வருதலும் கொளத்தகு மரபின்
ஆகிடன் உடைத்தே"

என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், இன்மைப் பொருளை உணர்த்தும் இல்லென்னும் சொற்புணர்ச்சி கூறியது.

**இ-ள்.:- இல்லெனின்மைச் சொற்கு** - இல்லென்னும் ஒரு பொருள் இன்மையைக் கருதி வரும் சொல், **ஐயடைய** - தன் ஈற்றினின்ற லகர ஒற்றின் மேல் ஐகாரம் வந்து பொருந்த, **வன்மை விகற்பமும்** - வல்லினம் வந்தால் ஒருகால் மிக்கும் மிகாதும் வரும், **ஆகாரத்தொடு** - ஐகார மின்றி ஆகாரம் இறுதி வர அதனோடு, **வன்மை யாதலும்** - வல்லொற்று வந்து மிகுதலும், **இயல்பு மாகும்** - இவ் விரண்டும் ஏலாது இயல்பாய் முடியவும் பெறும், எ-று.

**உ-ம்.:-**

இல்லை பொருள், இல்லைப் பொருள் எனவும் இல்லாப்பொருள்
எனவும் இல்பொருள் எனவும் வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, இல்லென்னும் பண்புச்சொற்கு 'லள வேற்றுமையிற் றடவுமல் வழி யவற்றோடு றழ்வுமென' வெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும் அவற்றின் முன் வருகிற வல்லினத்திற்கு அல்வழி இ ஐ யென்பதனாலும் இயல்பினு மென்பதனாலும் எய்திய திகந்துபடாமற் காத்தலுஞ் சொல்லுகின்றது,

**இ-ள்.:- இன்மை**-இன்மைப் பண்பை யுணர்த்துகின்ற, **இல்லென் சொற்கு** - இல் என்கிற சொல்லுக்கு, **ஐ** -ஐகாரச் சாரியை யானது, **அடைய**- பொருந்த, **வன்மை**-அவ்விடத்து வருகிற வல்லினம், **விகற்பமும்**- விகற்பித்தலும், **ஆகாரத்தோடு**-ஆகாரச் சாரியை பொருந்த, **வன்மையாதலும்** - அவ்விடத்துக்கு வருகிற வல்லின மிகுதலும், **இயல்பு** - இவ்விரு விகுதியும் பெறாதியல்பாதலும், **ஆகும்**-பொருந்தும், எ-று. (சாரியை-பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க)

**உ-ம்.:-**

இல்லைப்பொருள், இல்லைபொருள், இல்லாப்பொருள்,
இல்பொருள், ஞானம், வன்மை, அணி என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இல்லென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

இல்லெ னின்மைச் சொற்கை யடைய
வன்மை விகற்பமு மாகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும்.

(இல் என் இன்மை சொற்கு ஐ அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத்தொடு
வன்மை ஆகலும் இயல்பும் ஆகும்)

இ–ள்.:– **இன்மை இல் என் சொற்கு** – இன்மைப் பண்பை யுணர்த்தி நிற்கும் இல் என்னுஞ் சொல்லுக்கு, **ஐ அடைய வன்மை விகற்பமும்** – ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், **ஆகாரத்தொடு வன்மை ஆகலும்** – ஆகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லின மிகலும், **இயல்பும் ஆகும்** – இவ் விருவிதியும் பெறாதியல் பாதலும் பொருந்தும், எ–று.

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

உ–ம்.:–

இல்லைப்பொருள் இல்லைபொருள், (விகற்பித்தல்) இல்லாப்பொருள் (மிகல்) இல்பொருள், ஞானம், வன்மை, அணி (இயல்பு) என வரும்.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச்சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும் "வள வேற்றுமையிற் றடவுமல்வழி யவற்றோ டுறழ்வும்" என எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல்; ஐகாரச்சாரியை முன் வல்லினம் விகற் பமாம் என்றது "அல்வழி இ ஐம் முன்ன ராயின்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்; ஆகாரச் சாரியை முன் வல்லினம் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்து படாமைக் காத்தல்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, இல்லென்னும் பண்புச்சொல்லுக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தலும் வரும் வல்லினத்திற்கு எய்தியது பிறழாமற் காத்தலும் உணர்த்திற்று.

**இ–ள்.:– இல்லெ னின்மைச் சொற்கு –** (இடைத்தைக் குறியாமல்) இன்மைப் பண்பைக் காட்டி நிற்கும் இல் என்னுஞ் சொல்லுக்கு, **ஐயடைய –** ஐகாரச் சாரியை பொருந்த, **வன்மை விகற்பமும் –** வந்த வல்லின மிக்கும் மிகாதுமாக விகற்பித்தலும், **ஆகாரத்தொடு வன்மையாகலும் –** ஆகாரச் சாரியை பொருந்த அவ்வழி வந்த வல்லின மிக்கு முடிதலும், **இயல்புமாகும்–** (இந்த இரண்டு விதியும் பெறாமல்) இயல்பாதலுமாம், எ–று.

சாரியை பெறுதற்கு வருமொழி யெடுத்துச் சொல்லாததினாலே நாற்கணமுங் கொள்க.

**உ–ம்.:–**

இல்லைபொருள், இல்லைப்பொருள்க எனவும்; இல்லாப் பொருள், இப்பொருள் எனவும், முறையே காண்க. இவற்றுள், இல்பொருள் என்னு மியல்புப்புணர்ச்சி போலச் சாரியை பெற்றுப் புணர்ந்த இரண்டும் பண்புத்தொகையே யாமென்க.

என்னை இது மெய்யீற்றுப் புணரியல் ஆதலாலும், லகர வீற்றிற்குப் பொதுவிதி கூறிச் சிறப்புவிதி கூறும் இடத்து, இன்மைப்பொருளைத் தரும் இல்லென்னுஞ் சொற்கென வெடுத்துச் சொன்னதினாலும், விகுதியடைவது பதவியலு ளன்றி யிங்கே கூற வேண்டாமையாலும், 'ஆகாரத்தொடு வன்மையாகலு' மென வல்லினம் பெறுதலுடனே ஆகாரத்தை யுடனிகழ்த்திக் கூறுதலாலும், 'இயல்புமாகு' மென்றமையாலும், எதிர்மறைப்பொருளை இல் என்னும் பகுதி யன்றி, ஆகாரந் தர வேண்டாமையாலும், அது தருமாயின் இன்மைக்கு மறைபாகிய உண்மைப் பொருளைத் தர வேண்டும் ஆதலாலும், ஆகார மறைவிகுதி தெரிநிலைக்கே தவிரக் குறிப்புக்கு வாராமையாலும், இங்கே பெறுகின்ற ஐகார ஆகாரங்கள் சாரியையே யன்றிக் குறிப்புமுற்று விகுதியும் எச்சத்திலே வந்த மறை விகுதியு மல்ல வென்க. இல்லைபொருள், இல்லைப்பொரு ளென்பன இங்கே சொல்லியபடி பண்புத் தொகையாகவும், பதவியலிற் சொல்லியபடி ஐகார வீற்றுக் குறிப்பு முற்றுப் பயனிலையொடு முடிந்த தொகாநிலையாகவுங் கொள்ளப்படும்; ஆதலால், தம்முள் வேற்றுமை யாதோவெனின், தொகைநிலை யொருமொழி போல் நடத்தலுந், தொகாநிலை விட்டிசைத்து நடத்தலும், தம்முள் வேற்றுமை யென்க. இல்லாப்பொருள் என்பது இங்கே சொன்னபடியே, பண்புத்தொகையாகவும் இல்லாத வென்னும் பெயரெச்சக் குறிப்பு ஈறு கெட்டுப் பயனிலையொடு முடிந்த தொகாநிலை யாகவுங் கொள்ளப்படும். இவற்றிற்குந் தம்முள் வேற்றுமை அதுவாமென்க. இவ்வாறே, ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலு மையிடை வருதலு
மியற்கை யாதலு மாகாரம் வருதலுங்
கொளத்தகு மர பி னாகிட னுடைத்தே"

என்றார் எனக் காண்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-** இல் என் - 'இல்' என்கிற, இன்மைச் சொற்கு - இன்மைப் பண்பை யுணர்த்துகின்ற சொல்லுக்கு, ஐ அடைய - ஐகாரச்சாரியை பொருந்த, வன்மை - (அவ்விடத்து வருகிற) வல்லினம், விகற்பமும் - (மிக்கும் மிகாமலும்) விகற்பித்தலும், ஆகாரத்தோடு - ஆகாரச்சாரியை பொருந்த, வன்மை ஆகலும் - (அவ்விடத்துவருகிற) வல்லினம் மிகுதலும், இயல்பும் - (இவ்விருவிதியும் பெறாமல்) இயல்பாதலும், ஆகும் - பொருந்தும்.

உ-ம்:-

இல் + பொருள் = இல்லைப் பொருள், இல்லைபொருள்

(என ஐகாரச்சாரியைவர வன்மை விகற்பித்தது)

இல்+பொருள் = இல்லாப் பொருள் - ஆகாரச்சாரியைபெற வலி மிக்கது

இல்+பொருள் = இல்பொருள் - இருவிதியும் பெறாமல் இயல்பாயிற்று.

(சாரியைக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங்கொள்க)

இல்+ஞானம் = இல்லைஞானம், இல்லாஞானம் மற்றைமுக்கணமும்

இல் + வன்மை = இல்லைவன்மை, இல்லாவன்மை வரச் சாரியை

இல்+அணி = இல்லையணி, இல்லாவணி பெற்றது.

(இல்பொருள் என்பதுபோல இல்லைபொருள், இல்லாப் பொருள் என்பனவும் பண்புத்தொகையேயாம்; இவற்றுள் ஐயும், ஆவும் சாரியைகள்).

குறிப்பு :-

'இல்லைபொருள்' என்பது பண்புத்தொகைநிலைத் தொடராகவும், குறிப்புவினைமுற்றுத் தொகாநிலைத் தொடராகவும், "இல்லாப் பொருள்" என்பது பண்புத்தொகைநிலைத் தொடராகவும், ஈறுகெட்ட

எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சத் தொடராகவும் கொள்ளப்படு மாதலால், இவற்றுள் ஒன்றற்கொன்று வேறுபாடு, தொகைநிலைகள் ஒருமொழிபோல விட்டிசையாமலிருத்தலும், தொகாநிலைகள் தொடர்மொழிபோல விட்டிசைத்தலும் என்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்: இன்மை இல் என்சொற்கு** – இன்மைப் பண்பை யுணர்த்தி நிற்கும் இல் என்னுஞ் சொல்லுக்கு, **ஐ அடைய வன்மைவிகற்பமும்** – ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், **ஆகாரத்தொடு வன்மை ஆகலும்**–ஆகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் மிகலும், **இயல்பும் ஆகும்** – இவ் விருவிதியும் பெறாதியல்பாதலும் பொருந்தும், **எ–று.**

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

**உ–ம்.:–**

இல்லைப்பொருள், இல்லைபொருள், இல்லாப்பொருள், இல்பொருள், ஞானம், வன்மை, அணி என வரும்.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச் சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும் "ளள வேற்றுமையிற் றடவு மல்வழி யவற்றோ டுறழ்வும்" என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்; ஐகாரச் சாரியை முன் வல்லினம் விகற்பமாம் என்றது "அல்வழி இ ஐ முன்ன ராயின்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; ஆகாரச் சாரியை முன் வல்லின மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– இல்லை இல் என் சொற்கு** – இன்மைப் பண்பை யுணர்த்தி நிற்கும் இல் என்னும் சொல்லுக்கு, – **ஐ அடைய வன்மை – விகற்பமும்** – ஐகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், – **ஆகாரத்தோடு வன்மை ஆகலும்** – ஆகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் மிகலும் – **இயல்பும் ஆகும்** – இவ்விருவிதியும் பெறாதியல் பாதலும் பொருந்தும். **எ–று.**

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

இல் என்பது பெறும் ஐகாரமும், ஆகாரமும் சாரியைகளேயாம், விகுதிகளல்லவென்றறிக. விகுதியடைவதைப் பற்றிப் பதவியலிலன்றி இங்கே கூறவேண்டியதில்லை. இந்த ஆகாரத்தைச் சாரியை என்று கொள்ளாமல் எதிர்மறைவிகுதி என்று கொள்ளின்; இல் என்பதே எதிர்மறைப் பொருளையுடையதாயிருக்க அதன்மேல் எதிர்மறைவிகுதி வந்து எதிர்மறுக்குமாயின் எதிர்மறையின் எதிர்மறை சொல்லானவலன் என்பது போல உடன்பாட்டுப் பொருளதேயாதாலும், உடன்பாட்டுப் பொருளை இல்லா என்பது தராமையாலும், இயல்பும் ஆகும் என்றதினால், இல் என்பதும் இல்லா என்பதும் பொருளினால் ஒன்றையொன்று மறுத்தெதிர்க்காமல் இரண்டும், ஒத்த இன்மைப் பொருளையே உடையனவாயிருத்தலாலும், எதிர்மறைவிகுதியென்னும் அக்கொள்கை சிறிதும் பொருந்தாதென்பதறிக.

"இல்லென்கிளவிமின்மை செப்பின்,
வல்லெழுத்து மிகுதலுமையிடை வருதலு,
மியற்கை யாகலு மாகாரம் வருதலுங்,
கொளத்தகுமரபினாகிடனுடைத்தே"

என்று ஆசிரியர் தொல்காப்பியருங் கூறியதுகாண்க.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச்சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும், 'லளவேற்றுமையிற்றடவுமல்வழிய வற்றொடுறழ்வும்' என எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்; ஐகாரச்சாரியை முன் வல்லினம் விகற்பமாம் என்றது 'அல்வழிஇஐம் முன்னராயின்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதிகந்துபடாமைக் காத்தல்; ஆகாரச்சாரியை முன் வல்லின மிகும் என்றது 'இயல்பினும்விதியினும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்திய திகந்து படாமைக் காத்தல்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.:-** **இல் என்** - இல் என்கிற, **இன்மை சொற்கு** - இன்மைப் பண்பை உணர்த்துகின்ற சொல்லுக்கு. **ஐ அடைய** - ஐகாரச் சாரியை பொருந்த, **வன்மை** - (அவ்விடத்து வருகின்ற) வல்லினம், **விகற்பமும்** - (மிக்கும் மிகாமலும்) விகற்பித்தலும், **ஆகாரத்தொடு** - ஆகாரச் சாரியை பொருந்த, **வன்மை ஆகலும்** - (அவ்விடத்து வருகின்ற) வல்லினம் மிகுதலும், **இயல்பும்** - (இவ்விரு விதியும் பெறாமல்) இயல்பாதலும். **ஆகும்** - பொருந்தும்; **எ-று.**

உ–ம்.:–

இல் + பொருள் = இல்லைப்பொருள் ஐகாரச் சாரியை வர வன்மை விகற்பித்தது.

= இல்லைபொருள்

இல்+பொருள்=இல்லாப்பொருள் – ஆகாரச்சாரியை பெற வலி மிக்கது.

இல்+பொருள் = இல்பொருள் – இருவிதியும் பெறாமல் இயல்பாயிற்று.

சாரியைக்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமும் கொள்க.

இல் + ஞானம் = இல்லைஞானம், இல்லாஞானம் – மற்றை முக்கணமும் வரச் சாரியை பெற்றது.

இல் + வன்மை = இல்லைவன்மை, இல்லாவன்மை

இல் +அணி = இல்லையணி, இல்லாவணி

இல்பொருள் என்பதுபோல இல்லைபொருள், இல்லாப்பொருள் என்பனவும் இங்குப் பண்புத்தொகையே; இவற்றுள் ஐகாரமும் ஆகாரமும் சாரியை.

இல்லைபொருள் என்பது – பண்புத் தொகைநிலைத் தொடராகவும், குறிப்புவினைமுற்றுத் தொகாநிலைத் தொடராகவும்; இல்லாப்பொருள் என்பது பண்புத்தொகை நிலைத்தொடராகவும், ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப்பெயரெச்சத் தொகாநிலைத் தொடராகவும் கொள்ளபடு மாதலால், இவற்றுள் ஒன்றற்கு ஒன்று வேறுபாடு என்னவென்றால், தொகைநிலைகள் ஒருமொழிபோல விட்டிசையாமலிருத்தலும், தொகாநிலைகள் தொடர்மொழிபோல விட்டிசைத்தலும் வேறுபாடு உடையன என அறிக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– இன்மை இல் என் சொற்கு – இன்மைப்பண்பை யுணர்த்திநிற்கம் இல் என்னுஞ் சொல்லுக்கு, ஐ அடைய வன்மை விகற்பமும் – ஐகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும் வல்லினம் விகற்பித்தலும், **ஆகாரத்தொடு வன்மை ஆகலும்** – ஆகாரச்சாரியை பொருந்த அவ்விடத்து வரும வல்லினம் மிகலும், **இயல்பும் ஆகும்** – இவ்விருவிதியும் பெறா தியல்பாதலும் பொருந்தும். எ–று.

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால், நாற்கணமுங் கொள்க.

**உ-ம்.:-**

இல் + பொருள் = இல்லைப்பொருள், இல்லைபொருள் ('ஐ' சாரியை வரவலி உறழ்ந்தது); இல்லாப்பொருள் ('ஆ' சாரியைவர வலி மிக்கது); இல்பொருள் (இயல்பாயிற்று.)

இல் + ஞானம் = இல்லை ஞானம், இல்லா ஞானம்

வன்மை = இல்லை வன்மை, இல்லா வன்மை

அணி = இல்லை யணி, இல்லா வணி

– என மற்றை முக்கணமும் வரச் சாரியை பெற்றது.

இல்லென்னும் பண்புச்சொல் ஐகார ஆகாரச் சாரியைகள் பெறும் என்றதும், இயல்பாம் என்றதும், "ளளவேற்றுமையிற்றடவு மல்வழி யவற்றோ டுற்ழ்வும்" (சூ–227) என எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல்; ஐகாரச்சாரியை முன் வல்லினம் விகற்பமாம் என்றது "அல்வழி இ ஐம் முன்ன ராயின்" என்னும் 176 ஆவது சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்; ஆகாரச் சாரியைமுன் வல்லினம் மிகும் என்றது "இயல்பினும் விதியினும்" என்னும் 165 ஆவது சூத்திரத்தால் எய்திய திகந்துபடாமைக் காத்தல்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **இன்மை** – இன்மைப் பண்பை உணர்த்தும், இல் என் சொற்கு–இல் என்னும் சொல்லுக்கு. ஐ–ஐகாரச் சாரியைபானது, அடைய – பொருந்த, **வன்மை** – (அவ்விடத்து வரும்) வல்லினம், விகற்பமும் – விகற்பித்தலும்;

(2) **ஆகாரத்தொடு** – ஆகாரச்சாரியை பொருந்த, **வன்மை ஆகலும்**– (அவ்விடத்துவரும்) வல்லினம் மிகுதலும்;

(3) **இயல்பும்** – (இவ்விருவிதியும் பெறாது) இயல்பாதலும், ஆகும் – பொருந்தும்.

சாரியை பெறுதற்கு வருமெழுத்தைச் சொல்லாமையால் நாற்கணமுங் கொள்க.

**உதாரணம்**

(1) இல் + பொருள் = இல்லைப்பொருள், இல்லைபொருள்

என ஐகாரச்சாரியை வர வன்மை விகற்பித்தது.

(2) இல் + பொருள் = இல்லாப்பொருள்

என ஆகாரச்சாரியை பெற வலிமிக்கது.

(3) இல் + பொருள் = இல்பொருள்

என இருவிதியும் பெறாமல் இயல்பாயிற்று.

இல் + ஞானம் = இல்லைஞானம், இல்லாஞானம்
+ வன்மை = இல்லைவன்மை, இல்லாவன்மை
+ அணி = இல்லையணி, இல்லாவணி

என ஏனைய முக்கணமும் வரச் சாரியை பெற்றது.

இல்பொருள் என்பதுபோல இல்லைபொருள், இல்லாப் பொருள் என்பனவும் பண்புத்தொகையேயாம்; இவற்றுள் ஐகாரமும் ஆகாரமும் சாரியை.

இல்லைபொருள் என்பது, பண்புத்தொகைநிலைத் தொடராகவும், குறிப்புவினைமுற்றுத் தொகாநிலைத் தொடராகவும்;

இல்லாப்பொருள் என்பது, பண்புத்தொகைநிலைத் தொடராகவும், ஈறு கெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராகவும் கொள்ளப்படும்.

தொகைநிலைகள் ஒரு மொழிபோன்று விட்டிசையாமையும், தொகா நிலைகள் தொடர்மொழிபோல விட்டிசைப்பதும் வேறுபாடு என அறிக.

## மோசகு பொன்னையா

இன்மைப் பண்புணர்த்தும் இல் என்னுஞ் சொல்லுக்கு ஐகாரச் சாரியை பொருந்த, அவண் வரும் வல்லினம் விகற்பமாதலும்; ஆகாரச் சாரியை பொருந்த அவண் வம் வல்லினம் மிகலும்; இவ்விரு விதியும் பெறாது இயல்பாதலும் ஆகும், எ–று.

வருமொழி வரையாமையால் சாரியைப் பேற்றிற்கு நாற்கணமுங்கொள்க. இது பொதுவிதிக்கு விலக்கு.

எ–டு.:–

இல்லைப் பொருள், இல்லை பொருள்; – ஐகாரச் சாரியை பெற்று வல்லினம் விகற்பமாயிற்று.

இல்லாப் பொருள் – ஆகாரச் சாரியை பெற்று வலிமிகுந்தது

இல்பொருள், இல்ஞானம், இல்வன்மை, இல்லணி – சாரியை பெறாமல் இயல்பாயின.

(30)

## 233. புள்ளும் வள்ளுந் தொழிற் [1]பெயரு மானும்.

புள்ளும் வள்ளும் தொழில் பெயரும் மாானும்.

pu<u>l</u><u>l</u>um va<u>l</u><u>l</u>um ṭoḷil peyarum māhṉum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Special rule for pul, val,**

The nouns pul, and val follow the combination of Verbal nouns (and affix u).

## ஒப்புமைப் பகுதி

புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல

(தொல்.: 404)

புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் மானும்

(இ.வி.:143)

வள்ளும் புள்ளு முகரமொடு சிவணும்

(மு.வீ.:386)

## மயிலை நாதர்

எ–ன், எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இவ்விரு சொற்களும் இருவழியும் மூவினமும் வரத் தொழிற்சொல்லே போல் உகரம் எபெறும். எ–று.

---

பாடவேறுபாடு .:–

1. பெயர்மானும்

வ—று.:—

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, ஞான்றது, வலிது எனவும், கடுமை, ஞாற்சி, வலிமை எனவும் இருவழியும் [2]மூவினமும் வர உகரம் பெற்றன.

உம்மையால், புள்கடிது புட்கடிது எனவும், புட்கடுமை எனவும், வள்கடிது வட்கடிது எனவும், வட்கடுமை எனவும், உகரம் பெறாது பொதுவிதி பெறுதலும் கொள்க.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ—னின், *'ல ள வேற்றுமையிற்றடவும்' என்னும் சூத்திரத்தான்* எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்—ற்று.

இ—ள்.:— இவ்விரு சொற்களும், இருவழியும் யவ்வன் மெய் வரின் பொதுவிதியான் முடிதலே யன்றித் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றும் புணரும், எ — று.

உ—ம்.:—

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும்; கடுமை, நன்மை, வன்மை எனவும் வரும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், புள் வள் என்னும் இவ்விரு சொல்லின் ஈற்றி னின்ற ளகரப் புணர்ச்சி கூறியது.

இ—ள்.:— புள்ளும் வள்ளும் – புள் வள் என்னும் இவ்விரு சொற்களும், தொழிற்பெயர் மானும் – தொழிற்பெயரே போல உகரம் பெறும், எ—று.

உ—ம்.:—

புள்ளி, வள்ளுக் கடிது, ஞான்றது, வலிது, கடுமை, ஞாற்சி, வலிமை என இருவழியும் மூவினமும் வர உகரம் பெற்றன.

உம்மையால் உகரம் பெறாமலும் புணரும், புள் கடிது, புட்கடிது, புட்கடுமை எனவும் வள் கடிது, வட் கடிது, வட் கடுமை என உகரம் பெறாது பொதுவிதி பெறுதலும் கொள்க.

---

பாடவேறுபாடு .:—

1. மூவினத்தோடும் உகரம்

## விசாகப் பெருமாளையர்

இது, ல ள வேற்றுமையில் றடவுமென்பதனால் எய்தியதன் மேற் சிறப்புவிதி யுணர்த்துகின்றது.

இ—ள்.:– புள்ளும் வள்ளும் – இவ்விரு சொற்களும், தொழிற்பெயரு மானும் –யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலல்லாமலுந் தொழிற்பெயர் போல உகரச் சாரியையும் பெற்றுப்புண்ரும், எ—று.

உ—ம்.:–

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது, எனவும்,
புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும்,
வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

புள்வள் என்பன "லள வேற்றுமையிற் றடவும்" என்னும் விதியே யன்றி வேறு விதியும் பெறுமோ?

புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும்.

(புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும்.)

இ—ள்.: புள்ளும் வள்ளும் – இவ்விரு சொற்களும், தொழிற்பெயரும் மானும் – இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலே யன்றித் தொழிற்பெயர்போல உகரச் சாரியையும் பெற்றுப் புணரும், எ—று.

உ—ம்.:–

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும்,
புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும்
வரும்.

தொழிற்பெயரும் என்ற வும்மையாற் பெறப்படுவது யாது?

உம்மையால் "லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ், சூத்திர விதிப்படி புள்கடிது, புட்கடிது; வள்கடிது, வட்கடிது எனவும், புட்கடுமை, வட்கடுமை எனவும், புண்ஞான்றது, வண்ஞான்றது எனவும், புண்ஞாற்சி வண்ஞாற்சி எனவும், வருமென்பது பெறப்படும். இது "லள வேற்றுமையிற் றடவும்" இது, "லள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தி யதன்மேற் சிறப்புவிதி.

## முகவை இராமானுச கவிராயர்

இது, எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ–ள்.:– புள்ளும் வள்ளும்– இந்த இரண்டு சொற்களும், தொழிற்பெயரு மானும் – இருவழியும் யவ் வல்லாத மெய் வரிற் பொதுவிதியால் முடிதலே யன்றித் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்றும் புணரும், எ–று.

உ–ம்.:–

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும்; கடுமை, நன்மை, வன்மை எனவும் வரும்.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– புள்ளும் வள்ளும் – 'புள்' 'வள்' என்னும் இரண்டுசொற்களும், தொழிற்பெயர்மானும் – (இருவழியிலும் பொதுவிதியால் முடிதலே யல்லாமலும்) தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

உதாரணம்

புள் + கடிது = புள்ளுக்கடிது, புள்ளுநன்று, புள்ளுவலிது.
வள் + கடிது = வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது.

–அல்வழி

புள் + கடுமை = புள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, புள்ளுவன்மை
வள் + கடுமை = வள்ளுக்கடுமை, வள்ளுநன்மை, வள்ளுவன்மை

– வேற்றுமை

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும் – இவ்விரு சொற்களும் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலேயன்றித் தொழிற்பெயர் போல உகரச் சாரியையும் பெற்றுப் புணரும், எ–று.

உ–ம்.:–

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது எனவும், புள்ளுக்கடுமை, வள்ளுக்கடுமை, நன்மை, வன்மை எனவும், வரும்.

இது "ல ள வேற்றுமையிற் றடவும்" என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும் – இவ்விருசொற்களும் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான்முடிதலேயன்றித் தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

உ–ம்.:–

புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, நன்று, வலிது, எனவும் புள்ளுக்கடுமை, வள்ளுக்கடிமை, நன்மை, வன்மை. எனவும் வரும்.

இது 'லளவேற்றுமையிற்றடவும்' என்னுஞ் சூத்திரத்தால் எய்தியதன் மேற் சிறப்புவிதி.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: புள்ளும் வள்ளும் – புள் வள் என்னும் இரண்டு சொற்களும், தொழிற்பெயர் மானும் – (இருவழியிலும் பொதுவிதியால் முடிதலே யல்லாமலும்) தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்கள் வந்தால்) உகரச் சாரியைப் பெற்றுப் புணரும்; எ–று.

உ–ம்.:–

புள் + கடிது = புள்ளுக்கடிது, புள்ளுநன்று, புள்ளுவலிது'

– அல்வழி

வள் + கடிது = வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது

புள் + கடுமை = புள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, புள்ளுவன்மை

வள் + கடுமை = வள்ளுக்கடுமை, வள்ளுநன்மை, வள்ளுவன்மை

– வேற்றுமை.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– புள்ளும் வள்ளும் தொழிற்பெயரும் மானும் – இவ்விரு சொற்களும் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலேயன்றித் தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும். எ–று.

'தொழிற்பெயர் மானும்' என்பதும் பாடம்.

உ–ம்.:–

புள் + கடிது = புள்ளுக்கடிது.

புள் + நன்று = புள்ளுநன்று.

வள் + வலிது = வள்ளுவலிது.

வள் + கடிது = வள்ளுக்கடிது. அல்வழி.

புள் + கடுமை = புள்ளுக்கடுமை.

புள் + வன்மை = புள்ளுவன்மை.

வள் + கடுமை = வள்ளுக்கடுமை.

வள் + நன்மை = வள்ளுநன்மை. வேற்றுமை.

இது "ல ள வேற்றுமையிற் றடவும்" என்னும் 227 ஆவது சூத்திரத்தால் எய்தியதன்மேற் சிறப்புவிதி.

## கா.நமச்சிவாய முதலியார்

புள்ளும் வள்ளும் – புள் வள் என்னும் இரு சொற்களும், தொழிற்பெயர்மானும் – (யகரமல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலேயன்றித்) தொழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப் புணரும்.

உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புள் | + | கடிது | = | புள்ளுக்கடிது | |
| | + | நன்று | = | புள்ளுநன்று | |
| | + | வலிது | = | புள்ளுவலிது | |
| வள் | + | கடிது | = | வள்ளுக்கடிது | அல்வழி. |
| | + | நன்று | = | வள்ளுநன்று | |
| | + | வலிது | = | வள்ளுவலிது | |
| புள் | + | கடுமை | = | புள்ளுக்கடுமை | |
| | + | நன்மை | = | புள்ளுநன்மை | |
| | + | வன்மை | = | புள்ளுவன்மை | |
| வள் | + | கடுமை | = | வள்ளுக்கடுமை | வேற்றுமை |
| | + | நன்மை | = | வள்ளுநன்மை | |
| | + | வன்மை | = | வள்ளுவன்மை | |

பிற எழுத்துக்களோடும் இப்படியே கூட்டுக.

## மோசசு பொன்னையா

புள், வள் என்னும் இரு சொற்களும் இருவழியும் பொது விதியால் முடிதலே யல்லாமல், தொழிற்பெயரே போல் யகரமல்லாத மெய்கள் வரின், உகரச் சாரியை பெற்றுப் புணரும், எ—று.

எ—டு.:-

புள்ளுக்கடிது, புள்ளுநன்று, புள்ளுவலிது,

வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது, – அல்வழி

புள்ளுக்கடுமை, புள்ளுநன்மை, புள்ளுவன்மை,

வள்ளுக்கடிது, வள்ளுநன்று, வள்ளுவலிது – வேற்றுமை

(30)

**234. சுட்டு வகர [1]மூ வினமுற முறையே**
**ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.**

சுட்டு வகரம் மூ இனம் உற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்.

suttu vakaram mū i̱nam uṛa muṛaiyē
āytamum me̱nmaiyum iyalpum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### WORDS WITH v AS FINALS

### Special rule for demonstrative ending in v

The Final v of the (plural) Demonstratives (av, iv and uv), is changed into a short guttural, if followed by a hard initial, and into a nasal, if followed by a nasal; but it remains unchanged before a medial.

---

பாடவேறுபாடு .:-

1. மூவினம் வர

## ஒப்புமைப் பகுதி

வேற்றுமை அல்வழி ஆய்த மாகும்

(தொல்.: 380)

மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்

(தொல்.: 381)

ஏனவை புணரின் இயல்பென மொழிப

(தொல்.: 382)

சுட்டு வகரமூ வினமுற முறையே
யாய்தமு மென்மையு மியல்புமா மல்வழி

(இ.வி.: 144)

## மயிலை நாதர்

எ – ன், வகர வீறு புணருமாறு உணர்த்துல் நுதலிற்று.

இ—ள்.: சுட்டை முதலாக வுடைய வகரம் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வந்தால் முறையே ஆய்தமும் வந்த மெல்லெழுத்தும் இயல்பும் ஆகும், எ – று.

வ—று.:

[1]அஃகடிய, அஃசிறிய, அஃதீய, அஃபெரிய, அஞ்ஞான்றன, அவ்வலிய என முறையே காண்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், வகர ஈற்றுச் சுட்டுப்பெயர் மூவினத்தோடும் புணருமாறு உணர் – ற்று.

இ—ள்.:– அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர் ஈற்று வகரம், வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, முறையானே ஆய்தமும் வரும் மெல்லினமும் இயல்பும் ஆம், எ—று.

உ—ம்.:–

அஃகடிய, இஃகடிய, உஃகடிய எனவும்; அஞ்ஞானம், இஞ்ஞானம், உஞ்ஞானம் எனவும்; அவ்யாவை, இவ்யாவை, உவ்யாவை எனவும் வரும்.

---

பாடவேறுபாடு .:–

1. அஃகடிய, அஞ்ஞானம், அவ்யானை

வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச் சாரியை பெறும் என மேல் விதத்தலின், இவ்விதி அல்வழிக்கு என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், சுட்டீற்று வகரம் புணருமாறு கூறியது.

இ—ள்.:— சுட்டு வகரம் — சுட்டெழுத்தை முதலாகவுடைய ஈற்று நின்ற வகர வொற்று, மூவினமுற — வருமொழி முதல் வலி மெல் இடை வந்தால், முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பு மாகும் — முறையே வலி வர ஆய்தமும் மெலி வர மெல்லெழுத்தும் இடை வர இயல்புமாம், எ—று.

உ—ம்.:—

அஃகடிய, குறிய, சிறிய, தீய, பெரிய எனவும் அஞ்ஞான்றன, நீண்டன, மாண்டன எனவும் அவ்வலிய, அவ்யானை என முறையே காண்க.

## விசாகப் பெருமாளையர்

இது, வகரவீற்றுச் சுட்டுப்பெயர்கள் மூவினத்தோடும் புணருமாறு உணர்த்துகின்றது.

இ—ள்.:— சுட்டுவகரம் — அவ் இவ் உவ் என்கிற அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்க ளீற்று வகரமெய், மூவினம் — வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற — வர, முறை — முறையாக, ஆய்தமும் — தனிநிலையும், மென்மையும்—மெல்லினமும், இயல்பும்—இயல்பும், ஆகும்—ஆகும், எ—று.

உ—ம்.:—

அவ்+கடிய—அஃகடிய, அவ்+ஞானம்—அஞ்ஞானம், அவ்+யானை—அவ்யானை, என வரும். இவ் உவ் என்பவைகளுடனேயும் இப்படியே கூட்டுக.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வகரவீற்றுச் சுட்டுச்சொல் எவ்வாறு புணரும்?

சுட்டு வகரமு வினமுற முறையே

ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்.

(சுட்டு வகரம் மூவினம் உற முறையே

ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்.)

**இ–ள்.:– சுட்டு வகரம்** – அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப் பெயர்களினீற்று வகரமெய், **மூவினம் உற**–வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, **முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்** – முறையாக ஆய்தமும் வரு மெல்லினமும் இயல்பும் ஆகும், எ–று.

உ–ம்.:–

(1) அவ் – கடிய அஃகடிய, இவ் – கடிய – இஃகடிய, உன்கடிய – உஃகடிய, என வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

(2) அவ் – ஞானம் – அஞ்ஞானம், இவ் – ஞானம் – இஞ்ஞானம், உவ் – ஞானம் – உஞ்ஞானம், என மெல்லினம் வர வரு மெல்லினமாகத் திரிந்தது.

(3) அவ் – யாவை – அவ்யாவை, இவ் – யாவை – இவ்யாவை, உவ் – யாவை – உவ்யாவை, என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறும் என மேல்விதத்தலால், இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வகர வீற்றுச் சுட்டுப்பெயர் மூவினத்தொடு புணருஞ் செய்கை கூறுகின்றது

**இ–ள்.:– சுட்டு வகரம்**–அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர்களின் ஈற்று வகர வொற்று, **மூவின முற**–வலி மெலி யிடை யென்னு மூவினங்களும் வந்து புணர, **முறையே**–வரிசையாகவே, **ஆய்தமு மென்மையு மியல்பு மாகும்**–வல்லினத்திற்கு ஆய்தமாகவும் மெல்லினத்திற்கு மெல்லினமாகவும் இடையினத்திற்கு இயல்பாகவும் நிற்கும், எ–று.

உ–ம்.:–

அவ்+கடிய – அஃகடிய, இவ் – இஃகடிய, உவ்–உஃகடிய எனவும்; அவ்ஞானம்–அஞ்ஞானம், இவ்–இஞ்ஞானம், உவ்–உஞ்ஞானம், அவ்+நாடு–அந்நாடு, இவ்–இந்நாடு, உவ்–உந்நாடு, அவ்+மாஞல–அம்மாலை எனவும்; அவ்யாவை, இவ்யாவை, உவ்யாவை, அவ்வாழை எனவும் வரும். வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச் சாரியை பெறுமென மேலெடுத்துக் கூறுதலால், இவ்விதி யல்வழிக்கெனக் காண்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

**உரை :-** சுட்டுவகரம் - (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பலவின்பாற்) சுட்டுப்பெயர்களின் இறுதியிலுள்ள வகரமெய், **மூ இனம் உற** - வல்லின மெல்லின இடையினங்கள்வர, **முறையே** - முறையாக, **ஆய்தமும்** - மென்மையும் - வருமெல்லினமும், **இயல்பும்** - ஆகும்.

**உ-ம்:-**

அவ் + கடிது = அஃகடிய - வலிவர ஆய்தமாயிற்று.
அவ் + ஞானம் = அஞ்ஞாம் - மெலிவர மெலியாயிற்று.
அவ் + யாவை = அவ்யாவை - இடைவர மெலியாயிற்று.

குறிப்பு :-

இவ் உவ் என்பவற்றோடும் இவ்வாறே கூட்டுக. இச்சொற்கள் வேற்றுமைப்புணர்ச்சியில் அற்றுச்சாரியை பெறும் என மேல் உருபுபுணரியலுள் கூறலால். இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: சுட்டு வகரம் - அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப்பெயர்களீற்று வகரமெய், **மூவினம் உற** - வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, **முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்** - முறையாக ஆய்தமும் வரு மெல்லினமும் இயல்பும் ஆகும், எ-று.

**உ-ம்.:**

(1) அவ் + கடிய = அஃகடிய, இவ் + கடிய = இஃகடிய, உவ் + கடிய = உஃகடிய என வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

(2) அவ்+ஞானம் = அஞ்ஞானம், இவ் + ஞானம் = இஞ்ஞானம், உவ் + ஞானம் = உஞ்ஞானம் என மெல்லினம் வர வருமெழுத்தாகத் திரிந்தது.

(3) அவ் + யாவை = அவ்யாவை, இவ் + யாவை = இவ்யாவை, உவ் + யாவை = உவ்யாவை என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச் சாரியை பெறும் என மேல் விதத்தலால், இவ்விதி அல்வழிக்கெனக் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– சுட்டு வகரம் – அவ் இவ் உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப் பெயர்களீற்று வகரமெய், – மூவினம் உற – வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, – முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும் – முறையாக ஆய்தமும் வருமெல்லினமும் இயல்பும் ஆகும். எ–று.

உ–ம்.:–

(1)அவ்+கடிய =அஃகடிய, இவ் + கடிய = இஃகடிய, உவ்+கடிய =உஃகடிய என வல்லினம் வர ஆய்தமாகத்திரிந்தது.

(2)அவ்+ஞானம் =அஞ்ஞானம், இவ்+ஞானம் =இஞ்ஞானம், உவ்+ஞானம் = உஞ்ஞானம் என மெல்லினம்வர வருமெழுத்தாகத்திரிந்தது.

(3)அவ்+யாவை = அவ்யாவை, இவ்+யாவை = இவ்யாவை, உவ்+யாவை=உவ்யாவை என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப்புணர்ச்சிக்கு அற்றுச்சாரியைபெறும் என மேல் விதத்தலால் இவ்விதி அல்வழிக்கெனக் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– சுட்டு வகரம் – (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பலவின்பாற்) சுட்டுப்பெயர்களின் இறுதியிலுள்ள வகரமெய், மூ இனம் உற – வல்லின மெல்லின இடையினங்கள் வர, முறையே – முறையாக, ஆய்தமும்– மென்மையும் – வரும் மெல்லினமும், இயல்பும் –, ஆகும்– ; எ–று.

உ–ம்.:–

அவ் + கடிய = அஃகடிய–வலிவர ஆய்தமாயிற்று.

அவ் + ஞான்றன = அஞ்ஞான்றன–மெலிவர மெலியாயிற்று.

அவ் + யாவை = அவ்யாவை–இடைவர இயல்பாயிற்று.

இவ், உவ் என்பவற்றோடும் இப்படியே கூட்டுக.

'இச்சொற்கள் வேற்றுமைப்புணர்ச்சியில் அற்றுச் சாரியைப் பெறும்' என மேல் எடுத்துக்கூறுதலால், இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– சுட்டு வகரம் – அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் சுட்டுப்பெயர்க ளீற்று வகரமெய், மூவினம் உற – வல்லினமும் மெல்லினமும் இடையின்முகம் வர, முறையே ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும் – முறையாக ஆய்தமும் வருமெல்லினமும் இயல்பும் ஆகும். எ–று.

உ–ம்.:–

(1)அவ் + கடிய = அஃகடிய, இவ் + கடிய = இஃகடிய, உவ் + கடிய = உஃகடிய – என வல்லினம் வர ஆய்தமாகத் திரிந்தது.

(2)அவ் + ஞானம் = அஞ்ஞானம், இவ் + ஞானம் = இஞ்ஞானம், உவ் = ஞானம் = உஞ்ஞானம் – என மெல்லினம் வருமெழுத்தாகத் திரிந்தது.

(3)அவ் + யாவை = அவ்யாவை, இவ் + யாவை = இவ்யாவை, உவ் + யாவை = உவ்யாவை – என இடையினம் வர இயல்பாயிற்று.

வேற்றுமைப்புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறும் என மேல் 250–ஆவது சூததிரத்தால் விதித்தலல், இவ் விதி அல்வழிக் கெனக் காண்க.

## கா.நமச்சிவாய முதலியார்

சுட்டு வகரம் – (அவ் இவ் உவ் என்னும் அஃறிணைப் பன்மைச்) சுட்டுப்பெயர்களின் ஈற்றிலுள்ள வகர மெய், மூவினம் – வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற – வர, முறை – முறையாக (1) ஆய்தமும் – தனிநிலையும், (2) மென்மையும் – மெல்லினமும், (3) இயல்பும் ஆகும் – இயல்பும் ஆகும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) அவ் | + | கடிய | = | அஃகடிய |
| (2) அவ் | + | ஞானம் | = | அஞ்ஞானம் |
| (3) அவ் | + | யானை | = | அவ்யானை |

என வரும்.

இவ் உவ் என்பவைகளுடனும் இப்படியே கூட்டுக.

இப்பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில், அற்றுச் சாரியை பெறும் என மேல், 'வவ்விறு சுட்டிற்கு' (சூ–250) என்னும் சூத்திரத்தில் விதித்தலால், இவ்விதி அல்வழிக்கெனக் கொள்க.

## மோசசு பொன்னையா

அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர்களின் ஈற்று வகரமெய் வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவினமும் வர முறையே ஆய்தமும், வரும் மெல்லினமும், இயல்பும் ஆகும், எ–று.

எ–டு.:–

அஃகடிய, இஃகடிய, உஃகடிய

அஞ்ஞான்றன, இஞ்ஞான்றன, உஞ்ஞான்றன

அவ்யாவை, இவ்யாவை, உவ்யாவை

பின்னர், வேற்றுமைப் புணர்ச்சிக்கு அற்றுச் சாரியை விதிப்பார். ஆதலின், இம்முடிபு அல்வழிக்கே எனக்கொள்க.

(31)

235. தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

தெவ் என் மொழியே தொழில்பெயர் அற்றே
மவ் வரின் வஃகான் மவ்வும் ஆகும்.

ṭev eṉ moḻiyē ṭoḻilpeyar aṟṟē
mav variṉ vakhkāṉ mavvum ākum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Special rule for tev

Tev follows the rule for Verbal nouns (and takes u); but when it is followed by (an initial) m, it is changed into m.

## ஒப்புமைப் பகுதி

ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே

(தொல்.: 383)

தெவ்வென் மொழியே தொழிற்பெயர் ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்

(இ.வி.: 145)

தெவ்வென்பது இருவழி உவ்வெய்திச் சேரும்
வலிமிகும் மவ்வரின் வவ்வும் மவ்வாம் என்ப

(தொ.வி.: 29)

தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்

(மு.வீ.: 367)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: தெவ்வென்னு மொழி இருவழியும் தொழிற்பெயரே போல உகரம் பெற்றுப் புணரும்; மகர முதன்மொழி வரின் ஈற்று வகரம் மகரமுமாம், எ—று.

வ—று.:—

தெவ்வுக்கடிது; ஞான்றது, வலிது எனவும், தெவ்வுக்கடுமை; ஞாற்சி, வலிமை எனவும், தெம்மன்னர், தெம்முனை எனவும் வரும்.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், தெவ் என்னும் சொல் யவ்வன் மெய்யோடு புணருமாறு உணர்—ற்று.

இ—ள்:— தெவ் என்னும் சொல், யவ்வன் மெய்யோடு புணருமிடத்துத் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும்; அவற்றுள் மகரம் வருங்கால், உகரச் சாரியை பெறுதலே யன்றி, ஒரோவழி ஈற்று வகரம் மகரமாகத் திரியவும் பெறும், எ—று.

உ—ம்:—

தெவ்வுக் கடிது, மாண்டது, வந்தது எனவும்; தெவ்வுக்கடுமை, மாட்சி, வன்மை எனவும்; தெவ்வு மன்னர், தெம்மன்னர் எனவும்; தெவ்வு முனை, தெம்முனை எனவும் இரு வழியினும் முறையே காண்க.

இப் பகை என்னும் பண்புப்பெயர் பண்பியாய்ப் பகைப்பொருளை உணர்த்தி ஆகுபெயராய் நின்றவழியும் இவையே காட்டென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், தெவ் வென்னும் வகர வீற்றுச் சொற் புணர்ச்சி கூறியது.

**இ–ள்.:– தெவ்வென் மொழியே** – தெவ் வென்னும் நிலைமொழி ஈற்றி னின்ற வகர வொற்று மூவினமும் வரவும், **தொழிற்பெய ரற்றே** – முதனிலைத் தொழிற்பெயரே போல உகரம் பெற்றுப் புணரும் இருவழியும், **மவ் வரின்** – வருமொழி முதலாக மகரம் வந்தால், **வஃகான் மவ்வுமாகும்** – ஈற்று வகரமும் மகரமாம், எ–று.

உ–ம்.:–

தெவ்வுக் கடிது, ஞான்றது, வலிது எனவும் தெவ்வுக் கடுமை, ஞாற்சி, வலிமை எனவும் இருவழியும் மூவினமும் வர உகரம் பெற்றது. தெம்மன்னர், தெம்முனை என ஈற்று வகரம் மகரமாயின.

## விசாகப் பெருமாளையர்

இது, தெவ்வென்கிற சொல் யகர மல்லாத மெய்களோடு புணருமாறு உணர்த்துகின்றது.

**இ–ள்.:– தெவ்வென் மொழி**–தெவ் என்கிற பகையை யுணர்த்தும் பெயரானது, **தொழிற்பெயரற்று** – யகர மல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர் போல வுகரச் சாரியை பெற்று முடியும், ம–மகர மெய்யானது, **வரின்**–வந்தால், **வஃகான்**–வகர மெய்யானது, **மவ்வுமாகும்**–உகரச்சாரியை பெறுதலல்லாமலும் ஒரோவிடத்து, மகர மெய்யாகவுந் திரியும், எ–று.

உ–ம்.:–

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும், தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எனவும், தெவ்வுமன்னர், தெம்மன்னர், எனவும், தெவ்வுமுனை எனவும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தெவ்வென்னுஞ் சொல் எவ்வாறு புணரும்?

தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே

மவ்வரின் வஃகான் மவ்வு மாகும்.

(தெவ் என் மொழியே தொழிற்பெயர் அற்றே

மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்.)

**இ–ள்.: தெவ் என் மொழி** – தெவ் என்னும் பகையை யுணர்த்தும் பெயர், **தொழிற்பெயர் அற்று** – யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர் போல உகரச்சாரியை பெற்று முடியும், **மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்** –

மகர மெய் வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும், எ–று.

உ–ம்.:–

(1) தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும், தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எனவும், இருவழியும் உகரச்சாரியை பெற்றது.

(2) தெவ்வுமன்னர். தெம்மன்னர், எனவும். தெவ்வுமுனை, தெம்முனை எனவும், இருவழியும் மகரமெய் வர உகரச் சாரியை பெற்றும், மகர மெய்யாகத் திரிந்தும் வந்தது.

தெவ் என்பது யகரம் வரின் எவ்வாறு புணரும்?

''எண்மூ வெழுத்தீற்று'' என்னுஞ் சூத்திரவிதிப்படி

தெவ் யாது என இயல்பாகவே புணரும்.

மவ்வும் என்னும் உம்மையாற் பெறப்படுவது யாது?

உம்மையான் உகரப்பேறே சிறந்ததென்பது.

வருமொழித் தகர நகரத் திரிபு

## முகவை இராமானுச கவிராயர்

இது, தெவ் என்னுஞ் சொல் யவ் வல்லாத மெய்களொடு புணருஞ் செய்கை கூறுகின்றது.

**இ–ள்.:– தெவ்வென் மொழி –** இம்மொழி யவ் வல்லாத மெய்களொடு புணரும் போது, **தொழிற்பெயரற்று**–தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும், **மவ்வரின் –** அதன் முன் மகரம் வந்து புணரின், **வஃகான் மவ்வு மாகும்**–உகரச் சாரியை பெறுதலே யன்றி யொரோரிடத்து வகர வொற்று மகர வொற்றாகத் திரியவும் பெறும், **எ–று.**

உ–ம்.:–

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும், தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, வன்மை எனவும், தெவ்வுமன்னர், தெம்மன்னர் எனவும், தெவ்வுமுனை, தெம்முனை எனவும், இருவழியும் முறையே காண்க. தெவ்– பகை, இந்தப் பகை யென்னும் பண்புப்பெயர் பண்பியாய்ப் பகைப் பொருளை யுணர்த்தி ஆகுபெயராய் நின்ற போதும் இவையே யுதாரண மென்க.

## கா. கோபாலாசாரி - தி.கோ.ரங்காசாரி

உரை :- தெவ் என மொழி - 'தெவ்' என்னும் பெயர், தொழிற்பெயர் அற்று - தொழிற்பெயர்போல (யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்து) உகரச்சாரியை பெற்று முடியும்; ம வரின் - (வருமொழிமுதலில்) மகரம் வந்தால், வஃகான் - (நிலைமொழியீற்று) வகரமெய், மவ்வும் ஆகும் - (உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்துச்சாரியை பெறாமல்) மகரமெய்யாகத் திரியவும் பெறும்.

குறிப்பு:-

தெவ் - பகைமை; இஃது ஆகுபெயராய்ப் பகைவனை உணர்த்தும். வகரவீற்றுச்சொற்கள் தமிழில் நான்கேயுள்ளன; அவை: அவ்,இவ், உவ், தெவ்.

உதாரணம்

| அல்வழி | | வேற்றுமை |
|---|---|---|
| தெவ் + கடிது = | தெவ்வுக்கடிது | தெவ்வுக்கடுமை |
| தெவ் + நன்று = | தெவ்வுநன்று | தெவ்வுநன்மை |
| தெவ் + வலிது = | தெவ்வுவலிது | தெவ்வுவலிமை |
| | | - உகரம் பெற்றது |
| தெவ் + மன்னர் = | தெம்மன்னர் | தெவ் + முனை = தெம்முனை |
| | | - மகரம்வர வகரம் கரமாகத் திரிந்தது. |

## ஆறுமுக நாவலர்

இ-ள்.:- தெவ் என் மொழி தொழிற்பெயர் அற்று - தெவ் என்னும் பகையை யுணர்த்தும் பெயர் யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர் போல உகரச் சாரியை பெற்று முடியும், மவ் வரின் வஃகான் மவ்வும் ஆகும் - மகரமெய் வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகர மெய் மகர மெய்யாகத் திரியவும் பெறும், எ-று.

உ-ம்.:-

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும், தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை எனவும் இருவழியும் உகரச்சாரியை பெற்றது.

தெவ்வுமன்னர், தெம்மன்னர் எனவும், தெவ்வுமுனை, தெம்முனை எனவும் இருவழியும் மகர மெய் வர உகரச் சாரியை பெற்றும், மகர மெய்யாகத் திரிந்தும் வந்தது.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ—ள். தெவ் எண்மொழி தொழிற்பெயர் அற்று** – தெவ்வென்னும் பகைமையுணர்த்தும் பெயர் யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும், – **மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும்** – மகரமெய்வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும். **எ—று.**

**உ—ம்.:—**

(1). தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது எனவும் தெவ்வுக்கடுமை, தெவ்வுமாட்சி, தெவ்வுவலிமை, எனவும் இருவழியும் உரகச் சாரியை பெற்றது.

(2) தெவ்வுமன்னர், தெம்மன்னர் எனவும் தெவ்வுமுனை, தெம்முனை எனவும் இருவழியும் மகரமெய்வர உகரச்சாரியை பெற்றும், மகரமெய்யாகத் திரிந்தும் வந்தது.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ—ள்.:— தெவ் என் மொழி** – தெவ் என்னும் பெயர், **தொழிற்பெயர் அற்று** – தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்து உகரச் சாரியை பெற்று முடியும்; **ம வரின்** – (வருமொழி முதலில்) மகரம் வந்தால், **வஃகான்** – (நிலைமொழியீற்று) வகர மெய், **மவ்வும் ஆகும்** – (உகரச் சாரியை பெறுதலே யன்றி ஒரோவிடத்துச் சாரியை பெறாமல் மகர மெய்யாகத் திரியவும் பெறும்; **எ—று.**

தெவ் – பகைமை; இது ஆகுபெயராய், பகைவனையும் உணர்த்தி நிற்கும்.

**உ—ம்.:—**

| அல்வழி | வேற்றுமை. |
|---|---|
| தெவ் + கடிது = தெவ்வுக்கடிது | +கடுமை = தெவ்வுக்கடுமை |
| நன்று = தெவ்வுநன்று | நன்மை = தெவ்வுநன்மை |
| வலிது = தெவ்வுவலிது | வன்மை = தெவ்வுவலிமை |
| | உகரம் பெற்றது. |

தெவ் + மன்னர் = தெம்மன்னர் – அல்வழி.

தெவ் + முனை = தெம்முனை – வேற்றுமை.

மகரம் வர, வகரம் மகரமாகத் திரிந்தது.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– தெவ் என மொழி தொழிற்பெயர் அற்று -- தெவ் என்னும் பகையையுணர்த்தும் பெயர் யகரமல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும்; மவ்வரின் வஃகான் மவ்வும் ஆகும் – மகரமெய் வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகர மெய்யாகத் திரியவும் பெறும். எ–று.

உ–ம்.:–

(1)தெவ் + கடிது = தெவ்வுக்கடிது.

+ நன்று = தெவ்வுநன்று.

+ வலிது = தெவ்வுவலிது. அல்வழி

தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை.

+ நன்மை = தெவ்வுநன்மை.

+ வலிமை = தெவ்வுவலிமை. வேற்றுமை

– இருவழியும் உகரச்சாரியை பெற்றது.

(2)தெவ் + மன்னர் = தெவ்வுமன்னர்,

தெம்மன்னர். அல்வழி

தெவ் + முனை = தெவ்வுமுனை,

தெம்முனை. வேற்றுமை

– இருவழியும் மகரமெய் வர உகரச்சாரியை பெற்றும், மகரமெய்யாகத் திரிந்தும் வந்தது.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) தெவ் என் மொழி – தெவ் என்னம் பெயரானது, தொழிற்பெயர் அற்று – (யகரமல்லாத மெங்களோடு புணருமிடத்துத்) தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும்.

(2) ம –மகர மெய், வரின் – வந்தால், வஃகான் – வகர மெய்யானது, மவ்வும் ஆகும் – (உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரே விடத்து) மகர மெய்யாகவும் திரியும்.

**உதாரணம்**

(1) தெவ் + கடிது = தெவ்வுக்கடிது

| | | | | |
|---|---|---|---|---|
| | + | மாண்டது | = | தெவ்வுமாண்டது |
| | + | வலிது | = | தெவ்வுவலிது |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| தெவ் | + | கடுமை | = | தெவ்வுக்கடுமை |
| | + | மாட்சி | = | தெவ்வுமாட்சி |
| | + | வலிமை | = | தெவ்வுவலிமை |

எனவும் இருவழியிலும் உகரம் பெற்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) தெவ் | + | மன்னர் | = | தெவ்வுமன்னர், தெம்மன்னர் |

எனவும்,

| | | | | |
|---|---|---|---|---|
| தெவ் | + | முனை | = | தெவ்வுமுனை, தெம்முனை |

எனவும் இருவழியிலும் மகரமெய் வர உகரச்சாரியை பெற்றும், மகார மெய்யாகத் திரிந்தும் புணர்ந்தது.

## மோசகு பொன்னையா

தெவ் என்னும் பெயர் யகரமல்லாத மெய்களொடு புணருமிடத்துத் தொழிற்பெயரே போல் உகரச்சாரியை பெற்று முடியும். வருமொழி முதலில் மகரம் வந்தால் ஈற்று வகர ஒற்று உகரச் சாரியை பெறுதலே யன்றி ஒரோவிடத்து மகரமாகத் திரியவும் பெறும், எ—று.

எ—டு.:—

தெவ்வுக்கடிது, தெவ்வுமாண்டது, தெவ்வுவலிது, — இருவழியும் உகரச்சாரியை பெற்றன.

தெவ்வுமன்னர், தெம்மன்னர், தெவ்வுமுனை, தெம்முனை — இருவழியும் மகரம் வர உகரச் சாரியை பெற்றும், வகரந்திரிந்தும் முடிந்தன.

வகரம் புணர்ச்சியில் மகரமாகத் திரிதற்குத் தொல்காப்பியர் விதி அமைக்கவில்லை. தெம்முனை போன்ற தொடர்களின் வழக்கு நோக்கி நேமிநாத ஆசிரியர், 'வவ்வழிந்து மவ்வாம்' என்று அதற்கு விதியமைத்தார். அவ்வாறே பொதுவிதியமையாது இவ்வாசிரியர் 'தெம்முனை' என்ற தொடருக்குச் சிறப்பு விதியமைத்தார்.

அவ் + முனை — அம்முனை; இவ் + முனை — இம்முனை; உவ் + முனை — உம்முனை; எவ் + முனை — எம்முனை என்று முடியும் தன்மையை நோக்குங்கால் நேமிநாத ஆசிரியரே போல்

பொதுவிதி அமைத்தலே ஏற்புடையது என்று தெரிகிறது. தனிக்குறிலை யடுத்து வகர ஈற்றவாக வரும் இவை, ஆமுனை, ஈமுனை, ஊமுனை, ஏமுனை என ஒற்றுக் கெட்டு முதல் நீண்டு முடிதற்கும் அதனொடு பொருந்த விதியமைத்தல் ஏற்புடையதாம்.

இனி, தொல்காப்பியர் 'வகரக் கிளவி நான்மொழி ஈற்ற' என்றாராக, உரைகாரர் அவ், இவ், உவ், தெவ் என்பனவே அந்நான்கு மொழிகளும் என்றனர். இந்நூற்பாவாலும், இதற்கு முந்திய நூற்பாவாலும் அந்நான்மொழிகளுக்கும் இவ்வாசிரியர் புணர்ச்சி முடிவு கூற முற்பட்டார். இக்காலத்து ஆய்வாளர் எஃகு, கஃசு, வெஃகு, பஃகு என்னும் சொற்களின் விகுதி நீக்கப்பட்ட அடிச்சொல் வடிவங்கள் முறையே, கூர்மை, கவ்வுதல் அல்லது பகுப்பு, விருப்பு அல்லது இன்பம், பரப்பு என்னும் பொருள் கொண்ட எவ், கவ், வெவ், பவ் என்பனவே என்று கருதுகின்றன.

(33)

236. **னலமுன் றனவும் ணளமுன் டணவும்**
**ஆகுந் தநக்க ளாயுங் காலே.**

ன ல முன் ற னவும் ண ள முன் ட ணவும்
ஆகும் த நக்கள் ஆயுங் காலே.

n̲a la mun̲ ṟa n̲avum ṇa ḻa mun̲ ṭa ṇavum
ākum ṭa nakkaḻ āyuṅ kālē.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Change of initial t, n

It is found on examining that the initials t and n are changed (respectively) in to r and n after (the finals) n and l, and into t and n' after (the finals) ñ and l.

## ஒப்புமைப் பகுதி

வன்மை வரினே ளணலன மாண்டறவாம்
மென்மை வரினே ளலணனவாம் – தந்நக்கள்

முன்பின்னாந் தப்பின ணவியல்பாத் தட்டறவா
மொன்றழிந்து போதலு முண்டு

(நேமி.: 17)

ணனமுன் தகரம் டறஆம் முறையே
ணன அல்வழிக்கு என்றும் இயல்பாம்
வேற்றுமைப் பொருட்கு அவை வலிவரின் டறஆம்
ணனமுன் குறில்வழி நகரம் ணன ஆம்
மற்றது ணனமுன் மாய்ந்து கெடுமே

(தொ.வி.: 24)

## மயிலை நாதர்

எ—ன், வருமொழித் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— னகார லகாரங்களின் முன்னர்த் தகார நகாரங்கள் வந்தால் றகார னகாரங்களாம். ணகார ளகாரங்கள் முன்னர்த் தகார நகாரங்கள் வந்தால் டகார ணகாரங்களாம், எ—று.

வ—று.:—

பொன்றீது, பொன்னன்று; கற்றீது, கன்னன்று எனவும், மண்டீது, மண்ணன்று; முட்டீது, முண்ணன்று எனவும் அல்வழிக்கண் வந்தன. பொன்றீமை, பொன்னன்மை; கற்றீமை, கன்னன்மை எனவும், மண்டீமை, மண்ணன்மை; முட்டீமை, முண்ணன்மை எனவும் வேற்றுமைக்கண் வந்தன.

[1] 'ஆயுங்கால்' என்றதனான், நிரனிறை கொள்ளாது நிலைமொழி ஒன்றுடனே வருமொழி யிரண்டும் வருமெனக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், முன்னர்ப் புணர்த்திய வருமொழிக்கு முதலாய மெய்களுள் திரிதற்பாலன இவை என விதந்து உணர் — ற்று.

இ—ள்.:— னகர லகரங்கள் முன்னர் வரும் தகரம் றகரமாம்; அவற்றின் முன்னர் வரும் நகரம் னகரமாம்; ணகர ளகரங்களின் முன்னர் வரும் தகரம் டகரமாம்; அவற்றின் முன்னர் வரும் நகரம் ணகரமாம், ஆராயுங்காலத்து, எ—று.

பாடவேறுபாடு .:—

1. ஆயுங்காலை

உ– ம்.:–

பொன்றீது, கற்றீது, பொன்னன்று, கன்னன்று, மண்டீது, முட்டீது, மண்ணன்று, முண்ணன்று என வரும். தீமை, நன்மை என வருவித்து வேற்றுமைக்கண்ணும் திரியுமாறு காண்க.

ஆயுங்காலே என்றதனான், அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தானன்றி மயக்க விதி யின்மையின் இங்ஙனம் புணரும் முதல் ஈறு இரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகி நின்று புணரும் என்பதூஉம், மயக்க விதி உள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தான் வரும் என்பதூஉம் பெற்றாம்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வருமொழி முதல் வந்த தகர நகர விகாரம் கூறியது.

இ–ள்.:– **ல ன முன்** – லகார னகாரங்கள் முன்னர், **றனவும்** – தகார நகாரங்கள் வந்தால் றவ்வும் னவ்வுமாம், **ண ள முன்** – ணகார ளகாரங்கள் முன்னர், **ட ணவும்** – தகர நகரங்கள் வந்தால் டவ்வும் ணவ்வுமாம், **ஆகுந் தநக்கள்**–என்பதனை இரண்டொடும் கூட்டுக, **ஆயுங்காலே** – ஆராயுமிடத்து, எ–று.

உ–ம்.:–

கற்றீது, பொற்றீது, கன்னன்று, பொன்னன்று எனவும் கற்றீமை, பொற்றீமை, கன்னன்மை, பொன்னன்மை எனவும் இரு வழியும் லன உறழ்ந்த த ந க்கள் வரத் த றவ்வும் ந னவ்வு மாயிற்று. மட்டீது, முட்டீது, மண்ணன்று, முண்ணன்று எனவும் மட்டீமை, முட்டீமை, மண்ணன்மை, முண்ணன்மை எனவும் இருவழியும் த நக்கள் வரத் த டவ்வும் ந ணவ்வும் ஆயிற்று.

## விசாகப் பெருமாளையர்

இது, முன்னே புணர்த்திய வருமொழிகளுக்கு முதலாகிய மெய்களுக்குள்ளே திரிதற்பாலன விவை யென விதந்து உணர்த்துகின்றது.

இ–ள்.:– **னலமுன்** – னகர லகர மெய்களின் முன், **த**–வருகிற தகரம், **ற (வ்வும்)** – றகரமும், **ந** – வருகிற நகரம், **ன வ்வும்** – னகரமும், **ணளமுன்** – ணகர ளகர மெய்களின் முன், **த**– வருகிற தகரம், **டவ்வும்** – டகரமும், **ந** –

வருகிற நகரமும், ணவ்வும்–ணகரமும், ஆகும்–ஆகும், ஆயுங்கால்– ஆராயுமிடத்து, எ–று.

உ–ம்.:–

பொன்+தீது–பொன்றீது, பொன்+தீமை–பொற்றீமை, கல்+தீது–கற்றீது, கல்+நன்று–கன்னன்று, மண்+தீது–மண்தீது, மண்டீது, மண்+நன்று–மண்ணன்று, முள்+தீது–முட்டீது, முள்+நன்று–முண்ணன்று என வரும். (ஆயுங்கா லென்றதனால் மயக்க விதியில்லாமையால் இப்படிப் புணரு முதலீறிரண்டினுள் ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும் மயக்க விதியுள்ளனவற்றிற்கு வருகிற விகாரம், அல்வழி வேற்றுமைப்பொரு ணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வருமொழித் தகரநகரத் திரிபு கூறுஞ் சூத்திரம் யாது?

னலமுன் றனவும் ணளமுன் டணவும்

ஆகுந் தநக்க ளாயுங் காலே.

(ன ல முன் றனவும் ண ள முன் டணவும்

ஆகும் த நக்கள் ஆயுங்காலே)

**இ–ள்.:– ன ல முன் (தநக்கள்) றனவும்** – னகர லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம்; அவற்றின்முன் வரும் நகரம் னகர மாம்; **ணள முன் தநக்கள் டணவும் ஆகும்** – ணகர ளகரங்களின் முன் வருந் தகரம் டகரமாம்; அவற்றின் முன் வரும் நகரம் ணகரமாம்; **ஆயுங்கால்** – ஆராயுமிடத்து, எ–று.

உ–ம்.:–

பொன் – தீது – பொன்றீது, கல் – தீது – கற்றீது, பொன் – நன்று – பொன்னன்று, கல் – நன்று – கன்னன்று எனவும், மண் – தீது – மண்டீது, முள் – தீது – முட்டீது, மண் – நன்று – மண்ணன்று, முள் – நன்று – முண்ணன்று எனவும், அல்வழியிலே திரிந்தன. பொற்றீமை, கற்றீமை; பொன்னன்மை, கன்னன்மை எனவும், மட்டீமை, முட்டீமை, மண்ணன்மை, முண்ணன்மை எனவும், வேற்றுமையிலே திரிந்தன.

ஆயுங்காலே என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக்

கத்தாலன்றி மயக்கவிதியின்மையால் இப்படிப்புணரு முதலீறிரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதி யுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும், பெற்றாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, முன்னே புணர்ந்த வருமொழிக்கு முதலாகிய மெய்களுள்ளே திரித்தற்குரியன இவையென எடுத்துணர்த்துகின்றது.

இ–ள்.:– **னலமுன் றனவும்**–னகர லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம் அவற்றின் முன்வரும் நகரம் னகாரமாம், **ணளமுன் டணவு மாகும்** – ணகர ளகரங்களின் முன்வரும், தகரம் டகரமாம் அவற்றின் முன்வரும் நகரம் ணகரமாம், **ஆயுங்கால்**–ஆராயுமிடத் தென்றவாறு.

உ–ம்.:–

பொன்றீது, கற்றீது, பொன்னன்று, கன்னன்று எனவும், மண்டீது, முட்டீது, மண்ணன்று, முண்ணன்று எனவும், முறையே, ன ல ண ள முன் த நக்கள் அல்வழிச் சந்தியிற் றிரிந்தன.

பொற்றீமை, கற்றீமை, பொன்னன்மை, கன்னன்மை எனவும்; மட்டீமை, முட்டீமை, மண்ணன்மை, முண்ணன்மை, எனவும், வேற்றுமையில் அவ்வாறு திரிந்தன. 'ஆயுங்காலே' யென்றதனால் அல்வழி வேற்றுமைப் பொருளினாலே யன்றி மயக்க விதி யில்லாததினாலே யிங்கே புணருகின்ற முதல் ஈறு இரண்டினுள் ஒன்றாயினும் இரண்டு மாயினும் விகாரப்பட்டுப் புணர்தற்கு உரியனவாய் நின்று புணருமென்பதும், மயக்க விதி யுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருளின் நோக்கத்தால் வருமென்பதும் பெறப்பட்டன.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

**உரை :– ன ல முன்** – னகரலகர மெய்களின்முன், **தநக்கள்** – (வருமொழி முதலில் வருகிற) தகரநகரங்கன், **ற னவும்** – (முறையே) றகர னக்கரங்களாகவும்; **ண ள முன்** – ணகர ளகர மெய்களின்முன் (தகரநகரங்கள்), **டணவும்** – (முறையே) டகரணகரங்களாகவும், **ஆகும்** – **ஆயுங்கால்** – ஆராமிடத்து.

குறிப்பு:–

னகரலகரங்களின் முன் த ற ஆகவும், னகரலகரங்களின் முன் ந ன ஆகவும், ணகரளகரங்களின்முன் த ட ஆகவும், ணகரளகரங்களின் ந ண ஆகவும் திரியுமென்றதாயிற்று.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| பொன் | + தீது | : பொன்றீது – அல்லது | னகரத்தின்முன் தக |
| பொன் | + தீமை | : பொன்றீமை – வேற்றுமை | ரம் றகரமாயிற்று |
| பொன் | + நன்று | : பொன்னன்று – அல்வழி | னகரத்தின்முன்நக |
| பொன் | + நன்மை | : பொன்னன்மை– வேற்றுமை | ரம் னகரமாயிற்று |
| கல் | + தீது | : கற்றீது – அல்வழி | லகரத்தின்முன் தகரம் |
| கல் | + தீமை | : கற்றீமை – வேற்றுமை | றகரமாயிற்று |
| கல் | + நன்று | : கன்னன்று – அல்வழி | லகரத்தின்முன் நகரம் |
| கல் | + நன்மை | : கன்னன்மை– வேற்றுமை | னகரமாயிற்று. |
| மண் | + தீது | : மண்டீது – அல்வழி | ணகரத்தின்முன்நகரம் |
| மண் | + தீமை | : மட்டீமை – வேற்றுமை | டகரமாயிற்று |
| மண் | + நன்று | : மண்ணன்று – அல்வழி | ணகரத்தின்முன்தகரம் |
| மண் | + நன்மை | : மண்ணன்மை – வேற்றுமை | ணகரமாயிற்று |
| முள் | + தீது | : முட்டீது – அல்வழி | ளகரத்தின்முன்தகரம் |
| முள் | + தீமை | : முட்டீமை – வேற்றுமை | டகரமாயிற்று. |
| முள் | + நன்று | : முண்ணன்று – அல்வழி | ளகரத்தின் முன் நகரம் |
| முள் | + நன்மை | : முண்ணன்மை – வேற்றுமை | ணகரமாயிற்று. |

'ஆயுங்காலே' எனறதனால், அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தாலல்லாமல் மயக்கவிதியில்லாமையால் இப்படிப்புணரும் முதல் ஈறு இரண்டனுள், ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிநின்று புணருமென்பதும், மயக்க விதியுள்ளனவற்றிற்குவரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் வரும் என்பதும் பெறப்பட்டன.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: – ன ல முன் (த நக்கள்) ற ன வும் – னகர லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம் அவற்றின் முன் வரும் நகரம் னகரமாம், ண ள முன் த நக்கள் ட ணவும் ஆகும் – ணகர ளகரங்களின் முன் வருந் தகரம் டகரமாம் அவற்றின் முன் வரும் நகரம் ணகரமாம், ஆயுங்கால் – ஆராயுமிடத்து, எ – று.

உ–ம்.: –

பொன் + தீது = பொன்றீது, கல் + தீது = கற்றீது, பொன் + நன்று = பொன்னன்று, கல் + நன்று = கன்னன்று எனவும், மண் + தீது = மண்டீது, முள் + தீது = முட்டீது, மண் + நன்று =

மண்ணன்று, முள் + நன்று = முண்ணன்று எனவும், அல்வழியிலே திரிந்தன. பொற்றீமை, கற்றீமை; பொன்னன்மை, கன்னன்மை எனவும், மட்டீமை, முட்டீமை; மண்ணன்மை, முண்ணன்மை எனவும் வேற்றுமையிலே திரிந்தன.

ஆயுங்காலே என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தாலன்றி மயக்க விதியின்மையால் இப்படிப் புணரு முதலீறிரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்க விதியுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **னலமுன் (தநக்கள்) றனவும்** – னகர லகரங்களின்முன் வருந்தகரம் றகரமாம் அவற்றின்முன் வரும் நகரம் னகரமாம், – **ணளமுன் தநக்கள் டணவும் ஆகும்** – னகர ணகரங்களின்முன் வருந் தகரம் டகரமாம் அவற்றின் முன்வரும் நகரம் ணகரமாம், – **ஆயுங்கால்** – ஆராயுமிடத்து.

**உ–ம்.:–**

பொன் + தீது = பொன்றீது, கல்+தீது = கற்றீது, பொன்+நன்று = பொன்னன்று, கல்+நன்று = கன்னன்று எனவும் மண்+தீது = மண்டீது, முள்+தீது=முட்டீது, மண்+நன்று = மண்ணன்று, முள்+நன்று = முண்ணன்று எனவும் அல்வழியிலே திரிந்தன, பொற்றீமை, கற்றீமை, பொன்னன்மை, கன்னன்மை, எனவும் மட்டீமை, முட்டீமை, முண்ணன்மை, முண்ணன்மை, எனவும் வேற்றுமையிலே திரிந்தன.

ஆயுங்காலேயென்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தாலன்றி மயக்கவிதியின்மையால் இப்படிப் புணருமுதலீறிரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதியுள்ளனவற்றிற்கு விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **ன ல முன்** – னகர லகர மெய்களின்முன், **த நக்கள்** – (வருகிற) தகர நகரங்கள், **ற னவும்** – (முறையே) றகர னகரங்களாகவும்; **ண ள முன்** –

ணகர ளகர மெய்களின்முன் (தகர நகரங்கள்), ட ண வும் (முறையே) டகர ணகரங்களாகவும், ஆகும்– ; ஆயும்கால் – ஆராயுமிடத்து; எ–று.

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும், னகர லகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகவும்; ணகர ளகரங்களின் முன் வருகிற தகரம் டகரமாவும், ணகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியு மென்றபடி.

பொன் + தீது = பொன்றீது – அல்வழி

+தீமை = பொற்றீமை – வேற்றுமை

னகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.

பொன் + நன்று = பொன்னன்று – அல்வழி

னகரத்தின் முன் நகரம் னகர மாயிற்று.

+நன்மை = பொன்னன்மை – வேற்றுமை

கல் + தீது = கற்றீது – அல்வழி

+தீமை = கற்றீமை – வேற்றுமை

லகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று.

கல் + நன்று = கன்னன்று – அல்வழி

+நன்மை = கன்னன்மை – வேற்றுமை

லகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று.

+மண் + தீது = மண்டீது – அல்வழி

+தீமை = மட்டீமை – வேற்றுமை

ணகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.

மண் + நன்று = மண்ணன்று – அல்வழி

நன்மை = மண்ணன்மை – வேற்றுமை

ணகரத்தின் முன் நகரம் ணகரமாயிற்று.

முள் + தீது = முட்டீது – அல்வழி

தீமை = முட்டீமை – வேற்றுமை

ளகரத்தின்முன் தகரம் டகரமாயிற்று.

முள் + நன்று = முண்ணன்று – அல்வழி

நன்மை = முண்ணன்மை – வேற்றுமை

ளகரத்தின் முன் நகரம்றகரமாயிற்று.

'ஆயுங்காலே' என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருள்நோக்கத்தா லல்லாமல் மயக்கவிதி யில்லாமையால்

இப்படிப் புணரும் முதல் ஈறு இரண்டனுள் ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதி யுள்ளனவற்றிற்கு விகாரம் அல்வழி வேற்றுமைப் பொருள்நோக்கத்தால் வருமென்பதும் பெறப்பட்டன.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:– ன ல முன் (த நக்கள்) ற ன வும்–** னகர லகரங்களின் முன் வருந் தகரம் றகரமாம் அவற்றின் முன் வரும் நகரம் னகரமாம்; **ண ள முன் த நக்கள் ட ண வு ம் ஆகும் –** ணகர ளகரங்களின் முன் வருந்தகரம் டகரமாம். அவற்றின் முன் வரும் நகரம் ணகரமாம், **ஆயுங்கால் –** ஆராயுமிடத்து. எ–று.

உ–ம்.:–

பொன் + தீது = பொன்றீது.

கல் + தீது = கற்றீது.

பொன் + நன்று = பொன்னன்று.

கல் + நன்று = கன்னன்று.

மண் + தீது = மண்டீது.

முள் + தீது = முட்டீது.

மண் + நன்று = மண்ணன்று.

முள் + நன்று = முண்ணன்று. – அல்வழியிலே திரிந்தன.

பொன் + தீமை = பொற்றீமை.

கல் + தீமை = கற்றீமை.

பொன் + நன்மை = பொன்னன்மை

கல் + நன்மை = கன்னன்மை

மண் + தீமை = மட்டீமை.

முள் + தீமை = முட்டீமை.

மண் + நன்மை = மண்ணன்மை.

முள் + நன்மை = முண்ணன்மை.

–வேற்றுமையிலே திரிந்தன.

'ஆயுங்காலே' என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தாலன்றி மயக்கவிதியின்மையால் இப்படிப்புணரு முதலீறிரண்டனுள் ஒன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணருமென்பதும், மயக்கவிதியுள்ளனவற்றிற்கு வரும் விகாரம் அவ்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால் வருமென்பதும் பெற்றாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

**இ–ள்.:– ன ல முன்**–னகர லகர மெய்களின்முன், **த நக்கள்** – (வருகிற) தகர நகரங்கள், **ற ன** (உம்) – (முறையே) றகர னகரங்களாகவும், **ண ள முன்** – ணகர ளகரமெய்களின் முன், (**த நக்கள்**)– (வருகிற) தகர நகரங்கள், **ட ணவும்** – (முறையே) டகர ணகரங்களாகவும், **ஆகும்** – ஆகும்; **ஆயுங்கால்** – ஆராயுமிடத்து. எ–று.

**பொ–ரை.:–** ன ல ஆகிய மெய்களின் முன் வரும் தகரமானது றகரம் ஆம்; அவற்றின் பின் வரும் நகரமானது னகரம் ஆம்; ண ள ஆகிய மெய்களின் பின் வரும் தகரமானது டகரம் ஆம்; அவற்றின் பின் வரும் நகரமானது ணகரம் ஆம்; ஆயுங்காலத்தில்.

**உ–ம்.:–**

பொன் + தீது = பொன்றீது. – இருவழியிலும் தநக்கள் திரிந்தன.

பொன் + தீமை = பொற்றீமை.

கல் + தீது = கற்றீது.

கல் + நன்மை = கன்னன்மை.

மண் + தீது = மண்டீது.

மண் + நன்மை = மண்ணன்மை.

முள் + தீது = முட்டீது.

முள் + நன்மை = முண்ணன்மை.

ஆயுங்கால் என்றதனால், அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தாலல்லாமல் மயக்கவிதி இல்லாமையால் இப்படிப்புணகு முதலீறு இரண்டனுள் ஒன்றாவது இரண்டுமாவது விகாரப்பட்டு மயங்குதற்கு உரியனவாகிப் புணரு மென்பதும், மயக்கவிதி உள்ளனவற்றிற்கு வருகிற விகாரம், அல்வழி வேற்றுமைப் பொருணோக்கத்தால்

வருமென்பதும் பெற்றாம். இச் சூத்திரத்தால் வருமொழிமுதலெழுத்தின் திரிபைவிதித்தலால் வருமொழிகளுக்கு முதலாகிய மெய்களுள் திரிதற்பாலன இவையென விதந்து உணர்த்துதல்.

## கா.நமச்சிவாய முதலியார்

**த நக்கள்** – தகர நகரங்கள், **னல முன்** – னகர லகர மெய்களின் முன், **ற ன வும்** – (முறையே) றகர னகரங்களாகவும், **ண ள முன்** – ணகர ளகர மெய்களின்முன், **டணவும் ஆகும்** – (முறையே) டகர ணகரங்களாகவும் ஆகும், **ஆயும் கால்** – ஆராயுமிடத்து.

னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகவும், னகர லகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகவும், ணகர ளகரங்களின் முன் வருகிற தகரம் டகரமாகவும், ணகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகவும் திரியும் என்றபடி.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பொன் | + | தீது | = | பொன்றீது – அல்வழி |
| | + | தீமை | = | பொற்றீமை – வேற்றுமை |

என னகரத்தின்முன் தகரம் றகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| பொன் | + | நன்று | = | பொன்னன்று – அல்வழி |
| | + | நன்மை | = | பொன்னன்மை – வேற்றுமை |

என னகரத்தின்முன் நகரம் னகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | தீது | : | கற்றீது – அல்வழி |
| | + | தீமை | : | கற்றீமை – வேற்றுமை |

என லகரத்தின்முன் தகரம் றகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | நன்று | = | கன்னன்று – அல்வழி |
| | + | நன்மை | = | கன்னன்மை – வேற்றுமை |

என லகரத்தின்முன் நகரம் னகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | + | தீது | = | மண்டீது – அல்வழி |
| | + | தீமை | = | மட்டீமை – வேற்றுமை |

என ணகரத்தின்முன் தகரம் டகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | + | நன்று | = | மண்ணன்று – அல்வழி |
| | + | நன்மை | = | மண்ணன்மை – வேற்றுமை |

என ணகரத்தின்முன் தகரம் ணகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| முள் | + | தீது | = | முட்டீது – அல்வழி |
| | + | தீமை | = | முட்டீமை – வேற்றுமை |

என ளகரத்தின்முன் தகரம் டகரமாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| முள் | + | நன்று | = | முண்ணன்று – அல்வழ |
| | + | நன்மை | = | முண்ணன்மை – வேற்றுமை |

என ளகரத்தின்முன் நகரம் ணகரமாயிற்று.

**'ஆயுங்காலே'** என்றதனால், எழுத்தியலில் கூறிய மயக்க விதியுள்ளவை விகாரப்பட்டுப் புணர்தல், அல்வழி வேற்றுமைப்பொருள் நோக்கத்தால் என்றும்;

மயக்க விதியில்லாதவை விகாரப்பட்டுப் புணர்தல் அல்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தாலன்றி, மயங்குதற்குரிய எழுத்தாதற் பொருட்டால் என்றும் கொள்க.

## மோசகு பொன்னையா

ஆராயுமிடத்து னகர லகரங்கள் முன்னர் வரும் தகர நகரங்கள் முறையே றகர னகரங்களாகவும், ணகர ளகரங்கள் முன்னர் அவை வரின் முறையே டகர ணகரங்களாகவும் ஆகும், எ–று.

எ–டு.:–

பொன்றீது, கற்றீது – னகர லகர முன்னர் தகரம் றகரமாயிற்று

பொன்னன்று, கன்னன்று – னகர லகர முன்னர் நகரம் னகரமாயிற்று

மட்டீது, முட்டீது – ணகர ளகர முன்னர் தகரம் டகரமாயிற்று

மண்ணன்று, முண்ணன்று – ணகர ளகர முன்னர் நகரம் ணகரமாயிற்று. இத்திரிபு மயக்க விதி இன்மையால் நிகழ்வதாகும் ஆதலின், இருவழியும் பொருந்தும், இது வருவொலித்திரிபு; நன்.209 உரை பார்க்க

(33)

## 237. உருபின் [1]முடிப்பவை யொக்கு[2]மப் பொருளினும்.

---

பாடவேறுபாடு .:–

1.முடிபவை

2.மிப்பொருளினும்

உருபின் முடிப்பவை ஒக்கும் அப் பொருளினும்.

urupin mutippavai okkum ap porulinum.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### EXCEPTION

The rules for combination of Case-endings (mentioned in the following chapter) also hold good in those of their meanings.

## மயிலை நாதர்

எ – ன், பதப் புணர்ச்சிக்கு ஒரு [1]கருவி யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்: மேல் உருபு புணர்ச்சிக்கட் சொல்லுமவை,[2]அவ்வுருபின் பொருளான ஈண்டை வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஒக்கும், எ – று.

வ–று.:–

மேல் உருபு புணர்ச்சிக்கண் எல்லா மென்பது அஃறிணை யானகாலை அற்றுச் சாரியையும் உருபின் மேல் உம்மும், உயர்திணையானகாலை நம்மும் உருபின்மேல் [3]உம்முமா மென்பார்; ஈண்டும் அவ்வாறே வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கும், எல்லாவற்றுக்கோடும், எல்லாநங்கையும் எனவும், தான், தாம், நாம் என்பன குறுகுமெனவும், யான், யாம், என்பன என், எம் எனவும், நீயென்பது நின் எனவும் நீரென்பது நும்மெனவும் ஆமென்பார்; ஈண்டும் அவ்வாறே தன்கை, தங்கை, நங்கை எனவும், என்கை, எங்கை எனவும், நின்கை, நுங்கை எனவும், ஆ மா கோ என்பன னகாரம் பெறுமென்பார்; ஈண்டும் அவ்வாறே ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் எனவும், சுட்டு முதல் வகரம் அற்றுச் சாரியை பெறுமென்பார்; ஈண்டும் அவ்வாறே அற்றுப் பெற்று அவற்றுக்கோ டெனவும் வருமென்றா ரென வுணர்க.பிறவும் இவ்வாறே வருவன வெல்லாம் அறிந்து கொணர்ந்து முடிக்க.

---

பாடவேறுபாடு .:–

1.விதி

2.அவ்வுருபுப் பொருளான ஈண்டை

3.உம்முமென்றார்

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், உயிரீற்றுப் புணரியற்கண்ணும் இவ்வியற்கண்ணும் முடிந்த வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி உணர்–ற்று.

இ–ள்.:– மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியும் முடிபுகள் அப்பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஒக்கும், எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றதும், எல்லாவற்றுக்கோடும் என அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற் போலப் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன.

எல்லா நமதும், எல்லா நங்கையும் என உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போலப் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன.

எல்லார் தமதும், எல்லார் தங்கையும்; எல்லீர் நுமதும், எல்லீர் நுங்கையும்; தனது, தன்கை; தமது, தங்கை; நமது, நங்கை; எனது, என்கை, எமது, எங்கை; நினது, நின்கை; நுமது, நுங்கை என உருபு புணர்ச்சி போல் பொருட்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பதப் புணர்ச்சிக்கு ஓர் கருவி கூறியது.

இ–ள்.:– உருபின் முடிபவை – மேல் உருபுப் புணர்ச்சிக்கண் முடிந்த முடிவெல்லாம், ஒக்குமப் பொருளினும் – அவ்வுருபின் பொருளான பதப் புணர்ச்சிக்கண்ணும் ஒக்கும், எ–று.

உ–ம்.:–

தன்னை, தம்மை, நம்மை, தன்பதி, நம்பதி.

## விசாகப் பெருமாளையர்

இது, உயிரீற்றுப் புணரியற்கண்ணும் இவ்வியற்கண்ணும் முடிந்த வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துகின்றது.

இ–ள்.:– உருபின்முடிபவை – மேலுருபு புணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள், அப்பொருளினும் – அப்பொருட் புணர்ச்சிக்கண்ணும், ஒக்கும்–ஒத்து முடியும், எ–று.

**உ–ம்.:–**

எல்லாவற்றதும், எல்லாவற்றுக்கோடும், என அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற் போலப் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லாநமதும், எல்லாநங்கையும், என உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போலப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் பெற்றன. எல்லார்தமதும், எல்லார்தங்கையும், எல்லீர்நுமதும், எல்லீர்நுங்கையும், தனது, தன்கை, தமது, தங்கை, நமது, நங்கை, எனது, என்கை, எமது, எங்கை, நினது, நின்கை, நுமது, நுங்கை, என வுருபுபுணர்ச்சி போற் பொருட்புணர்ச்சியு முடிந்தவாறு காண்க. மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேல்வரும் உருபு புணர்ச்சிக்கண் முடியு முடிபெல்லாம் ஈண்டுப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் வேறுபாடின்றி யொத்து முடியுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்

(உருபின் முடிபவை ஒக்கும் அப்பொருளினும்.)

**இ–ள்.:– உருபின் முடிபவை** – மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியு முடிபுள், **அப்பொருளினும் ஒக்கும்** – அவ்வுருபின் பொருளாகிய வேற்றுமைப் புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும், **எ–று.**

உருபுபுணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பப் புணரும் புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பதுபோல. வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபின் பொருள்படப் புணரும் புணர்ச்சி; உறித்தயிர் என்பதுபோல.

**உ–ம்.: –**

(1)எல்லாவற்றதும் என்பது உருபுபுணர்ச்சி; எல்லாவற்றுக்கோடும் என்பது பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "எல்லா மென்பதிழிதிணை யாயின் அற்றோடுருபின் மேலும் முறுமே" என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபு புணர்ச்சிக்கு அஃறிணைக்கண் ஆற்றும் உருபின்மேல் உம் மும் பெற்றாற்போல எல்லாவற்றுக்கோடும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும்

பெற்றன. எல்லாநமதும் என்பதும் உருபுபுணர்ச்சி; எல்லாநங்கையும் என்பது பொருட்புணர்ச்சி, "அன்றேனம்மிடை யடைந்தற்றாகும்" என்ற விதிப்படி எல்லா நமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, எல்லா நங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன.

(2) எல்லார் தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபுபுணர்ச்சி; எல்லார்தங்கையும், எல்லீர்நுங்கையும் என்பன பொருட்புணர்ச்சி, மேல் உருபுபுணரியலில் "எல்லாரு மெல்லீரு மென்பவற்றும்மை – தள்ளி நிரலே தம் நும் சாரப் – புல்லு முருபின் பின்னரும்மே" என்ற விதிப்படி எல்லார்தமதும் எல்லீர்நுமதும் என்னும் உருபு புணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச்சாரியையும் நும்முச்சாரியையும் வந்து பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றுமைகள் உருபுகளின் பின்னே வந்து புணர்ந்தாற்போல, எல்லார்தங்கையும் எல்லீர்நுங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் முடிந்தன.

(3) தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபு புணரியலில் "தான்றா நாமுதல் குறுகும்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம் என்பன முறையே தன் தம் நம் என விகாரப்பட்டாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எமது, நினது, நுமது என்பன உருபுபுணர்ச்சி; என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி; "யான், யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப் பட்டாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(4) ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி; ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு னகரச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(5) அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன

பொருட்புணர்ச்சி, மேல் உருபு புணரியலில் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(6) அதனது, இதனது, உதனது என்பன உருபுணர்ச்சி, அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "சுட்டின்முன்னாய்த மன்வரிற் கெடுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அன்சாரியைப்பேறும் ஆய்தக்கேடும் வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவைபோல்வன பிறவும் இப்படியே முடித்துக்கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரீற்றுப் புணரியலிலும் இந்த வியலிலும் முடிந்த வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி யுணர்த்துகின்றது.

இ–ள்.:– உருபின் முடிபவை–மேலுருபுப் புணர்ச்சியிலே முடியு முடிபுகள், ஒக்குமப் பொருளினும் – அவற்றின் பொருட்புணர்ச்சியிலும் ஒக்கும், எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றதும் என உருபுப்புணர்ச்சிக்கு அஃறிணையில் அற்றும், உருபின்மேல் உம்மும் வந்தாற்போல, எல்லாவற்றுக்கோடும் எனப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது. எல்லாநமதும் என உயர்திணையில் நம்மும், உருபின்மேல் உம்மும் வந்தாற்போல, எல்லா நங்கையும் எனப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது. எல்லார்தமதும், எல்லார்தங்கையும், எல்லீர்நுமதும், எல்லீர்நுங்கையும், தனது, தன்கை, தமது, தங்கை, நமது, நங்கை, எனது, என்கை, எமது, எங்கை, நினது, நின்கை, நுமது, நுங்கை என வுருபுப்புணர்ச்சி போற்பொருட்புணர்ச்சியு முடிந்தவாறு கண்டு கொள்க. பிறவுமிப்படியே காண்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– உருபின் முடிபவை – மேல் உருபு புணர்ச்சியில் முடியும் முடிபுகள், அ பொருளினும் – (அவ்வுருபுகள் தொக்குநின்று) அப்பொருள் தோன்றப்புணரும் பதப்புணர்ச்சியிலும், ஒக்கும் – ஒத்து முடியும்.

உ–ம் :–

எல்லாவற்றதும் – உருபுபுணர்ச்சி.
எல்லாவற்றுக்கோடும் – வேற்றுமைப்பொருட்புணர்ச்சி.

(உருபுபுணர்ச்சியில் அஃறிணையில் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல், உருபுதொக்க பொருட்புணர்ச்சியிலும் பெற்றன).

எல்லாநமதும் – உருபுபுணர்ச்சி
எல்லாநங்கையும் – வேற்றுமைப்பொருட்புணர்ச்சி.

(உருபுபுணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல உருபுதொக்க பொருட்புணர்ச்சியிலும் பெற்றன).

குறிப்பு :–

'எல்லார்தமதும்', 'எல்லார்நங்கையும்'; 'எல்லீர்நுமதும்', 'எல்லீர்நுங்கையும்'; 'தனது', 'தன்கை'; 'ஆனது', 'ஆன்கோடு', 'அவற்றுள்', 'அவற்று', 'அவற்றுக்கோடு'; 'அதனது', 'அதன்கோடு' என உருபுபுனர்ச்சிப் போலப் பொருட்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க.

இவ்விரண்டாகக் காட்டியவற்றுள் தனித்தனியே முன்னது வேற்றுமை யுருபு விரிந்து நிற்க அதனோடும் புணரும் உருபு புணர்ச்சி யென்றும், பின்னது வேற்றுமையுருபு தொக்குநின்று அவ்வுருபின் பொருள் தோன்றப் பதத்தோடு புணரும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சி யென்றும் அறிக. இச்சூத்திரத்தால் மேலிபவலுக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– உருபின் முடிபவை – மேல் உருபு புணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள், அப்பொருளினும் ஒக்கும் – அவ்வுருபின் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும், எ– று.

உருபு புணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பப் புணரும் புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பது போல. வேற்றமைப் பொருட்புணர்ச்சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபினது பொருள்படப் புணரும் புணர்ச்சி; உறித்தயிர் என்பது போல.

உ–ம்.:–

(1)எல்லாவற்றதும் என்பது உருபுபுணர்ச்சி, எல்லா வற்றுக்கோடும் என்பது பொருட்புணர்ச்சி. மேல் உருபு

புணரியலில் "எல்லாமென்ப திழிதிணையாயின் அற்றோடுருபின் மேலும் முறுமே" என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபு புணர்ச்சிக்கு அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற் போல எல்லாவற்றுக்கோடும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லா நமதும் என்பது உருபுபுணர்ச்சி; எல்லாநங்கையும் என்பது பொருட் புணர்ச்சி. "அன்றே னம்மிடை யடைந்தற்றாகும்" என்ற விதிப்படி எல்லா நமதும் என்னும் உருபு புணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, எல்லா நங்கையும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன.

(2) எல்லார்தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபுபுணர்ச்சி; எல்லார்தங்கையும் எல்லீர் நுங்கையும் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை–தள்ளி நிரலேதம் நும் சாரப்–புல்லு முருபின் பின்ன ரும்மே" என்ற விதிப்படி எல்லார் தமதும் எல்லீர் நுமதும் என்னும் உருபு புணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச் சாரியையும் நும்முச் சாரியையும் வந்து பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து புணர்ந்தாற் போல, எல்லார்தங்கையும் எல்லீர் நுங்கையும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் முடிந்தன.

(3) தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை, தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "தான்றா நாமுதல் குறுகும்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம் என்பன முறையே தன் தம் நம் என விகாரப்பட்டாற் போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எமது, நினது, நுமது என்பன உருபுபுணர்ச்சி; என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி. "யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப்பட்டாற் போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(4) ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி; ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு

னகரச் சாரியை வந்தாற் போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(5) அவற்றது. இவற்றது. உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு உவற்றுக்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அற்றுச் சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(6) அதனது, இதனது, உதனது என்பன உருபுபுணர்ச்சி; அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "சுட்டின் முன்னாய்த மன்வரிற்கெடுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அன்சாரியைப் பேறும் ஆய்தக்கேடும் வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவை போல்வன பிறவும் இப்படியே முடித்துக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– உருபின் முடிபவை – மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியு முடிபுகள், – அப்பொருளினும் ஒக்கும் – அவ்வுருபின் பொருட்புணர்ச்சிக் கண்ணும் ஒத்து முடியும், எ–று.

உருபு புணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டுப் புணரும் புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பது போல. வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபினது பொருள்படப் புணரும் புணர்ச்சி, உறித்தயிர் என்பது போல.

உ–ம்.:–

(1) எல்லாவற்றதும் என்பது உருபுபுணர்ச்சி, எல்லாவற்றுக்கோடும் என்பது பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணிரியலில் "எல்லாமென்பதிழிதிணையாயின் அற்றோடுருபின் மேலும் முறுமே" என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபுபுணர்ச்சிக்கு அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல எல்லாவற்றுக்கோடும் என்னும்பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லா நமதும் என்பது உருபுபுணர்ச்சி; எல்லாநங்கையும் என்பது பொருட்புணர்ச்சி "அன்றேனம்மிடையடைந்தற்றாகும்" என்ற விதிப்பு எல்லாநமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு உயர்திணைக்கண்

நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல, எல்லாநங்கையும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன.

(உ) எல்லார்தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபுபுணர்ச்சி; எல்லார்தங்கையும் எல்லீர்நுங்கையும் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணிரியலில் "எல்லாருமெல்லீருமென்பவற்றும்மை, தள்ளிநிரலேதம் நும்சாரப், புல்லுமுருபின் பின்னரும்மே" என்ற விதிப்படி எல்லார்தமதும் எல்லீர்நுமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம்முச் சாரியையும் நும்முச்சாரியையும் பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின் பின்னே வந்து புணர்ந்தாற்போல, எல்லாநங்கையும் எல்லீர்நுங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் முடிந்தன.

(ங) தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை, தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "தான்றாநாமுதல் குறுகும்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம் என்பன முறையே தன் தம் நம் எனவிகாரப்பட்டாற் போலப் பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எமது, நினது, நுமது என்பன. உருபுபுணர்ச்சி, என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி; "யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு யான் யாம் நீ நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப் பட்டாற் போலப் பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(ச) ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி, ஆன்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "ஆமாகோனவ்வனையவும் பெறுமே" என்றவிதிப்படி உருபுபுணர்ச்சிக்கு னகரச்சாரியை வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(ரு) அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "வவ்விறுசுட்டிற்கற்றுறல்வழியே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அற்றுச் சாரியை வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(சு) அதனது, இதனது, உதனது என்பன உருபுபுணர்ச்சி; அதன் கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி; மேல் உருபுபுணரியலில் "சுட்டின் முன்னாய்தமன்வரிற் கெடுமே" என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அன்சாரியைப் பேறும் ஆய்தக் கேடும் வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவை போல்வன பிறவும் இப்படியே முடித்துக் கொள்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– உருபின் முடிபவை – மேல் உருபுபுணரியலில் உருபுபுணர்ச்சியிலே முடியும் முடிபுகள், அப் பொருளினும்–அவ்வுருபுகள் தொக்குநின்று அப்பொருள் தோன்றப் புணரும் பதப்புணர்ச்சியிலும், ஒக்கும் – ஒத்துமுடியும்; எ–று.

உ–ம்.:–

எல்லாவற்றதும்–உருபுபுணர்ச்சி.

எல்லாவற்றுக்கோடும்–வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.

(எல்லாவற்று – எல்லா மிருகங்களினுடையவும் கோடும் – கொம்புகளும் என்க.)

உருபுபுணர்ச்சியில் அஃறிணையில் அற்றும் உருபின்மேல் உம்மும் பெறுதல்போல, உருபுதொக்க பதப்புணர்ச்சியிலும் பெற்றன. (245 – ஆம் சூத்திரம்.)

உருபுபுணர்ச்சியாவது – வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்கப் புணரும் புணர்ச்சி; மரத்திற்கிளை என்பது போல. வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது, வேற்றுமையுருபு தொக்கு நிற்க அவ்வுருபின் பொருளமைபப் புணரும் புணர்ச்சி; மரக்கிளை என்பது போல.

எல்லாநமதும்–உருபுபுணர்ச்சி

எல்லாநங்கையும்–வேற்றுமைப் பொருட்புணர்ச்சி

உருபுபுணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் பெறுதல்போல, உருபுதொக்க பதப்புணர்ச்சியிலும் பெற்றன.

எல்லார்தமதும், எல்லார்தங்கையும்; எல்லீர்நுமதும்; எல்லீர்நுங்கையும்; தனது, தன்கை; ஆனது, ஆன்கோடு; அவற்றது, அவற்றுக்கோடு; அதனது, அதன்கோடு என உருபுபுணர்ச்சி போலப் பதப்புணர்ச்சியும் முடிந்தவாறு காண்க. இவற்றில், முன்னது உருபுபுணர்ச்சி; பின்னது பதப்புணர்ச்சி.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–உருபின் முடிபவை –** மேல் உருபுபுணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள், **அப்பொருளினும் ஒக்கும் –** அவ்வுருபின் பொருட்புணர்ச்சிக்கண்ணும் ஒத்து முடியும். **எ–று.**

உருபுபுணர்ச்சியாவது வேற்றுமையுருபு வெளிப்பட்டு நிற்பப்புணரும் புணர்ச்சி; உறிக்கட்டயிர் என்பதுபோல. வேற்றுமைப்பொருட் புணர்ச்சியாவது வேற்றுமையுருபின்றி அவ்வுருபினது பொருள்படப் புணரும் புணர்ச்சி; உறித்தயிர் என்பதுபோல்.

உ–ம்.:–

**(1)**எல்லாவற்றதும் என்பது உருபு புணர்ச்சி; எல்லா வற்றுக்கோடும் என்பது பொருட்புணர்ச்சி ('எல்லாவற்றதும்' என்பதில் 'அது' என்னும் உருவு வெளிப்பட்டு நிற்றலும் 'எல்லாவற்றுக்கோடும் என்பதில் மறைந்து நிற்றலும் காண்க. கோடு – கொம்பு.) மேல் உருபு புணரியலில் "எல்லாமென்பதிழிதிணையாயின் அற்றோடுருபின் மேலும் முறுமே" (சூ–245) என்ற விதிப்படி எல்லாவற்றதும் என்ற உருபுபுணர்ச்சிக்கு அஃறிணைக்கண் அற்றும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல எல்லாவற்றுக்கோடும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லா நமதும் என்பது உருபுபுணர்ச்சி (உருபு–அது); எல்லாநங்கையும் என்பது பொருட்புணர்ச்சி. "அன்றே னம்மிடை யடைந்தற்றாகும்" (சூ–245) என்ற விதிப்படி எல்லா நமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு உயர்திணைக்கண் நம்மும் உருபின்மேல் உம்மும் பெற்றாற்போல், எல்லாநங்கையும் என்னும் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன.

**(2)**எல்லார்தமதும், எல்லீர்நுமதும் என்பன உருபு புணர்ச்சி; எல்லார் தங்கையும், எல்லீர்நுங்கையும் – என்பன பொருட்புணர்ச்சி. (ஈரிடத்திலும் 'தம்' 'நும்' என்பன சாரியை). மேல் உருபுபுணரியலில் "எல்லாரு மெல்லீரு மென்பவற்றும்மை

– தள்ளி நிரலே தம் சாரப் – புல்லு முருபின் பின்ன ரும்மே" (சூ–246) என்ற விதிப்படி எல்லார் தமதும் எல்லீர் நுமதும் என்னும் உருபுபுணர்ச்சிக்கு எல்லாரும் எல்லீரும் என்பவைகளின் இறுதியிலுள்ள முற்றும்மைகளைத் தள்ளி முறையே தம் முச்சாரியையும் நும்முச்சாரியையும் வந்து பொருந்த அவைகளினாலே தள்ளுண்ட முற்றும்மைகள் உருபுகளின்பின்னே வந்து புணர்ந்தாற்போல, எல்லார் தங்கையும் எல்லீர்நுங்கையும் என்னும் பொருட்புணர்ச்சிக்கும் முடிந்தன.

(3)தனது, தமது, நமது என்பன உருபுபுணர்ச்சி; தன்கை, தங்கை, நங்கை என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபு புணரியலில் "தான்றா நாமுதல் குறுகும்" (சூ–247) என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்குத் தான் தாம் நாம் என்பன முறையே தன் நம் நம் என விகாரப்பட்டாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் விகாரப்பட்டன. எனது, எனது, நினது, நுமது என்பன உருபுபுணர்ச்சி; என்கை, எங்கை, நின்கை, நுங்கை என்பன பொருட்புணர்ச்சி. "யான் யாம் நீ நீர் என் எம் நின் நும் ஆம்" (சூ – 247) என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு யான் யாம் நீர் நீர் என்பன முறையே என் எம் நின் நும் என விகாரப் பட்டாற்போலப், பொரடபுணர்ச்சிக்கும் விகாரப்பட்டன.

(4)ஆனது, மானது, கோனது என்பன உருபுபுணர்ச்சி; ஆண்கோடு, மான்கோடு, கோன்குணம் என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "ஆமாகோனவ் வணையவும் பெறுமே" (சூ–248) என்ற விதிப்படி உருபு புணர்ச்சிக்கு னகரச்சாரியை வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(5)அவற்றது, இவற்றது, உவற்றது என்பன உருபுபுணர்ச்சி; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே" (சூ–250) என்ற விதிப்படி உருபுபுணர்ச்சிக்கு அற்றுச்சாரியை வந்தாற்போலப் பொருட்புணர்ச்சிக்கும் வந்தது.

(6)அதனது, இதனது, உதனது என்பன உருபுபுணர்ச்சி; அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு என்பன பொருட்புணர்ச்சி. மேல் உருபுபுணரியலில் "சுட்டின் முன்னாய்த் மன்வரிற் கெடுமே" (சூ–251) என்ற விதிப்படி உருபு

புணர்ச்சிக்கு அன்சாரியைப் பேறும் ஆய்தக்கேடும் வந்தாற்போலப், பொருட்புணர்ச்சிக்கும் வந்தன.

இவைபோல்வன பிறவும் இப்படியே முடித்துக்கொள்க.

## கா.நமச்சிவாய முதலியார்

**உருபின் முடிபவை** – மேல் உருபு புணர்ச்சியில் முடியும் முடிபுகள், **அப் பொருளினும்** – அப் பொருட்புணர்ச்சியிலும், **ஒக்கும்** – ஒத்து முடியும்.

**உதாரணம்**

எல்லாவற்றதும் – உருபுபுணர்ச்சி.

**எல்லாவற்றுக்கோடும்** – வேற்றுமைப் பொருட் புணர்ச்சி. என உருபு புணர்ச்சியில் அஃறிணையில் அற்றும் உருபின்மேல் உம்மும் வருவதுபோல, உருபு தொக்க பொருட் புணர்ச்சியிலும் வந்தன.

எல்லா நமதும் – உருபுபுணர்ச்சி.

எல்லா நங்கையும் – வேற்றுமைப் பொருட் புணர்ச்சி.

என உருபு புணர்ச்சியில் உயர்திணையில் நம்மும் உருபின்மேல் உம்மும் வருவதுபோல, உருபு தொக்க பொருட் புணர்ச்சியிலும் வந்தன.

| உருபுபுணர்ச்சி | வேற்றுமைப் பொருட்புணர்ச்சி |
|---|---|
| எல்லார்தமதும் | எல்லார் தங்கையும் |
| எல்லீர் நுமதும் | எல்லீர் நுங்கையும் |
| தனது | தன்கை |
| நமது | நங்கை |
| ஆனது | ஆன்கோடு |
| அவற்றது | அவற்றுக்கோடு |
| அதனது | அதன்கோடு |

என உருபுபுணர்ச்சி போலப் பொருட்புணர்ச்சியும் சாரியை ஏற்றும், தான் முதலியன விகாரப்பட்டும் முடிந்தவாறு காண்க.

உருபு புணர்ச்சியாவது, வேற்றுமை யுருபு வெளிப்படையாக நின்று புணர்வது, உறிக்கட்டயிர் என்பதுபோல.

வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாவது, வேற்றுமை யுருபின்றி அதன் பொருள் அமையப் புணர்வது, உறித்தயிர் என்பது போல.

இச்சூத்திரம் உருபியலே நோக்கி எழுந்தது.

## மோசசு பொன்னையா

வரும் இயலில் உருபு புணர்ச்சிக்கண் முடிக்கப்படும் முடிபுகள் பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஒத்த முடியும், எ-று.

உருபு புணர்ச்சி என்பது வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்கப் புணரும் புணர்ச்சி; பொருட்புணர்ச்சி என்பது வேற்றுமை உருபு வெளிப்படாமல் தொக்கு நிற்க, வேற்றுமைப் பொருளில் புணரும் புணர்ச்சியாகும்.

எ-டு.:-

1. எல்லாவற்றதும் - உருபு புணர்ச்சி

எல்லாவற்றுக்கோடு - பொருட் புணர்ச்சி

இழிதிணையில் வரும் எல்லாம் என்னும் சொல்லோடு உருபுகள் புணருங்கால் உருபின் முன்னர் அற்றும் பின்னர் உம்மும் சாரியைகளாக வரும் என்ற உருபு புணர்ச்சி விதிப்படியே எல்லாம் என்பதனோடு கோடு என்னுஞ்சொல் புணர்ந்து பொருட் புணர்ச்சியிலும் அவ்விரு சாரியைகளும் அவ்வாறே வந்தன.

2. எல்லா நமதும் - உருபு புணர்ச்சி

எல்லா நங்கையும் - பொருட் புணர்ச்சி

அது உருபு பெற்ற நம் உம் என்ற இரு சாரியைகளையும் கை என்னுஞ் சொல்லும் பெற்றது.

3. எல்லார் தமதும் - உருபு புணர்ச்சி

எல்லார் தங்கையும் - பொருட் புணர்ச்சி

அது உருபு பெற்ற தம்மையும் உம்மையும் கையும் பெற்றது.

4. எல்லீர் நுமதும் - உருபு புணர்ச்சி

எல்லீர் நுங்கையும் - பொருட் புணர்ச்சி

அது உருபு பெற்ற நும்மையும் உம்மையும் கையும் பெற்றது.

5. தனது - உருபு புணர்ச்சி

தன் கை - பொருட் புணர்ச்சி

உருபேற்கக் குறுகிய தான் கை என்னுஞ் சொல்லை ஏற்கவும் குறுகிற்று.

6. ஆனது – உருபு புணர்ச்சி

ஆன்கோடு – பொருட் புணர்ச்சி

உருபேற்க அணைந்த னகரம் கோடு என்னும் பெயரை ஏற்கவும் அணைந்தது.

7. அவற்றது – உருபு புணர்ச்சி

அவற்றுக்கோடு – பொருட் புணர்ச்சி

உருபேற்க வந்த அற்றுச் சாரியை, கோடு என்னும் பெயரை ஏற்கவும் வந்தது.

8. அதனது – உருபு புணர்ச்சி

அதன் கோடு – பொருட் புணர்ச்சி

உருபேற்கக் கெட்ட ஆய்தமும் வந்து தோன்றிய அன்னும் கோடு என்னும் பெயரை ஏற்கவும் அவ்வாறே ஆயின.

(35)

238. **இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்**
**போலியு[1] மருவும் பொருந்திய வாற்றிற்**
**கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.**

இடை உரி வட சொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் உருவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

itai uri vata solin̲ iyampiya kol̲āṭavum
pōliyum uruvum poruntiya āṟṟiṟku
iyaiyap puṇarttal yāvarkku neṟiyē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Exception to the chapter on combination

It is the duty of all (learned men) to follow carefully the (poetical and prose). Usages as regards the combination of all those par-

பாடவேறுபாடு :-

1. மரூஉவும்

ticles, qualifying words, and Sanskrit derivatives, to which the rules laid down above are not applicable, as well as those of anomalies and corruptions.

## மயிலை நாதர்

**எ–ன்,** [1]இவ்வைவகை மொழிகட்கும் ஆவதோர் விதி யுணர்த்துதல் நுதலிற்று.

**இ–ள்.:–** இடைச் சொல்லினும் உரிச் சொல்லினும் வட சொல்லினும் மேலை உயிரீறும் ஒற்றீறுமான புணரியலோத்துக்களில் தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பென ஓதிய புணர்ச்சி யிலக்கணங்களில் மாறுபட்டு வருவனவும் இலக்கணப்போலி மொழிகளும் மரூஉ மொழிகளும் இருவகை வழக்கின் கண்ணும் நடக்கும் முறைமையை யறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்க்கை [2]கற்றுவல்லோ ரெல்லார்க்கும் கடன், எ–று.

**வ–று.:–**

ஆன்கன்று [3]மான்றலை, கோன்குணம், வண்டின்கால், நாயின்கால், தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைக்கண் சாரியை யிடைச் சொற்கள் இயல்பாயின. தடந்தோள் என அகர வீற்று உரிச்சொல் மெல்லெழுத்து மிக்கது. மழகளிறு, உறுகாலொற்ற என உரிச்சொல் இயல்பாயின. அளிகுலம், வயிரகடகம், தூமகண்ணன், கனகசாதி, கமலபாதம், தனதடம் என வடசொல் இயல்பாயின. இல்முன் முன்றில், படைமுன் முன்படை, கண்மீ மீகண், பொதுவில் பொதியில், வேட்கைநீர் வேணீர், வேட்கை அவா வேணவா, பின் பின்றை என்றற் றொடக்கத்துப் போலிமொழிகளும், அருமருந்தன்னான் அருமந்தான், கிழங்கன்ன பழஞ்சோறு கிழங்கம் பழஞ்சோறு, குணக்குள்ளது குணாது; தெற்குள்ளது தெனாது, குடபாலது குடாது, வடக்கண்ணது வடாது, சோழனாடு சோணாடு, பாண்டியனாடு பாண்டிநாடு, மலையமானாடு மலாடு, தஞ்சாவூர் தஞ்சை, பனையூர் பனைசை, [4]சேந்தமங்கலம் சேந்தை,

---

பாட வேறுபாடு .:–

1. எவ்வகை
2. கற்றோர்
3. மான்கன்று
4. சேந்தைமங்கலம் சேந்தை; செந்தமிழ்மங்கலம் செந்தை

ஆற்றூர் ஆறை, ஆதன்றந்தை ஆந்தை, பூதன்றந்தை பூந்தை, வடுகன்றந்தை வடுகந்தை என்றற் றொடக்கத்து மரூஉமொழிகளும், [5]நிலைமொழி வருமொழிகளில் ஏற்குஞ் செய்கையறிந்து முடிக்க.

இவற்றுள், அருமந்தான் முதலானவற்றை வலித்தல் முதலான விகாரங்களான் அமைக்கவென்பாரும், ஆந்தை முதலானவற்றை இலக்கண மொழிகளாக [6]வேறெடுத்து முடிப்பாரும் உளர்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இப் புணரியல்கட்கு ஆவதோர் புறனடை உணர்–ற்று.

இ–ள்.:– இடைச்சொல்லினும் உரிச்சொல்லினும் வடசொல்லினும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலில் தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பு என ஓதிய புணர்ச்சி யிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், இலக்கணப்போலி மொழிகளும், மரூஉ மொழிகளும், இருவகை வழக்கினும் நடக்கும் முறைமை அறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்க்கை அறிவுடையோ ரெல்லார்க்கும் முறைமை, எ–று.

ஆன் கன்று, வண்டின் கால் என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் சாரியை இடைச்சொல் திரியாது இயல்பாயின. மழகளிறு, தடந்தோள் என அகர ஈற்று உரிச்சொல் முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன. அளிகுலம், தனதடம் என இயல்பீறும் விதியீறுமான உயிரீற்று வடசொல் முன் வல்லெழுத்து மிகாது இயல்பாயின. இல்முன் முன்றில், பொதுஇல் பொதியில் என இலக்கணப்போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை அருமந்தபிள்ளை, குணக்குள்ளது குணாது, தெற்குள்ளது தெனாது, வடக்குள்ளது வடாது, சோழநாடு சோணாடு, பாண்டியநாடு பாண்டிநாடு, மலையமானாடு மலாடு, தஞ்சாவூர் தஞ்சை, ஆற்றூர் ஆறை, ஆதன்றந்தை ஆந்தை, பூதன்றந்தை பூந்தை, வடுகன்றந்தை வடுகந்தை என மரூஉமொழிகளும் நிலைமொழி வருமொழிகளுள் ஏற்கும் செய்கையறிந்து முடிக்க. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எவ்வகை மொழிக்கும் ஆவதோர் விதி கூறியது.

இ–ள்.: இடையுரி வடசொலின் – இடைச்சொல்லினும், உரிச்சொல்

லினும் வட சொல்லினும், **இயம்பிய கொளாதவும்** – மேல் ஓதிய புணர்ச்சி விதி கொள்ளாது மாறுபட்டு வருவனவும், **போலியும் மரூஉவும்** – இலக்கணப் போலியும் மரூஉ மொழியும் இரு வகை வழக்கின் நடக்கும் முறைமை அறிந்து, **பொருந்தியவாற்றிற்கு** – அவற்றவற்றிற்குப் பொருந்து முறைமையாக, **இயையப் புணர்த்தல்** – பொருந்தும்படிக்குப் புணர்ப்பது, **யாவர்க்கு நெறியே** – கற்றோர் எல்லார்க்கும் கடனாகும், **எ–று.**

## விசாகப் பெருமாளையர்

இது, இப்புணரியல்களுக்கானதோர் புறனடை யுணர்த்துகின்றது,

**இ–ள்.:–** **இடை (ச்சொல்லின்)** – இடைச்சொற்களுள்ளும், **உரி (ச்சொல்லின்)**–உரிச்சொற்களுள்ளும், **வடசொலின்** – வடசொற்களுள்ளும், **இயம்பிய** – உயிரீறு மொற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச் சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்களுள், **கொளாதவும்** – பொருந்தாது வேறுபட்டு வருவனவும், **போலியும்** – இலக்கணப் போலி மொழிகளும், **மரூஉம்** – மரூஉ மொழிகளும், **பொருந்திய** – இருவகை வழக்கிலு நடக்கின்ற, **ஆற்றிற்கு** – முறைமைக்கு, **இயைய**–பொருந்துமாறு, **புணர்த்தல்** – புணர்க்கை, **யாவர்க்கும்** – அறிவுடையோ ரெல்லாருக்கும், **நெறி** – முறை, எ – று.

**உ–ம்.:–**

ஆன்கன்று, வண்டின்கால், என வேற்றுமைப் புணர்ச்சிக்கட் சாரியை யிடைச்சொற்கள் திரியா தியல்பாயின. மழகளிறு, தடந்தோள், என அகர வீற்று உரிச்சொற்களின் முன் வல்லெழுத்து மிகா தியல்பாகியும், மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன. அளிகுலம், தனதடம், ஆதிபகவன், நிலைமொழி வருமொழி யிரண்டும் வடமொழியாகிய காலத்து உயிரீற்றின் முன் வல்லெழுத்து மிகா தியல்பாயின. இன்னும், நிலைமொழி வருமொழிகளுள் வடநூலுட் புணர்க்கப்பட்டபடியே சிறுபான்மை தமிழில் வந்து வழங்குகின்ற தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, முதலாயினவுங் கொள்க. அவற்றுட் சில வருமாறு, அ–ஆக்களி லொன்றன் முன் அவ் விரண்டிலொன்று வந்தால் ஆவும், இ–ஈக்களி லொன்றன் முன் அவ் விரண்டி லொன்று வந்தால் ஈயும், உ–ஊக்களிலொன்றன் முன் அவ் விரண்டிலொன்று வந்தால் ஊவும், முறையே அந் நிலைமொழியீறும் வருமொழிமுதலுங் கெடத் தோன்றுதல் தீர்க்கசந்தியாம்.

வரலாறு.:–

பத+அம்புயம்–பதாம்புயம், பரம்+ஆனந்தம்–பரமானந்தம், கங்கா+அமிர்தம்–கங்காமிர்தம், சதா+ஆனந்தம்–சதானந்தம் எனவும், சுசி+இந்திரம்–சுசீந்திரம், கிரி+ஈசன்–கிரீசன், மகீ+இந்திரன்–மகீந்திரன், மகீ+ஈசன்–மகீசன் எனவும், குரு+உதயம்–குரூதயம், தரு+ஊனம்–தரூனம், சுயம்பூ+உபதேசம்–சுயம்பூபதேசம், சுயம்பூ+ஊர்ச்சிதம்–சுயம்பூர்ச்சிதம் எனவும் வரும்.

அ–ஆக்களிலொன்றன் முன், இ–ஈக்களி லொன்று வந்தால் ஏயும், அவ்விரண்டி லொன்றன் முன், உ– ஊக்களி லொன்று வந்தால் ஓவும், முறையே அந்நிலைமொழி யீறும் வருமொழி முதலுங் கெடத் தோன்றுதல் குணசந்தியாம்.

வரலாறு.:–

நர+ இந்திரன்–நரேந்திரன், சுர+ஈசன்–சுரேசன், தரா+இந்திரன்–தரேந்திரன், உமா+ஈசன்–உமேசன் எனவும், பாத+உதகம்–பாதோதகம், ஞான+ஊர்ச்சிதன்–ஞானோர்ச்சிதன், தயா+உற்பத்தி–தயோற்பத்தி, தயா+ஊர்ச்சிதன்–தயோர்ச்சிதன் எனவும் வரும்.

அ–ஆக்களி லொன்றன் முன் ஏ–ஐக்களி லொன்று வந்தால் ஐயும், அவ் விரண்டி லொன்றன் முன் ஒ–ஔக்காளி லொன்று வந்தால் ஔவும், முறையே அந் நிலைமொழி யீறும் வருமொழி முதலுங் கெடத் தோன்றுதல் விருத்தி சந்தியாம்.

வரலாறு.:–

சிவ+ஏகம்–சிவைகம், சிவ+ஐக்கியம்–சிவைக்கியம், தரா+ஏகவீரன்– தரைகவீரன், மகா+ஐசுவரியம்–மகைசுவரியம் எனவும், கோமள–ஓடதி–கோமளௌடதி, திவ்விய+ஔடதம்–திவ்வியௌடதம், மகா+ஓடதி – மகௌடதி, மகா+ஔடதம்–மகௌடதம் எனவும், வரும்.

ஒருமொழி யுள்ளே மொழிக்கு முன்னே நின்ற இ ஈ ஏக்கள் ஐயாகவும், உ ஊ ஓக்கள் ஔவாகவும், அகரம் ஆகாரமாகவும் ஏழாமுயிர் ஆர் ஆகவுந் திரிந்து வருதல் ஆதி விருத்தி சந்தியாம்.

வரலாறு.:–

சிவனைத் தொழுவோன் சைவன், வீரத்தின் றன்மை வைரம், கேவலத்தன்மை கைவல்லியம் எனவும், புத்தனைத் தொழுவோன் பௌத்தன், சூரன்றன்மை சௌரியம், கோசலன்

புத்திரி, கௌசலை எனவும், தசரதன் புத்திரன், தாசரதி எனவும், கிருத்திகையின் புத்திரன் கார்த்திகேயன் எனவும், வரும் மற்றவைகளு மிப்படியே வருதல் காண்க. இல் முன்–முன்றில், பொது இல்–பொதியில், என வருகிற இலக்கணப் போலிகளும், அருமருந்தன்னபிள்ளை–அருமந்தபிள்ளை, குணக்குள்ளது–குணாது, தெற்குள்ளது–தெனாது, வடக்குள்ளது–வடாது, சோழநாடு–சோணாடு, பாண்டியநாடு–பாண்டிநாடு, மலையமாநாடு–மலாடு, தஞ்சாவூர்–தஞ்சை, ஆற்றூர்–ஆறை, ஆதன்றந்தை–ஆந்தை, பூதன்றந்தை–பூந்தை, வடுகன்றந்தை–வடுகந்தை, என வருகிற மரூஉமொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் ஏற்குஞ்செய்கை யறிந்து முடித்துக் கொள்க. மற்றவைகளும் இப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சிகளிற் கூறப்பட்ட விதிபெறாத சொற்களுக்கும் விதிகூறப்படாத சொற்களுக்கும் விதி கூறுஞ் சூத்திரம் யாது?

இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே.

(இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.)

**இ–ள்.: இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்** – இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சியிலக் கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், **போலியும்** – இலக்கணப் போலிமொழிகளும், **மரூஉவும்** – மரூஉமொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு இயையப் புணர்த்தல்** – இருவகை வழக்கிலும் நடக்குமுறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, **யாவர்க்கும் நெறி** – அறிவுடையோரெல்லார்க்கும் முறை, எ–று.

உ–ம்.:–

(1) "மடவை மன்ற தடவு நிலைக்கொன்றை" என்பதில் மன்ற தடவு என அகரவீற்றிடைச்சொன்முன் வல்லெழுத்து

மிகாதியல்பாயிற்று. ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால். தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் னகரவீற்றுச் சாரியை யிடைச் சொற்கள் திரியாதியல்பாயின.

(2) மழகளிறு, உறுபுனல், எனவும், கமஞ்சூல், தடஞ்செவி, தடந்தோள், கயந்தலை எனவும், உயிரீற்றுச்சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(3) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிரீற்று வடசொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(4) இல் – முன் – முன்றில், பொது – இல் – பொதியில், என வரும் இலக்கணப்போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை – அருமந்தபிள்ளை, குணக்குள்ளது – குணாது தெற்குள்ளது – தெனாது, வடக்குள்ளது – வடாது, சோழநாடு – சோணாடு, பாண்டியனாடு – பாண்டிநாடு, மலையமானாடு – மலாடு, தொண்டைமானாடு – தொண்டை நாடு, தஞ்சாவூர் – தஞ்சை, ஆற்றூர் – ஆறை, ஆதன் றந்தை – ஆந்தை, பூதன்றந்தை – பூந்தை, வடுகன்றந்தை – வடுகந்தை, என வரு மரூஉ மொழிகளும், நிலை மொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கையறிந்து முடித்துக்கொள்க. மற்றவைகளும் இப்படியே.

வடமொழித் தொகைப்பதங்கள், தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியே பெறும். புணர்ச்சியெனினுஞ் சந்தியெனினும் ஒக்கும். அச்சந்தி, தீர்க்க சக்தி, குணசந்தி, விருத்திசக்தி என மூவகைப்படும்.

## 1. தீர்க்கசந்தி

தீர்க்கசந்தியாவது யாது?

அ ஆ இஈ உஊ என்னு மூன்றினங்களும் தம்முற்றாம் புணரின் ஈறுமுதலுங் கெடத் தத்தம் நெட்டெழுத்துத் தோன்றப்பெறும் புணர்ச்சி தீர்க்கசந்தியாம்.

(1) அ ஆவின் முன் அ ஆ வரின், ஈறுமுதலுங் கெட, ஆவொன்று தோன்றும்:–

உ–ம்.:–

பத – அம்புயம் – பதாம்புயம்

சிவ – ஆலயம் – சிவாலயம்

நேசா – அதிபதி – நேசாதிபதி

சதா – ஆனந்தம் – சதானந்தம்

(2) இ ஈ யின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஈயொன்று தோன்றும்:–

(உ–ம்.) கிரி – இந்திரன் – கிரீந்திரன்

கிரி – ஈசன் – கிரீசன்

மகீ – இந்திரன் – மகீந்திரன்

நதி – ஈசன் – நதீசன்

(3) உ ஊ வின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட, ஊ வொன்று தோன்றும்–

உ–ம்.:–

குரு – உபதேசம் – குரூபதேசம்

மேரு – ஊர்த்துவம் – மேரூர்த்துவம்

வதூ – உத்துவாகம் – வதூத்துவாகம்

வதூ – ஊரு – வதூரு

## 2. குணசந்தி

குணசந்தியாவது யாது?

அஆ முன் இஈயும் உஊவும் வரின் ஈறுமுதலுங் கெடமுறையே ஏயும் ஓவும் தோன்றப் புணரும் புணர்ச்சி குணசந்தியாம்.

(1) அ ஆவின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஏ யொன்று தோன்றும்–

(உ–ம்.) நர – இந்திரன் – நரேந்திரன்

சுர – ஈசன் – சுரேசன்

தரா – இந்திரன் – தரேந்திரன்

மகா – ஈசன் – மகேசன்

(2) அ ஆவின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட, ஓவொன்று தோன்றும்:–

(உ–ம்.) பாத – உதகம் – பாதோதகம்

ஞான – ஊர்ச்சிதன் – ஞானோர்ச்சிதன்

கங்கா – உற்பத்தி – கங்கோற்பத்தி

தயா – ஊர்ச்சிதன் – தயோர்ச்சிதன்

### 3. விருத்திசந்தி

விருத்திசந்தியாவது யாது?

அஆ முன் ஏஐயும் ஒ ஔவும் வரின் ஈறுமுதலுங்கெட முறையே ஐயும் ஔவும் தோன்றப்புணரும் புணர்ச்சி விருத்திசந்தியாம்.

(1) அ ஆவின் முன் ஏ ஐ வரின், ஈறுமுதலுங்கெட, ஐயொன்று தோன்றும்–

உ–ம்.: லோக – ஏகநாயகன் – லோகைகநாயகன்

சிவ – ஐக்கியம் – சிவைக்கியம்

தரா – ஏகவீரன் – தரைகவீரன்

மகா – ஐசுவரியம் – மகைசுவரியம்

(2) அ ஆவின் முன் ஒ ஔ வரின், ஈறுமுதலுங்கெட, ஔவொன்று தோன்றும்:–

உ–ம்.: கலச – ஓதனம் – கலசௌதனம்

திவ்விய – ஔடதம் – திவ்வியௌடதம்

கங்கா – ஓகம் – கங்கௌகம்

மகா – ஔதாரியம் – மகௌதாரியம்

## முகவை இராமானுச கவிராயர்

இது, இப் புணரியலுக்கு ஆவதோர் புறனடை யுணர்த்துகின்றது

இ–ள்.:– இடை யுரி வடசொலின் – இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் வடசொல்லிலும், இயம்பிய கொளாதவும் – உயிரீறும் ஒற்றீறுமாகிய புணரியலிலே தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு என வோதிய புணர்ச்சியிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், போலியு மருவும் – இலக்கணப்போலி மொழிகளும் மரூஉமொழிகளும், பொருந்தியவாற்றிற்கு – இருவகை வழக்கிலும் நடக்குமுறை யறிந்து அதற்கு, இயையப் புணர்த்தல் – பொருந்தும்படி புணர்க்கை, யாவர்க்கு நெறி – அறிவுடையோ ரெல்லார்க்கு முறை, எ–று.

உ–ம்.:–

ஆன்கன்று, வண்டின்கால் என வேற்றுமைப் புணர்ச்சியிலே சாரியை யிடைச்சொல், திரியாது இயல்பாயின. மழகளிறு, தடந்தோள் என அகர வீற்று உரிச்சொல் முன் வல்லெழுத்து மிகாமல் இயல்பாகியும், மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன. அளிகுலம், தனதடம் என, இயல்பீறும் விதியீறுமாகிய

வுயிரீற்று வடசொற்களின் முன் வல்லெழுத்து மிகா தியல்பாயின. இல்முன் என்பது முன்றில் எனவும், பொதுவில் என்பது பொதியில் எனவும், வேட்கைநீர் என்பது வேணீர் எனவும், வேட்கைஅவா என்பது வேணவா எனவும், வரும்இலக்கணப்போலிகளும் அருமருந்தன்னபிள்ளை என்பது அருமந்தபிள்ளை, அவர்யாவர் என்பது அவர்யார், அதுயாது என்பது அதுயாவது எனவும், குணக்குள்ளது குணாது, தெற்குள்ளது தெனாது, வடக்குள்ளது வடாது, சோழனாடு சோணாடு, பாண்டியனாடு பாண்டிநாடு, மலையமானாடு மலாடு, தஞ்சாவூர் – தஞ்சை, ஆற்றூர் – ஆறை, ஆதன்றந்தை– ஆந்தை, பூதன்றந்தை பூந்தை, வடுகன்றந்தை வடுகந்தை எனவும் வரு மரூஉ மொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள்ளே ஏற்குஞ் செய்கை யறிந்து முடிக்க. பிறவுமிப்படியே காண்க. புணர்த்தல், நெறி என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரி – தி.கோ.ரங்காசாரி

உரை :– இடை – இடைச்சொற்க ளுள்ளும், உரி – உரிச்சொற்களுள்ளும், வடசொலின் – வடசொற்க ளள்ளும், இயம்பிய – (உயிரீற்று மெய்யீற்றுப் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள், கொளாதவும் – பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும், போலியும் – இலக்கணப் போலி மொழிகளும், மரூஉம் – மரூஉ மொழிகளும், பொருந்திய ஆற்றிற்கு – உலக வழக்குச் செய்யுள் வழக்குகளில் நடக்கும் முறைமைக்கு, இயைய – பொருந்தும்படி, புணர்த்தல் – கூட்டி முடித்தல், யாவர்க்கும் – (அறிவுடையோர்) எல்லாருக்கும், நெறி – முறைமையாம்.

### உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆன் | + | கன்று | : | ஆன்கன்று |
| வண்டின் | + | கால் | : | வண்டின்கால் |
| மழ | + | களிறு | : | மழகளிறு |
| தட | + | தோள் | : | தடந்தோள் |
| அளி | + | குலம் | : | அளிகுலம் |
| ஆதி | + | பகவன் | : | ஆதிபகவன் |
| இல் | + | முன் | : | முன்றில் |
| பொது | + | இல் | : | பொதியில் |

| | | |
|---|---|---|
| அருமருந்தன்ன | = | அருமந்த |
| குணக்கு உள்ளது | = | குணாது |
| சோழநாடு | = | சோணாடு |
| தஞ்சாவூர் | = | தஞ்சை |
| ஆதன்தந்தை | = | ஆந்தை |

குறிப்பு:– நிலைமொழி மாத்திரம் இடையுரி வடசொற்களா யிருப்பினும் அமையும். வேட்கை + அவா = வேணவா என்பதையும் இலக்கணப் போலியுளடக்குவர் இராமனுசகவிராயர்.

### வடமொழிப் புணர்ச்சி

வடமொழித் தொடர்கள், தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியையே பெறும்; அஃது உயிரோடு உயிர் புணர்கையில் தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, என மூவகைப்படும். இதனை வடநூலார் 'அச்சுசந்தி' என்பர்.

#### 1. தீர்க்கசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்றுவந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஆகரந்தோன்றும். உதாரணம்:

பத + அம்புயம் = பதாம்புயம் கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்
பரம + ஆநந்தம்= பரமாநந்தம் சதா + ஆநந்தம் = சதாநந்தம்

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்றுவந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஈகாரந்தோன்றும். உதாரணம்

கவி + இந்திரன் = கவீந்திரன் மகீ + இந்திரன் = மகீந்திரன்
கிரி + ஈசன் = கிரீசன் நதீ + ஈசன் = நதீசன்

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவற்றில் ஒன்றுவந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஊகாரந் தோன்றும். உதாரணம்

குரு + உதயம் = குரூதயம் சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்
சிந்து + ஊர்மி = சிந்தூமி சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

#### 2. குணசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஏகாரந்தோன்றும். உதாரணம்.

தேவ + இந்திரன் = தேவேந்திரன் தரா + இந்திரன் = தரேந்திரன்
தேவ + ஈசன் = தேவேசன் ரமா + ஈசன் = ரமேசன்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்கள் ஒன்றும் வந்தால்

அவ்விரண்டுங்கெட ஓர் ஒகாரந்தோன்றும். உதாரணம்.

பாத + உதயம் = பாதோதயம் கமலா + உத்சவம் = கமலோத்சவ
ஞான + ஊர்ச்சிதம் = ஞானோர்ச்சிதம் தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

### 3. விருத்தி சந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஐகாரந் தோன்றும். உதாரணம்.

பரம + ஏகாந்தி = பரமைகாந்தி
சர்வ + ஐச்வரியம் = சர்வைச்வரியம்
தேவதா + ஏகத்வம் = தேவதைகத்வம்
தேவதா + ஐக்யம் = தேவதைக்யம்

2. அகர ஆகாரங்களின் ஒன்றன்முன் ஒகார ஔகாரங்களில் ஒன்று வந்தால் அவ்விரண்டுங்கெட ஓர் ஔகாரந் தோன்றும். உதாரணம்.

வந + ஓடதி = வநௌடதி மகா + ஓடதி = மகௌடதி
திவ்ய + ஔடதம் = திவ்யௌடதம்மகா+ஔதார்யம் = மகௌதார்யம்

('ஹல்' சந்திக்கு (மெய்யீற்றுப் புணர்ச்சிக்கு) விதி யளவிறந்தனவாம்).

தீர்க்கசந்தி – இடையில் நெடில்வருவது. குணசந்தி – இடையில் ஏ ஓ வருவது. விருத்திசந்தி – இடையில் ஐ ஔ வருவது.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்:– இடை உரி வடசொலின் இயம்பிய கொளாதவும் –** இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச் சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், **போலியும் –** இலக்கணப் போலி மொழிகளும், **மரூஉவும்–**மரூஉமொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு இயையப் புணர்த்தல் –** இருவகை வழக்கிலும் நடக்கு முறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, **யாவர்க்கும் நெறி–**அறிவுடையோ ரெல்லார்க்கும் முறை, **எ–று.**

(1) "மடவை மன்ற தடவு நிலைக் கொன்றை" என அகர வீற்றிடைச்சொன் முன் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று. ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால், தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைப் புணர்ச்சிக்கண் னகர வீற்றுச் சாரியை யிடைச்சொற்கள் திரியாதியல்பாயின.

(2) மழகளிறு, உறுபுனல் எனவும் கமஞ்சூல், தடஞ்செவி,

தடந்தோள், கயந்தலை எனவும், உயிரீற்றுரிச் சொன் முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(3) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிரீற்று வடசொன் முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(4) இல் + முன் = முன்றில், பொது + இல் = பொதியில் என வரும் இலக்கணப் போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை = அருமந்தபிள்ளை, குணக்குள்ளது = குணாது, தெற்குள்ளது = தெனாது, வடக்குள்ளது = வடாது, சோழனாடு = சோணாடு, பாண்டியனாடு = பாண்டிநாடு, மலையமானாடு = மலாடு, தொண்டைமானாடு = தொண்டைநாடு, தஞ்சாவூர் = தஞ்சை, ஆற்றூர் = ஆறை, ஆதன்றந்தை = ஆந்தை, பூதன்றந்தை = பூந்தை, வடுகன்றந்தை = வடுகந்தை என வரும் மரூஉ மொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கை யறிந்து முடித்துக் கொள்க. மற்றவைகளும் இப்படியே.

வடமொழித் தொகைப்பதங்கள், தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியே பெறும். புணர்ச்சி யெனினுஞ் சந்தியெனினும் ஒக்கும். அச்சந்தி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படும்.

### தீர்க்கசந்தி

(1) அ ஆ வின்முன் அ ஆ வரின், ஈறுமுதலுங்கெட, ஆவொன்று தோன்றும்:–

உ–ம்.: பத + அம்புயம் = பதாம்புயம், சிவ + ஆலயம் = சிவாலயம், சேநா + அதிபதி = சேநாதிபதி, சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

(2) இ ஈ யின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங்கெட, ஈயொன்று தோன்றும்:–

உ–ம்.: கிரி + இந்திரன் = கிரீந்திரன், கிரி + ஈசன் = கிரீசன், மகீ + இந்திரன் = மகீந்திரன், நதீ + ஈசன் = நதீசன்.

(3) உ ஊ வின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட ஊவொன்று தோன்றும்:–

உ–ம்.: குரு + உபதேசம் = குரூபதேசம், மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம், வதூ + உத்துவாகம் = வதூத்துவாகம், வதூ + ஊரு = வதூரு.

குணசந்தி

(1) அ ஆ வின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஏயொன்று தோன்றும்:–

உ–ம்.:–

நர + இந்திரன் = நரேந்திரன், சுர + ஈசன் = சுரேசன், தரா + இந்திரன் = தரேந்திரன், மகா + ஈசன் = மகேசன்.

(2) அ ஆ வின் முன் உ ஊ வரின், ஈறு முதலுங்கெட, ஒவொன்று தோன்றும்:–

உ–ம்.: பாத + உதகம் = பாதோதகம், ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன், கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி, தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

விருத்திசந்தி

(1) அ ஆ வின் முன் ஏ ஐ வரின், ஈறுமுதலுங்கெட, ஐ யொன்று தோன்றும்:–

உ–ம்.:–

லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன், சிவ + ஐக்கியம் = சிவைக்கியம், தரா + ஏகவீரன் = தரைகவீரன், மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.

(2) அ ஆ வின் முன் ஒ ஔ வரின், ஈறுமுதலுங்கெட, ஔவொன்று தோன்றும்:–

உ–ம்.:–

கலச + ஓதனம் = கலசௌதனம், திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம், கங்கா + ஓகம் = கங்கௌகம், மகா + ஔதாரியம் = மகௌதாரியம்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.;– இடைஉரி வடசொல்லின் இயம்பிய கொளாதவும் – இடைச் சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள் பொருந்தாது. வேறுபட்டுவருவனவும், – போலியும் – இலக்கணப் போலிமொழிகளும், – மரூஉவும் – மரூஉமொழிகளும், – பொருந்திய ஆற்றிற்கு இயையப்புணர்த்தல் – இருவகைவழக்கிலும் நடக்குமுறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, – யாவர்க்கும் நெறி – அறிவுடையோரெல்லார்க்கும் முறை. எ–று.

உ–ம்;–

(1)"மடவைமன்றதடவுநிலைக் கொன்றை" என அகரவீற்றிடைச் சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று. ஆன்கன்று, மான்கன்று, வண்டின்கால், தேரின்செலவு, யாழின்புறம் என வேற்றுமைப்புணர்ச்சிக்கண்னகரவீற்றுச் சாரியை யிடைச் சொற்கள் திரியாதியல்பாயின.

(2) மழகளிறு, உறுபுனல் எனவும் கமஞ்சூல், தடஞ்செவி, தடந்தோள், கயந்தலை எனவும் உயிரீற்றுச் சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(3) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் என உயிரீற்றுவட சொல் முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(4) இல்+முன்=முன்றில், பொது+இல் = பொதியில் என வரும் இலக்கணப் போலி மொழிகளும், அருமருந்தன்ன பிள்ளை = அருமந்தபிள்ளை, குணக்குள்ளது = குணாது, தெற்குள்ளது = தெனாது, வடக்குள்ளது = வடாது, சோழநாடு= சோணாடு, பாண்டியனாடு = பாண்டிநாடு, மலையமானாடு = மலாடு, தொண்டைமானாடு = தொண்டைநாடு, தஞ்சாவூர் – தஞ்சை, ஆற்றூர் – ஆறை, ஆதன்றந்தை = ஆந்தை, பூதன்றந்தை = பூந்தை, வடுகன்றந்தை = வடுகந்தை என வரு மரூஉமொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கையறிந்து முடித்துக் கொள்க மற்றவைகளும் இப்படியே.

வடமொழிச் சமாசபதங்கள் தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ் வடநூற்சந்தியேபெறும். சமாசமெனினும் தொகைநிலையெனினும் ஒக்கும். சந்தியெனினும், புணர்ச்சியெனினும் ஒக்கும்.

அச்சந்தி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படும். தீர்க்கசந்தி பூர்வபதாந்தத்திலும் உத்தரபதாதியிலும் சவர்ணமான உயிரிருந்தால் உத்தரபதாதியிலிருக்கின்ற உயிரெழுத்துக்கெட பூர்வபதாந்தத்திலே குறிலிருந்தால் அது நெடிலாய்விடும்; நெடிலிருந்தால் அது இருந்தபடியேயிருக்கும்.

பூர்வபதமெனினும் நிலைமொழியெனினும் ஒக்கும். உத்தரபதமெனினும் வருமொழியெனினும் ஒக்கும். அந்தமெனினும் ஈறெனினுமொக்கும். ஆதியெனினும் முதலெனினுமொக்கும் சவர்ணமெனினும் சஜாதியெனினும் இனவுயிரெழுத்தெனினும் ஒக்கும்.

அ ஆக்களும், இ ஈக்களும், உ ஊக்களும் ஒன்றற்கொன்று சவர்ணமெனப்படும். "அதீர்கோ தீர்க்க தாம் யாதி நாஸ்தி தீர்கஸ்ய தீர்கதா, பூர்வ தீர்க்கஸ்வரந் த்ருஷ்ட்வா பரலோபோ

விதீயதே" என்பது சாரஸ்வதவியா கரணம். இதில் இப்படியே தீர்க்கசக்தி விதியமைந்திருத்தலறிக. இச்சுலோகத்தின் பொருள்: குற்றெழுத்து நெட்டெழுத்தாகிவரும்; நெட்டெழுத்து நெட்டெழுத்தாகுந் தன்மையில்லை. முன்னிருக்கிற நெட்டெழுத்தைக் கண்டு பின்னுள்ள உயிருக்குக் கேடுவிதிக்கப்படுகின்றது என்பதாம்.

எனவே, தீர்க்கசந்திவிஷயத்தில் நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் இருக்கிற உயிர்களில் நிலைமொழியீற்றிலே குறிலிருந்தால் அது நெடிலாய்த் திரியும், வருமொழிமுதலில் இருக்கிற உயிர் கெட்டுப்போம்; நிலைமொழியீற்றிலே நெடிலிருந்தால் அது இருந்தபடியேயிருக்கும், வருமொழிமுதலுயிர் கெட்டுப்போம் என்றவிளக்கம் பலிதமாயிற்று.

**(தீர்க்கசந்திக்கு உதாரணம்)**

கற்போர் உதாரணந் தேடி யுலையாதபடி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்திகளில் ஒவ்வொரு ஈறுமுதல்களுக்கும் மும்மூன்று உதாரணங்கள் எழுதப்பட்டன. இவற்றைத் தமிழெழுத்தாலெழுதும்போது சில வாங்மயந் தோன்றாமற் றிரிபுறும் ஆதலின் இவை சமஸ்கிருத எழுத்தாலெழுதப்பட்டன. இவற்றைத் தமிழாலுமெழுதி மூவகைச்சந்திகளையும் வகுத்துணர்க. (வாங்மபம் – சொல்வடிவத் தன்மை).

**குணசந்தி விஷயத்தில்,**

பூர்வபதாந்தத்தில் அ, ஆக்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் இ, ஈக்களில் ஒன்று வருமாயின் பூர்வபதாந்திரத்தில் நின்ற உயிர்கெடும் உத்தரபதாதியில் இருக்கிற உயிர் ஏகாரமாகத் திரியும்.

பூர்வபதாந்தத்தில் அ, ஆக்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் உ, ஊக்களில் ஒன்று வருமாயின் பூர்வபதாந்தத்தில் நின்ற உயிர்கெடும். உத்தரபதாதியில் இருக்கிற உயிர் ஒகாரமாகத் திரியும்.

**விருத்திசந்தி விஷயத்தில்,**

பூர்வபதாந்தத்தில் அ, ஆ க்களில் ஒன்று நிற்க உத்தரபதாதியில் ஒகாரமாவது ஔகாரமாவது வரின், பூர்வபதாந்தத்தில் நின்ற உயிர்கெடும், உத்தரபதாதியில் ஒகாரம் ஔகாரமாகத் திரியும் ஔகாரமியல்பாயிருக்கும்.

(பதாதி – மொழி முதல், பதாந்தம் – மொழியிறுதி)

மூவகைச் சந்திகளையும் உற்றுநோக்கின் தீர்க்கசந்தியில் வருமொழிமுதல் கெடுதலும். குணசந்தி விருத்திசந்திகளில் நிலைமொழியீறு கெடுதலும் உண்டென்பது விளங்கும்.

### 1. தீர்க்க சந்தி

**(1) அ ஆவின்முன் அ ஆ வந்ததற்கு உதாரணம்:–**

உ–ம். பத + அம்புயம் = ப த ா ம் பு ய ம்
சிவ + ஆலயம் = சி வ ா ல ய ம்
சேநா + அதிபதி = சே ந ா தி ப தி
சதா + ஆநந்தம் = சதாநந்தம்

**(2) இ ஈயின் முன் இ ஈ வந்ததற்கு உதாரணம்:–**

உ–ம் கிரி + இந்திரன் = கி ரீ ந் தி ர ன்
கிரி + ஈசன் = கி ரீ ச ன்
மகீ + இந்திரன் = ம கீ ந் தி ர ன்
நதீ + ஈசன் = நதீசன்

**(3. உ ஊவின் முன் உ ஊ வந்ததற்கு உதாரணம் :–**

உ–ம் குரு + உபதேசம் = குரூபதேசம்
மேரு + ஊர்த்துவம் = மே ம ரூ ர் த் து வ ம்
வதூ + உத்துவாசம் = வ தூ த் து வ ா க ம்
வதூ + ஊரு = வதூரு

### 2. குணசந்தி

(1) அ ஆவின்முன் இ ஈவரின் ஈறுகெட இகரமாவது ஈகாரமாவது ஏயாகும்.

உ–ம். நர + இந்திரன் = ந ே ர ந் தி ர ன்
சுர + ஈசன் = சு ே ர ச ன்
தரா + இந்திரன் = த ரே ந் தி ர ன்
மகா + ஈசன் = மகேசன்

(2) அ ஆவின்முன் உ ஊ வரின் ஈறுகெட, உகரமாவது ஊகாரமாவது ஓவாகும்:–

உ–ம். பாத + உதகம் = ப ா ே த ா க ம்
ஞான + ஊர்ச்சிதன் = ஞ ா ே ன ா ர் ச் சி த ன்
கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

### 3. விருத்திசந்தி.

(1) அ ஆவின்முன் ஏ ஐவரின், ஈறு கெட ஏகாரம் ஐயாகும், ஐதிரியாது கூடும்.

உ–ம். லோக + ஏகநாயகன் = ே ல ா ை க க ந ா ய க ன்

| | | | |
|---|---|---|---|
| சிவ + | ஐக்கியம் | = | சிவைக்கியம் |
| தாரா + | ஏகவீரன் | = | தரைகவீரன் |
| மகா + | ஐசுவரியம் | = | மகைசுவரியம் |

(2) அ ஆவின் முதல் ஓ ஒளவரின், ஈறு கெட ஓ ஒளவாகும், ஒள இயல்பாயிருக்கும்:-

உ-ம்.:-

கலச +ஓதளம் =கலசௌதனம்

திவ்விய+ஒளடதம் =திவ்வியௌடதம்

கங்கா+ஓகம் = கங்கௌகம்

மகா +ஒளதாரியம் =மகௌதாரியம்

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- **இடை** - இடைச்சொற்களுள்ளும், **உரி** - உரிச்சொற்களுள்ளும், **வடசொலின்** - வடசொற்களுள்ளும், **இயம்பிய** - (உயிரீற்றுப்புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்கள், **கொளாதவும்** - பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும்; **போலியும்**-இலக்கணப்போலி மொழிகளும்; **மரூஉவும்** - மரூஉமொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு** - (உலகவழக்குச் செய்யுள் வழக்குகளில்) நடக்கும் முறைமைக்கு, **இயைய**- பொருந்தும்படி, **புணர்த்தல்** - கூட்டிமுடித்தல், **யாவர்க்கும்**-(அறிவுடையோர்) எல்லார்க்கும், **நெறி** - முறைமையாம்; எ-று.

உதாரணம்.:-

ஆன் + கன்று = ஆன்கன்று

இடைச்சொற்களின் ஈற்றுனகரம் இயல்பாயிற்று. வேற்றுமையில் சாரியை

வண்டின் + கால் = வண்டின்கால்

(2) மழ + களிறு = மழகளிறு

இயல்பாயும் — உரிச்சொல்லீற்று உயிர்முன் வலிவர இயல்பாயும் மெலி மிகுந்தும் வந்தன.

தட + தோள் = தடந்தோள்

(3) அளி + குலம் = அளிகுலம் வடசொல்லீற்று உயிர் முன் வலிவர

மிகாது இயல்பாயின.

பாத + கமலம் = பாதகமலம்

(4) இல் + முன் = முன்றில் இலக்கணப்போலிமொழிகள் முன் விதிபெறாமல் தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன.

பொது + இல் = பொதியில்

வேட்கை + அவா = வேணவா

(5) அருமருந்தன்ன = அருமந்

குணக்குஉள்ளது = குணாது

சோழநாடு = சோணாடு — மரூஉ மொழிகள் முன் விதி பெறாமல் தமக்கு ஏற்றபடி விகாரம் பெற்றன.

தஞ்சாவூர் = தஞ்சை

வடுகன்தந்தை = வடுகந்தை.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- இடை உரி வடசொலின் இயம்பிய கொளாதவும்- இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும் உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச் சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும், போலியும் -இலக்கணப்போலி மொழிகளும், மரூஉவும் - மரூஉமொழிகளும், பொருந்திய ஆற்றிற்கு இயையப் புணர்த்தல் - இருவகை வழக்கிலும் நடக்கு முறைமைக்குப் பொருந்துமாறு புணர்க்கை, யாவர்க்கும் செறி - அறிவுடையோரெல்லார்க்கும் முறை. எ-று.

உ-ம்.:-

(1) "மடவை மன்ற தடவு நிலைக் கொன்றை" என அகர வீற்றிடைச் சொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயிற்று. ஆன் கன்று, மான் கன்று, வண்டின் கால், தேரின் செலவு, யாழின் புறம் என வேற்றுமைப்புணர்ச்சிக்கண் னகரவீற்றுச் சாரியை யிடைச் சொற்கள் திரியா தியல்பாயின.

(2) மழகளிறு, உறுபுனல், கமஞ்சூல், தடஞ்செவி, தடந்தோள், கயந்தலை - என உயிரீற் றுரிச்சொன்முன் வல்லெழுத்து மிகாதியல் பாயும் மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன.

(3) அளிகுலம், தனதடம், ஆதிபகவன் – என உயிரீற்று வடசொன்முன் வல்லெழுத்து மிகாதியல்பாயின.

(4) இல் + முன் = முன்றில், பொது + இல் = பொதியில் – என வரும் இலக்கணப்போலி மொழிகளும், அருமருந்தன்னபிள்ளை = அருமந்தபிள்ளை, குணக்குள்ளது = குணாது, தெற்குள்ளது = தெனாது, வடக்குள்ளது = வடாத, சோழனாடு = சோணாடு, பாண்டியனாடு = பாண்டிநாடு, மலையமானாடு = மலாடு, தொண்டைமானாடு = தொண்டைநாடு, தஞ்சாவூர் – தஞ்சை, ஆற்றூர் = ஆறை, ஆதன்றந்தை = ஆந்தை, பூதன்றந்தை = புந்தை, வடுகன்றந்தை = வடுகந்தை என வருமரூஉமொழிகளும், நிலைமொழி வருமொழிகளுள் ஏற்குஞ் செய்கையறிந்து முடித்துக் கொள்க. மற்றவைகளும் இப்படியே. (36)

(வடமொழிப் புணர்ச்சி.)

வடமொழித் தொகைப் பதங்கள், தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப், பெரும்பாலும் அவ் வடநூற் புணர்ச்சியே பெறும், பணுர்ச்சியெனினுஞ் சந்தியெனினும் ஒக்கும். அச் சந்தி தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படம்.

1. தீர்க்கசந்தி.

(1) அ ஆ வின் முன் அ ஆ வரின், ஈறுமுதலுங் கெட, ஆவொன்றும் தோன்றும் :–

உ–ம். பத + அம்புயம் = பதாம்புயம்

சிவ + ஆலயம் = சிவாலயம்

சேநா + அதிபதி = சேநாதிபதி

சதா + ஆனந்தம் = சதானந்தம்

(2) இ ஈ யின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஈயொன்று தோன்றும் :–

உ–ம். கிரி + இந்திரன் = கிரீந்திரன்

கிரி + ஈசன் = கிரீசன்

மகீ + இந்திரன் = மகீந்திரன்

நதீ + ஈசன் = நதீசன்

(3) உ ஊ வின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங் கெட, ஊவொன்று தோன்றும் :–

உ–ம் குரு + உபதேசம் = குரூபதேசம்

மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம்

வதூ + உத்துவாகம் = வதூத்துவாகம்

வதூ + ஊரு = வதூரு

2. குணசந்தி

(1) அ ஆ வின் முன் இ ஈ வரின், ஈறுமுதலுங் கெட, ஏயொன்று தோன்றும்.

உ–ம்.

நர + இந்திரன் = நரேந்திரன்

சுர + ஈசன் = சுரேசன்

தரா + இந்திரன் = தரேந்திரன்

மகா + ஈசன் = மகேசன்

(2) அ ஆ வின் முன் உ ஊ வரின், ஈறுமுதலுங்கெட, ஓவொன்று தோன்றும் :–

உ–ம்.

பாத + உதகம் = பாதோதகம்

ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்

கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி

தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

3. விருத்திசந்தி.

(1) அ ஆ வின் முன் ஏ ஐ வரின், ஈறு முதலுங் கெட, ஐயொன்று

உ–ம்.

லோக + ஏகநாயகன் = சோகைகநாயகன்

சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்

தரா + ஏகவீரன் = தரைகவீரன்

மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்

(2) அ ஆவின் முன் ஒ ஔ வரின், ஈறு முதலுங் கெட, ஔவொன்று தோன்றும் :–

உ–ம்.

கலச + ஓதனம் = கலசௌதனம்

திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம்

கங்கா + ஓகம் = கங்கௌகம்

மகா + ஔதாரியம் = மகௌதாரியம்

# கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:— உடை உரி வட சொலின் — இடைச்சொற்களுள்ளும் உரிச்சொற்களுள்ளும் வடசொற்களுள்ளும், **இயம்பிய** — (உயிரீறும் ஒற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சி இலக்கணங்களுள், **கொளாதவும்** — பொருந்தாது (வேறுபட்டு) வருவனவும், **போலியும்** — இலக்கணப் போலி மொழிகளும், **மரூஉம்** — மரூஉ மொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு** — (இருவகை வழக்கிலும்) நடக்கின்ற முறைமைக்கு, **இயைய** — பொருந்துமாறு, **புணர்த்தல்** — புணர்க்கை, **யாவர்க்கும்** — (அறிவுடையோர்) எல்லாருக்கும், **நெறி** — முயையாகும் எ—று.

பொ—ரை.:— இடை உரி வடசொல் ஆகிய இவற்றுள் உயிரீற்றுப் புணரியலிலும், மெய்யீற்றுப்புணரியலிலும் தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பு என்று சொல்லிய புணர்ச்சியிலக்கணங்கள் பொருந்தாமல் வேறுபட்டு வருவனவும், இலக்கணப் போலி மொழிகளும், மரூஉ மொழிகளும், செய்யுள்வழக்கிலும் உலக வழக்கிலும் நடக்கின்ற முறைமைக்கு இணங்கும்படி புணர்த்தல் அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமை.

உ—ம்.:—

ஆ + கன்று = ஆன்கன். — வேற்றுமைப் புணர்ச்சிக்கண் சாரியை இடைச் சொற்கள் னகர ஈறு திரியாது இயல்பாயின.

வண்டு + கால = வண்டின்கால.

மழ + களிறு = மழகளிறு. — உயிரீற்று உரிச்சொற்களின்முன் வலி மிகாது இயல்பாகியும், மெலிமிகுந்தும் வந்தன.

உறு + புனல் = உறுபுனல்.

தட + தோள் = தடந்தோள்.

கம + சூல் = கமஞ்சூல்.

அளி + குலம் = அளிகுலம். — இயல்பீறும் விதியீறுமாகிய உயிரீற்று வடசொற்களின் முன்வலி மிகாது இயல்பாயின.

ஆதி + பகவன் = ஆதிபகவன்.

பாத + கமலம் = பாதகமலம்.

இல் + முன் = முன்றில். — இலக்கணப் போலி.

பொது + இல் = பொதியில்.

அருமருந்தன்ன பிள்ளை = அருமந்தபிள்ளை. — மரூஉ மொழிகள் முன் விதிபெறாது தமக்கேற்றபடி விகார மாயின.

அவர் யாவர் = அவர்யார்.

குணக்குள்ளது = குணாது.

தெற்குள்ளது = தெனாது.

வடக்குள்ளது = வடாது.

சோழனாடு = சோணாடு.

பாண்டியனாடு = பாண்டிநாடு.

மலையமானாடு = மலாடு.

தஞ்சாவூர் = தஞ்சை.

ஆற்றூர் = ஆறை.

ஆகன் தந்தை = ஆந்தை.

பூகன் தந்தை = பூந்தை.

வடுகன் தந்தை = வடுகந்தை.

நிலைமொழி வருமொழிகளுள்ளே ஏறகுஞ் செய்கை யறிந்து முடித்துக் கொள்க.

நிலைமொழி வருமொழிகளுள் வட நூலிற் புணர்க்கப்பட்ட படியே தமிழில் சிறுபான்மை வந்து வழங்குகின்ற அடியிற்குறித்தனபோன்ற தீர்க்கசந்தி, குணசந்தி முதலாயினவுங் கொள்க.

தீர்க்கசந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால், அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஆகாரம் தோன்றும்.

(உ–ம்.) பத + அம்புயம் = பதாம்புயம்.

பரம + ஆனந்தம் = பரமானந்தம்.

கங்கா + அமிர்தம் = கங்காமிர்தம்.

சதா + ஆனந்தம் = சதானந்தம்.

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால், அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஈகாரம் தோன்றும்.

(உ–ம்.) சுசி + இந்திரன் = சுசீந்திரன்.

கிரி + ஈசன் = கிரீசன்.

மகீ + இந்திரன் = மகீந்திரன்.

மகீ + ஈசன் = மகீசன்.

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று

வந்தால், அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஊகாரம் தோன்றும்.

(உ–ம்.) குரு + உதயம் = குரூதயம்.

தரு + ஊனம் = தரூனம்.

சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்.

சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.

குணசந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால், அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஏகாரம் தோன்றும்.

(உ–ம்.) நர + இந்திரன் = நரேந்தின்.

சுர + ஈசன் = சுரேசன்.

தரா + இந்திரன் = தரேந்திரன்.

உமா + ஈசன் = உமேசன்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்று வந்தால், அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஒகாரம் தோன்றும்.

(எ–ம்.) பாத + உதகம் = பாதோதகம்.

ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்.

தயா + உற்பத்தி = தயோற்பத்தி.

தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

விருத்தி சந்தி.

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஐகாரம் தோன்றும்.

(எ–ம்.) சிவ + ஏகம் = சிவைகம்.

சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்.

தரா + ஏகவீரன் = தரைகவீரன்.

மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்.

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஒகார ஔகாரங்களில் ஒன்று வந்தால் அந் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட ஔகாரம் தோன்றும்.

(எ–ம்.) கோமள + ஓடதி = கோமளௌடதி.

திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம்.

மகா + ஓடதி = மகௌடதி.

மகா + ஔடதம் = மகௌடதம்.

ஆதி விருத்தி.

1. ஒரு மொழியுள்ளே, மொழிமுதலில் நின்ற இகர ஈகார ஏகாரங்கள் ஐகாரமாகத் திரியும்.

சிவனைத் தொழுவோன் = சைவன்.

வீரத்தின் தன்மை = வைரம்.

கேவலத் தன்மை = கைவல்லியம்.

2. ஒரு மொழியுள்ளே மொழிமுதலில் நின்ற உகர ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகத் திரியும்.

புத்தனைத் தொழுவோன் = பௌத்தன்.

சூரன் தன்மை = சௌரியம்.

கோசலன் புத்திரி = கௌசலை.

3. ஒரு மொழியுள்ளே மொழிமுதலில் நின்ற அகரம் ஆகாரமாகவும் என்னும் ஏழாமுயிர் ஆர் ஆகவும் திரியும்.

தசரதன் புத்திரன் = தாசரதி.

கிருத்திகையின் புத்திரன் = கார்த்திகேயன்.

## கா.நமச்சிவாய முதலியார்

(1) **இடை** – இடைச் சொற்களுள்ளும்

(2) **உரி** – உரிச்சொற்களுள்ளும்,

(3) **வடசொலின்** – வட சொற்களுள்ளும், **இயம்பிய** – (உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப் புணரியல்களில், தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்) சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்கள், **கொளாதவும்** – பொருந்தாமல் (வேறுபட்டு) வருவனவும்,

(4) **போலியும்** – இலக்கணப்போலி மொழிகளும்.

(5) **மரூஉவும்** – மரூஉ மொழிகளும், **பொருந்திய ஆற்றிற்கு** – (உலக வழக்குச் செய்யுள் வழக்குகளில்) நடக்கும் முறைமைக்கு, **இயைய** – பொருந்தும்படி, **புணர்த்தல்** – கூட்டி முடித்தல், **யாவர்க்கும்** – (அறிவுடையோர்) எல்லாருக்கும், **நெறி** – முறையாம்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) ஆன் | + | கன்று | = | ஆன்கன்று |
| வண்டின் | + | கால் | = | வண்டின்கால் |

என வேற்றுமையில் ன், இன் என்னும் சாரியை இடைச்சொற்களின் ஈற்று னகரம் இயல்பாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| (2) மழ | + | களிறு | = | மழகளிறு |
| தட | + | தோள் | = | தடந்தோள் |

என உரிச்சொல்லீற்று உயிர்முன் வல்லினம் இயல்பாயும், மெலிமிகுந்தும் புணர்ந்தன.

| | | | | |
|---|---|---|---|---|
| (3) அளி | + | குலம் | = | அளிகுலம் |
| ஆதி | + | பகவன் | – | ஆதிபகவன் |

என வடசொல்லீற்று உயிர்முன் வலிவர மிகாது இயல்பாயின.

| | | | | |
|---|---|---|---|---|
| (4) இல் | + | முன் | = | முன்றில் |
| பொது | + | இல் | = | பொதியில் |

என இலக்கணப்போலி மொழிகள் முன் சொன்ன விதிபெறாமல் தமக்கேற்றபடி விகாரம் பெற்றன.

| | | |
|---|---|---|
| (5) அருமருந்தன்ன | – | அருமந்த |
| குணக்கு உள்ளது | – | குணாது |
| சோழநாடு | – | சோணாடு |
| தஞ்சாவூர் | – | தஞ்சை |
| ஆதன் தந்தை | – | ஆந்தை |

என மரூஉ மொழிகள் தமக்கேற்றபடி விகாரம் பெற்றன.

இவ்வாறே பிறவுங்காண்க.

## வடமொழிப் புணர்ச்சி

வடமொழித் தொடர்கள், தமிழில் வருமிடத்துப் பெரும்பாலும் அவ்வடநூற் புணர்ச்சியையே பெறும்.

அது – (1) தீர்க்கசந்தி, (2) குணசந்தி, (3) விருத்திசந்தி என மூவகைப்படும்.

### (1) தீர்க்கசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அகர ஆகாரங்களில் ஏதேனும் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஆகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பத | + | அம்புயம் | = | பதாம்புயம் |
| பரம | + | ஆநந்தம் | = | பரமாநந்தம் |

| | | | | |
|---|---|---|---|---|
| கங்கா | + | அமிர்தம் | = | கஙிகாமிர்தம் |
| சதா | + | ஆநந்தம் | = | சதாநந்தம் |

2. இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஏதேனும் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஈகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| கவி | + | இந்திரன் | = | கவீந்திரன் |
| கிரி | + | ஈசன் | = | கிரீசன் |
| மகீ | + | இந்திரன் | = | மகீந்திரன் |
| நதீ | + | ஈசன் | = | நதீசன் |

3. உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் உகர உகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஊகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| குரு | + | உதயம் | = | குரூதயம் |
| சிந்து | + | ஊர்மி | = | சிந்தூர்மி |
| சுயம்பூ | + | உபதேசம் | = | சுயம்பூபதேசம் |
| சுயம்பூ | + | ஊர்ச்சிதம் | = | சுயம்பூர்ச்சிதம் |

(2) குணசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஏதேனும் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஏகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| தேவ | + | இந்திரன் | = | தேவேந்திரன் |
| | + | ஈசன் | = | தேவேசன் |
| தரா | + | இந்திரன் | = | தரேந்திரன் |
| மகா | + | ஈசன் | = | மகேசன் |

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஏதேனும் ஒன்றுவரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஓகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பாத | + | உதகம் | = | பாதோதகம் |
| ஞான | + | ஊர்ச்சிதன் | = | ஞானோர்ச்சிதன் |
| கங்கா | + | உற்பத்தி | = | கங்கோற்பத்தி |
| தயா | + | ஊர்ச்சிதன் | = | தயோர்ச்சிதன் |

(3) விருத்திசந்தி

1. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஏகார ஐகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டுங் கெட ஓர் ஐகாரம் தோன்றும்

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| பரம | + | ஏகாந்தி | = | பரமைகாந்தி |
| சர்வ | + | ஐச்வர்யம் | = | சர்வைச்வர்யம் |
| தேவதா | + | ஏகத்வம் | = | தேவதைகத்வம் |
| | + | ஐக்யம் | = | தேவதைக்யம் |

2. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் ஒகார ஔகாரங்களில் ஏதேனும் ஒன்று வரின், அவ்விரண்டும் கெட ஓர் ஔகாரம் தோன்றும்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| வந | + | ஒஷதி | = | வநௌஷதி |
| திவ்ய | + | ஔஷதம் | = | திவ்யௌஷதம் |
| மகா | + | ஒஷதி | = | மகௌஷதி |
| | + | ஔதார்யம் | = | மகௌதார்யம் |

தத்திதாந்தம்

| | | |
|---|---|---|
| சிவனைத் தொழுவோன் | – | சைவன் |
| வீரத்தின் தன்மை | – | வைரம் |
| கேவலத்தன்மை | – | கைவல்லியம் |
| புத்தனைத் தொழுவோன் | – | பௌத்தன் |
| சூரன் தன்மை | – | சௌரியம் |
| ஜனகன் புத்திரி | – | ஜானகி |
| தசரதன் புத்திரன் | – | தாசரதி |
| கிருத்திகையின் புத்திரன் | – | கார்த்திகேயன் |

என இவ்வாறு வரும்.

## மோசகு பொன்னையா

இடை, உரி, வட சொற்களையும், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல்களில் சொல்லப்பட்டுள்ள தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பாதல், என்னும் புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாமல் வருவனவற்றையும், இலக்கணப் போலி, மரூஉ மொழிகளையும் இருவகை வழக்கினும் நடக்கும் முறைமையை அறிந்து ஏற்ற பெற்றி புணர்த்தி முடித்தல் அறிவுடையோர் எல்லார்க்கும் முறைமையாகும், எ–று.

எ–டு.:–

1. ஆன் கன்று, வண்டின் கால் – வேற்றுமைப் புணர்ச்சியில் இடைச் சொற்கள் திரியாது இயல்பாயின.

2. மழகளிறு, தடந்தோள் – அகரவீற்று உரிச்சொல் முன்னர் வலி இயல்பாகியும், மெலிமிக்கும் முடிந்தன.

3. அளி குலம், தனதடம் – இயல்பு விதி உயிரீற்று வட சொல் முன்னர் வலி இயல்பாயின.

4. முன்றில், பொதியில், வேணீர், வேணவா, அருமந்த பிள்ளை, குணாது, தெனாது, வடாது, சோளாடு, பாண்டி நாடு, மலாடு, தஞ்சை, ஆறை, ஆந்தை, பூந்தை, வடுகந்தை என வரும் இலக்கணப் போலி மொழிகளும், மரூஉ மொழிகளுமாகிய இவற்றையும் பிறவற்றையும் ஏற்குமாறறிந்து முடிக்க.

(36)

நன்னூல் உரைவளம்

மெய்யீற்றுப் புணரியல் முற்றிற்று.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |


**696 நன்னூல் உரைவளம்–8 (மெய்யீட்டுப் புணரியல்) 160.00**